செந்தமிழ்க் கனி

கோவிந்தன்

முன்னுரை

'செந்தமிழ்க் கனி' என்னும் இனிய தலைப்பில் 'அன்பு ராஜன்', 'கோவிந்தன்,' என்னும் புனை பெயர்கள் கொண்ட தமிழன்பர் திரு. கோவிந்தராஜன், சில கவிதை விளக்கங்கள் எழுதி அவற்றைத் தொகுத்து நூல்வடிவிலே வெளியிடுகிறார். இந்த விளக்கங்கள் 'திலகம்', என்னும் வார ஏட்டில் தொடராக, வெளிவந்தவைகள்.

திரு. கோவிந்தராஜன் அவர்களோடு கடந்த மூன்று ஆண்டுகளாக அடிக்கடி பேசிப் பழகும் வாய்ப்புகள் கிட்டியதிலிருந்து, இந்த நண்பரின் தமிழ்ப்பற்றும், பண்பாடும், இவற்றிற்குக் காரணமாக அமைந்த குடும்பத்தின் இலக்கிய மரபும் எனக்கு நன்கு அறிமுகமாயின. திரு. கோவிந்தராஜனின் நட்பியல்புகளோடு இந்த இலக்கிய இயல்புகளும் இணைந்து இம் முன்னுரையை இயக்குகின்றன.

மதுரை மாவட்டத்தின் பழைய இலக்கிய மரபிலே தோன்றியவர் திரு. கோவிந்தராஜன். மதுரகவி ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்களின் வழி வந்தவர் இவர். இந்த நூலிலும் நரகவி பாடாத அந்த வரகவியைப் பற்றிய கட்டுரை ஒன்று இடம் பெறுகிறது.

சில தமிழ்ப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து இக்காலத்து மக்களுக்கு விளக்கவேண்டும் என்பதே கோவிந்தனின் நோக்கமாகும். தமது இலக்கிய இன்பத்தையே துணையாகக் கொண்டு எளிய முறையிலே இந்த நோக்கத்தை நிறைவேற்றுகிறார் இவர்.

தமக்கு உகப்பாயுள்ள சில பாடல்களைப் பொதுமக்களும் அனுபவிக்க வேண்டும் என்பதே அவருடைய ஆசை. இந்த ஆசையின் வெளியீடே இந்நூல். இந்த நூலை ஆதரித்து அவரை ஊக்கப் படுத்தினால் மேலும் இலக்கண, இலக்கியத் திறனாய்வோடு கூடிய நூல்களை வெளியிட அவர் உற்சாகத்தோடு முன் வருவார். அதுமட்டுமில்லை. முன்னோரான மதுரகவியின் பல்லாயிரக்கணக்கான பாடல்களை வெளியிட்டுத் தமிழுக்குப் பணி செய்யவேண்டும் என்ற அளவு கடந்த ஆர்வம் அவருக்கு உண்டு. எனவே தமிழுலகம் அவருடைய முயற்சியை வாழ்த்த வேண்டும் என்று விரும்புகிறேன்.

தமிழுள்ளமும், அன்பான இதயமும், இலக்கிய நாட்டமும் கொண்டுள்ள இந்தத் தமிழன்பரை அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மயிலை. **மீ. ப. சோமசுந்தரம்.**

நண்பர் நலனுரை

நான் ஒரு பூ வியாபாரி! நற்றமிழ் மணம் வீசும் மலராக விளங்கியவர் நண்பர் 'அன்புராஜன்', 'கோவிந்தன்', என்று அழைக்கப்படும் கோவிந்தராஜன்.

அந்த மணம் தரும் மலரை நானும்-நான் சொன்னதை, உடனே ஒப்புக்கொண்ட நண்பர் ஜே. டி. பன்னுலாலும், 'திலகம்' இதழின் மூலம் ரசிகர்களிடம் தந்தோம்.

மலர் மணம் நுகர்ந்தோர் அதன் கனிச் சுவையை உணர்ந்தனர்.

வந்து குவிந்த பாராட்டுகள் ஏராளம். உற்சாகம் கரை புரள, அவர் பணியும், எங்கள் பணியும் வளர்ந்தது!

அதன் மொத்த உருதான் இன்று செந்தமிழ் ரசிகர்களின் கையில் திகழும் 'கனி'. இத்தகைய நூல்கள் பல இவரிடமிருந்து வர வேண்டும் என்று எல்லோரும் எதிர்பார்க்கின்றனர். ஊக்கமும், உற்சாகமும் தந்தால் நண்பரிடமிருந்து இன்னும் பல நூல்களை எதிர்பார்க்கலாம்.

கனி அருந்திக் களிப்பெய்தும் வகையில் பணிபுரிந்த அனைவருக்கும் எனது பாராட்டும், நன்றியும்!

மல்லிகார்ஜுனன்,
இராயப்பேட்டை. ஆசிரியர்,
'பிக்சர் நியூஸ்.'

நூலாசிரியர் உரை

திருமயிலையிலிருந்து, 'திலகம்' என்ற பெயரில் ஒரு வார இதழ் வெளிவர இருப்பதாகவும், அதற்கு நான் இலக்கியக் கட்டுரைகளை எழுதித்தரவேண்டும் என்றும் நண்பர் சங்கரன் கேட்டார். மணிவாசகத் தமிழ், என்ற கட்டுரையை எழுதி அனுப்பினேன். செந்தமிழ்க் கனி, என்ற தலைப்பின் கீழ் அக் கட்டுரை திலகத்தின் முதல் இதழில், விஜயதசமியன்று (11-10-1959) வெளி வந்தது. அத் தலைப்பின் கீழ் மேலும் பல கட்டுரைகள் வேண்டும் என்ற வேண்டுகோளும் வந்தது ஒவ்வொரு வாரமும் 'அன்புராஜன்,' என்ற புனைபெயரில் திலகத்தில் கட்டுரைகளை எழுதி வந்தேன்.

ஒரு கவிஞர் இயற்றிய கவிதைகளில் ஒன்றை மட்டும் தேர்ந்து எடுத்து, அந்தக் கவிதையின் மூலப் பொருளை விளக்கும் வகையில், கவிதை நயம், கவிஞர் வரலாறு, ஆகியவைகளும் கட்டுரையில் இடம் பெற்றன. ஒவ்வொரு வாரமும் ஒரு கவிஞர் இயற்றிய கவிதை, கட்டுரையில் இடம் பெற்றது. படித்தவுடன் அக்கவிஞரைப் பற்றிய நினைவும், அவர் இயற்றிய பிற கவிதைகளைத் தேடிக் காண வேண்டும் என்ற ஆர்வமும் பிறக்கும் வகையில் கட்டுரைகள் அமைக்கப் பெற்றன.

செந்தமிழ்க் கனிக்குச் செந்தமிழ் நாட்டு மக்கள் சிறந்த முறையில் ஆதரவு தந்தனர். வாரா வாரம் பல நூறு கடிதங்கள் கட்டுரைகளைப் பாராட்டி 'திலகம்' ஆசிரியருக்கு வந்தன. திலகத்தினுடைய வளர்ச்சி இதனால் பெருகியது. இத்தொடர் முப்பது ஆனதும், "எப்போது முடிக்கலாம்" என்று திலகம் ஆசிரியர் திரு. பன்னலால் அவர்களையும், நிர்வாக ஆசிரியர் திரு. மல்லிகார்ஜுனன் அவர்களையும் கேட்டபோது, "நிறுத்தி விடாதீர்கள்! நல்ல ஆதரவு

மக்களிடம் இருக்கிறது. இன்னும் எழுதுங்கள்,'' என்று கூறி எனக்கு ஆதரவும், ஊக்கமும் தந்து எழுபத்தைந்து கட்டுரைகள் வரை எழுதச் செய்தார்கள். அவர்களுக்கு என் நன்றி. ரசிகர்களுடைய ஆதரவினுலும், அன்பினுலும் திரு. மல்லிகார்ஜுனன் அவர்கள் தந்த உற்சாகத்தினுலும் ''மதுரகவி இராமாயண வெண்பா'' என்ற புதிய இலக்கியத்தை இரண்டாவது வரிசையில், 'திலகத்தில்,' எழுதி பால காண்டம் வரை முடித்தேன்.

இப்பொழுது ''செந்தமிழ்க் கனி,'' நூல் வடிவில் வெளி வருகிறது. எஞ்சிய கட்டுரைகள் இரண்டாம் பாகமாக வெளிவரும். இதனை நூல்வடிவில் கொண்டு வந்துள்ளோம். இதன் விற்பனை உரிமையை ஏற்றுக்கொண்ட திரு சங்கரன், மல்லிகைப் பதிப்பகத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகள். இந்த நூலைச் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த முல்லை அச்சகத்தாருக்கு நன்றி உரித்தாகுக.

திரு. சோமு அவர்கள் இந்த நூலுக்கு ஒரு சிறந்த முன்னுரையை வழங்கி, என்னுடைய இலக்கியப் பணி சிறக்கும்படி வாழ்த்தியுள்ளார். அடிக்கடி அவரைச் சந்தித்து இலக்கிய நயங்கள் பற்றிப் பேசுவதுண்டு. அதனுல் நான் பெரும்பலன் அடைந்தேன். முன்னுரை வழங்கி உதவியதற்கு திரு. சோமு அவர்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றிகள்.

இந்த நூலைத் தமிழன்னையின் திருவடிகளிலே எளியேனுடைய காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறேன். வாழ்க தமிழ்!

திருமயிலை. **கோவிந்தன்.**

பொருளடக்கம்

			பக்கம்
1.	மணிவாசகம்	—	1
2.	கம்பர் தமிழ்	—	7
3.	விடுதலை வெண்பா	—	9
4.	எந்நாளும் இன்பம்	—	12
5.	பாலன் பாடிய பா	—	14
6.	அடிசிற்கினியாள்	—	17
7.	தாயுமான தத்துவம்	—	19
8.	மங்கையின் மதி	—	23
9.	விலட்சணர் வீரம்	—	29
10.	கோதைக் கோயில்	—	34
11.	மூலரின் மூலம்	—	38
12.	நீலச் சிற்றுடை	—	42
13.	சிறுவன் தந்த நீதி	—	47
14.	பாணனும் பாணியும்	—	52
15.	கவிமணிக்குக் கனி	—	56
16.	தனக்கு மிஞ்சியும் தான தருமம்	—	60
17.	வாழ்விக்க வந்த மகாத்மா	—	65
18.	நரகவி பாடிடா வரகவி	—	70
19.	செல்வக் குப்பை	—	75
20.	மெய்த்தவம்	—	80
21.	சிந்தாமணியின் இசை முறை	—	84
22.	கவியின் மாண்பு	—	88
23.	சேக்கிழார் காட்டும் செந்நெறி	—	93
24.	பழநி மாம்பழம்	—	97
25.	அனுபவ வேதம்	—	102
26.	ஆனந்த ரங்கமணி	—	107

			பக்கம்
27.	பல்லவத்தின் செல்வம்	—	112
28.	வாக்குறுதி	—	117
29.	முகம்மது நபி பிறந்தார்	—	121
30.	பெய்யெனப் பெய்யும் மழை	—	126
31.	வளையாத செங்கோல்	—	132
32.	இளமையோடு இருக்க வழி	—	138
33.	கானயோகி	—	142
34.	காதல் காவியம்	—	147
35.	இராயப்பேட்டை முனிவர்	—	151
36.	அருட்பெருஞ் சோதி	—	155
37.	கவி சுந்தரம்	—	160
38.	மொழியின் வலிமை	—	163
39.	விந்தை மனிதர் வேதநாயகம்	—	169

செந்தமிழ்க் கனி

1

மணி வாசகம்

கொஞ்சும் மழலை இன்பத்திலே நெஞ்சத்தைக் கொடுக்காதவர்கள் இந்தக் குவலயத்திலே யார்? யாழும், குழலும் குழந்தையின்பத்திற்கு, பாப்பாவின் விரல் அசைவுக்கு, குஞ்சுப்பாப்பாவின் குறுநகைக்கு இணையாமோ? பித்தர் பிதற்றலாம் மழலை இன்பம் பெரிதோ என்று. இந்தக் குழந்தையே ஒரு குட்டி உலகம்; அதிலே வஞ்சனை இல்லை. மோசம் இல்லை. நாசம் இல்லை. ஆனால், பாசம் உண்டு. பேசும் பொற் சித்திரங்களாக, தூசியில்லா ஆடி போன்ற முகத்தோடு அவர்கள் ஆடி வருவதையும் பாடி வருவதையும் பார்க்க ஆயிரம் ஆயிரம் கண்கள் வேண்டும்.

இந்தச் சின்னஞ் சிறுசுகள் தாயின் அன்பிலே, அன்னையின் அணைப்பிலே வளர்கிறார்கள். தன் குழந்தையைக் காட்டிலும் வேறு எதுவும் உயர்ந்தது இல்லை என்பாள் உத்தமத் தாய்.

மணிவாசகப் பெருமானும் தன்னுடைய யோகத் தமிழிலே இலக்கிய இன்னிசையைப் புகுத்தி ஆண்டவனை அழைக்கிறார். குழந்தை அழுதால் தாய் அறிவாள் சேய் அழும் காரணத்தை! ஓடிவந்து எடுத்து உச்சி முகர்ந்து பாலூட்டுவாள் அன்னை. அண்டமே கிடுகிடுக்கும்படி அழுத சேய், வாயு மூடி தாய்ப்பால் பருகும். உலகிலே மாமனும், மாமியும், சேயும், மனைவியும் மற்ற மற்ற சுற்றங்களெல்லாம் இருக்க மணிவாசகருக்குக் கிடைத்தது மாறுத

அன்புள்ள தாய்தான். பத்து மாதம் சுமந்து பெற்றவள் அல்லவா அன்னை. பறந்து வருவாளே பாலனுக்கு ஒரு பழுது என்ருல். மந்திரிவேலை பார்த்த மாணிக்கவாசகர் மாதாவைக் காட்டிலும் மாதவனே மகனுக்கு இன்பம் நல்க வருவான் என்பதைத் தனது மணிவாசகத் தமிழில் மொழிகிருர்.

ஆனுல் அவள்கூட ஒருவேளை என்னை மறந்தாலும் நீ நிச்சயம் மறக்க மாட்டாய் என்று விளம்புகிருர். பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து - இங்கு சால என் பது நோக்க வேண்டியதாகும். தாய் சேயை மறப்பாளா? இல்லை. ஆனுல் ஆண்டவனுடைய அன்பிற்கு முன்னுல் தாயும், சுற்றமும் மற்றவர்களும் ஏது? அவனுடைய அன்பு ஒன்று கிடைத்துவிட்டால் மற்றவை என்ன பெரிது? தாய் மறந்தாலும் சேய் நான் மறவேன் என்பதே, அதன் பொருள். இதையே ஆழ்வாரும் அறைகின்ருர். "அரி சினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள் தன் அருள் நினைந்தே அழும்குழவி அதுவே போன்றிருந்தேனே."

அந்த ஆண்டவனுடைய அருளும், அன்பும், ஆதரவும் கிடைத்துவிட்டால் உள்ளம் உருகி ஞான ஒளி வீசுகிறது. ஞானம் வீசுகின்ற போது அஞ்ஞான இருள் தானே அகல் கிறது. அப்போது ஆனந்தத்தேன் கொட்டுகிறது. இந்த இன்பத்தைத் தந்தவன் யார்? என் அப்பன், ஐயன், நான் வணங்கும் தெய்வம், சிவபெருமான். பல காலமாக என் னுடைய பரமனைத் தேடிக்கொண்டிருக்கிறேன். அவன் அகப்படுவதாக இல்லை. அழுதேன், தொழுதேன், பாடி னேன், ஆடினேன், ஓடினேன். அலைகடலிலும், நீண்டு உயர்ந்து நின்ற மலைகளிலும், அவைகளிலுள்ள குகைகளி லும், காடுகளிலும் தேடினேன், தேடினேன். பக்தனு டைய அருளுக்கு இரங்கினுன் பரமன். என்னுடைய பாவன மூர்த்தியைக் கண்டேன். சடக்கென்று பிடித்துக்கொண் டேன். இனி உன்னை விடுவேனு? நீ எங்கு என்னைவிட்டுப் போவது! உன்னைப் பிடித்துக் கொண்டேன். அருள்வாய் அப்பா! அப்பா! மணிவாசகரின் மணிப்பாட்டை இப் போது பாருங்கள்.

"பானினைந் தூட்டும் தாயினுஞ்
சாலப் பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி யுள்ளொளி
பெருக்கி யுலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்
திரிந்த செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்
பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே"

இப்படியாக மணிவாசகருடைய பாடல்கள் எத்தனை எத்தனையோ! ஒருபாட்டிற்கு ஒருலட்சம் பொன் தரலாம். தமிழ் என்னும் கடலிலே இப்படிப்பட்ட முத்துக்கள் பல பல கோடி. ஒவ்வொரு முத்தையும் எடுத்து முத்தமிழாக எடுத்துரைத்தால் எத்தனை பெரிய விரிவுரையும் தரலாம். நமது மூதாதையர்கள் சின்னஞ்சிறு கவிதைகளிலே இலக்கியத்தையும், ஞானத்தையும், அறிவையும் அழகாக அமைத்துச் சென்றிருக்கிறார்கள். மாதுளம் பழத்திலே முத்துக்கள் மறைந்திருப்பது போல அரிய பொருள்கள் அடங்கியிருக்கின்றன. மேலே உள்ள தோலைக் கொஞ்சம் அகற்றினால் செந்நிறச் செந்தமிழ் முத்துக்கள் காட்சி அளிக்கும். அந்த மாட்சியை, அரிய காட்சியைக் காணவாரும் செகத்தீரே என்று அறை கூவி அழைக்கிறது, சாட்சியாக மேலுள்ள மணிவாசகத் தமிழ்.

2

கம்பர் தமிழ்

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையிலே ஒவ்வொரு குறிக்கோளைக் கொள்ளுகிறான். கொண்ட குறிக்கோளெல்லாம் எல்லோருடைய வாழ்க்கையிலும் நடந்தேறுவதில்லை. ஆனால் அதற்காக மனிதன் தன்னுடைய வாழ்க்கையின் லட்சியங்களைக் குறித்துக்கொள்ளா

மல் இல்லை. குறித்த இலட்சியங்களை வாழ்க்கையில் அடைய முயற்சி செய்யாமலும் இல்லை. முயற்சி செய்தும் தான் கொண்ட இலட்சியங்களை அடையாமல் போனாலும் கூட, அந்த இலட்சியங்களை வாழ்க்கையிலே எப்படிக் கொண்டான்! எப்படி நிறைவேற்ற முயன்றான்! நிறைவேறியோ, நிறைவேறாமலோ எப்படிப் போனது, என்பதைப் பற்றி ஒழிந்த நேரங்களிலே உட்கார்ந்து சிந்திக்கிறான். இந்தச் சிந்தனை உண்மையிலேயே மனதிற்கு இன்பம் தருவதாக இருக்கிறது.

கம்பர் பெரிய கவி. கவிச் சக்கரவர்த்தி என்று பெயர் பெற்றவர். முனியருளிய கதைக்கு முத்தமிழ் பண்பு காட்டி, இனமணிச் சொற்களை இயற்கையாகக் கோத்து, வனமலர் வனப்புக்களை வகையாகக் கட்டி, வாசமலர்ச் செண்டுகளைச் சேர்த்து, மாந்தர் தம் மனமலரிலே இன்றும், அன்றும், என்றும் வண்டாய்ச் சுழல்கிறான்—நமது கம்பன். கம்பனைப் போன்ற ஒரு கவி கிடைப்பது மிக மிக அரிது. எந்தக் கோணத்திலே நின்று பார்த்தாலும் கம்பன் அந்தக் கோணத்திலே காட்சி அளிக்கிறான். மன்னர்களோடு பழகி வந்த கம்பன், மண் குடிசை வாழ்க்கையும் அறிந்தது அற்புதந்தான். அதனால்தான் அவன் மாந்தர் தம் இயல்புகளை மிக மிக இயற்கையாக கம்பச் சித்திரத்திலே செதுக்கிவிடுகிறான். ஆண், பெண், அரசன், அந்தகன், அடிமை, ஆசான் ஆகிய பாத்திரங்களை அதற்குரிய அமைப்போடு, அழகோடு, குணத்தோடு, குறியோடு, கொள்கையோடு அமைக்கிறான். தோட்டியிலிருந்து, தொண்டைமான் வரை பழகியதால் ஏற்பட்ட அனுபவம் அவனுக்கு உதவுகிறது. கம்பனுக்கு முன் ஒரே சுவைகளைப் பாடியவர்களைத்தான் கண்டோம். நவரசங்களையும், நல்லவிதமாய் அமைத்த பெருமை கம்பனுக்கே உரியதாகும்.

அசோக வனத்திலே, சிறை இருந்த செல்வி சீதையை அடையாளம் கண்டு அனுமான் அளவளாவிக் கொண்டிருந்தான். ஒருவருக்கொருவர் வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன. "ஒரு மாதத்திலே இராமன் வந்து தன்னை மீட்டுச் செல்லாவிட்டால் உயிரை விட்டுவிடுவேன்" என்று சீதை செப்புகிறாள். "இராமன் வரப்போவதில்லை. தான்

உயிரை விடப்போவது என்னமோ திண்ணம்'' என்று உறுதிகொண்டு தனக்குத் தானே அங்கலாய்த்துக்கொள்கிருள். மனப் புண்ணுடனே இராமனுக்குச் செய்தி சொல்லும் வகையில் பல பல செய்திகளைச் செப்புகிருள். "இறந்துவிடுவேன்'' என்று சொல்லும் சீதை மாமியாருக்குச் செய்தி சொல்லுகிருள், "இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்'' என்ற செவ்வரத்தை நினைப்பூட்டச் சொல்லுகிருள். "மீண்டும் வந்து பிறந்தால் இராமனுடைய திருமேனியைத் தீண்டும் வரம் தொழுது கேட்டாள்'' என்று சொல்லச் சொல்லுகிருள். இது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. ஒரு மாதத்திலே இறக்கும் சீதை எத்தனை நைப்பாசைகளைக் கொண்டிருக்கிருள். இது மனித இயல்புபோலும், "இராணியாக அயோத்தியா புரியிலே ஆளலாம் என்றிருந்தேன். பட்டத்து யானையிலே ஊர்வலம்போகலாம் என்றிருந்தேன். எதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டுமல்லவா ?''

"விதி செய்த சதி நான் இங்கு இருந்து உயிர் விடப் போகிறேன் '' என்று பழைய கதையையும் இன்றுள்ள நிலையையும் எண்ணிப் பெருமூச்சு விடுகிருள். தனக்குத் தானே பேசுகிருள். உரை செய்து என்ன பயன்? பேசிப் பிரயோசனம் ? சலிப்பு, உம் ! உம் ! 'விதி' விதியின் கொடுமை! யாரை நொந்து என்ன? ''என்று பலவாறு சீதை பேசுகிருள். இப்போது கம்பச் சித்திரத்தைக் காணலாம் !

"அரசு வீற்றிருந்து ஆளவும் ஆய்மணிப்
புரசை யானையின் வீதியில் போகவும்
விரசு கோலங்கள் காண விதி இலேன்
உரை செய்து என்னே ? என் ஊழ்வினை
உன்னுவேன் ''

3

விடுதலை வெண்பா

சீப்பும், சோப்பும் விற்க வந்த வெள்ளையர்கள், வியாபாரம் செய்ய இந்த நாட்டை ஆண்டுவந்த மொகலாய

மன்னர்களிடம் அனுமதி பெற்றார்கள். கடற்கரை யோரங்களில் இருந்த, சிறு சிறு நகரங்களுக்கருகில் பண்டகசாலைகளை அமைத்துக் கொண்டார்கள். கிழக்கிந்தியக் கம்பெனி என்று சொல்லும் பிரிட்டிஷ்காரர்கள், பண்டகசாலைகளைப் பாதுகாக்க நமது நாட்டு மக்களையே கூலிக்கு அமர்த்திக் கொண்டார்கள். காவல் காக்க என்று கொண்ட நமது நாட்டு மக்களை நமக்கே எதிராகப் போராடும் படைவீரர்களாகவும் கும்பினியார் மாற்றினார்கள். டில்லி ஆட்சி ஆட்டம் கண்டபோது, நாடு பலவிதத்திலும் சிதறியது. சிற்றரசுகளும், பேரரசுகளும் ஒன்றையொன்று மோதிக் கொண்டன.

நாட்டைக் காக்க வேண்டிய மன்னன் மது, மாது, மாமிசம் இவைகளில் மனம்போனபடி ஈடுபட்டான். கேளிக்கைகளிலும், வேடிக்கைகளிலும் வேந்தன் ஈடுபட்டதால் நிர்வாகம் நிலைகுலைந்தது. வரிவசூல் சரியாக நடைபெறவில்லை. தவிர இயற்கை வேறு தொல்லை கொடுத்தது. பொக்கிஷம் காலியாயிற்று. மன்னர்கள் வியாபாரிகளாக வந்த வெள்ளைக்காரர்களிடமே வட்டிக்குக் கடன் வாங்கினார்கள். வாங்கிய கடனைத் தரமுடியாமலே போனபோது நாட்டின் வரிவசூலையே பொறுப்பின்றி அன்னியன்வசம் அநியாயமாக ஒப்படைத்தார்கள். சிற்றரசுகளின் சில்லறைச் சண்டைகளைத் தீர்த்து வைத்ததற்குப் பரிசாக வெள்ளையர்கள் பல பல பகுதிகளைத் தங்களுடைய அதிகாரத்திற்கு உட்படுத்திக் கொண்டார்கள்.

நாடு இரண்டு கட்சியாகப் பிரிந்தது. ஒரு கட்சிக்கு வெள்ளைக்காரனும், மற்றொரு கட்சிக்கு பிரெஞ்சுக்காரனும் கூட்டுச் சேர்ந்து நாட்டையே குட்டிச்சுவராக்கி அடிமை ஆக்கினார்கள். பண்டகசாலைகளைப் பாதுகாக்க ஏற்பட்ட கூலிப்பட்டாளம் நாளடைவிலே பெருகியது. அதைக் கொண்டே, இந்தப் பரந்த பரதகண்டம் முழுவதையும் பரங்கியர்கள் பிடித்துக் கொண்டு கொடி போட்டனர்.

நாட்டு விடுதலையில் நாட்டம்கொண்ட பலர் அன்றே அன்னியனை எதிர்த்து சிறையும் சென்றனர்; சிரமும் தந்தனர். அந்த வீரக்கனல், வெற்றிக்கனல் அணைந்து போகாமல் அங்குமிங்குமாய் ஆடிக்கொண்டே இருந்தது.

பல பல இயக்கங்கள் தோன்றி முடிவில் பம்பாய் மாநகரில் காங்கிரஸ் மகாசபையாக மலர்ந்தது. குருதியைக் கொட்டிக் காத்தவர்கள் கோடிக்கணக்கானவர்கள். கோகலே, திலகர், மகாத்மா காந்தி போன்ற பெரியோர்கள் மூலம் முறையே வளர்ந்த மகாசபை, காந்தி மகாத்மா காலத்தில் போராட்ட முறையையே மாற்றி அகிம்சை வழியில், அறவழியில், ஒத்துழையாமை முறையில் அன்னியனை அகற்ற எழுந்து நின்றது.

விடுதலை இயக்க காலத்திலே தோன்றிய இலக்கியங்கள் ஈடற்றது, இணையற்றது. பேசினாலோ, சொன்னாலோ, நினைத்தாலோ மெய் சிலிர்க்கும். பரந்த பரத கண்டம் முழுவதும் விடுதலை இயக்கத்திலே ஒருங்கே பங்கு கொண்டது. இந்த நாட்டின் உயர் தனிச் செம்மொழிகள் அத்தனையிலும் அரிய பெரிய இலக்கியங்கள் மலர்ந்தன. காவியங்களும், கவிதைகளும், வரலாறுகளும் பெருகி நின்றன.

நமது தொன்மொழியாம் தமிழ்மொழியிலும் மலர்ந்தவை கணக்கிட முடியா. இந்தத் தமிழகத்திலே இன்றும் மூலை முடுக்குகளிலே அந்தக் கவிதைகள், அந்த விடுதலை இலக்கியங்கள் பேசப்பட்டு வருகின்றன. எதற்கு? எப்படிப் பெற்றோம் இந்த ஆனந்தசுதந்திரத்தை? கண்ணீர் விட்டு, செந்நீர் விட்டு, வளர்த்த சுதந்திரத்தை. எப்படிப் பேணிப் போற்றிக் காக்க வேண்டும் என்பதற்காக அந்த இலக்கியங்கள் நினைவு கூர்ந்து நோக்கப்படுகின்றன. இனி வரும் சந்ததி, அன்னியனை அகற்றியதை இந்த வரலாறுகள், கதைகள் மூலம்தானே தெரிந்துகொள்ள முடியும்? அப்படிப்பட்ட கவிதைகள் ஒவ்வொன்றும் ஒரு அமர காவியமாகும்.

விடுதலை இயக்க இலக்கியத்திலே காணும் கவிதைகள் கணக்கற்றவை. வெள்ளையனை வெளியேற்ற கவிஞர் மிகவும்கோபம் கொள்ளுகிறார். கோபத்திலே இன்று கூட நாம் எதிரியை போடா! வா_ா! மூடா! காடா என்று ஏசுகிறோம். இது மிக மட்டமாக ஒருவனை, இழிவாக இகழ்கின்ற நிலை. கவிஞரோ கடும்கோபத்தில் இருக்கின்றார். விடுதலை வேகம் கவிஞரின் நாடி நரம்புகளிலே துடிக்கிறது.

இந்த நாட்டினுடைய தாழ் நிலைமையையும் அன்று இந்த நாடு இருந்த மகோன்னத நிலையும் சீர்தூக்கிப் பார்த்து சிம்மமென கர்ஜிக்கிறார். ஆண்டான், அடிமை என்ற பேச்சே அந்தப் பக்கம் அண்ட நடுங்குகிறது. கேட்ட வெள்ளையன் நிலை என்ன ? வீர சுதந்திரத்தையே வேண்டி நின்ற மக்களுக்கு இந்தக் கவிதை ஒரு மந்திரமாக, மறை மொழியாக, தாரகமாக விளங்கியது. "இந்த நாட்டை விட்டுப் போடா விரைந்துபோ, என்று அறமே பாடுகிறார் கவிஞர். இனி நாம் கவிதையைக் காண்போம். வெள்ளையனை விரட்டப் பாடிய வெண்பாவைப் பார்ப்போம்.

"ஏடா வெமதன்னைக் கின்ன லிழைத்தகுடி
கேடா நெறியழித்த கீழ்மகனே—வாடாத
பீடா ரிளந்தமிழர் பேரறவாள் கொண்டுதித்தார்
போடா வினிவிரைந்து போ !"

வெள்ளையன் இந்த வெண்பாவைக் கேட்டபிறகு தானோ என்னவோ விரைந்தே போய் விட்டான். இன்று நாம் சுதந்திர பாரதத்திலே விடுதலை முழக்கம் கேட்கும் தமிழகத்திலே வாழ்கின்றோம். அன்று இசைத்தான், மேலே கண்ட வெண்பாவை; வெள்ளையனை விரட்ட சுதந்திர வெறி கொண்ட வீரக்கவிஞன். தென்பாண்டி மண்டலத்திலே இன்று கேட்கிறது இந்த வெண்பா. "இதைப் பாடித்தான் அன்று வெள்ளையனை (எனது மூதாதையர்கள்) விரட்டினார்கள்" என்று சுதந்திரத்தைப் பேணிவளர்க்கும் எதிர்கால செந்தமிழ் நாட்டுச் சிங்கங்கள் கர்ஜிக்கும். வாழ்க சுதந்திரம் ! வாழ்க தமிழ் !!

4

எந்நாளும் இன்பம் !

உலகிலே மனிதன் சுதந்திரமாக வாழ உண்மையாக விரும்புகிறான். ஆனால் எத்தனை பேர் அந்தச் சுதந்திரத்தை விரும்பிப் போற்றி வளர்க்கிறார்கள் என்பதே இங்கு

கேள்வி. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையில் தனக்குத்தானே, தான் நடந்துகொள்ள ஒரு வழி, நியதி, சட்டம் இவைகளைத் தொகுத்துக் கொள்ள வேண் டும். ஒரு இலட்சியம் வாழ்க்கையிலே இருக்க வேண்டும். இன்னது நடக்கும், இன்னது நடக்க வேண்டும், இவரைப் போற்ற வேண்டும், மதிக்க வேண்டும் என்ற கொள்கை கள் சரியாக உருவாக வேண்டும். உருவாகா விட்டால் அதை எப்படி உருவாக்க வேண்டும் என்பதை உவகை யோடு, உண்மையோடு, உறுதியோடு, உற்சாகத்தோடு, ஊக்கத்தோடு உரைக்கிறார் வாகீசப் பெருமான் தனது வண்டமிழ் மொழியிலே.

நான்கு குரவர்களிலே ஒருவர் வாகீசர். வாகீசத்தை வகையாகக் கற்றால் வாழ்க்கையிலே செம்மையும், சீரும், சிறப்பும், செல்வமும்தானே சேரும். வாகீச இலக்கியம் இதயத்தைத் தொடுவது மட்டுமல்ல. மனிதனை மாமனித னாகவும் ஆக்கிறது. இனி வாகீசத்தைக் காண்போம்.

நாம் யாருக்கும் அடிமையில்லை என்று வாயில் சொல் வதே கடினம். சர்வ சாதாரண விஷயத்திற்குக்கூட, இந்தக் காலத்திலே சாதாரண மனிதனைத் தூக்கி வைத்துக் கொண்டு கூத்தாடுகிறோம். இந்திரன், சந்திரன் என்று சாதிக்கிறோம். மட்டமான பேர்வழிகள் மகராசன் என்று போற்றப்படுகின்றனர்.

வாகீசரோ கன்னத்தில் அறைந்தது போல "நாமார்க்கும் குடியல்லோம்" என்று சொல்லுகிறார். நமன் அல்லது எமன்! சே! இதற்குத்தானா பயப்படுவோம். எமன் என்று எள்ளி நகையாடுகிறார். எமன் அவ்வளவு எளிதான பொருள் அவருக்கு. உயிரையே கொண்டு போகின்றவனைப் பார்த்து "சே!" என்கிறார். நமக்கா நரகம்? இடரா? யாருக்கு? நமக்கா? இல்லை, இல்லை. ஒருநாளும் இல்லை. நடலையில்லோம். பின் எப்படியிருக்கும் அப்படி ஒன்று உண்டா? குன்றையும் குமைத்து எறியும். உறுதிபெற்ற உடல். நோய் நொடி உண்டா? இல்லை. இன்பம்! இன்பம்! என்னாளும் இன்பம். துன்பமே இல்லை. யாருக்கும் அடிமை செய்யாத பரிபூரணற்கே நாம் அடிமை செய்கிறோம்; சங்கரனுக்கு அடிமை; கயிலை வாழ்

கோமானுக்கே நாம் அடிமை. அவருக்கே நமது முடி வணங்கும். கொய் மலர்ச் சேவடியே குறுகினேம். குறைவே இல்லை. எல்லாம் வெற்றி. எங்கும் வெற்றி. எதுவும் வெற்றி. நாம் சங்கரன் பாதம் போற்றி வணங்கும் பரம பாகவதர். இப்பொருளோடு இந்தப் பாட்டை எத்தனை தரம் வேண்டுமானாலும் பார்க்கலாம். அவனுடைய அடிமையாக இருப்பதால் உலகிலே எதுவும் துச்ச மாகப் படுகிறது வாகீசருக்கு. அடிமை என்ற பேச்சே அடியார்கள் காதில் படவே கூடாது என்று வாதாடுகிறார். இப்போது வாகீசர் கீழ்க்கண்ட கவிதை மூலம் நம்மை வரவேற்கிறார். படித்துப் பாருங்கள்.

நாமார்க்கும் குடியல்லோம் ; நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் : நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம்; பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பமே இல்லை.
தாமார்க்கு குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே.

5

பாலன் பாடிய பா

திருவாதிரைத் திருநட்சத்திரத்திலே திருக்குழந்தை பிறந்தது. உடனே சடங்குகள் சிறப்பாக நடந்தன. இள ஞாயிறு போலத் திகழ்ந்த தெய்வக் குழந்தையை மணிகள் இழைக்கப்பட்ட மாணிக்கத் தொட்டிலிலே, இட்டுத் தாலாட் டினர். சீராட்டினர் ; பாராட்டினர் ; பெற்றோர்களுக்குப் பேரானந்தம். வேதங்களும் தீந்தமிழும் சிறப்புற வந்த செல் வம் இவன், என்று ஏற்றிப் போற்றினார்கள். அங்குள்ள ஆண், பெண் அனைவரும் வந்து குழந்தையைப் பார்த்து

உச்சி மோர்ந்து, உவகை எய்தினர். "குழந்தாய்! செல்வமே" என்று அழைத்தவர்களைப் பார்த்து குறுநகை புரிந்தான். பொக்கைவாய்திறந்து பெருநகை செய்தான். தவழ்ந்து சென்றான். தளிர்க்கரத்தால் தட்டினான். சுருண்ட குஞ்சி அலைய, காற்சிலங்கை கிண்! கிண்! கலீர்! கில்! கில்! என்று ஒலிக்க தளர் நடையாடி நடந்தான். இப்படியாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இந்த தெய்வக் குழந்தை வளர்ந்து வந்தது.

மூன்று வயதுக் குழந்தை ஓரிடத்தில் நிற்பதில்லை. ஒரே துரு துருப்பு. கண்களிலே ஒளி. தந்தை வெளியிலே செல்வதை குழந்தை உற்று நோக்கியது. ஒரே ஆனந்தம்; தாவிப் பின் தொடர்ந்தது, திரும்பிப் பார்த்தார் தந்தை. கண்ணே! பொய்கைக்குப் போகிறேன் அங்கே தண்ணீர் அதிகம் நீ வரக்கூடாது. அம்மாவிடம் செல் என்றார். ஆனால் அந்தப் பயலோ! இதற்கா மசிவான். அடம்பிடித்து அழ ஆரம்பித்தான். "இல்லை நானும் தான் கூட வருவேன் நானும் தான் கூட வருவேன்.' நீ மட்டும் போகலாம் உம்! உம்! ஏ! ஏ!" ஒரே அழுகை. தந்தை தர்ம சங்கடத்திற்குள்ளானார். நீராடப் போகின்றவர் போக்கிரிப் பையனைத் தடாகத்திற்கு கூட்டிக்கொண்டுபோவது எப்படி? கோபம் கொண்டு மிரட்டினார். குழந்தை காற்சலங்கை குலுங்கக் குலுங்க அழுகையை அதிகமாக்கியது. தந்தை மனம் இரங்கத் தனயனும் கூடப் புறப்பட்டான் பிரமதீர்த்தக் கரையினை நோக்கி.

கரையை அடைந்த தந்தை, மகவைக் கரையிலே இருக்கும்படி கூறிக் குளத்தில் குளிக்க இறங்கினார். அவர் நீராட்டத்திலே இறங்கிவிட்டார். கரையிலே இருந்த கன்னல் மொழி பேசும் பொற்சித்திரம் தந்தையைக் காணாது கலங்கி, அழ ஆரமபித்தது. கையைப் பிசைந்து கொண்டு அம்மா! அப்பா? என்று ஓலமிட்டது. ஓலத்தைக் கேட்ட உமைபாகன் திருத்தோணி புரத்து ஐயன், உமாதேவியுடனே விடைமேல் எழுந்தருளி பொய்கைக் கரைக்கு வந்தார். அழுத பிள்ளையிடம் அருட்கருணை கொண்டு அம்மையை நோக்கினார். புவனமெல்லாம் போற்றி வணங்கும் அன்னை பொற் கிண்ணத்திலே திரு

முலைப்பாலைக் கறந்து, வேதங்களையும், ஏழுலகங்களையும், அண்ட சராசரங்களையும், ஈன்ற அன்னையார் அழும் பிள்ளை அருகிலே சென்று அணைத்தெடுத்து, அமுதப் பாலினை, அழுத கண்ணீரைத் துடைத்து, பாலினைப் பருகச் செய்தார். குழந்தை அழுகை தீர்ந்தது. ஐயன் அருள் புரிந்தார்.

இது நடந்ததெல்லாம் ஒரு நொடிப்பொழுதில். நீராட்டம் முடிந்து கரையினையைக் கடுகி அடைந்த தந்தை, தனயனைக் கண்டார்? கோபம் கொண்டு “நீ யார் தந்த பாலமுதினை உண்டாய். எச்சில் மயங்கிட உனக்கு இதனை இட்டவரைக் காட்டு” என்று கோலெடுத்து மிரட்டினர். குழந்தையின் கண்களிலே கொட்டியது ஆனந்தக் கண்ணீர். உச்சிமேல் எடுத்த திருக்கையின் ஒரு விரலாலே சுட்டி, விண்ணில் நிறைந்த ஞான ஒளியோடு, விளங்குகின்ற இன்பத்தின் மேலே, அன்னையுடனே பெருங் கருணையோடு எழுந்தருளிய தோணியப்பரை எதிரிலே காட்டினன். தம் முன்னே நிறைந்து வழிந்த உயர்ந்த ஞானத் திருமொழியினலே “தோடுடையவன் செவியிலே, விடையேறுவோன், தூவெண் மதி சூடியவன். காடுடை சுடலைப் பொடியாம் திருவெந்நீர் அணிந்தவன். என் உள்ளத்தைக்கவர்ந்தவன். எம்மை இது செய்தவன் இப்பெருமான் அன்றே” என்று எல்லையிலாத வேதங்களின் முதல் எழுத்தாம் பிரணவத்தை தகரமெய்யோடு சேர்த்து உயர் தனிச் செம்மொழியில் உயர்ந்தாம் தமிழ் மொழியினலே யாவர்க்கும் இன்பம் பெருகும்படி மெய்மை மொழித்திருப் பதிக்கத்தினை மூன்று வயதுப் பாலகன், பால் பருகிய திருஞானசம்பந்தன் தந்தைக்குச் செப்பினன். இப்போது பாலன் பாடிய பாவினைப் பார்போம்.

“ தோடுடைய செவியன் விடையேறி
ஓர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளம்கவர் கள்வன்

ஏடுடைய மலரான் முனைநாள்
பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய
பெம்மான் இவனன்றே!

6

அடிசிற்கினியாள்

நமது நாட்டின் பெருமை இரண்டு அற்புத நூல்களால் உலகிலே தலை நிமிர்ந்து நிற்கின்றது. ஒன்று குறள், மற்றொன்று கண்ணன் அருளிய கீதை. முன்னது எளிய, தூய இல்லற ஞானியால் அமைதி, அனுபவம் கொண்டு இயற்றப்பெற்றது. பின்னது விஜயனின் சோர்வை அகற்றி, வீரப் பணிபுரிய கடும் போர்க் களத்திலே கண்ணனால் சொல்லப்பெற்றது. சஞ்சயன் கேட்டபடி வியாசபகவான் கவிதையாகத் தொடுத்து உலகிற்குத் தந்தது. வையத்தில் வாழ்வாங்கு வாழும் தெய்வ நிலையை விளக்குவது திருக்குறள்.

வள்ளுவர் பெரும் புலவர், கவிமணி, உலகாசான் பொய்யாமொழிப் புலவன். ஈரயாடில் இணையிலாத 'பொது மறையை உலகிற்கு தந்தவான். ஆயிரத்து மூன்னூற்று முப்பது அருங் குறளும் மனிதன அடையத்தக்க எல்லா நலன்களையும் விளக்குகின்றன. இப்படிப்பட்ட அரிய பெரிய நூலைஇயற்றக்காரணம் அவருக்கு அமைந்த நல்இல்லறமே. அவருக்கமைந்த இல்லக் கிழத்தி வாசுகி நல்லாள் நல்ல வாழ்க்கைத் துணைவியாக அமைந்தாள். அவர்கள் இருவரும் இன்ப இல்லறம் நடத்தியவிதம் மனித சமுதாயத்திற்கே ஒரு எடுத்துக் காட்டாகும். இந்தக் காதலர் வாழ்வு கற்பகம் போல தழைத்தது. வாசுகியின் அடக்கமும், அன்பும், அறிவும், பணிவும், கற்பும் பொறுமையும் உலகெலாம் போற்றத் தக்கன. ஒருவனுடைய இல்லத்திலே சீரும் சிறப்ம் வந்து சேருவது இல்லத்திலே அமைந்தவளைப் பொறுத்

ததே. பாடுபட்டு ஆடி ஓடி ஓய்ந்து வந்த உத்தமக் கணவனை புன்னகையால் வரவேற்று இன் சொல் பேசி, கைகால் சுத்தம் செய்ய நீர் தந்து இருப்பதை உண்ணக் கொடுப்பதே உண்மையான இல்லாளின் கடமையாகும். அந்த இல்லத்திலே மகிழ்ச்சியும், மகாலட்சுமியும் தாண்டவமாடும். இந்தப் பண்பாட்டிலேதான் நம் நாட்டிலே ஆயிரக்கணக்கான இல்லங்கள் அமைதியாக வாழ்க்கையை நடத்தின, நடத்துகின்றன. இந்த வழியிலேதான் வள்ளுவரும் வாசுகியும் வந்தார்கள்.

வள்ளுவ வாசுகி இல்லறத்தைக்கண்டு பல புதிர்கள் தீர்ந்தன. பல ஐயப்பாடுகள் அகன்றன. வருவிருந்தை வரவேற்று, இன்னமு தூட்டினர். இரு கண்கள் போல வாழ்ந்தனர். எளிமையும் செம்மையும் பூண்டனர். நல்வினையாற்றினர். சித்தர் இல்லற துறவற ஐயத்தை இவர்கள் இல்லறத்தைக் கொண்டே தீர்த்துக் கொண்டார். மனைத்தக்க மாண்பினளான வாசுகி மனத்துக் கண் மாசிலாத வாசுகி கணவன் சொற் கடவாதவள். ஒரு நாள் கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருக்கும் போது "பொய்யா மொழி" அழைக்க கயிற்றை அப்படியே விட்டு விட்டு ஓடோடி வந்தாளாம். கயிறு அப்படியே நின்றதாம். மற்றொரு நாள் பழைய சாதத்திற்கு விசிறி வீசச் சொன்னாராம் "முப்பால் தந்த முனிவர்". அவ்வாறே செய்தாளாம் அந்த அம்மை அருங்குணவதி. பட்டப் பகலிலே விளக்கேற்றி தறிக்கடியில் ஏதோ ஒரு பொருளை தேடச் சொன்னாராம் உலக நூல் தந்தஉத்தமன். உண்மையென்று தேடினளாம் விளக்கோடு உத்தமி மறு பேச்சின்றி. இத்தகைய கற்பும், பணிவும், அன்பும், ஆதரவுங் கொண்ட அணங்கு அமைந்தால் இல்லறமே நல்லறம் என்று அற நூல் தந்த அறிஞர் அறைய, சித்தரும் ஐயம் நீங்கிச்சென்றுராம்.

இப்படிப் பல பல பெருமைகள் பேசவும், புகழவும் அமைந்த வாசுகி நல்லாள் வள்ளுவரை விட்டு மறைந்தாள். மறைந்த மனைவியை எண்ணி வள்ளுவர் மனமுருகி பாடியுள்ள வெண்பாவே அந்த கற்புக்கரசியின் பெருமையைக் காட்ட, எடுத்துக்காட்ட போதுமானதாகும். மனம்குழைந்து

நெஞ்சம் நெகிழ்ந்து கண்ணீரோடு, கவலேயோடு கவிஞர் பாடுகிருர். அந்தப் புனிதவதியை நினைத்தவுடனே அன்புடனே ஆதரவுடனே, மலர்ந்த முகத்துடனே தளர்ந்து வந்த கணவனுக்கு இட்ட இனிய அடிசிலே! அறுசுவை உணவே; முதலில் ஞாபகம் வருகிறது. ஒரு வார்த்தைக்கு இரு வார்த்தை அந்த இல்லறத்தில் எழுந்ததே இல்லே. கணவனே தெய்வமாகத் தொழுதாள். ஆடி ஓடி அலுத்து வந்த ஐயனே உணவுக்குப்பின், பாயிலே படுக்க வைத்து கால் வருடி களேப்பை நீக்கி கண் அயரச் செய்தாள் அந்தக் காரிகை. அன்புக் கணவன் அயர்ந்து நித்திரைக்குப் போன பின்பு தான் உறக்கம் கொண்டாள். ஆனல் கணவன் எழும் முன்னர் காலேயிலே கற்பரசி எழுந்து காரியங்களே கவனித்துக்கொண்டிருந்தாள். இப்படிப்பட்ட உத்தமி போனபோது வள்ளுவர் என்ன பாடுபட்டிருப்பார். இனிமேல் நான் என்று தூங்குவேன் என்று வேதனேப்படுகிருர். நொந்த உள்ளம் சொந்தம் போனதைக் கண்டு, பந்தம் போனதைக் கண்டு, பாடியபா இன்றைய உலக இல்லறங்களுக்கு வேதமாக எடுத்துக்கொள்ள வேண்டியதாகும்.

அடிசிற் கினியாளே, அன்பு டையாளே
படிசொற் றவருத பாவாய்—அடிவருடிப்
பின்தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என் தூங்கும் என்கண் இரா!

7

தாயுமான தத்துவம்

மனிதனுடைய வாழ்க்கையிலே நிம்மதி என்பது வெகு குறைவு. காரணம் அவன் கொண்ட அளவற்றஆசைகளே. ஆசையே இருக்கக்கூடாது என்பது தவறு. ஆசையிலே நெறிதவழ வேண்டும்; வெறி கூடாது. ஆசையிலே அன்பும், அளவும் பண்பும் பரிணமிக்க வேண்டும். ஆனல் உலகம் எப்படியிருக்கிறது? எங்கும் இருவினேப் போர் ஆசாபாசங்

கள் போட்டி, பொய், பொருமை, கோள், ஒரே போராட்டம். ஒரே போட்டி வெறியாட்டம், இப்படிப்பட்ட ஒரு அமர்க்க ளத் தலே அமைதிப்பட வழியுண்டா? வகையுண்டா?

பதில் தாயுமானவர் தான். தாயும் ஆன அவர் தான் இதற்கு வழிகாட்ட முடியும். தடுமாறி நிற்கும் உலகத்திற்கு உயர்ந்த வழியை-உன்னத வழியைக் காட்ட முடியும். "ஆசையை ஒழி, ஆசையே துன்பத்திற்கு காரணம்" என் ருர் புத்தர். சகல சௌபாக்கியங்களும் ஒருங்கே அமையப் பெற்ற அரச குடும்பத்தில் பிறந்தவர் புத்தர். இளவரசன்; இராஜகுமாரன்; எடுபிடி ஆட்கள் ஏராளம்; அணிதேர் புரவி ஆட்பெரும் படைகள் கொண்ட ராஜ்ஜியத்தின மன்னர் மகன்-பொன்னும்மணியும் புவியில் உள்ள செல்வங்கள் அத்தனையும் போதிய மட்டும் துய்க்க வசதி பெற்றவர். இவைகள் தவிர வாழ்க்கையில் இன்பம் துய்க்க காதல் மனே யாள். கட்டிளம் மனேவி கருவிழிகளிலே மொழி பேசுகின்ற காரிகை. மயிலெனச் சாயல்; குயிலெனப் பாட்டு கிளி யெனப் பேச்சு அன்ன நடையாள்; மின்னல் இடையாள் இத்தகைய அருமை மனேவியோடு, அன்பு மனேவியோடு, அழகு மனேவியோடு சித்தார்த்தன் வாழ்க்கை நடத்திஞன். சிறந்த ஆண் பிள்ளேயைப் பெற்ருன். அந்தச் சின்னஞ்சிறு, குழந்தையோ கொஞ்சும் மழலே பேசி, தத்தித் தத்தி தளர் நடை நடந்து புன்னகை பூத்து பெற்ருேருக்கும் மற்ருேர்க் கும் இன்பம் தந்தது. இப்படி சகல இன்பங்களும் பெற்ற சித்தார்த்தன் சஞ்சலத்தால் கலங்கி நின்ருன். காரணம் தெரியவில்லே. வாழ்க்கையே அவனுக்கு ஒரு புதிராக இருந் தது. அவன் பார்க்கின்ற இடமெல்லாம் துன்பத்தின் சாயலே தோற்ற மளித்தது. துன்பத்தை தொலேக்க வழி தெரியாமல் திண்டாடிஞன். இறந்த உடலும், கிழத்தனத் தால் மெலிந்து வாடுகின்ற ஏழையும், உழைத்து உழைத்து ஓய்ந்து போன காளேமாடும் இன்னும் இவை. போன்ற பிறவும் சித்தார்த்தனுக்குத் திகைப்பையும் சஞ்சலத்தையும் தந்தன. இந்தச் சிக்கலேத் தீர்க்கும் வழியும் வகையும் காணுது வாடி வதங்கி நின்ருன் சித்தார்த்தன்.

ஒரு நாள் இரவு நடு நிசியில் எழுந்தான் சித்தார்தான். எங்கும் இருள்! ஒரே இருள்! ஊரே உறக்கத்தில் தன்னே

மறந்து ஆழ்ந்திருந்தது. உறங்கும் மனைவியையும், மாசற்ற, மகனையும், மாபெரும் ராஜ்ஜியத்தையும், செல்வத்தையும், போகத்தையும் நொடியிலே துறந்து, வீட்டை விட்டு வெளியேறிச் சென்றான். போதி மரத்தடியிலே ஞானம் பெற்று, கௌதம புத்தராக, உலகத்திற்கு ஆனந்தன் மூலம் நீதியும், நெறியும் போதித்தார். புத்தமதக் கொள்கைகள் அன்று முதல் இன்று வரை உலகில் பரவி நிற்கின்றன. "ஆசையே துன்பத்திற்குக் காரணம். ஆசையை அறவே ஒழிக்க வேண்டுமென்பதும், புத்தமதக் கோட்பாடுகளிலே ஒன்று.

"சேரவாரும் செகத்தீரே" என்று கூறும் ஆசான் கூறுவது முற்றிலும் மாறுபாடானது. ஆசையை அறவே ஒழித்தால் உலகில் எதுவும் இயங்காது. பற்றில்லையேல் பாரில் தொழில்கள் இயங்கா. இயக்கத்திற்குப் பற்றுவேண்டும். ஆனால் அந்த ஆசையில் அளவு இருக்கவேண்டும். அளவற்ற ஆசையால் முடிவில் அதிக நட்டமே உண்டாகும். அகிலத்தையே கட்டி ஆண்டாலும் அளவில்லையானால், அது வளர்ந்து கொண்டே செல்லும். அந்த ஆசை எந்த அளவுவரை, வளர்ந்துகொண்டு செல்லுகிறது. கடல் மீதிலும் ஆதிக்கம் வேண்டும். வானத்திலும், வெளியிலும், வையத்திலும் வளர்ந்துகொண்டு செல்லவேண்டும். அளகேசனுக்கு நிகராக அம்புவியில் பொன்னும், பொருளும், மணியும் கொள்ளவேண்டும். ஆனால் இந்த மரகதமோ, மாணிக்கமோ மனதிற்கு நிம்மதி தந்ததா? சுகம் தந்ததா? என்று கேட்டால் பதில் உதட்டைப் பிதுக்க வேண்டியதுதான். செடிப் பவுனாக வைத்துக் கொண்டிருக்கும் செல்வர்கள், செம்பை செம்பொன்னாக்கும் சிறந்த வித்தையைக் கற்றுக்கொள்ள, பச்சிலை தேடியும், சித்தர்களைத் தேடியும் அலைவார்கள். மிக மிக வயதானவர்களும் கண்ணாடியில் முகத்தைக் கண்டு, சுருக்கத்தைக் கண்டு முகத்தைச் சுளிக்கிறார்கள். தலையைத் தடவி, தைலங்கள் தடவி, வெள்ளி மயிர்கண்டு வேதனைப்படுகிறார்கள். அன்று கண்ட திருமேனி அழகு குன்றாமல் இருக்கவும், இளமை மாறாமல் இருக்கவும், மருந்துகளும், மார்க்கங்களும் தேடி அலைகிறார்கள். "இவைகளை எண்ணிப் பார்த்தால் வயதைக் கண்டு வேதனை; செல்வம் சேராத

சோதனை. நினைக்க நினைக்க நெஞ்சத்தை நோக வைக்கும் சாதனை, வாட்டி வறுக்கும் முதுமை வாதனை. நல்ல தின்றிக் கெட்டதையே போதிப்போர் போதனை! நிம்மதி இல்லை. யோசித்தால் உண்ணுவது, உறங்குவது- இப்படித் தான் என் வாழ்க்கை போய்க் கொண்டிருக்கின்றது. உள்ளது போதும் என்று நான், என்று நினைக்கிறேனே, அன்றே என் வாழ்க்கையில் சுகமும், சுபீட்சமும், சுவர்க்கமும், செல்வமும், எல்லாம் தானே வந்து அடைகின்றன. ஒன்றை விட்டு ஒன்றைப்பற்றி நான் என்ன கண்டேன்? அப்படிச் செல்வது, என்னை நான் பாசக் கடலிலே தள்ளிக்கொள்கிறேன். அதிலே விழாமல், மனதற்ற பரிசுத்த நிலையில் நிற்பதும், பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தமே தரவேண்டும், என்பதே ஒவ்வொருவரின் பிரார்த்தனையாக இருக்கவேண்டும். இதற்கு எங்கும் ஓடவேண்டியது இல்லை. இருக்குமிடத்தில் இருந்து கொண்டு, மனத்தை அடக்கி, ஆசையை அளவோடு கொண்டு வாழ்ந்தால், வாழ்க்கையிலே தானே இன்பம் ஓடி வரும்" என்று குவலயத்தாருக்குக் கூறுகிறார் தாயுமானச் சுடர் ஒளி! சொல்லரிய சுகத்தைச் சுலபமாய்ச் சொல்லுகிறார். தாயுமானவர் தத்துவம், உலகம் உண்மையில் நடக்க வேண்டிய வழியைக் காட்டுகிறது. மேலே சொன்ன அத்தனையும் தாயுமான தத்துவமாகவுமுள்ள இந்தக் கவியிலே காணப் பெறலாம்.

ஆசைக்கோ ரளவில்லை; யகிலமெல்லாங்
கட்டி யாளினும் கடல்மீதிலே
ஆணைசெல வேநினைவர்; அளகேசன்
நிகராக அம் பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக் கலைந்திடுவர்
நெடுநா ளிருந்த பேரும்
நிலையாக வேயினும் காயகற் பந்தேடி
நெஞ்சுபுண் ணுவர்எல்லாம்

யோசிக்கும் வேளையிற் பசிதீர வுண்பதும்
உறங்குவது மாகமுடியும்
உள்ளதே போதுநான் நானெனக்
குளறியே யொன்றைவிட் டொன்று பற்றிப்
பாசக் கடற் குளே வீழாமல் மனதற்ற
பரிசுத்த நிலையை யருள்வாய்
பார்க்குமிட மெங்கு மொருநீக்க மற
நிறை கின்ற பரிபூரணு னந்தமே !.

8

மங்கையின் மதி

தடுமாற்றம் என்பது எல்லோருடைய வாழ்க்கையிலும் சகஜம்தான். ஆனுல் தடுமாற்றம் எப்போது வருகிறது? எந்தச் சூழ்நிலையில் வருகிறது? "எக்கச்சக்கம், இக்கட்டு, நிரம்ப சங்கடமான நிலை" என்று பல பெயரிட்டு அழைக்கிருர்களே, அந்த சந்தர்ப்பத்திலே எப்படி நடப்பது? எப்படிச் சமாளிப்பது? "சமயோசித புத்தியினுல் ஒரு வழியாய் வெற்றிகண்டேன்" என்று கூறுகிருர்கள். அந்தச் சமயோசித புத்தி, மதி எல்லோருடைய வாழ்க்கையிலும் உதவுகின்றதா என்ருல், உண்மையில் அந்த புத்தி உதவ நிதானம் வேண்டும். அவசரம் கூடாது.

"ஒண்பாவிற்கு உயர் புகழ் கம்பன், வெண்பாவிற்குப் புகழேந்தி" என்று கூறுவார்கள் அறிஞர்கள். புகழேந்தியார் இசைத்தது "நளவெண்பா." இந்நூல் மூன்று பிரிவுகளைக் கொண்டது. சுயவர காண்டம் இன்பச் சுவையை அள்ளி வீசுவதாகும். கலிதொடர் காண்டம் அவலச்சுவையால் அமைந்தது. கலி நீங்கு காண்டத்திலே இன்ப துன்பக் கலப்பு. பாரதத்தின் கிளைக் கதையாய் அமைந்தது நளன் சரிதம். "புகழேந்தியைப் போல இன்பச் சுவையை எடுத்தோதியவர்கள் யாருமில்லை" என்று கூறலாம். நளவெண்பாவின் நயம் நாவால் நவில முடியாது. உணரவேண்டியது.

காமர் கயல் ஓட, கருங் குவளை மலர, தாமரையும் மலர, இயற்கை எழில் நிறைந்த நிடதநாட்டு அரசன் நளன் சோலைக்கு வருகிறான். அங்கே அழகிய அன்னப்பறவை ஒன்று தோன்றுகின்றது. அதன் அழகில் அரசன் ஈடுபடுகிறான். தோழியை நோக்கி அன்னத்தைப் பிடித்து வரக் கூறுகிறான். மயில் கூட்டம் அன்னத்தை சூழ்ந்தது போல, சேடிப் பெண்கள் கூடி அன்னத்தைப் பிடித்து அரசன் முன் வைத்தார்கள். அன்னம் அச்சத்தோடு அரசன் முன் ஆடி நின்றது. " அஞ்சேல் மடவனமே! உன்றன் அணிநடையும் வஞ்சி அனையார் மணி நடையும் சிறந்தது எது என்று காணப் பிடித்தேன் " என்றான். " புகழுடைய புரவலனே ! தமயந்தி என்றேதும் தையலாள் நல்ல அழகி. உனக்குப் பொருத்த மானவள் " என்று அச்சம் நீங்கிய அன்னம் அரசனுக்கு அறிவித்தது. "சொன்ன மயிலார் மடந்தை யார்?" என்று பதைத்துக் கேட்டான் கோமான். " எழு வடுதோள் மன்னா! விதர்ப்பன் பெற்ற கொம்பு" என்று அன்னம் விளம்பியது.

" நாற்குணமும், நாற்படையாக, ஐம்புலனும் நல்ல அமைச்சராக, ஆர்க்கும் சிலம்பே அணி முரசமாக, இரு கண்களும் வாட் படை, வேட் படைகளாக, பெண் இயல்பாகிய அரசை ஆட்சி புரியும் அணங்கு நல்லாள் தமயந்தி. மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற மாட்டாது, துவளும் இடை உடையாள் தமயந்தி. மென்மையான காற்று அடித்தாலே கூட அவள் இடை துவளுமாம். " காமன் படை கற்பான் வந்தடைந்தான். பைந்தொடி யாள் பாத நடைகற்பான் வந்தடைந்தோம் நாம், தமயந்தி யிடம், " என்று அன்னம் அரசனிடம் பகன்றது. நளன் நெஞ்சம் இற்றது. நங்கையிடம் நாட்டம் கொண்டது. எழுந்த திருக்காதலால் அற்றது மானம். அழிந்தது நாணம். " கோமகளிடம் கொண்டேன் காதல். உதவுவாய் " என்றான். " வீமன் திருமடந்தை மென் முலையை உன்னுடைய வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன் " என்று ஆறுதல் கூறி அன்னம் அகன்றது.

அன்னவளை நோக்கி அன்னம் அகன்ற பிறகு, அரசன் அதே நினைவில் ஆழ்ந்தான். பூவின் இடையன்னம் -

செங்கால் இள அன்னம், சொன்ன நடையன்னம், தன்பால் மனத்தைச் செல்லவிட்டுச் சேவல் குயிற் பெடைக்குப் பேசும் சிறுகுரல் கேட்டு, உயிர் தளர்ந்து காதல் நோயினுல் வருந்தினுன். மென் மயில் தோகை விரித்தாடக் கண்டு, தமயந்தி நினைவு வர வருந்தினுன். "வாரணியுங் கொங்கை மடவாளின், துவளும் இடைக்குச் சிறந்த உவமைப் பொரு ளாகத் தோன்றிய பூங்கொடிகளே! உங்களுடைய அழகு அவளின் இடையழகு போன்றதா! காண வேண்டும். காண வேண்டு!"மென்று கூறி செங்கை கூப்பினுன், நெஞ்சம் துடிக்கப் பெருமூச்சோடு, "கொங்கையின் நீராலும், குளிர்ந்த இளஞ் சொற் கரும்பாலும், பொங்கு சுழியென்னும் பூந்தடத்தில், மங்கை நறுங்கொய் தாம வாசக் குழல் நிழற்கீழ், கொடிய காம வெப்பத்தை ஆறேனே!" என்று பலவிதமாக நளமகாராஜன் மயங்கினுன்.

"செம்மனத்தான், இரக்கமுடையவன், செம்மையாக செங்கோல் செலுத்துகின்றவன். மங்கையர்கள் விரும்பு கின்ற தடந்தோளான். மேனிலத்தும் நாணிலத்தும் ஒப் பாரும், மிக்காரும், இல்லாத நளன் என்ற பெயருடையான். உனக்குத் தக்க காதலன்" என்று அன்னம் அரசகுமாரியி டம் செப்பியது. "அறம் கிடந்த நெஞ்சும், அருளொழுகு கண்ணும், வீரம் கொண்ட திண் தோள்களும் பொருந்திய நளனுக்கு அங்கன் மா ஞாலத்தில், செங்கண் மாலும் மற்ற வரும் நிகரல்ல" என்று அன்னம் செப்பக் கேட்ட, குண்டி னபுரத்துக் குமரி தன் உள்ளத்தை நளனிடம் செல்லவிட் டாள். மன்னன் மனத்தெழுந்த மையல் நோய், அத்தனை யும் அன்னம் உரைக்க, அகமுருகி, அவனுக்கு உரியளாகி முன்பே அவனைச் சேர்ந்தவள் போன்று மிக்க ஆசை யுடையவளாய் முலை முகத்தைப் பார்த்து மயங்கினுள். பார்வேந்தன் பாவை பதைத்து "வாவியுறையும் மடவனமே எனது காதலை கோமகனுக்குச் சொல்வாய்" என்று கோமகள் கேட்டுக்கொண்டாள். "மன்னன் புயம் நின்வன முலைக்குக் கச்சாகும் என்ன முயங்குவிப்பேன்" என்றன்னம் செப்பிச் சென்றது.

பேரழகு சோர்கின்ற, தென்னப்பிறை நுதல்மேல், நீரரும்ப நின்றுளைக் கண்டு, தமயந்தியின் தந்தை வீமன் சுயவரத்

திற்கு ஏற்பாடு செய்கிருன். வார் முரசங்கள் நாடெங்கும் ஒலிக்கின்றன. "மங்கை நல்லாளுக்கு மணம்" என்று கோவேந்தர் செல்வக் குழாம் சுயம்வரத்திற்கு புறப்பட்டு வந்தார்கள். கோவேந்தன் மாதைக் குறித்து, கோமான்கள் கூட்டம் குண்டினபுரத்திலே கூடியது. ஆவலோடு காத்திருந்த நளனைக் கண்டு, தனது தூதால், "ஆங்கு அந்தத், தமயந்தியும் அவன்பால் காதல் கொண்டாள்" என்று அன்னம் கூறியது. கேட்டவுடன் நளன் மனம் நங்கையை நாடிச் சென்றது. அந்த நேரத்திலே அம்மங்கையின் சுயவர நாளைக் கொற்றவனுக்கு, வீமனுடைய தூதுவர்கள் கூறிஞர்கள். தேர்பூட்டி விரைந்தான் வீமன் மகள் சுயவரத்திற்கு நளமகாராஜன். சடைச் சென்நெல் பொன் விளைக்கும் தன்னுடு பின்னுக, கடல் போன்ற படைகள் முன் செல்ல வீமன் மகள் வாழும் நகரத்திற்கு நளன் வந்து சேர்ந்தான். தேனுறும், தெய்வத்தருவும், திருமணியும் வானுலகும் காக்கும் இந்திரனிடம் நாரத முனிவர் சென்று "வீமன் மடந்தை மணத்திற்கு மாமன்னர்கள், போயிருக்கிருர்கள்" என்று இயம்பினுர். அழகு சுமந்து இளைத்த, உடலை உடைய மங்கையாள் மணத்திற்கு இந்திரன், அக்னி, இயமன், வருணன் ஆகிய வானவரும் விண்ணுடு நீங்கி, மண்ணுடு நோக்கி வந்தார்கள்.

இப்பொழுதுதான் இக்கட்டு, சங்கடம் ஆரம்பமாகிறது. தேவர்கள் நளனைச் சந்தித்து "ஏவல் தொழிலுக்கிசை" என்ருர்கள். "என்ன" என்று கேளாமலே குடைவேந்தன் நிடத நாட்டரசன் நளன் இசைந்தான். இயல் வீமன் மங்கைபால், தூது சென்று, "அத்தோகையை எங்களில் ஒருவருக்கு மாலை சூட்டும்படி வேண்டிவா" என்று இந்திரன் இயம்பினுன். இசைவுதந்த நளன் தடுமாறி, இக்கட்டை உணர்ந்து கொடுத்த வாக்கை நிறைவேற்ற உறுதிகொண்டு, கோதாகக்கொண்டான் அக்கோதையை. இருந்தாலும் மனம் இரு விகாரங்கள் கொண்டது. பாவிற்குழல்போல உழன்ருன். உறுதிகொண்டான். தேவர் தந்த வரத்தால் யாரும் காணுமலே கன்னி மாடத்திலே காரிகையைக் கண்டான். தேங்கு வளை தன்னிலே, செந்தாமரை மலர, பூங்குவளை தாமரைக்கே பூத்தது. நளனின் அழகிலே மதியமங்கிய அரச

குமாரி "காவல் கடந்தெங்கள் கன்னி மாடம் புகுந்தாய்? யாவனோ? விஞ்சைக்கிறைவனோ? தேவனோ! உள்ளது சொல்?" என்று கேட்டாள். நளன் தன்னைப்பற்றிக் கூறினான். இந்திரனுக்கு மாலை சூட்ட வேண்டினான். "நளமகராசனுக்காக வன்றோ சுயவரம் நடக்கிறது" என்று தளர்ந்து தையள் சொன்னாள். விதியை நொந்து "மன்னவர் தேவரோடு சுயவரத்திற்கு வருக" என்றாள். நடந்ததை நிடத நாடன் தேவர்களிடம் கூறினான். தேவர்கள் மகிழ்ந்து நள னுக்கு வரங்கள் தந்தார்கள்.

நளன் சென்ற பின்னர் தமயந்தி, அவன்மீது கொண்ட காதல் இன்னும் பெருக, ஆனால் அவனின் குணம் செயல் கண்டு ஐயங்கொண்டு மயங்கி வீழ்ந்தாள். நளனிடம் கொண்ட காதல் உறுதி என்றாள். கதிரவன் மறைய, அந்தி வந்தது. மையார் வேற் கண்ணாள், வனமுலை மேல் நில வொளியாகிய நெருப்பைச் சொரிய, உயிரை உண்ண நிலா வர அந்தி சிரித்தது. விரக தாபத்தால் வீமன் மகள் துடித்தாள். "நெருப்பைப் போல சுடுகின்றதே இந்த இரவு, வெங்கதிரோனை விழுங்கிய தாலோ, அல்லது கொங்கை அனலிற் கொளுந்தியோ, திங்கள் விரிகின்ற வெண்ணிலா வால் வேகின்றதே" என்று துடித்தாள். உறக்கம் பிடிக்க வில்லை. இராப் பொழுது ஊழிக்காலம் போலே தோன்றியது. நேரம் கழியாமல், நீண்டுகொண்டே சென்றது. உலகம் உறங்கியது. பேய்களும் உறங்கின. அன்றில் குரல் கொடுத்தது. ஆனால் உறங்காதவள் அரசகுமாரியே. மாங் கொழுந்து தூவிய அம்சதூளிகா மஞ்சத்திலிருந்து நளன் உருவம் கண்டு எழுவாள். விழுவாள். முத்துக்கள் பதிந் துள்ள தூணுடன் தன்னை அணைத்துக்கொள்ளுவாள். பெரு மூச்செறிவாள். ஒருவழியாக விடியா இரவும் விடிந்தது.

மாமன்னர்கள் மண மண்டபத்துக்கு வந்தார்கள். நளனும் வந்தான். அருங்கேழ் மணிப்பூண் அணங்கும் அழகாக வந்தாள். அரசர்களெல்லாம் இமை கொட்டாது அந்த அணங்கை நோக்கினர். அரிவைக்கு அரசர்களை அறிமுகம் செய்தார்கள் சேடிகள். "இதோ இவர் சோழ நாட்டு மன்னர். பாண்டிய மன்னன், சேர மன்னன்" என்று பலதேசத்து மன்னர்களைச்சேடிகள் அறிமுகப்படுத்தினார்கள்.

ஆனால் துளாவின துளாவின, தேடின, தேடின, குண்டின புரத்துக் குமாரியின் கண்கள். தேவர்கள் நளன் உருவில் வீற்றிருந்தார்கள். மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாது உளம் ஊசலாடுற்றாள். பூணுக்கழகளிக்கும் பொற்றொடியைக் கண்டக்கால், நாணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர் எல்லோரும் வந்திருந்தார்கள். நளனுருவாய் வானவரும் வந்திருந்தார்கள். மேலே சொன்ன இக்கட்டான நிலை. என்ன செய்வாள் தமயந்தி. ஒன்றும் புரியவில்லை. தான் காதலித்த காதலன் உருவிலே பலர். அந்தப் பலரிலே யார் தன்னுடைய உண்மைக் காதலன்? இந்த இடத்திலே புகழேந்தியார் ஒரு நாடகத்தின் உச்சத்தையே தந்துள்ளார். விதியை நொந்தாள். மதியோடு இறைவனை வணங்கினாள். மங்கை குலதெய்வத்தைக் கும்பிட்டாள். "அன்னம் சொன்ன அழகனை ஆண்டவா காட்டு'' என்று துதித்தாள். நிதானத்தோடு சிந்தத்தாள். அவள் மதி உதவியது.

கண்ணிமைத்தலாலும், அடிகள் காசினியில் தோய்வதாலும், வண்ண மலர் மாலை வாடுவதாலும் (இச்செய்கைகள் தேவர்களிடம் இல்லை. மண்ணகத்தாருக்கே உண்டு) உண்மை நளனைக்கண்டு, நறுந்தாமரை விரும்பும் திருமகள் போன்ற குண்டினபுரத்துக் குமரி தமயந்தி "உண்மை நளன் இவர் என்றே" என்று கண்டுகொண்டாள். பொன் மாலை சூட்டினாள், நள மகாராசனுக்கு. இவையெல்லாம் இமைப்பொழுதில் நடந்தவை. மங்கையின் மதி இக்கட்டான இந்த நிலையில் உதவியது. இனி வெண்பாவைக் காண்போம்.

கண்ணிமைத்த லாலடிகள்
காசினியில் தோய்தலால்
வண்ண மலர்மலை
வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பும்
நன்னுதலே அன்னாள்
அறிந்தாள் நளன்
றன்னை ஆங்கு

9

விலட்சணர் வீரம்

ஊரும், பேரும் என்ன செய்துவிடும் என்பார்கள் விவரம் தெரியாதவர்கள். ஊரிலும் பெயரிலும்நிச்சியமாகப்பெருமை இருக்கத்தான் செய்கிறது. பிறந்த பன்னிரண்டாம் நாள் குழந்தையைத் தொட்டிலிட்டு பெயர்வைக்கும் வைபவம் வீடே அதிரும்படி அமக்களப்படும் நமது நாட்டிலே, ஒவ்வொருவரும், ஒவ்வொரு பெயரால் அந்தக் குழந்தையை அழைத்து ஆனந்தப்படுவார்கள். இது பெயர் வைக்கும் சிறப்புத் திருநாள். சென்னை நகரம் சிறந்த பெயர். சென்னை என்றால் மொத்தமாக நம் முன் பல சிறப்புக்கள் தோன்றுகின்றன. தமிழ் நாட்டின் தலைநகரம். துறைமுகப்பட்டிணம். ஆலைகளும், நீண்ட சாலைகளும், நெடிதுயர்ந்த கட்டிடங்களும், மாநில தலைமை அலுவலகங்களும், பல தரப்பட்ட மக்களும், நாகரிகமும், பண்பாடும் நிறைந்த நகரம் என்ற நினைப்பு வருகிறது. இந்தச் சென்னை நகரம் பல பல பிரிவுகளையும், பகுதிகளையும், பாக்கங்களையும் கொண்டாதாகும். அத்தனையிலும் சிறப்பு வாய்ந்த பகுதி திருமயிலையாகும்.

மைலாப்பூர் சென்னை நகரத்தின் ஜீவநாடியாகும். மயிலை மாடமாளிகைகளும், கூட கோபுரங்களும், மாட வீதிகளும், சோலைகளும், நந்தவனங்களும் நிறைந்த பகுதியாகும். சென்னைக்கே சிறப்புத் தரும் சிறந்த பகுதியாகும். கலை வளர்க்கும் கலைக்கூடம், இயலும், இசையும், கூத்தும் வளர்க்கும் கலாசாலை; கல்லூரிகளும் கலாசாலைகளும் நிறைந்த பகுதியாகும். ஆதிநாளிலிருந்து இன்றுவரை பல மகான்களும், புண்ணியவான்களும் வாழ்ந்த பகுதியாகும். இந்த மயிலையிலே தான் உலக நூலாம் திருக்குறளைத் தந்த வள்ளுவர், வாசுகியோடு இன்ப இல்லறத்தை நடத்தித் தவம் புரிந்தார். இன்றும் திருவள்ளுவர் கோயிலைக் காணலாம். (உலக நூல் தந்த ஆசான் கோயில் உன்னதமாக இருக்கவேண்டும். ஆனால் அப்படியில்லை. வருந்த வேண்டிய நிலை) திருமயிலையில் அவதரித்தவர் பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான பேயாழ்வார். இவர் அவதார

தலம் இன்றும் காணக் கிடக்கிறது. இவர் தமிழ்த் தவமே புரிந்தார். பல சமண முனிவர்கள் இந்த மயிலையில் வாழ்ந் தார்கள். நேமிநாதர் மயிலையில்தான் வாழ்ந்தவர். மஸ்தான் சாயபு பாட்டு என்றால் இன்றும் கிராமங்களிலே மக்கள் ஒரு விருப்போடு கேட்பார்கள். அவர் வாழ்ந்ததும் மாடவீதி மயிலையிலே. செயிண்ட்தாமஸ் என்ற கிறித்தவ ஞானி இங்குதான் வாழ்ந்து, அடங்கினர். அவர் கல்லறையைச் சுற்றித்தான் சாந்தோம் எழுந்தது. திருமயிலைக்கே அழகு தருவது சாந்தோம். கிழக்குப் பக்கமாகக் கடற்கரையை ஒட்டி அமைந்த சாந்தமான பகுதி சாந்தோம். இங்கு ஒரு அழகான மாதாகோவில் உள்ளது. மாலை நேரத்திலே சில்லென்ற கடற்காற்று வீச, மாதாகோவில் மணி டாண் டாண் என்று அடிக்க, அலைகள் கடல் ஆர்ப்பரித்து, ஆமோ திக்க, ஆதவன் மறைய, அந்த அந்தி வேளை ஆனந்தமாக இருக்கும். திரு ராமகிருஷ்ணனந்தர் சென்னைக்கு வந்தார். வந்து தங்கிய இடம் திருமயிலை, பேசாது பெரு நல்லறிவு ணர்த்திய ஆசான், கொண்டவளைக் குலமகளை, கோதையை, சாரதாதேவியை அன்னையாய்க் கொண்ட குருமகான் ஸ்ரீராமகிருஷ்ணரின் பிரதம சீடரில் ஒருவர். சிகாகோவில் இந்துமத சங்கநாதம் செய்த விவேகாநந்தனின் வேண்டு கோளின்படி வந்து, திருமயிலையிலே தவம் செய்தார் ஸ்ரீராம கிருஷ்ணனந்தர். இன்று நாம் காணும் ராமகிருஷ்ண மடம், அதன் ஆன்மீக சேவை, சமுதாய சேவை இவைகளை இந்த மயிலையில் ஏற்படுத்த அவர் அரியதவம் செய்தார். மன நிம்மதி தேடி எங்கோ ஓடுகிறார்கள் மக்கள். எங்கும் செல்ல வேண்டாம். குரு மகராஜ் மூல ஸ்தானத்திற்குப் போய் அந்த திவ்விய ரூபத்கை ஒரு 5 நிமிடம் பார்த்து வந்தாலே போதும். அத்தனை அமைதி,சாந்தம். அந்த அரிய கோவிலைத் தவம் செய்து கட்டிய மகான் இராமகிருஷ்ணனந்தர். இது போலவே மற்றொரு மகான் வந்தார். இந்த மயிலையின் மகத்துவத்தைக் கூட்ட. அவர்தான் திரு. பி. வி. நரசிம்ம சுவாமிகள். இவர் நாட்டு விடுதலையில் அரவிந்தர் போல நின்ற தீரர். பிறகு அவரைப் போலவே ஆன்மீக சேவை யிலே ஆழ்ந்தார். மயிலைக்கு வந்து மாதவம் செய்தார். இன்று நாம் காணும் சாயி மந்திரைக் கட்டினர். வியாழக்

கிழமை தோறும், ஆயிரக் கணக்கானவர்கள் சாயிமந்திர்க்குச் சாரி சாரியாக வருகிருர்கள். நரசிம்மரின் நற்றவத்தால் இக்கோயில் எழுந்தது. இங்கு ஆன்மீகம், கலைத் தொண்டு, மருத்துவம்; சமுதாயத் தொண்டுகள் வளர்க்கப் படுகின்றன.

கோயில்கள் பல கொண்டது திருமயிலை. மாதவப் பெருமாள் கோயில் கொண்டுள்ளார். கேசவப் பெருமாளும் திருக்கோயில் கொண்டுள்ளார். இன்னும் பல பல கோவில்கள். மயிலைக்கே மாண்பு தருவது கபாலீஸ்வரர் கோயில். திருமயிலையில் நுழைந்ததும், காட்சி தருவது "அஞ்சேல்" என்று அபயகரம் காட்டி அழைக்கின்ற அம்மை அப்பனுடைய விண்ணுயர்ந்து நிற்கின்ற கோபுரமே. நான்கு பக்கமும் மாட வீதிகளோடு எதிரே எழில் கொழிக்க, தாமரையோடு, கரையிலே குட்டித் தென்னைகளோடு, காட்சி அளிக்கும் குளம். இந்தக் கோயில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்கு வாயில் வழியாக நுழைந்து பலி பீடம், கொடி மரம் வணங்கிய பிறகு ஓட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு, அட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய் கோயில். சம்பந்தர் பாட, எலும்பிலிருந்து ஏழுந்த எந்திழையின் கதைகொண்ட கோயில்.

ஆழி சூழ் மயிலாபுரித் திருநகரிலே, அம்மை அழகிய மயில் உருக்கொண்டு கபாலீச்சரம் அமர்ந்தானை நோக்கித் தவம் புரிந்தாள். ஆகவே மயிலை, திருமயிலையென்ற பெயர் ஏற்படக்காரணமான கோயில். மதுரை மாவட்டத்திலே குச்சனூர் என்ற கிராமத்திலேதான் சனிபகவான் தனியாகக் கோயில் கொண்டுள்ளார். இந்தக் கோயிலிலே கனிவுள தெய்வமாய், கதிரின் சேயாய், காக மேறும் சனியன் தனிக்கோயில் கொண்டுள்ளார். சனியன்று காலை, மாலை, கூட்டம் அள்ளும் மேற்கு நோக்கியுள்ள சனியனைக் கும்பிட. பிறகு கிழக்கு நோக்கி நவக்கிரங்கள், சுந்தரேஸ்வரர், கூத்தாடும் விநாயகர், அண்ணமலையார் அமைந்துள்ளார்கள். பதம் போற்றி வணங்கப் பழனியாண்டவரும், வாயிலா நாயனுரும், சிரித்த முகக்தோடு, வேலோடு, சிங்கார வேலர். பக்தர்கள் போட்ட வெண்ணையால் உளமுருகி தூணிலே நிற்கும் நிலையிலே ஆஞ்சநேய பகவான்.

அப்பன் சன்னதியிலே நுழைந்து, அந்தக் கருணை பொழிகின்ற கபாலியை வணங்கி, வலம் வரும்போது, தூக்கிய திருவடியான், தூரிய நடராஜனையும் துன்பமெல்லாம் தொலைக்கும் துர்க்கையையும், காண்கின்றோம். மஹாலக்ஷ்மி விஜயலக்ஷ்மி துர்க்கை ஆகிய இந்த மூன்று அன்னையையும் ஒரு சேரக் காண்கிறோம். பிறகு நாயன்மார்கள். சொல்லாமலே சொன்ன தெய்வமாம் தக்ஷிணாமூர்த்தியைக் காண்கின்றோம். "எடுத்தவை யாவிலும் வெற்றியே தருவாய்" என்று வணங்க விநாயகன். பிறகு அப்பனைக் கும்பிட்டு, மறுபடியும் அம்மையையும் ஐயனையும் ஒரு சேர வணங்கி, கொங்குலா மலர்க்குழலும், பிறை நுதலும், கயல் விழியும், குமுதவாயும், சங்க மாமணிமிடறும் கழைப்புயமும், மலர்க் கரமும், தரள மாலையும், துங்கமா கிரிகுயமும், கொடியிடையும், பதும அடித்துணையும் கொண்ட, எழில் மயிலையின், பொழில் கொழிக்கும் ஆயிரங் கோடி, சூரியப் பிரகாசத்தோடு அஞ்சேல் மகனே! அஞ்சேல் மகனே! என்று ஆறுதல் அளிக்கும் அன்னையை, அமுதை, கற்பகக்கொடியை ஆயிரம் தடவை அடிபணிந்து அவள் அருள் நினைந்து, நெஞ்சக் கனகக்கல்லை உருக்குவதல்லால் வேறென்ன தெரியும்? அங்கே பேச்சேது?

இந்த அன்னையைக் கண்டார் ஒரு அடியார். வேறு பேச்சேது? அவள் மயமாய் நின்றார். அவள் அவர் வாக்கிலே நடமாடினாள். கவி மழை கொட்டியது. அன்பு மகனே! ஆன்மீகம் பரப்பு என்றாள். அவர் அதுவே செய்தார். அந்த மகான்தான் ஸ்ரீவிலக்ஷணானந்தர். இவர் இன்று இல்லை. இவர் மேல் மாயிலில் அடங்கிய முனிவராகத் திகழ்கிறார். இவர் மயிலையில் வாழ்ந்தபோது, நம் நாடு பரங்கியருக்கு அடிமையாக இருந்தது. மயிலை, சட்டம் படித்த ஆங்கில மேதாவிகள் நிறைந்த பகுதி. அன்னிய மோகமும், மாயமும், போகமும் இந்தப் பாரதத்தையே ஆட்கொண்டது போல மயிலையும் மாற்றான் நாகரீகத்திலே மயங்கி நின்றது. அந்த நேரத்திலே, அந்த நாட்டரசன் வேல்ஸ் இந்த நாட்டுக்கு, இந்தச் சென்னைக்கு வந்தான். அவனை எதிர்கொண்டு அழைக்கச் சென்றவர்கள் ஏராளம், ஏராளம். பதவிப் பித்தர்களும், நமது நாட்டையே மறந்த

வர்களும், நாகரீகம், பண்பாடு, சமுதாயம் இவைகளைத் துறந்தவர்களும், வெள்ளைக்கார மன்னனைக் காண வேக மாக ஓடினார்கள்.

ஸ்ரீவிலக்ஷ்ணர் பெரிய மகான். அன்னையின் அருள் பெற்றவர். அன்னிய மோகத்தை அடியோடு அகற்றி யவர். வெறுத்தவர். இராஜயோகி. வைராக்கிய சீலர். வாசிஷ்டத்திலே ஊன்றியவர். தயானந்தர்போல ஒரே கொள்கையும், உறுதியும் திடமனமும் கொண்டவர். போலித் துறவையும், பொய் மார்க்கங்களையும் கண்டித் தவர். "ஞான ரகசியம்" கண்ட ஞானசீலர். இவர் மயிலை யிலே, தவம் புரியும்போது கருணாந்தர் என்ற மற்றொரு துறவி ஓடிவந்தார். "மகாராஜ்! மாமன்னர், மண்டலாதிபதி வருகிறார். வாருங்கள் நாமும் காண்போம். தங்கள் பேச்சும், பாட்டும் அவரை மயக்கும். அவரின் அருளும், கருணையும் அன்பும் நமக்கும் கிடைக்கும். நமது காரியத்திற்குப் பயன் படும், துறவிகளிடம் அவருக்கு அன்பு அதிகம்" என்றார். ஆனால் ஐயன் மனத்திலே அன்னை புகுந்தாள். கோபுரத்தை உற்று நோக்கினார். "யாது செப்பினீர்! ஏது செப்பினீர்! உலகத்தை ஆளும் மன்னவரைக் காண வேண்டுமா! அவரை நாம் மதிக்கமாட்டோம். சித்திரத்திலே செதுக்க முடியாத சித்திரம் போன்றவள், மயிலெனச் சாயல் அவளின் முத்துப் பல்லும், மோகன விழியும், செம்பவள வாயும் தங்கக் கொங்கையும், சால்புறுவதனமும், உடைய ஒண்தொடியாள் வந்தாலும், அவள் மாயையிலே உழல மாட்டோம்.

இவர் எழுதாத நூல் இல்லை, படிக்காத பா இல்லை. "வேதத்திலே வேறு ஒன்றுமில்லை. எல்லாம் திரும்பத் திரும்பச் சொன்ன பாடம் நான் சொல்வதே வேதம். வியாசருக்கு என்ன தெரியும்" என்று பேசும் பல கலைகளைக் கற்ற பண்டிதரே வந்தாலும் நாம் அவரை கூட பார்க்க மாட்டோம். பேச்சு பிறகல்லவா ?

பார்த்தால் அன்றோ பேச்சு. அவரை ஒரு பொருட் டாக நாம் மதிப்பதில்லை. பாட்டால் கலகலக்கும் பேச்சுக் கடை அவன், அவ்வளவு ஆணவமா ? உனக்கு என்று நீ கேட்கலாம். அவ்வளவு ஆணவம்தான் எனக்கு. ஆனால்

நான் வணங்கும் ஒரு ஐயன், அம்மை, அப்பன் உண்டு. அவன் யார்? எங்குள்ளான், எப்படி அவனிடம் போவது? மும்மலங்கள் முதலில் ஒழியவேண்டும். நான், நான் என்பது அற்றுப்போக வேண்டும். நான் என்பது ஒரு பெரிய அகங்காரம். இந்த அகங்காரம் முதலில் ஒழிய வேண்டும். அவன்தாள் போற்றவேண்டும். அவன் அருள்கிட்ட, அவனையே அண்டி, நின்று வணங்கி வணங்கி உயரவேண்டும். என் மயிலையிலே கோயில் கொண்டுள்ள என் அம்மை அப்பன் எவனோ, அவனுக்கே நாம் அடிமை யாவோம்! யார் வந்தால் என்ன! போனால் என்ன! எமது நிலையை அசைக்கமுடியாது. நமக்கோ ஆன்மவீரம் கொட்டுகிறது நரம்புகளிலே. ஒரு புதிய கனலும் புதிய வேக மும் ஓடி வருகிறது" என்று முழக்க மிட்டாராம்.

உலகாளும் மன்னவரை மதிக்க மாட்டோம்
ஒண்டொடியார் மாயையிலே உழல் மாட்டோம்
பலகலைகள் கற்றவரைப் பார்க்க மாட்டோம்
பண்டிதரரைப் பொருளாக எண்ண மாட்டோம்
மலமொழிந்து மனமொழிந்து மதியுமாகி
மன்றுண டமிடுமரசை மண்டி நின்று
தலமமர்ந்த வடியார்க்கே அடிமை யாவோம்
தண்மயிலைவாழ் சிவமே தகையுளோனே!

10

கோதைக் குயில்

மார்கழித் திங்கள். காலைப் பனி கொட்டுகிறது. குளிர்! கடுங்குளிர்! ஊதைக்காற்று வேறு விர் விர் ரென்று அடிக்கிறது. மக்கள் கதவை அடைத்து மெய்மறந்து தூங்குகின்றனர். கடமை மறந்து, கருத்தை மறந்து, மாயக் கனவில் மயங்கி உறங்குகின்றனர். உயிர் பதியை மறக்க, உடல் உயிரை மறக்க, மனம் உலகை மறக்கிறது. இரு ளில் உறங்கும் உலகை, ஒளிக்கு நடத்த வேண்டும். அறி

யாமையிலும், பேதமையிலும், சித்த மயக்கத்திலும், ஆழ்ந்த ஆன்மாவை, பரம பக்திக் கடலிலே நீராடச் செய்யவேண்டும். மாயத்திலே உழலும் மனிதனுக்கு, தன்னறிவும், தலைவன் அருளும் பெறச் செய்யவேண்டும். பெருமான் திறத்தை உணர்த்த வேண்டும். தனி அகந்தையும், ஆணவ மாயமும் அழிய வேண்டும். அன்பும், அருளும், பொருளும், அமைதியும், அழகும், ஆர்வமும், ஆன்ம நேயமும் அகிலத்திற்கு அளிக்க வேண்டும். இதற்கு வழிஎன்ன ?

பெரிய ஆழ்வார் பெற்ற பெண் பிள்ளை, பாவைப் பாட்டு மூலம் பாதை காட்டுகிருள், பரமனைக் காண! ஆண்டாள் காட்டும் பாதை ஆண்டவனை அடையும் பாதை! பாவை அன்பினுலே, பரமனைக் கலந்து பாவை பாடினுள். திருப்பாவை செந்தமிழ் வேதம். முப்பது பாட்டினுலே முழுமுதற் கடவுளைக் காட்டினுள் கோதை நாச்சியார். பாண்டிய நாட்டுப் பைங்கிளி பாடிய பாட்டு, பாடப்பாட பரமானந்தம். கோவிந்தனை, மாதவனை, கேசவனை, கண்ணனை, அரங்கனை, ஓங்கி உலகளந்த உத்தமனை, கதிர் மதிமுகத்தனை நாராயணனை, நாயகனுய் நின்ற நந்தகோபனை, ஒளிர் மணிவண்ணனை, பூரணனை, புண்ணியனை, வைகுந்தனை, அன்றிவ்வுலகம் அளந்தவனை, ஆயர் குலத்து அணி விளக்கினை, கன்று குணிலாய் எறிந்த கண்ணனை, ஆதியும் அந்தமும் இல்லாதவனை, சோதித் திறமும், ஆதித் திறமும் கொண்டு பாடி ஆடுகிருள், ஆனந்தமாக, சூடிக்கொடுத்த நாச்சியார்.

“பூமாது எனப் போற்றவும், புண்ணியம் இது என முனிவர் புகலவும், ஈன்ற தாயெனப் புவியோர் துதிக்கவும், நற்குல மடந்தையென ஆழ்வார்கள் போற்றவும், திருவாங் கேசர் திருத் தேவி யெனப் பாராட்டவும்” நானிலத்தில் அவதரித்தவள் ஆண்டாள். திருவாடிப் பூரத்திலே திருத்துழாய்க் காட்டிலே , கோதை பிறந்த வூர், ‘கோவிந்தன் வாழும் மூர், சோதிமணி மாடம் தோன்றுமூர், நான் மறைகள் ஓதுமூர். நல்ல பக்தர் வாழுமூர், வேதக் கோனூர், என்று ஏற்றிப் போற்றி செய்த, நல்ல வில்லிபுத்தூரிலே வந்து அவதரித்து, வட பெருங்கோயிலுடையான் உவந்திடக் கோதை சூடிக்

கொடுத்தாள். மல்லி வள நாட்டு மாதாவின் பெருமை பேசப் பேச மெய் சிலிர்க்கும். கேட்கக் கேட்க உள்ளம் கிளர்ச்சி கொள்ளும். கற்பிலருந்ததியாய், காரிகையிற் வீமன் மகளாய், கலையில் நாமகளாய், முற்பகலில் வென்று கிழியறுத்த வேயர் குடிக்கோன் மகளாய் விளங்கினுள் எண்ணும், எழுத்தும், இசையும், இலக்கணமும், பண்ணும் இசையும் படித்தறிந்தாள். தித்திக்கும் தெய்வச் செழுந் தமிழின், பல்துறைகள் எத்திக்கும் போற்ற இனிது அறிந்தாள். தந்தையிலா வேளையிலே, பேரார் புதுவைப் பெருமாட்டியோர் தினத்திலே, சீதக் கருங்குழல் மேற் சூடி நிலைக்கண்ணுடி நோக்கி "என்ன அழகு! எம் பெருமானுக்கு ஏற்றவள் நானே. மானிடர்க்கு என்னை வரியேன்" என்ருள். 'ஆனிரை பின் சென்றவனுக்கே ஆளாவேன்" என்ருள். "மயில்காள், மட வனங்காள், மாதவிப் பூப்பந்தர்க் குயில்காள், கிளிகாள், குழைந்திடும் மயிலாய்க் கலை யொளித்த சேவகனைக் கண்டீரோ" வென்பாள், சிலையிலே செதுக்க முடியாத சித்திரமாம், செம்பொற் பாவை.

பாவை அனுதினமும் பாவித்து, கோவைத்திருப்பாவை முப்பதும், செம்பொற் கருப்பாவையாகக் கனிந்து செப்பினுள். சொல்லும், பொருளும் துலங்க, அகங் கனிய நல்ல ரசமும் நவரசமாய், பல்லணி சேர பாவினிசைப் பாடி பாரளந்த பரமனை நெஞ்சத்தே கொண்டு பரவினுள். சொல்லழகும், வண்ணத் துறை அழகும், தொன்மை நெறி செல்லழகும், யாப்பினிமை சேரழகும், தமிழ்ப்பா வளமையும் யார் இப்படி ஒன்று கூட்டி அழகெல்லாம் ஒருங்கு கூடப் பாட வல்லார்? பக்திக்கு இருப்பிடமாய், பாவலர்க்குக் கற்பகமாய், முக்திக்குச் செல்ல முதற்படியாய், தித்திக்கும் செங்கரும்பாய், தேனுய், தெவிட்டாத தெள்ளமுதமாய்க் கொடுத்தாள் கோதை, தமிழ்க் கொத்தென்னும் திருப்பாவையை. திருப்பாவை சாமகான சாரமாகும். அத்தனை பொருளும், அழகும், ஆழமும் அமைந்தது. மன மாயத்திலே மயங்கி உறங்கும், ஜீவாத்மாவைத் தட்டி யெழுப்பிப் பரமானந்தபக்தியிலே ஊக்கும் காலைச் சங்க நாதமாகும். மார்கழி மாதத்திலே தமிழகமெங்கும் இந்த அரிய பாட்டுச்கள்-ஆத்ம அனுபூதிச் செல்வங்கள், முழங்கிக் கொண்டே இருக்கின்றன.

திருப்பாவையிலே இரண்டு பகுதிகள் உண்டு. ஒன்று தோழமையாம் அந்தக் கரணங்களை அழைத்தல். மற்றொன்று இறைவனுக்கு முறையிடுதல். "ஆய்ப்பாடி வாழ் செல்வச் சிறுமியர்காள்! இது மார்கழித் திங்கள். நிறை மதி நன்னாள். வாருங்கள். நீராடச் செல்வோம். நாராயணன் நமக்குச் சொல் வளம் தருவான். நாம் அவனைப் பாடி நீராடுவோம்" என்று பாடுகிறாள் பட்டர்பிரான் தந்த பைந்தமிழ்ப் பாவை.

பாவாய் என்பது பெண். பாவை விளையாடல் என்பதும் உண்டு. இரண்டிற்கும் மேல் பாவனை. அதாவது ஆண்டவனை அஞ்சலி செய்து, சித்தரித்த மனஉரு, என்பது பொருளாகும். தியான பாவனா மூர்த்தியை, உபசரித்து, அந்த ஆனந்தத்தில் நீராடி, அதன் ஸாயுஜ்ய பதவி பெறவே ஆண்டாள் பாவை பாடினாள். அதற்கே உலகையும் அழைக்கிறாள். இதுவே பாவைப் பாட்டின் பொருள். முப்பது பாட்டையும் இக்கருத்திலே முடிக்கிறாள் கோதை. ஒரு பாவை, எப்படி ஆட்டுவோன் கையில், அவன் இழுத்தபடியெல்லாம் ஆடுகிறதோ, அதைப்போல, ஆண்டவன் இச்சை பற்றி அவன் செலுத்தியபடி, இந்த உலகக் கோயிலிலே ஜீவன் ஆடவேண்டும். இப்போது முப்பது பாட்டிலே முதலாக விளங்கும் பாட்டைக் காண்போம்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்போல்
முகத்தான்
நாராயணனே நமக்கே பறை தருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்!

11

மூலரின் மூலம்

தமிழ் மொழியை அருமையோடும், பெருமையோடும் வளர்த்த பெரியவர்கள் மிகப் பலர். தமிழே மூச்சாகவும் பேச்சாகவும் அப்பெரியவர்கள் நின்ருர்கள். சமயநெறி நின்ருரும், மொழி வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டார்கள். தமிழ் மக்களின் சமயமான சைவ சிந்தாந்தமும், அதைச் சாந்த சித்தர்களும், சீலர்களும் மேன்மையுற மொழியை வளர்த்தார்கள். தாங்கள் கண்ட அரிய அனு பூதிச் செல்வங்களை, அரிய ஆத்ம தத்துவங்களை விளக்க தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டார்கள். அந்த வித்தர்கள் தமிழில் அருளிய நூல்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, மிகப்பல. ஆனல் அவைகளில் பெரும் பாலானவை, காலக் கரையானுக்கு ஆளாகிவிட்டன. இப்போது வழக்கில் இருப்பவை மிகச் சிலவேயாகும்.

இச் சிலவற்றுள் திருமூலர் அருளிய திருமந்திரம், என்ற நூல் ஒரு உயர்ந்த நூல். வேதம், ஆகமம் இரண்டின் விளக்க மாக அந்நூல் விளங்குகிறது. தோத்திரத்திற்குத் திருவாசகம், சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்பது பழமொழி. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற கருத்தை வலியுறுத்தி, சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடையான பலவித வேற்றுமைகளையும், பழக்கவழக்கங்களையும் அடியோடு மாற்றி, ஒரு புதிய சமுதாயத்திற்கே திருமூலர் வழி காட்டு கிருர்.

திருமந்திரம் சாத்திர வகையைச் சேர்ந்தது. இது தமிழில் எழுந்த விரிவான முதல் சாத்திர நூலாகும். "வேத மோடாகமம், மெய்யாம் இறைவன் நூல்" என்பது மூலர் கருத்து. மூலர் ஆரியமும், தமிழும் முற்றும் கற்றுணர்ந்த பெரியார். வேதத்தைச் சரியாகக் கற்காத சிலர், (இந்தக் காலத்தில்) "வேதத்தில் என்ன இருக்கிறது" என்று கேட் கிருர்கள். அவர்களுக்குப் பதில் மூலரின் மூலமந்திரத் தைக் காட்டவேண்டியதே. வேதத்தைப் பொதுநூல் என் கிருர் மூலர். உபநிடதங்கள் உணர்த்தும், உண்மையை

சைவாகமங்கள் தெளிவு படுத்துகின்றன. சரியை கிரியை, யோகம், ஞானம் என்ற நெறி, மங்களத்தைப் பெறுவதற்குரியதாகும். திருமந்திரம் யோகவித்தையின் கருவூலம். மூலர் உரைத்த மூவாயிரம் தமிழும், உள் அனுபவக்கடலில் ஆழ்த்தெடுத்த அழகிய ஆன்மீக முத்துக்கள்.

திருமந்திரம் குறளைப் போலவே, முப்பொருளை விளக்கு கிறது. பூரணயோக ரகசியத்தை விரிவாக விளக்கு கிறது. "என்னை நன்ருக இறைவன் 'படைத்தனன், தன்னை நன்ருக தமிழ் செய்யுமாறே" என்று பகரும் மூலர் காலம், கி. பி. ஒன்று, அல்லது இரண்டாம் நூற்றுண்டு என்பர். திருக் கைலாய சிவநாதசித்தருள், இவரும் ஒருவர். நந்திதேவனின் சீடர். பல சித்தருடன் பழகிய பரமயோகி. நந்தியருளால் மனத்தைவென்ற மாமுனிவர். இந்தச்சித்தர் பொதியமலைக்குச் சென்று பல இடங்கள் கண்டு, ஓர் ஊரிலே தங்கினுர்.

அந்த ஊரில் மூலன் என்ருெரு இடையன் இருந்தான். அவன் தொழில் மாடு மேய்ப்பது. ஒருநாள் மாடு மேய்க் கும் போது, திடீரென்று இறந்து விட்டான். பிணத்தைச் சுற்றி அவன் மேய்த்த மாடுகள் சூழ்ந்துகொண்டு "அம்மா! அம்மா!" என்று அலறின. "தங்கள் எஜமான் இறந்து விட் டான்" என்று அழுது, அழுது நீர் சொரிந்தன. அவ்வழி வந்த திருமூலர், நிலைமையைக் கண்டு, மாடுகளின் அறிவைக் கண்டு வியந்தார். "மனிதனிலே இந்தப் பண்பு, அன்பு ஏன் இல்லை? ஒருவனை ஒருவன் ஒழிக்கத்தானே மனிதன் பாடுபடுகிருன். அவனே! ஆறறிவு படைத்தவன் என்று தம்பட்டம் அடிக்கிருனே! கேவலம் மிருகங்கள் கண்ணீர் உகுக்கின்றனவே எஜமான் இறந்த ஏக்கத்தால்" என்று நெஞ்சம் நொந்து, கலங்கினுர் திருமூலர். அவர் அட்டமா சித்தியும், கூடுவிட்டு கூடுபாயும் வித்தையிலும் வல்லவர். இறந்த மூலனின் உடலில், மூலர் பாய்ந்தார். தன்னுடலைப் பாதுகாவலான இடத்தில் வைத்துவிட்டு, இடையனுக எழுந் தான். அன்று ஆனினங்கள் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கின. மாலை வந்தது. மஞ்சள் வெய்யில் வீசக் கதிரவனும், மேற்கே மறைந்து கொண்டே இருந்தான். மூலனுடலிலே

தங்கிய முனிவர் மாலைக்கடனை முடித்தார். மாடுகள் வீட்டிற்குத் திரும்பின, மூலரும் பின்னே சென்றார். மாடுகள் தத்தம் இல்லத்தில் புக, மூலர் மூலனின் வீட்டிற்கு முன் நின்றார். மூலனின் மனைவி ஓடிவந்தாள் கணவனைக்கண்டு. இன்முகம் காட்டி "உள்ளே வருக" என்று தொட்டு அழைக்க வந்தாள் அந்த உத்தமி.

"தொடாதே" என்று தள்ளிக்கொண்டார் மூலர். "ஐயோ" ஈதென்ன கூத்து," என்றாள், அந்த இல்லக் கிழத்தி. "உனக்கும் எனக்கும் உறவில்லை"யென்று ஊர் மடத்திலே தங்கினார் மூலர். மூலனின் மனைவியோடு பஞ்சாயத்தார் வந்து மூலரைப் பார்த்தனர். "பித்தம்" என்றாள் மூலன் மனைவி, "சித்தர் இவர்! செல்க நீ," என்று பஞ்சாயத்தார் சென்றனர் சித்தரின் தெளிவுகண்டு. முனிவர் முன்னுடலைத் தேடினார். அது கிடைக்கவில்லை. மூலன் உடலில் நின்று, மூலர் முத்தமிழில் மூவாயிரம் தமிழ் தந்தார்.

அரச மரத்தடியிலே நீண்ட தவம் புரிந்து ஞானசித்தி அடைந்தார். கற்பனைக்கெட்டாத, பாகினை நெஞ்சிற் கொண்டார். உள்ளொளியாடும் மந்திரத்தைச் சிந்தித்தார். "அறிவோன், அறிவு, அறிபொருள் அனைத்தும் அவன் என்று உணர்ந்தார். மெய்ஞானத்துள் நண்ணினார். அன்பின் தீவிரத்தால் அருள் ஒளி வீசிற்று. அருளின் முயற்சியால் அறிவு துலங்கிற்று. அறிவின் தெளிவில் இறைவனை எய்தலாம்" என்ற இன்பவழியைக் கண்டார்.

ஆர்வத்தீயால் அன்பு உள்ளே உருக, அவனை எண்ணி எண்ணி, உருகவேண்டும். தொழவேண்டும். பிறபிறப்பில்லா நித்யனை, நிர்மலனை, நிர்க்குணனை, நிராமயனை, நிரஞ்சனை, நினைந்து, நினைந்து நினைப்பே நிசமாகவேண்டும். அவன், தூயன், கனலோன், காலன். உயிர்களுக்கெல்லாம் உயிராய் உள்ளவன். ஆறுகள் பல. ஆனால் கலக்கும் கடல் ஒன்று, என்பது போல, சமயங்கள் பலவாக இருந்தாலும் அதற்குப் பொதுவாக இருப்பவன் அவனே. முத்தொழிலுக்கும் முதல்வன். புவனங்கள் கடந்தவன்.

தாக்கற்ற தனிக் கடவுள். மாற்றரியாத பசும் பொன். தீயினும் வெய்யன், புனலினுந் தண்ணியன். சேயினும் நல்லவன். அணியன். நல்லன்பர்க்குத் தாயினும் நல்லன். தாழ்சடையன். ஆயினும் இந்தப் பித்துலகிலே அவனை அறிவார் எத்தனை பேர்? அவனின் அருளையும், அன்பை யும், பெருமையையும் அறிந்தவர் எத்தனை பேர்? அந்த இறைவன் அனைவராலும் தொழப்படுகிருன். ஆனுல் அவன் யாரையும் தொழுவதில்லை. அவன் ஒப்பில்லாதவன் உயர்ந்தவன். மனமாசு கடந்தவன். எல்லையற்ற உலகம், அவன் அருளின்கீழ் நிற்கின்றது. விண்ணும், மண்ணும் அவனே. 'தேசங்கலந்தொரு, தேவனென்றெண்ணும் ஈசன் உறவிற்கு எதிரில்லைதானே' என்ற இன்பத்தைக் கண்டார் மூலர்.

தான் கண்ட இன்பத்தைத் தன்னேடு வைத்துக் கொள்ள, திருமூலர் மனம் இடங்கொடுக்கவில்லை. அவர் இதயம் கடலைப்போன்றது. மலையினும் மாண்புடையது. ஒரு உயர்ந்த விரிந்த நோக்கம் கொண்டது. உலகத்திலே இன்பமும், துன்பமும் கலந்து நிற்கின்றது. ஆனுல் உண் மையான இன்பம் இருக்கிறதா? இன்பம் என்று மக்கள் நாடும், இன்பம் உண்மையான இன்பமா? அதில் இறை இன்பம் இருக்கிறதா? இறை இன்பம் இல்லாத இன்பத்திலே தான், இன்ப துன்பக் கலப்பு இருக்கிறது. இன்ப துன்பக் கலப்பு உலகாய தன்மையில்தான் உள்ளது. மெய் ஞானத்தை அடைந்தோருக்கு, இரு விகாரத் தோற்றமே இல்லை. மாற்றமும், வேற்றுமையும் ஒன்றும் செய்யமாட்டா. நந்தியின் அருளால் சிவஞானம் பெற்றுச் சித்தி அடைந்தார் மூலர். நான், எனது, நீஎன்ற விகாரமற்ற, உயிர், உடல், வாதனையற்ற, முப்புரியற்ற நிலையில் மூலர் விளங்கினுர். இந்த இன்பம் தன்னேடு நிற்கக்கூடாது. இது உலகமெல் லாம் பரவவேண்டுமென்று, தான் பெற்ற இன்பம் உலகமும் பெறுகவென்று, வேதப்பொருளான பரமனை இரண்டறக் கலக்தும், இணையிலாத சாதனங்களை, மந்திரத் தமிழில் விளக் கினுர். திருமந்தரம் எழ இதுவே காரணம். பரம்பொருளைப் பற்றிநின்ற, இரகசியத்தை இவ்வுலகுக்குத் தந்தார். இந்த ஊனுடலிலே சரியை, கிரியை, யோக சாதனங்களால்

அருளுணர்வைப் பெறவேண்டும். மந்திரத்தைப் பற்றப் பற்ற மனம் பழுக்கும். சிவம் தானே ஆட்கொள்ளும். இத் தகையோர் பெருகப் பெருக ஒரு புதிய சமுதாயம் தோன்றும். அதில் அதிமனிதர் ஆனந்த வாழ்வு வாழ்வர். ஆங்கு வேற்றுமை, விகாரங்கள் இல்லை. அந்தப் புதிய சமுதாயம்வர நாமும் பாடு படுவோம். மூலரின் மூல வழியில் நின்று விந்தையைக் காண்போம்.

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்
வான் பற்றி நின்ற மறைப் பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர் வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படுந் தானே."

12

நீலச் சிற்றுடை

பண்டைய மன்னர்கள், போட்டி போட்டுக்கொண்டு தமிழ் மொழியை வளர்த்தார்கள். தமிழ் மொழியை வளர்த்தார்கள் என்றால் தமிழ் பாடும் கவிஞர்களையும், புலவர்களையும், நாவலர்களையும், பாவலர்களையும் ஆதரித்தார்கள்; போற்றினார்கள், வாழ்த்தினார்கள், வணங்கினார்கள். கவிவாணர்களின் நாவிலே கலைமகள் களிநடம் புரிந்தாள். கவி மழை கொட்டியது. கவி மழையை மன்னர்கள் பயன் படுத்தினார்கள். அந்தப் புலவர்கள் செய்த இலக்கியத்தையும், கவிதைகளையும் கேட்டு மகிழ்ந்து, அதன் நயத்தையும், தெளிவையும் எடுத்துப் பாராட்டினார்கள். அரச அவைகளிலே அவர்களுக்கு கௌரவம் தந்து, பொன்னும், பொருளும், மணியும் தந்து வறுமை என்னும் வார்த்தையே அவர்கள் பக்கம் அண்டாமலே செய்தார்கள்.

வீட்டுக் . கவலையின்றி, நாட்டையே நாட்டத்திலே கொண்டு அரிய பெரிய இலக்கியங்களை அந்தப் பெரும் புலவர்கள் ஆக்கினார்கள் புதிய புதிய இலக்கியம் மலர மலர

தமிழ்மொழி, மேலும்மேலும்வளப்பமுடையதாயிற்று. அந்தப் புலவர் பெருமக்களும் ஒரே மன்னனிடத்தில் நின்று தங்கள் புலமையைக் காட்டாமல், பல மன்னர்களேயும், நாடுகளேயும் கண்டு தங்கள் புலமையை விளக்கி, இலக்கியத்தை வானுற வளர்த்தார்கள். குறுநில மன்னர்களும், பெருநில மன்னர்களும் வேற்றுமை மறந்து தோளோடு தோள் நின்று இலக்கியத்தை வளர்த்தார்கள். அந்தக் காலத்திலே இலக்கியத்தின் வளர்ச்சியின் வேகமே வேறு. தமிழ் என்ருல் உயிர் என்று ஒவ்வொரு மன்னனும் நினைத்தான். தமிழ் வளர்த்த புலவர்களே மிக உன்னதமான நிலையில் வைத்து மன்னர்கள் போற்றினுர்கள்.

அப்படித் தமிழையே உயிராகப் போற்றி வளர்த்த மன்னர்களில் ஒருவன் பாரி. வரையாது வழங்கிய வள்ளல். கருணையுள்ளம் கொண்டவன். ஒருநாள் தேரில் காட்டு வழியாகக் கன வேகத்தில் சென்றுகொண்டிருந்தான். திடீரென்று கடிவாளத்தைத் தளர்த்திக் குதிரைகளே நிறுத்தினுன். பாதையிலே முல்லேக்கொடிகள் படர்ந்துகிடந்தன. ஒரு கணம் சிந்தித்தான், ஒப்பில்லாத மன்னன். மறுகணம் குதிரைகளே அவிழ்த்து, அக்கொடிகள் படர, தனது அழகிய தேரை அங்கு நிறுத்தினுன். அக்கொடிகளே அத்தேரின் மேல் ஏற்றிவிட்டான். நடந்தே நகரத்திற்குத் திரும்பினுன். செடிகளிடத்திலும், கொடிகளிடத்திலும் கூட அவனுக்கு அத்தனே அன்பு, கருணை.

அவனுக்கு இரண்டு பெண்கள். ஒருநாள் பாரி கொலு வீற்றிருக்கும்போது ஒரு மூதாட்டி வந்தாள். பாரியும், அவனது பெண்களும் ஓடிவந்து அந்த மூதாட்டியை வணங்கி, இன்முகங் காட்டிப் பல நலனுறைகள்; பகன்று முறைப்படி வரவேற்று ஒரு அழகிய ஆசனத்தில் அமரச் செய்தார்கள்.

அந்தக் கிழவி யார்? அவள்தான் ஔவை என்னும் தமிழ் மூதாட்டி. நாடெங்கும் தமிழ் மணம் பரப்பும் பெருமாட்டி. செந்தமிழுக்கே உயிர் வாழ்ந்த சீமாட்டி. எதிர்கால உலகம், சின்னஞ்சிறு குழந்தைகள் கையில் இருக்கிறது என்பதைக் கண்டு அவர்களுக்கென்றே, பிஞ்சு உள்

ளங்களுக்கேற்ற "பாப்பா இலக்கியம்" இயற்றிய ஔவை யார். முருகன் அருள்பெற்ற அம்மையார். நாடெங்கும் நடந்தே தமிழ் மணம் பரப்பும் தவமணி. அமுதின் இனிய சொற்கிழவி. செவ்வை நெறிகள் பலவும், தெளியக் காட்டும் பழங்கிழவி. மன்னர்கள் போற்றும் மாதரசி. அதிக மான் தந்த நெல்லிக்கனியைத் தின்று உலகில் நீண்டு வாழ்ந்த தமிழ்க் கிழவி.

பிள்ளை இலக்கியத்திலே பேருண்மையைப் புகுத்திய பெரிய கவி. கூழுக்காகக் கூட கவிபாடும் கூர்ந்த நல்லறிவுடைய குணச்செல்வி. நீதி நூல் பல தந்த குணமணி. வாழ்க்கையின் இன்ப துன்பங்களையும் அதன் பிரச்னைகளையும், சாட்சி மாத்திரமாகக் கண்டு பல பல அரிய நீதிகளைக் கவியிலே புனைந்தவர் ஔவையார். பல அரசர்கள் ஔவையின் பால் அன்பு கொண்டார்கள். அவர்கள் கொண்ட அளவற்ற அன்பு, அடைக்கும் தாழ் இன்றி பெருக்கெடுத்தோடியது; அதனால் பல பல நிகழ்ச்சிகள் நேர்ந்தன. நேர்ந்த நிகழ்ச்சிகளை நினைத்து அன்பின் பெருக்கால் மகிழ்ச்சி கொண்டு பல கவிதைகளைப் பெருமாட்டி புனைகிருள். அவைகளிலும் பல உண்மைகள் பொதிந்துள்ளன.

இத்தனை பெருமைகளையும், அருமைகளையும் ஒருங்கே அமையப்பெற்ற தெய்வப் பெருமாட்டியை பலநாள் தங்கிப் போகுமாறு பாரி மன்னன் வணங்கிக் கேட்டுக்கொண்டான். ஒவ்வொரு நாளும் தமிழ் இலக்கிய இன்பத்தில் ஔவையோடு அனுதினமும் அளவளாவி மகிழ்ந்தான் மன்னன். நாட்கள் பல கடந்தன. ஔவையார் அரசனைவிட்டு வேறு ஊருக்குச் செல்ல விடை கேட்டாள். மன்னன் இசையவில்லை. மறுத்தான்;

"மன்னா! உன்னோடு மட்டும் நான் தங்கமுடியாது. மற்ற இடங்களுக்கும் சென்று தமிழ் இன்பத்தைப் பரப்பவேண்டும். மன்னித்துக்கொள். மன்னா ! விடைதா !" என்று கேட்டாள் ஆத்திச்சூடி தந்த அன்னை. அரசனும் அரை மனதோடு அன்னைக்கு வழிச் செலவு தந்தான். அணியும், மணியும், பொன்னும், பொருளும் அன்னைக்குத் தந்து அனுப்பினான். அகமகிழ்ந்து அன்னை சென்றாள். அன்னை அகன்றவுடன், அரசனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. துடித்தான்.

அன்னையின் பிரிவை அவனால் தாங்க முடியாதது போல் இருந்தது' அன்னை நகர எல்லையைக்கூட கடந்திருக்க மாட்டாள். வாயு வேகத்திலே வந்த முகமூடி அணிந்த குதிரை வீரன் அன்னை வைத்திருந்த அணி மணி முட்டையை இமைப்பொழுதில் அடித்துச் சென்றான்: ஐயோ! என்று அலறி ஓடிவந்தாள் பாரி மன்னனை நோக்கி. பதை பதைத்து ஓடிவரும் பாட்டியைக் கண்டு மன்னன் மகிழ்ந்தான். "பாரி நாட்டிலே கொள்ளையா?" என்று கேட்டாள் ஔவைக் கிழவி.

நாணப் புன்னகையோடு ஆம் என்றான் அரசன். "ஓ! இது உனது திருவிளையாடலா? உன் அன்புக்கு நான் இப்படியா ஆளாகவேண்டும்?" என்று வியந்து மன்னன் விருப்பின்படி இன்னும் பல நாட்கள் இருந்து ஔவை அகன்றாள். இடையிலே பாரி மன்னன் வஞ்சனையினாலே கொலையுண்டான். அவன் நாடு அன்னியர் வசப்பட்டது. அவன் பெண்கள் இருவரும் காட்டிற்கு ஓடிச் சென்றனர்.

பழையனூருக்குப் பாட்டிச் சென்றாள். அவ்வூர் அரசன் காரியன் அன்பு மழை பொழிந்தான். அவனை விட்டு அகல ஔவை முயன்றாள்; அதைக் கண்ட காரியன் களைக் கோலை, கன்னித் தமிழ் பாடும் அன்னையிடம் தந்து, தானும் பயிர்களுக்குக் களை எடுக்க ஆரம்பித்தான். இதனால் அன்னை ஆங்கும் பல நாட்கள் தங்க வேண்டியதாயிற்று. பிறகு சேரமானிடம் செந்தமிழ்க் கவிபாடும் வித்தகி சென்றாள். " அறஞ் செய்ய விரும்பு " என்று உரைத்த ஆதி பராசக்தி போன்ற, அன்னையிடம் சேரமான் காட்டிய அன்பும், பரிவும், தோழமையும், உறவும் அளவிட்டுச் சொல்ல முடியாது.

அந்த அன்புக் கடலிலே சிக்கிய, அன்னை செய்வதறியாது திகைத்தாள். ஒரு நாள் சேர மன்னன் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தான். எல்லோரும் மண்டபத்திலே ஒருங்கு கூடி, தத்தமக்குரிய ஆசனத்தில் அமர்ந்தார்கள். ஔவை பிராட்டி மகிழ்ச்சிப் பொங்க மலர்ந்த முகத்தோடு அமர்ந்திருந்தாள். அறுசுவை உண்டிகள் பரிமாறிக்

கொண்டிருந்தார்கள். அரசன் விருந்தினர்களை வரவேற்றுக் கொண்டிருந்தான். அந்த நேரத்திலே சற்றும் எதிர் பாராதவிதமாக, ஒரு பெரியவர் விருந்து மண்டபத்திற்குள் வந்தார். அவரை வரவேற்ற அரசன், அந்தப் பெரியவரை அமரச் செய்ய சுற்றும் முற்றும் பார்த்தான். இடமே இல்லை. எல்லா ஆசனங்களிலும் விருந்தினர்கள் அமர்ந் திருந்தார்கள். யாரையாவது எழுப்பித்தான் வந்த பெரியவருக்கு ஆசனம் தரமுடியும். யாரை எழுப்புவது? மிக்க இக்கட்டான நிலைமை! "யாரையும் எழுந்திரு" என்றால், மிகவும் வித்தியாசமாக நினைப்பார்கள். கோபப்படுவார்கள். அரசனுக்கு அம்மையார் தென்பட்டார்கள்.

தயங்காமல் "வாராயோ" எனவுரைத்தான். அந்தக் கணமே அன்னை மலர்ந்த முகத்தோடு எழுந்து அரசன் அருகில் வந்தாள். அந்த இடத்தை, வந்த பெரியவருக்கு அரசன் அளித்தான். சேரன் செந்தமிழ்ப் பெருமாட்டியிடம் கொண்ட அளவற்ற அன்பும், சௌஜன்யமுமே காரணமாகும் இந்த நிகழ்ச்சிக்கு.

ஔவை மூதாட்டி ஒரு காட்டு வழியே போய்க்கொண்டிருந்தாள். திடீரென்று எதிர்பாராத விதமாகப் பெருமழை பிடித்துக் கொண்டது. வானமே பிய்த்துக் கொண்டது போல மழை கொட்டியது. ஔவையார் மழையில் நன்றாக நனைந்து போனாள். மழை நிற்கும் வழியாயில்லை. நீண்ட நேரம்நனைந்ததால் உடம்பு நடுங்க ஆரம்பித்தது. தங்குவற்கு இடம் தேடித் தவித்தாள். ஒரு குடிசை தென்பட்டது. ஓடிச் சென்றாள் குடிசைக்கு. குடிசைக் கதவைத் தட்டினாள். கதவு திறக்கப்பட்டது. உள்ளே இரண்டு இளம் பெண்கள், "பாட்டி!" என்று கூவி கட்டிக் கொண்டார்கள். அவர்கள் வேறு யாருமில்லை! வள்ளல் பாரித் தந்த செல்வங்கள். "அரண்மனையிலே இருக்க வேண்டிய செல்வங்கள், கடும்புலி வாழ்கின்ற காட்டிலே, மண் குடிசையிலே. இது விதியின் விளையாட்டுப் போலும்!" "குழந்தைகளா! உங்களுக்கா இந்தக் கதி! எங்கே? என் அன்பன்; நண்பன், பாரி மன்னன்" என்று பதறிக் கேட்டாள் பாட்டி. பாட்டியின் உடலின் ஈரம் போக்கி, ஈர ஆடையைக் களையச் சொல்லி, நீலச் சிற்றுடையை உடுத்தும்படி தந்து, அன்னையின் குளிரைப்

போக்கினுர்கள், அந்த வள்ளல் பாரி பெற்றெடுத்த மாணிக் கங்கள். குளிர் நீங்கி, தெம்பு பெற்ற அன்னே, ஒளவை கடந்த கால சம்பவங்களேயும், இன்றைய நிலேயையும் எண்ணி, எண்ணி ஒரு வெண்பா செய்தாள். அதில் ஒளவையின் அன்பைக் காணலாம். அப்பெண்கள் செய்த உதவிக்கு இணேயே இல்லே என்கிருள் ஒளவை மூதாட்டி.

பாரி பறித்த கலனும் பழையனூர்க்
காரியன் றீந்த களேக்கோலும் சேரமான்
வாராயோ எனவுரைத்த வாய்மொழியும்
மிம்மூன்றும்
நீலச் சிற் றுடைக்கு நேர்!

11

சிறுவன் தந்த நீதி

"ஆளேக்கண்டு மயங்காதே ஊது காமாலே, எந் தப்புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ" என்பது நாட்டில் வழங்கும் சில அறிவுரைகள். அவசரப்பட்டு சிலரைப் பற்றி நாம் முடிவுரை கூறிவிடுகிருேம். அருகிலே சென்று பார்த்தால், அல்லது கொஞ்ச நாட்கள் கழித்துப் பார்த்தால், நாம் கொண்ட எண்ணங்களெல்லாம் தவருக இருக்கின் றன.

மிகப் பெரிய மனிதர்களிடம் மிகவும் சின்ன புத்திதான் காட்சி அளிக்கிறது. சிறு பையனுக இருந்தாலும் சிலரிடம் விவேகமும், வீரமும், நேர்மையும், நீதியும், உண்மையும், உயர்வும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. பிறரைப் பற்றிய நம்முடைய தீர்ப்பு, நிதானத்துடன் இருத்தலே நல்லது போலும்.

புலிக் கொடி பறந்தது, சோழவள நாட்டிலே! அந்த நாட்டின் அரசன் திருமாவளவன். அவன் நாட்டு மக்க ளுக்கு இதம் செய்தான். எம்மதமும் சம்மதமான நோக்கு டன், கல்வி கேள்வி, தொழில் வாணிகம் இவற்றை வளர்த்து

நாட்டைச் செழிக்கச் செய்தான். திருமாவளவன் தந்தை இளேயோன், என்னும் இளஞ்சேட் சென்னி; ஈன்ற தாய் வேண்மாள். சிறுவயதிலேயே தந்தையை இழந்தான். சோணுட்டின் தலே நகரம் உறையூர், அக, புறப் பகையில் சிக்கியது. வளரும் வளவர் குலத்திரு விளக்கை, இளமையிலே அழித்து, ஒழிக்கப் பகைவர் பலர் கங்கணம் கட்டிக் கொண்டனர். ஆட்சியிலே திருமாவளவன் அமர்ந்தான்; சிறு வயது. அரசப் பளுவைச் சுமக்க இயலாத பருவம். தக்க துணேயில்லாத காரணத்தால் வளவன், பகைவர் கையில் சிக்கினுன். சிறைச்சாலேயிலே சிங்கக்குட்டி சீறிக் கொண்டிருந்தது. வெளியேற வேளேப் பார்த்துக் கொண்டிருந்தது சிங்கம். செய்தி அறிந்தான் தாய் மாமன் இரும்பிடர்த் தலேயார்.

அவன் சேரர்களிடமும், பாண்டியர்களிடமும் உதவி வேண்டினுன். தக்க சமயம் நோக்கி, கரு ஊரில் மறைந்திருந்தார். பகைவர்கள் வளவனே ஒழிக்கத் திட்டமிட்டனர். அவனேக் கொல்ல நடு இரவில் சிறைக்குத் தீயிட்டனர், பகைவர் வைத்த தீ, வானே நோக்கி எரிய ஆரம்பித்தது. தீ கொழுந்து விட்டு, நாக்கை நீட்டுவது போல வானே நோக்கி எரிந்தது. தீயைக் கண்ட நகரமக்கள் சிறைச் சாலேக்கு ஆயிரக்கணக்கில் ஓடிவந்து, சிறைச் சாலேயைச் சூழ்ந்து கொண்டனர். ஒரே அமளி. வளவர் குளத்தின் அரசிளஞ் சிங்கம், தன்னேப் பிணேத்திருந்த விலங்குகளே அறுத்தெரிந்து, சிறைச் சாலேயை விட்டு வெளியேறினுன். சிறைக் கூடத்திலே பற்றிய தீ, திருமாவளவன் காலேப் பற்றியது. வளவன் கால்கள் இரண்டும், பகைவர் வைத்த தீயினுலே சுடப்பட்டுக் கருகியதால் "சரிகாலன்" ஆயினன்.

அந்த இருளிலே பகைவர், நண்பர், அயலார் யார் என்று அறியமுடியாததால், அந்த இருளேயும், மக்கள் போடும் கூச்சலேயும், குழப்பத்தையும் துணேயாகக் கொண்டு, திருமாவளவன் தப்பி அயல் நாடு சென்றுன். மக்கள் சிறைச்சாலேயிலே மன்னனேத் தேடினுர்கள். பிணக் குவியல்களேப் புரட்டிப் பார்த்தார்கள். தங்கள் அரசிளஞ் சிங்கத்தை அங்கே காணமுடியவில்லே.

மக்கள் ஆத்திரம் கொண்டார்கள். ஆவேசம் கொண்டார்கள். மக்கள் சக்தி ஒன்று திரண்டு நின்றது. "எங்கள் அரசகுமாரன் எங்கே?" என்று எல்லோரும் ஒரு குரலாகக் கிளம்பினர். மக்கள் கூட்டம் பெரும் வெள்ளம் போல் பகை மன்னன் அரண்மனையை நோக்கி ஓடி மோதியது. மக்கள் சக்திக்கு முன், பகை மன்னன் நிற்க முடியாமல் மாண்டொழிந்தான். அன்னிய அரசனை அகற்றிய மக்கள், ஆர அமர யோசித்துத் தங்களுக்கு ஒரு புதிய அரசனை நியமனம் செய்ய நினைத்தார்கள். முன்னையோர் முறைக் கிணங்க, சோழமன்னர்க் குரிய பட்டத்து யானையை, அணி செய்து அதன் துதிக்கையிலே, ஒரு மாலையும், தலையில் குட நீரும் வைத்து நடெங்கும் போய் வருமாறு அனுப்பினர்.

அரசு தேடிவரும் யானை கருவூரை நெருங்கியது. கரிந்த கால்களோடு கருவூர்க்கு வந்து வளவன் மாமனிடம் தங்கியிருந்தான். யானை அரச குமாரன் தங்கியிருந்த இடத்திற் கருகே வந்தது. யானையின் மணியோசை கேட்ட வளவன் வெளியே வந்தான். அவனை நெருங்கிய, அந்தக் களிறு குட நீரை அவன் தலையிலே கொட்டி, அவன் கழுத்திலே மலர் மாலையை அணிவித்து துதிக்கையால் அவனைத் தூக்கித் தன் பிடரியில் வைத்துக் கொண்டு, உறையூர் நோக்கி நடந்தது. தங்கள் பழைய அரச குமாரன் திருமாவளவனே கரிகாலனுகக் களிற்றின் மீது வருவதைக் கண்டு மக்கள் களி நடம்புரிந்தார்கள். உற்சாக வெள்ளத்திலே உறையூரே மிதந்தது. மங்கல வாத்தியங்கள் முழங்க, மக்கள் அன்புக் கோஷம் வானைப் பிளக்க, அரச குமாரன் உறையூர் பெரு நகரிலே பவனி வந்தான். பெரியோர்கள் பலர் ஆசி கூற சோழ குலத்துரிமை, தாங்கித் திருமுடி சூடினன், கரிகாலச் சோழன்.

கரிகாலன் ஆண்ட காலம் தமிழ்நாட்டின் பொற்காலம் என்று கூறலாம். நீதியும் நேர்மையும் வழுவாது செங்கோல் செலுத்தினன். மக்கள் இன்பமே தன் இன்பம் என மன்னன் கொண்டான். காடு வெட்டிக் கழனியாக்கினன். ஏரி வெட்டிக் வளம் பெருக்கினன். காவிரியைக் கட்டுப்படுத்திப் பயிர் வளம் பெருக்கினன்.

அரசியலைக் குழுக்களாகப்பிரித்து, அறிவாளிகளைக் கலந்துகொண்டு, குடி தழுவிக் கோலோச்சினன். புலவர்களை யும், சமயத் தலைவர்களையும் பாராட்டிப் போற்றி அவர்கள் அறிவும், ஆற்றலும் நாட்டுக்குப் பயன்படும்படி செய்தான். வீரத்திலும், தீரத்திலும் உவமை சொல்ல முடியாதபடி உயர்ந்திருந்தான். ஆனல் இவன் வயதோ மிக மிக சொற் பம். இந்தச் சின்னஞ் சிறு வயதிலே, அவன் ஆற்றிய பணி களும், ஆர்வமும் மிக மிக உயர்ந்தது. குடி தழுவிக், குறிப் பறிந்து இதமாக, அறிவாற்றலிலே பெரியவனுன கரிகாலச் சோழன் ஆட்சி புரிந்து வந்தான்.

ஒருநாள் மன்னன் கொலுவீற்றிருந்தான், அரசமண்ட பத்திலே! இரண்டு முதியவர்கள் மண்டபத்திற்குள் வந்த னர். மன்னனைப் பார்த்து மயங்கி நின்றனர். தங்களுக்குள் ளேயே, "நமது வழக்கை இந்த இள வயதுள்ள அரசன் தீர்த்து முடிவு கூறமுடியுமா?" என்று ஐயுற்றுப் பேசிக் கொண்டனர். "அவர்கள் வந்த காரணம் என்ன" என்று மன்னன் அந்த முதியவர்களைப் பார்த்துக் கேட்டான்.

"வழக்கு விஷயமாக வந்தோம். ஆனல் திரும்புகிறோம்" என்று முதியவர்கள் மொழிந்தார்கள். அவர்களை அமரச் செய்து, மன்னன் வேறு ஒருவரை மண்டபத்திற்கு அனுப்பு வதாகக் கூறிச் சென்ருன்! மிக மிக நயத்தோடு. கொஞ்ச நேரத்திலே நரைத்த கிழவன் மண்டபத்திற்குள் வந்தான், மன்னன் அனுப்பியதாக. வந்த பெரியவர்கள் மகிழ்ச்சி கொண்டு வழக்கைக் கிழவனிடம் கூறினார்கள். இருவரும் மெச்சும்படி கிழவன் தீர்ப்புக் கூறி, இருவரையும் மகிழச் செய்தான். ஆனல் அடுத்த கணமே வேஷம் கலைய, அங்கே அவர்கள் முன்பு நின்றவன், சிறு வயது கொண்ட சோழ குல மன்னன் கரிகால் வளவனே.

வந்தவர்கள் ஆச்சரியத்தில் மூழ்கித் தங்கள் மன்னனை வாழ்த்திக் கொண்டே சென்றனர். அவர்கள் மனத்திலே மடல் பெரிது தாழை. ஆனல் மகிழ் இனிது கந்தம். உடல் சிறியர் என்றிருக்க வேண்டாம்; அவர்களிடமும் கரிகாலன் போல அறிவு நிறைந்து நிற்கும். கடல் பெரிது ஆனல் அதன்

நீர் உப்பு, அதன் அருகே தோண்டும் சிற்றூற்று நீர் இனிதாய் இருக்கும் என்ற உண்மை தெள்ளத் தெளிய விளங்கியது.

இந்த மாதிரியான சம்பவங்கள் இலக்கியமனதுக்கு, எத்துணை, எத்துணையோ இன்பம் தருகின்றவைகளாகும். ‘உருவம் கண்டு எள்ளானம்’ வேண்டும் என்று கவிஞர்களும்புலவர்களும், புரவலர்களும் புவிமாந்தர்க்குப் – புரியவைத்த நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்றெனலாம். இது போன்ற சம்பவங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, இலக்கியத்தில் ஏராளமாகப் பரிமளிக்கின்றன. ஊடுறுவிப் பார்க்குங்கால் உருவத்தின் தோற்றம், உள்ளத்து உணர்ச்சிகளின் மாற்றம், இவைகளுக்கும் யாதொரு தொடர்பற்றிருந்த போதும், கடுகு காரமுடைத்து என்ற பேருண்மை வெளிப்படுகிறது.

இது இன்று உண்டான பழக்கமல்ல. தொன்று தொட்டுவரும் பாரம்பர்யம். வழித் தோன்றல்கள் வழி வழி வரும் குலத் தொடர்பு. அதனுலே மன்னன் மகன் சின்ன உருவினன் என்ருலும், குலவழி, குணப்பண்பு எங்கே போகும், அந்த பாரம்பர்யம் அற்றுப் போகவில்லை. சோழர் குலம் தாழவில்லை.

இந்த நிகழ்ச்சிகள் உண்மையில் மாந்தர் தம் இயல்புகளைப் படம் பிடித்துக் காட்டுவது போல இருக்கின்றன. கரிகாலன் போன்ற நேர்மையும், நீதியும் கொண்டோர் ஆட்சியிலே அமைவது சாலச் சிறந்ததாகும். அடியில் வரும் பழமொழிச் செய்யுள் அதை வலியுறுத்துகிறது.

“உரைமுடிவு காணுன் இளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரை முடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்.”

13

பாணனும், பாணியும்

மன்னர்கள் ஆட்சி மறைந்த பிறகு, இடைக்காலத்திலே தமிழ் மொழியின் வளர்ச்சி கொஞ்சம் தடைபெற்றது. ஆனாலும் ஆங்காங்கு இருந்த மிட்டாக்களும், பட்டாக்களும், ஜமீன்தார்களும் தமிழையும், தமிழ் பாடும் கவிவாணர்களை யும் மறக்கவில்லை. ஆனாலும் கவிஞர்களை வறுமை என்னும் கொடிய நோய் வாட்டிக்கொண்டே இருந்தது. நடந்து நடந்து சென்று, ஒவ்வொரு சீமானையும், பூமானையும் பாமாலை பாடியே கொஞ்சம், கொஞ்சம் பொருளும், மணியும் பெற்று வந்தார்கள். ஆனால் அவர்கள் பெற்ற பரிசு அவர்களுடைய வாழ்க்கையை உயர்த்தி, வறுமையை விரட்டுவதாக இல்லை. பெரிய இலக்கியங்களையும், அரிய கவிதைகளையும், காவி யங்களையும் சிருட்டிக்க வேண்டிய புலவர் மணிகள் அன்றாடத் தேவையான உப்பையும், புளியையும், உணவுப் பண்டங்களையும் சிந்திக்கவேண்டிய நிலையில் நின்று தவித் தார்கள். இதிலே சிலருக்கு நல்ல இல்லக் கிழத்திகள் கிடைத்தார்கள்.

அதனால் அவர்களுடைய வாழ்க்கை வறுமையிலும் செம்மையுடையதாக இருந்தது. தங்களுடைய கணவன்மார் கள், வெளியிலே சென்று, அடைந்து வருகிற இன்னல்களை யும், துன்பங்களையும் நன்குணர்ந்து, அவர்கள் வீட்டிற்கு வரும்போதே என்ன கொண்டுவந்தாய் என்று கேட்காமல், இத்தனை நாள் எங்கு இருந்தீர்கள், ஏன் இன்னும் விரைவில் இல்லம் வரவில்லை என்று இன்முகம் காட்டி, இனிது வரவேற் றார்கள். இந்த வரவேற்பிலே பாணர், பட்ட, துன்பமெல்லாம் பறந்து போகும்.

ஆனால் சிலருக்கு வேறு விதமாக அமைந்துவிட்டால் வேதனையும், சோதனையும் சொல்லி முடியா! என்ன கொண்டு வந்தாய் ? கொண்டு வந்தது கொஞ்சமாக இருக் கிறதே! அணியெங்கே! மணியெங்கே! நகையெங்கே! பொன்னெங்கே! பொருளெங்கே! இத்தனை நாட்கள் ஊர் சுற்றியும் இவ்வளவுதானா கொண்டு வந்தீர்கள். அல்லது

வேறு யாருக்கும் இந்த வள்ளல் இடையில் தானம் செய்து விட்டாரா !'' என்று அலறல் கேட்டும் (அன்பிற்குப் பதில்) பாணர் பாவம் பத்தினி முன்பு பரிதவித்து நிற்பார். பேச வழியேது ! சிலர் இந்த நிகழ்ச்சிகளைப் பேசாமல் நமது இலக்கியச் செல்வத்தை வளர்க்கக் கவிதையாகப் பாடி மகிழ்வார்கள்.

அந்தக் கவிதைகள் மிக உயர்ந்தவைகள். உண்மை யானவைகள். இதயத்திலிருந்து பொங்கி எழுந்தவைகள். நகை கேட்ட நங்கை நல்லாளை எண்ணி, "உனக்கு நான் நகை தரமுடியவில்லை. ஆனால், என் கவிதைக்கு உன்னை நினைத்து நகை தருகிறேன் பார் !'' என்பதுபோல நகைச் சுவையை அக் கவிதையிலே அள்ளி வீசி இருப்பார். அந்தக் கவிதையிலே பொருள்களை இரட்டுற மொழிவார். இல்லாளுக்கும்இனிதாகப் பாடிக்காட்டுவார். அன்று அவை வேடிக்கையோடும், வேதனையோடும், சோதனையோடும், பாடப் பெற்றாலும் இன்று அவை சிறந்தவைகளாக விளங்கு கின்றன.

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கின் றன. அத்தகைய கவிதைகளை இசைப்பது எளிதல்ல. அத்தகைய கவிதைகளை இயற்றுவோரை இன்று காண் பதே அரிது. ஒரு சொல்லேனும், தொடரேனும் செம் மொழிச் சிலேடை வகையினாலும், பிரிமொழிச் சிலேடை வகையினாலும் இரு பொருள் படுவது, இரட்டுற மொழிதல் எனப்படும். இந்த வகையிலேதான் அக்கவிதைகள் கட்டப் பெற்றன போலும். வாழ்க்கையின் அன்றாட நிகழ்ச்சியி லிருந்து, அக்கவிதைகள் எழுந்துள்ள காரணத்தால், அவை கள் மிகமிக இயற்கையாக இருக்கின்றன. பொருட் செறி வும் பூரணமாக அமைந்துள்ளன.

மேலே சொன்ன வகையில் வந்தவர் அந்தகக் கவி என அழைக்கப்படும் வீரராகவ முதலியார். இவர் தொண்டை நாட்டைச் சேர்ந்த பொன்விளைந்த களத்தூரில் பிறந்து வாழ்ந்தவர். பிறவியிலேயே கண் பார்வை அற்றவரானார். இயற்கையிலே கவிபாடும் வன்மை பெற்றவர். இவர் வள்ளல்களிடம் சென்று கவிபாடுவது வழக்கம். பல பல

வள்ளல்களைக் கண்டு, அவர்களுடைய விந்தைக் குணங்களைக் கண்டு அவைகளை கவியாகவே பாடினர். நாள் முழுவதும் கவிஞரை கவிபாடச் சொல்லிக் கேட்டு, வெறுங் கையோடு அனுப்பிய புண்ணியவான்களும் உண்டு. கிண்டல் செய்தவர்களும், கேலி செய்தவர்களும் மிகப் பலர். "கவிபாடி மழை வரவழைக்க முடியுமா? கம்பனைப்போல் கலைமகளோடு நேரில் பேச முடியுமா?" இப்படிப் பல. ஆனல், சில நற்குணம் படைத்த வள்ளல்கள் உண்மையிலேயே புலவரின் திறமையைக் கண்டுப் போற்றி, பாராட்டித் தங்களால் இயன்ற செல்வத்தை வழங்கினர்கள்.

இப்படியாக இவர் பல வள்ளல்களைக் கண்டு பல பல தனிப் பாடல்களைப் பாடியுள்ளார். அவ்விதம் பாடிய பாக்கள் சுவை நிரம்பியவை. வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை, அப்படியே அவர் கவிதையாகச் செய்துவிட்டார். இந்தத் தனிப்பாடல்கள் தவிர, திருக்கழுக்குன்ற புராணம், திருக்கழுக்குன்ற மாலை, சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் போன்ற பல நூல்களையும் இந்தப் பாவலர் இயற்றியுள்ளார். இந்தப் புலவர் பெருமகன் பன்னிரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த பெரியவர்.

இராமன் என்ற வள்ளலிடம் கவிஞர் சென்றார். அந்த இராமனைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடினர். தமிழே பேச்சாகவும், மூச்சாகவும் கொண்ட அந்தப் பிரபு, கவிஞரோடு இலக்கிய இன்பத்திலே மூழ்கித் திளைத்தான். கவிஞர் மேல் அன்பு பிறந்துவிட்டது. என்ன கொடுக்கிறோம், எதைக் கொடுக்கிறோம், யாருக்குக் கொடுக்கிறோம் என்னும் நினைவேயின்றி கவிஞருக்கு ஒரு யானையைப் பரிசாக அளித்தான் அந்தப் பிரபு. கவிஞரும் பேசாது யானையைப் பெற்றுவந்தார்.

அதனைத் தம் மனைவியிடம் தெரிவிக்கிறார். முதலில் அதை யானை என்று சொல்லாமல், நகை ததும்ப நங்கையிடம் நவில்கிறார். அதைத் தனக்கும், தன் மனைவிக்கும் நிகழ்ந்ததாகக் கூருமல், ஒரு பாணனுக்கும் அவன் பத்தினிக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலைப்போல அந்தக் கவிதையிலே அமைத்துள்ளார்.

பாணி (பரிசு பெற்றுவந்த பாணன் மனைவி) தன் அன்புக் கணவனை, பாணனை நோக்கி, "அன்பரே! தாங்கள் சென்று பல நாட்கள் ஆகினவே. இவ்வுலகத்தையும், வானுலகத்தையும் தனது புகழுக்கும், பெருமைக்கும் எல்லையாக உடைய, இராமன் என்னும் வள்ளலைப் பாடிவந்தீர்களே, அந்த வள்ளல் தங்களுக்குத் தந்த பரிசு என்ன? நான் அறியலாமா?" என்று கேட்டாள். "என்னரும் மனைவியே! இராமன் தந்த பரிசை உனக்குச் சொல்லாமல் நான் வேறு யாருக்குச் சொல்வேன்? இதோ சொல்லுகிறேன் கேள்" என்றான். யானையைக் குறிக்க 'களபம்' என்று கூறினான். (அவள் களபத்தை சந்தனம் என்று கருதி) "பூசிக்கொள்ளும்" என்றாள். 'மாதங்கம்' என்றான் மறுபடியும் அந்தப் பாணன். அவள் பெரும் பொன்னென்று நினைத்து, "நாம் வறுமையிலிருந்து மீண்டோம்; மட்டற்ற மகிழ்ச்சி" என்றாள். நிரம்பிய சிறப்புடைய 'வேழம்' (யானையைக் குறிக்க) என்றான். அவளோ (வேழத்தைக் கரும்பு என்று கருதி) "விரும்பித் தின்னும்" என்று விடை பகர்ந்தாள். 'பகடு' (யானையைக் குறிக்க) என்று பகர்ந்தான் பாணன். பாணியோ, பகடை எருது என்று கருதி, "அதனைக்கொண்டு வயலை உழவு செய்து வளப்படுத்தி வறுமை போக்குவீர். வள்ளலுக்கு நன்றி" என்றாள். 'கம்பமா' (யானை) என்றான் கவிஞன். அவளோ, கம்பமாவை கம்பு தானியத்திலிருந்து கிடைத்த நல்லமா, என்று கருதி "நல்ல கம்பங்களி கிண்டி உண்ணலாம்" என்று உரைத்தாள். கடைசியாகப் பாணன் 'கைம்மா' என்றான். அதன் உண்மையான பொருளை உணர்ந்தாள் பாணி. "யானையா! நமக்கா!" என்று கண்கள் கலங்கி நின்றாள் பாணன் மனைவி பாணி. களபம்—சந்தனம்; மாதங்கம்—மிகுந்தபொன்; வேழம்—கரும்பு; பகடு—எருது; கம்பமா—கம்புமா, என்ற பொருள் தவிர மேற் சொன்ன சொற்கள் யானையையும் குறிக்கும். புலவரின் உண்மையான திறமையும், அவர் மனைவியிடத்திலே கூட இலக்கிய, ரசனையோடு நடந்துகொண்ட விதமும், ஈங்கு காணவேண்டியதாகும். களபம் என்பதற்கு சந்தனம் என்று பொருள்கொண்ட பாணி 'பூசிக்கொள்ளும்' என்று கூறுவதிலே சிருங்கார இரசமும் சொட்டுகிறது.

இம்பர்வா னெல்லையிரா மனையேபாடி
என் கொணர்ந்தாய் பாணநீ யென்றாள் பாணி
வம்பதாங் களபமென்றேன் பூசு மென்றாள்
மாதங்க மென்றேன்யாம் வாழ்ந்தேமென்றாள்
பம்புசீர் வேழமென்றேன் றின்னு மென்றாள்
பகடென்றே னுழுமென்றாள் பழனந் தன்னைக்
கம்பமா வென்றேனற் களியா மென்றாள்
கைம்மாவென் றேன்சும்மா கலங்கி னாளே!

15

கவிமணிக்குக் கனி

பல கவிஞர்கள், மேதாவிகளுக்குப் புகழ் மாலை பாடி யிருக்கிறார்கள். ஒருவர் மீது புகழ் மாலை பாடிப் போற்றி, வாழ்த்தும் வழக்கம் தொன்று தொட்டு இந்த நாட்டிலே இருந்து வருகிறது. இது புதுமையல்ல. ஆனால், அப்படிப் பாடுகின்ற கவி, எத்தன்மையுடைத்து? அது இதயத்தி லிருந்து பொங்கிப் பூரித்து அன்பு வெள்ளமாய் ஓடி வருகிறதா என்பதே கேள்வி? அக் கவிதை உண்மையான அன்பினால் பாடப்பெற்றதா? அல்லது இவரைப் புகழ்ந்தால் நமக்கும் பெருமை உண்டு; நாமும் அவரைப் பாடி புகழ் மாலை சூட்டியிருக்கிறோம், என்பதைக் காட்டவா? என்பதே இங்கு நோக்க வேண்டியதாகும்.

கவிதை இன்பத்திலே மூழ்கித் திளைத்து அந்த இலக்கிய இன்பத்தை நுகர்ந்து வருகின்ற பேரறிவாளர்கள் மேலே சொன்ன இயல்புகளை வெகு எளிதாகக் கண்டு கொள்ளுவார்கள். அந்த அறிஞர்கள் கவிதை இன்பத்தி லேயே ஊறி ஊறிக் கவிதையின் தரா தரத்தையும், பாடிய வரின் பான்மையையும், பாடப்படுகின்ற பொருளின் தன் மையையும் வெகு எளிதாகக் கண்டுகொள்ளும் ஆற்றல் அவர்களிடம் தானே வந்து அமைகிறது.

அவர்களால், கம்பன் பாட்டின் கற்பனையும், சங்க இலக்கியத்தின் சாரங்களையும், ஐம்பெரும் காவியங்களின் அற்புதங்களையும், பொய்யாமொழி போதிக்கும் நெறியையும் வெகு எளிதாகக் காண முடிகிறது.

கவிமணி என்றால் தமிழ் பேசும் மக்களுக்கு அறிமுகம் தேவையில்லை. தேசிக விநாயகம் பிள்ளை மணி மணியாகக் கவிதை செய்தார்கள். அன்போடு, நாட்டு மக்கள் கவிமணி என்ற படத்தைப் பாராட்டித் தந்தார்கள். கவிமணியின் கவிதைகள் மணிபோல் ஒலிக்கக் கூடியவை. உள்ளத்தைத் தொடக் கூடியவை. சந்தமும், பொருளும் எளிமையும் இனிமையும் தானே வந்து அமையும், அவரது கவிதை களிலே! கொஞ்சுங் குழந்தையின் அன்பு அவர் கவிதை யிலே கொட்டும்.

ஆசியஜோதி பாடிய அரிய கவிஞர். ஆசிரியர் வேலை பார்த்து, அனுதினமும் அன்புக் குழந்தைகளோடு பழகிய பண்பாளர். திருவனந்தபுரத்திலே மகளிர் கலாசாலையில் பணியாற்றியவர். அக்காலம்தான் கவிக்குயில் சுப்ரமணிய பாரதியார் திருவனந்தபுரத்திற்கு வந்தார். புலவர்கள் கூட்டத்திலே "வெடிபடு அண்டம்" என்ற பாட்டைக் கட்டிடமும், கூடியிருந்தவரும் நடு நடுங்க, எட்டுத் திசையும் அதிர "ஊழிக் கூத்தை" உரத்த குரலில் பாரதியார் பாடினார்.

அந்த அரிய நிகழ்ச்சிக்கு 'தேவி' இல்லை. விடுமுறையின் காரணத்தால் வேறு ஊருக்குப் போயிருந்தார். திரும்பி வந்ததும் "பாரதி" வந்து சென்ற செய்தியும், அவர் பாடிய பாட்டையும் கேட்டார். பாரதியை நேரில் காணவில்லையே என்று மனம் நொந்தார். ஒரு அன்பன் பாரதியார் பாடிய பாட்டைப் பாடிக் காண்பித்தான். உடனே கவிமணி கவிக் குயில்மேல் கவிதை கட்டியது. "பாட்டுக்கொரு புலவன் பாரதியடா—அவன் பாட்டைப் பண்ணோடு ஒருவன் பாடினான். கேட்டேன்! கிறு கிறுத்துப் போனேன். அந்தக் கிறுக்கில் உளறும் மொழி பொறுப்பாயடா" என்று. இப்படி அவர் பாடிய கவிதைகள் ஒன்றல்ல, இரண்டல்ல. பல பல. தற்புகழ்ச்சி சிறிதும் இல்லாத கவிஞர். இந்தக் காலத்திலே

சிலர் " நான் எழுதினேன் ", " நான் எழுதினேன் " என்று தம்பட்டம் அடிக்கிறார்களே ! அவர்கள் கவிமணியைக் காணவேண்டும். அடக்கமாய் அன்புப் பணி செய்தார். தமிழ் மொழியை வளர்த்தார். கீர்த்தனங்கள் பல செய்து தமிழ் இசை இயக்கத்தைப் போற்றினார்.

1931-ம் ஆண்டு ஓய்வு பெற்று அயராது தமிழ்ப் பணியே செய்தார். அவர் நோயால் வருந்தினார். ஆனால், அவர் தமிழன்னைக்கு கவிமலர் சூட்டுவதை மட்டும் நிறுத்த வில்லை. அவருடைய கவிதைகளையெல்லாம் தொகுத்து " மலரும் மாலையுமாக " அன்பர்கள் வெளியிட்டார்கள். அவரைப் போற்றாத அறிஞர்கள் இல்லை. பாராட்டாத பாவலர்கள் இல்லை. பெயரும் புகழும் தேடிவந்தன. அண்ணாமலை பல்கலைக் கழகத்தார் கௌரவத் தமிழ்ப் பேராசிரியராக அமர வேண்டினார்கள். ஆனால், கவி புத்தேரி கிராமத்திலேயே (புகழையோ, பணத்தையோ விரும்பாமல்) சாந்த வாழ்க்கையை மேற்கொண்டார்கள். தேனொழுக " தேவி " தெவிட்டாத கவி பாடினார். இவர் பாடிய கவிதை களும், சந்தர்ப்பங்களும் விரிப்பின் பெரு நூலாகும்.

"சேலம் தந்த செல்வம். தமிழ் நாட்டின் இன்பப் பொக்கிஷம். காந்தி மகாத்மாவின் வலக்கரம். இராஜ தந்திரி. கர்ம யோகி. சுடச்சுட நோன்பு நோற்கும் நேர்மை யாளர். உவமைக் கதை கூறும் ஒப்பிலாத உத்தமன். நவ நவ யோசனைகளை நாட்டிற்கு நல்குவதில் உயர்ந்தவர். புவனம் வியந்திடப் புதுமையும், பழமையும் பூத்து மலர்ந்தவர். தீண்டாமைப் பேயைக் கட்டுடன் விரட்டியவர். முதலமைச் சர் வேலைமுதல், கவர்னர் ஜெனரல் வேலைவரை பார்த்த முதல்வர். தந்திரிக்குத் தந்திரியாய், தாசனுக்குத் தாசனாய், மந்திரிகள் மெச்சும் மதி மந்திரி வேலை பார்த்த வித்தகர். மண்ணைப் பொன்னாக்கும் மதியூகி. வாய்த்தவினை எண்ணித் துணியும் இயல்புள புண்ணியஞ்சேர், விண்ணமுதை ஒத்த வியாசர் விருந்தைத் தந்த வேதாந்த போதகன். ஆரியமும், ஆங்கிலமும், செந்தமிழும் ஆய்ந்து கற்ற பெரும் புலவர். சக்கரவர்த்தி திருமகன் தந்த " சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் புத்தேரிக்குச் சென்றார். கவி

மணியைக் கண்டார். வெறுங் கையோடு செல்லவில்லை, "வள்ளுவர் வாசகம்" தந்த விற்பன்னர். கையிலே கனியெடுத்துச் சென்றார்.

கனியும் உள்ளத்தோடு, கவிமணிக்கு அரசியல்மணி கனி கொடுத்தார். அன்போடு பெற்றுக்கொண்ட கவிமணி அன்னை அடிமை நிலைபோக்கி, அறப்போர் தளபதியாய் காந்தி அடிகளுக்கு வலக்கையாய் நின்றுதவியவரை மேலும் கீழும் பார்த்தார்! இராஜாஜி செய்த, செய்கிற, செய்யப் போகின்ற அத்தனை அரிய பணிகளையும் கவிக் கண் கொண்டு பார்த்து வாழ்த்துரை வழங்கினார். "அன்றும், இன்றும், என்றும் இராஜாஜி இந்திய மக்கள் இதயத்தில் இடம் பெறுவார்" என்று கூறினார். இன்று, இந்தத் தள்ளாத வயதில் இராஜாஜி செய்யும் பணியை நோக்கும்போது கவிமணியின் தீர்க்கதரிசனம் தெள்ளத் தெளிய விளங்கு கிறது. "கனிகளைக் கைகளிலே எடுத்து எளியேன் இருக்கும் இடமல்லவா நீ வந்து விட்டாய்! நீ சக்கரவர்த்தி! ஏன் அப்படி வந்தாய்! கனியும் அன்பால் கனி கொண்டு வந்தாய்! கனவானே! வேறல்ல. அன்புதான் காரணம். நீ புனித ஞானி. கர்மயோகி. நீ வருங்காலத்தை வகுத்துக் கூறுவதில் வல்லவன். சாணக்கியன் உனக்கு நிகரல்ல. உலகம் புகழும் இராஜகோபாலா" என்று அகமும், முகமும், மலர கவிமணி அரசியல் மணியை அழைக் கிறார். நனி எம் பெருமாள் அருளால், "நீ இந்த நாடு வாழ, எடுத்த காரியங்கள் யாவற்றிலும் வெற்றிமேல் வெற்றி பெற வேண்டும். எம்பெருமான் அருள் உனக்கு என்றும் உண்டு. தூற்றிய பேர்களும் போற்றிப் புகழும் தூய் மதிப் புலவன் அல்லவா நீ! எதிர்ப்பிலேதான் நீ நடத்தும் இயக்கங்கள் முன்னிலும் பன்மடங்கு வெற்றிபெற்றன! நீ பல்லாண்டு பல்லாண்டு வாழ வேண்டும். உலகம் அமைதியுடன் வாழ, பாரத தேசம் வாழ, தமிழ் நாடு வாழ, எந்த நாளும் வாழ்க! வாழ்கவே!"

"இனிய கனிகள் கையிலெடுத்து
எளியேன் இருக்கும் இடந்தேடி
கனியும் அன்பால் வந்துள்ளம்
கனியச் செய்த கனவானே
புனித ஞானி என்றுலகம்
புகழும் ராஜ கோபாலா
நனிஎம் பெருமான் அருளால் எந்
நாளும் வாழ்க வாழ்கவே."

16

தனக்கு மிஞ்சியும் தான தருமம்

'தருமம் தலைகாக்கும்' என்பது ஆன்றோர்களுடைய வாக்கு. 'அறஞ் செய்ய விரும்பு' என்றாள் ஔவை மூதாட்டி. தனக்கு வருகின்ற வருவாயில் ஒரு பங்கை உத்தம, உயர் கைங்கர்யங்களுக்குப் பயன்படுத்துவது நமது மூதாதையர்கள் கொண்ட கொள்கையாகும். அந்தக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுதான் இன்று நாம் காணும் மான்யங்களும், மண்டபங்களும், சத்திரங்களும், சாலைகளும், சோலைகளும் எழுந்தன. இடைக் காலத்தில் ஒரு தவறான கொள்கை உருவாகியுள்ளது. "தருமம் வேண்டும்! தருமம் செய்யுங்கள்!" என்று கேட்கப் போனால், 'தனக்கு மிஞ்சித்தான் ஐயா! தான தருமங்கள் செய்யமுடியும்' என்று பலர் பேசுவதைக் கேட்கிறோம்.

மகாபாரதமும், இராமாயணமும் பாரத நாட்டின் இதிகாசப் பொக்கிஷங்கள். நீதியையும், நேர்மையையும், ஆன்மீகத் தத்துவங்களையும் சிறப்பாக விளக்கும், அரிய பெட்டகங்களாக இந்த நூல்கள் விளங்குகின்றன. மகாபாரதம், நான்கு வேதங்களின் உட்பொருள்களை எல்லாம் எடுத்து உயர்ந்த முறையில் கதை மூலமாக உரைப்பதால், ஐந்தாம் வேதமென்று அழைக்கப்படுகிறது. துஷ்யந்தனுக்கும்

சகுந்தலைக்கும் பிறந்த பிள்ளை பரதன். அப்பரதனது வம்சத்தார் பாரதர். அந்த அரிய வம்சத்தின் வழியில் வந்தவர்களே பாண்டவரும், துரியோதனுதிகளும். எனவே பரதனது வம்சத்தைச் சேர்ந்த இந்த இருசாரரைப் பற்றிக் கூறும் சரிதம், பாரதம் என்று வழங்கப்பெற்றது.

பாரதம் முதலில் வேத வியாசர் என்ற (பல கலைகளையும் உயர்ந்த முறையில் கற்றவரும், நான்கு வேதத்தையும் செம்மைப்படுத்திய சீலருமான) மகாமுனிவரால் வடமொழியில் இயற்றப்பெற்றது. அகத்தியப்பட்டர் என்ற அறிஞரும் வடமொழியில் 'பால பாரதம்' என்னும் மற்ருெரு பாரதத்தை இயற்றினுர். தமிழில் பல பாரதங்கள் வழங்குகின்றன. முதன் முதலில் கடைச் சங்கத்தைச் சேர்ந்த பெருந்தேவனுர் என்னும் பெரும் புலவர் பாரதத்தைத் தமிழில் பாடினுர். அதனுல் அவருக்கு 'பாரதம் பாடிய பெருந்தேவனுர்' என்ற பட்டமும் கிடைத்தது. இவர் எழுதிய பாரதத்தை "சங்க பாரதம்" எனவும் அறிஞர்கள் அழைப்பார்கள். சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த அதே பெயர்கொண்ட மற்ருெரு பெருந்தேவனுர் என்னும் புலவர், பாரதத்தை வெண்பாவில் சுமார் பன்னீராயிரமாகச் செந்தமிழில் செய்தார். அது "பாரத வெண்பா" என்று போற்றப்படும்.

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வில்லிபுத்தூர் ஆழ்வார் என்னும் அரிய புலவர் விருத்தப் பாவிலே பாரதத்தைப் பைந்தமிழில் பாடிப் பரவசமடைந்தார். அது 'வில்லி பாரதம்' என்று அழைக்கப்படும். சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்னுல் நல்லாப்பிள்ளை என்னும் நற்புலவர் மகாபாரதத்தை நம் தமிழில் பாடினுர். நூற்றைம்பது வருடங்களுக்கு முன்னுல் அரங்கநாதக் கவிராயர் ஒரு அரிய பாரதம் பாடினுர். நம்முடைய தேசீய கவி பாரதியாரும் பாரதத்தின் ஒரு பகுதியாகவே பாஞ்சாலி சபதத்தைப் பாடினுர். இப்படி அன்றுமுதல் இன்றுவரை எத்தனையோ புலவர்களும், கவிமணிகளும் பாரதம் என்னும் பெருங்கடலிலே மூழ்கி மூழ்கித் திளைத்து, முத்துக்களைக் கொட்டிக்கொண்டே இருக்கிருர்கள்.

வில்லிபுத்தூர் ஆழ்வார் ஒரு வைணவப் புலவர். சனி யூரிலே பிறந்தவர். வரந்தருவார் என்ற நற்புத்திரரைப் பெற்றவர். வரபதியாட்கொண்டான் என்ற அரசன் இப் பெரும் புலவரை ஆதரித்தான். இனிய சந்தமும், பொரு ளும் கொண்ட விருத்தப் பாடல்களால் வில்லி பாரதத்தை வடித்தெடுத்தார். உவமை அழகும், வர்ணனையும், சொல் லாழமும் கொண்ட பாக்களைப் படைப்பதால் வில்லிக்கு நிகர் யாருமில்லை. பதினெட்டுப் பருவங்களைக் கொண்டது பாரதம். ஒவ்வொரு பாத்திரமும் ஒவ்வொரு குணாதிசயங் களைக் கொண்டது. பல உப கதைகளைக் கொண்டது பாரதம். வில்லியின் பாடல்களைப் பாடப் பாட ஒரு விறு விறுப்பும் தமிழ் இனிமையும் தானே துலங்கும்.

கர்ணன் என்றால், 'வாரிக்கொடுத்தவன்', 'வள்ளல்' என்று இன்றும் மக்கள் அவனைப் போற்றுகிறார்கள். கர் ணன் மகாபாரதத்திலே ஒரு சிறந்த பாத்திரம். அவன் மூலம் வெளியாகும் உண்மைகளும், நீதிகளும் பல பல. "கர்ணனுக்கப்புறம் கொடையுமில்லை. கார்த்திகைக்குப் பிறகு மழையுமில்லை" என்பது நாட்டு வழக்கில் சொல்லப் படும் பழமொழியாகும். குந்திதேவி கன்னியாக இருந்த பருவத்திலே, சூரியன் அருளால் அவளிடம் தோன்றியவன். துரியோதனனின் தேர்ப்பாகனால் வளர்க்கப்பெற்றவன். பரசுராமனிடம் வில் வித்தை பயின்றவன். துரியோதன னின் உயிர் நண்பன். அவனால் அங்கதேசத்திற்கு அரச னாக ஆக்கப்பெற்றவன். அருச்சுனனின் ஜன்மப் பகை வன். கவசகுண்டலங்களை இந்திரனுக்கு அளித்துப் பெருமை பெற்றவன். கொடையினிற் சிறந்தவன். செஞ் சோற்றுக் கடனுக்காக போர்க்களத்தில் உயிரைக் கொடுத்த உத்தமன்.

பாரதப் போரிலே பதினேழாம் நாள் நாகவெங்கணையை அருச்சுனன் மீது கர்ணன் எய்தான். கண்ணனது சூழ்ச்சி யால் அக்கணையின் குறிதவற, அருச்சுனன் பிழைத்தான். குந்திக்குத் தந்த வாக்கால் மறுமுறை அதை எய்யாது இருந்த கர்ணன் மீது, அருச்சுனன் அம்பு மழை பொழிந் தான். அதனால் மயங்கித் தேர்த்தட்டில் கர்ணன் சாய்ந் தான். ஆதவன் சாய இன்னும் கொஞ்ச நேரம் இருந்தது.

முத்தருக்கெல்லாம் மூலமாய், வேதமுதற் கொழுந்தாகிய கண்ணன், அருச்சுனனைப் போரை சற்றுநிறுத்தும்படி கூறி, சிறந்த அந்தணன் வேடம் பூண்டு, கர்ணனை அடைந்தான்.

"மேருமலையில் தவம் செய்கிறேன். வறுமையில் வாடுகிறேன். வறுமையில் வாடும் மக்களுக்கு இல்லையென்று சொல்லாது, வாரி வாரி வழங்குகிறாய், என்று கேள்விப்பட்டேன். தரத்தக்கதொன்றை இப்போதே தருவாயாக" என்று வெயிலவன் புதல்வனை வேதியர் கேட்டார். அர்ச்சுனன் அம்புகளால், உடம்பெல்லாம் இரணமாகத் துளைக்கப் பெற்று துடித்துக்கொண்டிருக்கும் கர்ணன், இதைக்கேட்டு மகிழ்ந்து "மறையவரே! மகிழ்ச்சி. வேண்டியதைக் கேளும்" என்று கூறினன். "உன்னுடைய புண்ணியமனைத்தையும் தருவாயாக" என்று வேதியர் வீரனிடம் வேண்டினர்.

"உயிரோ துடித்துக்கொண்டிருக்கிறது. அகத்தோ புறத்தோ அறியேன். வேண்டிய பொருளெல்லாம் வாரிக் கொடுக்கும் நாளில் அந்தணரே வரவில்லையே! நான்செய்த புண்ணியமனைத்தும் முற்றிலுமாகக் கொடுத்தேன். பெற்றுக்கொள்ளுங்கள்! பூவில் வாழ் அயனும் ஒப்பில்லை உமக்கு! புண்ணியத்தை உமக்குத்தரும் புண்ணியத்தைக் காட்டிலும் வேறு புண்ணியம் என்ன இருக்கிறது" என்று கூறி கரம் குவித்து, மார்பில் தைத்துள்ள அம்பின் வழியாக ஒழுகுகின்ற செங்கீரால், தத்தம் செய்து கொடுக்க, மறையவர் தனது உள்ளங்கையினுல் அதை ஏற்றார். அந்த மறையவர் மகிழ்ந்து "வேண்டிய வரங்கேள்" என்று சூரன்மா மதலையைக் கேட்க, "பிறப்பு எனக்கு உண்டானல் ஏழ் ஏழ் பிறப்பும், இல்லை என்று இரப்போருக்கு, இல்லை என்று உரையாத இதயம் தருவாய்" என்று கர்ணன் கேட்டான்.

இதைக் கேட்ட வேதியன் மனம் மலர்ந்தது. கர்ணனை மார்போடு கட்டித் தழுவி "எத்தனை பிறவி எடுத்தாலும் ஈகையும், செல்வமும் எய்தி, முக்தியும் பெறுதி" என்றுரைத்தார். தன்னை வணங்கிய கர்ணன் மகிழ, திருத்துழாய் மாலையுடன், பஞ்ச ஆயுதமும் வயங்க, கசேந்திரன் முன்னல் காட்சியளித்தபடியே, காட்சி தந்தார். "அமரரும்

அமர யோனிகளும், அமரர் அதிபதியும், கமல நான்முகனும், முனிவரும் கண்டு கனக நாள் மலர்கொண்டு பணிந்த தேவாதி தேவனை, அமல நாரணனை நான் கண்டேன்" என்று மகிழ்ந்தான் கர்ணன்.

"நான் கண்ட தெய்வம் எத்தகைய தெய்வம்! காண முடியுமா ஊனக் கண்களால்" என்று கர்ணனே கூறுகிறான். "அருந்தழல், மாமகம் புரிந்தும், கடவுள் கங்கையாம் புனல்படிந்தும், புனித யோகத்திருந்தும், அணி மலர் தூவியும், பெரும் தவம் செய்தும் அடைய முடியாத புண்ணியத்தை, கண்ணா! உனது கருணையால் பெற்றேன். நீல நெடும் கிரியும், மழை முகிலும், பவ்வம் நெடு நீரும், காயாவும் ஒத்த இந்தக் கோலமும், வெம்கதையும், வாளும், சங்கும், நேமியும், கோதண்டமும், நறுந்துழாய் மார்பும், மலர்ந்த முகமும், சோதிக் கதிர் முடியும் இம்மையிலே கண்ணுற்றேன். எனது மகிழ்ச்சியே மகிழ்ச்சி. வான் பெற்ற நதிகமழ்தாளை வணங்கினேன். மதிபெற்ற நினது திருவுளத்தால் மதிக்கப்பெற்றேன். தேன் பெற்ற துழாய் அலங்கல், களபமார்பும், திருப் புயமும் தீண்டப் பெற்றேன். ஊண்பெற்ற பகழியினால் அழிந்து வீழ்ந்தும் உணர்வுடன் கண்ணா! நினது திருநாமம் உரைக்கப் பெற்றேன். யான் பெற்ற பெரும், தவப்பேற்றை இந்த நிலத்தில் என்னையன்றி வேறு யார் பெற்றுள்ளார்கள் கண்ணா!" என்று கரம்கூப்பி கர்ணன் தொழுது வணங்குகிறான்.

அறத்தின் அருமையையும், பெருமையையும் வில்லி போல் எடுத்துக் காட்டவல்லார் யார்? தனக்கு மிஞ்சியும், எஞ்சிய புண்ணியத்தை வாரி வழங்கிய புண்ணியன் கர்ணன் பேசுவதை வில்லியின் வாக்கினாலே கேளுங்கள்!

"வான்பெற்ற நதிகமழ்தாள் வணங்கப் பெற்றேன்
மதிபெற்ற திருவுளத்தான் மதிக்கப் பெற்றேன்
தேன்பெற்ற துழாயலங்கற் களப மார்புந்
திருப்புயமும் கைவந்து தீண்டப் பெற்றேன்

ஊன்பெற்ற பகழியினுல் அழிந்து வீழ்ந்து
முணர்வுடனின் றிருநாம முரைக்கப் பெற்றேன்
யான்பெற்ற பெருந்தவப்பே றென்னையன்றி
யிரு நிலத்திற் பிறந்தோரில் யார் பெற்ருரே!''

17

வாழ்விக்க வந்த மகாத்மா

கவிஞர்கள் காலத்தை வென்றவர்கள். அவர்களால் மூன்று காலங்களையும் கணக்கிட்டுச் சொல்ல முடியும். அவர்களது அமுத வாக்குகளும், அரிய வாழ்த்துக்களும் நிலைத்து நிற்கின்றன. பிறவிக் கவிஞனுடைய வாக்கு, இதய ஆழத்திலிருந்து பிறக்கிறது. அந்த வாக்குகள் ஜீவன் உள்ளவைகள். சிரஞ்சீவித் தன்மை பெற்றவை கள். அத்தகைய கவிஞர்கள் மறையலாம்; அவர்கள் பாடிய சம்பவங்கள் இன்று இல்லாமல் இருக்கலாம். ஆனுல் அந்த சம்பவத்தை இன்றும் மக்கள் நினைத்தால், அந்தக் கவிஞரும், அந்தக் கவிஞர் பாடிய அருமைகளும் பெருமைகளும், அவர்களின் அகக்கண்களின் முன்னே நிற்கின்றன. அந்த இரண்டும் ஒன்றை யொன்று உயிர், மெய் போலே தழுவி, கொட்டியும், ஆம்பலும், நெய்தலும் போல ஒட்டிப்பிணைந்து, பின்னி பிளக்கப்படாமல் இன்றும் துலங்குகின்றன. அவைகள் அருள் வாக்குகளாக அனை வராலும் போற்றப்படுகின்றன. கால வெள்ளத்திலே எத் தனையோ கவிஞர்கள் வந்தார்கள்! போனுர்கள்! எல்லாக் கவிதைகளும் நின்று நிலைப்பதில்லை.

அந்தக் கவிதைகள் மக்களின் இதயத்தைத் தொட வில்லை. இதய ஆழத்திலிருந்து எழுந்த உண்மையான அருள் வாக்குகளே மக்களால் மதிக்கப்படும். நிலையாக உலகத்தில் நிற்க முடியும். இன்று கூட எத்தனையோ பேர்கள் தம்பட்டம் அடிக்கிருர்கள். "நான் கவிதை செய் திருக்கிறேன். ஓவியம் படைத்திருக்கிறேன். கம்பன்

காட்டாத உவமைகளையும், சந்தங்களையும் கையாண்டிருக்கிறேன்" என்று ஓயாமல் சொல்லிக்கொண்டே இருக்கிருர்கள். இவர்களது காவியத்தையும், கவிதையையும் காலம்தான் மதிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பொருள் புரியவில்லை. படித்தால் பல் உடைபடுகிறது. நடை விளங்கவில்லை. கவிதையா? பாட்டா? பண்டிதர்கள்தான் அந்தப் பக்கம் செல்ல முடியும் என்றிருந்தது ஒரு காலம். வெள்ளைக் கவிதை பாடிஞல் போற்றுவாரில்லை. அதைப் பாடிய பாவலன் எள்ளி நகையாடப்பட்டான். இதை மாற்ற எட்டயாபுரத்திலே ஒரு சிங்க நாதம் கேட்டது. அந்தச் சங்கநாதம் செந்தமிழ் நாடெங்கும் ஒலித்தது. அன்னை பூரித்தாள். அந்த ஒலி இமய மலையை முட்டி, 'அதற்கு அப்பாலும் கேட்டது.

அதை எழுப்பியவர் யார்? அவர்தான் தென்பாண்டி நாடுதந்த கவிச் சக்கரவர்த்தி சுப்ரமணிய பாரதியார். தித்திக்கும் செந்தமிழின் அமுதமானவன். தீப்பறக்கும் தேசாபிமானி. எத்திக்கும் அவன் முழக்கம் கேட்டது. செத்துக் கிடந்த செழும் தமிழர் வாழ்வுக்குக் கலங்கரை விளக்கமாய் வந்தான். விடுதலை வெற்றிமுரசம் கொட்டிஞன். பெண்ணடிமைப் பேயை விரட்டிஞன். இலக்கியத்திலே புரட்சி செய்தான். புரட்சி! புரட்சி!! அவன் ஒரே புரட்சிமயம். புரட்டுக்களைப் புரட்டி எடுத்தான். பொய்மை அவனைக் கண்டு அஞ்சியது. வாய்மை அவனைக் கண்டு வணங்கி நின்றது.

பாரதி வந்த காலம், பாரத நாடு பரங்கியருக்கு அடிமையாக இருந்தது. அன்னிய மோகத்திலே நாடு மூழ்கியிருந்தது. நம்மவர் நாட்டை மறந்து, அன்னிய நாகரீகத்திலே மூழ்கினர். மொழியை மறந்தனர். ஆங்கில மொழி எங்கும் ஓங்கி நின்றது. நமது கலையை மறந்தனர். கலாச்சாரத்தைத் துறந்தனர். அந்த நாட்டு மதுவும், மாமிசமும், பவுடரும், சாயமும், மேனி மினுக்கும் பொருள்களும் இந்த நாட்டில் வந்து வண்டி வண்டியாய் இறங்கின. ஆணும், பெண்ணும் அவர்கள் ஆட்டத்திலும், பாட்டத்திலும் குதித்தனர். நம்மவர் நம்மை மறந்து, நமக்குள்ளே

பிளவு கொண்டு அன்னியனோடு உறவு கொண்டனர். இதைக்கண்டு பாரதி துடித்தார். எங்கும் புரட்சி செய்தார். அன்னிய மோகத்தையும், அவர்கள் ஆட்சியையும் அறவே ஒழித்துக்கட்ட, பல தேசாபிமானிகள் தோள் கொட்டி நின்றனர். வேல் பிடித்து நின்றார் நமது பாரதியார். அவரது கவிதைகளிலே வீரக்கனலைக் கொட்டினார்.

அவரது பாடல்களைப் பாடிப்பாடிப் பல நூறாயிரம் பேர், நாட்டு விடுதலையில் நாட்டம் கொண்டு சேர்ந்தனர். "வந்தே மாதரம்" என்று வணங்கச் சொன்னார். "எந்தையும், தாயும் மகிழ்ந்து குலாவிய இந்நாட்டில், வேற்று நாட்டான் ஆளவோ, நமது தோள்கள் விம்மிப் புடைத்து எழுந்து நில்லாவோ" என்றார். "பாருக்குள்ளே நல்ல நாட்டைப் பரங்கியர் ஆள அனுமதிப்பதா? பாரத தேசமென்று பெயர் சொன்னால் போதாதா? மேலைக் கடலிலே ஏன் நமது கப்பல்கள் செல்லவில்லை? திரை கடலெங்கும் நமது தேக்கங்கப்பல்கள் சென்றது கனவா? மன்னும் இமய மலை எங்கள் நாட்டில்தான் இருக்கிறது. ஏன் நாம் அடிமையாக இருக்கிறோம். தாயின் மணிக்கொடியைப் பாரீர். அதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர். அன்னியனை அகற்றுவோம்" என்றார்.

"இவ்வளவு சொன்னேனே! இன்னும் ஒருவரும் வரவில்லையே. இந்த மனிதரை நினைத்துவிட்டால் நெஞ்சு பொறுக்குதில்லையே. நிலைகெட்ட மனிதர்களாக இருக்கிறார்களே. உறுதி இல்லையே. உரம் இல்லையே. கொள்கை இல்லையே. கோட்பாடு இல்லையே. கொதித்து எழவேண்டாமா! கொடுமை செய்யும் அன்னியரைக் குமைத்தெறிய. வலிமையற்ற தோள்போய், வலிவு பெற்ற தோளுடன், ஒளிபடைத்த கண்ணுடன், உறுதிகொண்ட நெஞ்சத்துடன் ஓராயிரம் மறக்குல வீரர்களே! ஓடி வாருங்கள்! ஓடி வாருங்கள்! ஓட்டுவோம் அன்னியனை! நாட்டுவோம் சுதந்திரத்தை! பாரத சமுதாயம் வாழவேண்டும். வருகின்ற சுதந்திரம் அவர்களுக்கு வாழ்வளிக்கவேண்டும். வந்த சுதந்திரம் தொல்லை தரக்கூடாது" என்று பலவாறு இதயம் நொந்து வீர சுதந்திரத்தையே வேண்டி நின்றார். வீர சுதந்திரத்தை வேண்டி நின்ற பல தலைவர்களையும் பாராட்டிப்

போற்றி ஆக்கமும், ஊக்கமும் தந்தார். அவர் 'காவியம் செய்யவில்லை' என்று சில பண்டித சிகாமணிகள் முணு முணுப்பார்கள். நாடே அன்னியனுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறது. மக்கள் மாற்றான் மோகத்தில் மூழ்கியிருக் கிறார்கள். அப்போது அந்த உண்மைக் கவிஞர் காவியத் திலே, காதல் கட்டத்தையா தீட்டிக்கொண்டு இருக்க முடியும்!

வேகத்தை மூட்டினார். சுதந்திர தாகத்தைத் தீர்க்க "அச்சமில்லை அச்சமில்லை" என்ற வீரப் பாட்டைத் தந் தார். "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்" என்று ஏங்கினார். "இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறைப் பட்டாலும், கோடி இன்னல் விளைந்தெனை அழித்திட்டாலும் சுதந்திரதேவி உன்னை மறப்பேனா" என்று தொழுதார். அழுதார். வீட்டை மறந்து நாட்டையே எண்ணித் துடித் தார். மனைவியும், மக்களும் வறுமையால் வாடினார்கள். மக்கள் கவி, உண்மைக் கவி, நாட்டை நினைத் தான். தன்னையும், தன் சுற்றத்தையும் மறந்தான். பாரதி நினைத்திருந்தால் பாமாலைகள் பல சூட்டி, அந்தக் கால மன்னர்களை வாழ்த்திப் பரங்கித் துரைமார்களுக்குப் பரணியும், சிந்துவும் பாடி, மாடி வீட்டிலே மணியும், அணி யும் கொண்டு வாழ்ந்திருக்க முடியும்.

"நான் வாழ வேண்டும். வட்டியிலேதான் பிழைக் கிறேன். பாங்கில் பணம் வேண்டும். பணமுடிப்புக்கு ஏற் பாடு செய்ய முடியுமா? அப்படி யாராவது ஏற்பாடு செய்து இராப் பகலாக உழைத்தாலும், பணம் தந்தாலும், வாங்கிக் கொண்டு, பாவிப் பயல்கள் பணம் எனக்குத்தான் வந்தது. இதிலே கூட சுருட்டிவிட்டார்கள்" என்று கூறும் பல கவிஞர்கள் இந்தக் காலத்திலே இருக்கிறார்கள், பாரதி பணத்தை எண்ணவில்லை. புதுமையிலே இருந்தும் புரட்சி செய்தார்.

இவர் ஒருநாள் சென்னையிலே, ஒருவரைச் சந்திக்கச் சென்றார். தேச விடுதலையில் ஈடுபட்ட எத்தனையோ பெரிய வர்களைச் சந்தித்திருக்கிறார் பாரதியார். அன்று சென்ற பாரதி, எதிர்காலத்தைக் கண்ட பாரதி, தலையிலே தலைப்

பாகை, முகத்திலே முறுக்கிவிட்ட மீசை, விடுதலைக்கனல் ஏறிய விழிகள், அறிவு சொட்டும் முகம், திறந்த கோட்டு உடம்பிலே. நிமிர்ந்த நடை. வெளியூரிலிருந்து வந்திருப்பவர் மோகனதாஸ் கரம்சந்த் காந்தி. அறிமுகப்படுத்தினார்கள். காந்தியை மேலும் கீழும் இறங்கப் பார்த்தார் கவியரசர். உடனே காந்தியை அளந்தார்.

எம்மான் காந்தி! நீ வாழ்க! வையத்து நாட்டில் எல்லாம், தாழ்வும், வறுமையும் எங்கு தெரியுமா? விடுதலை நெறி எங்கு கெட்டுவிட்டது தெரியுமா? இடிக்கும் வெம் புயலுக்கும் இடர்படாத கொடிய விலங்கு, எந்த நாட்டு மக்களுக்குப் பூட்டப்பட்டுள்ளது தெரியுமா! காந்தி! உனக்குத் தெரியாதா! பாரத தேசம். இதை வாழ்விக்க வந்தவன்! "நீ மகாத்மா" (எவரும் காந்தியை அதுவரை மகாத்மா என்று அழைக்கவில்லை. காலத்தைக் கடந்த கவிக்குயில் கவியரசர், கன்னித்தமிழ் பாரதியார், காந்தி மகானை "மகாத்மா" என்று முதல் முதலாக அழைத்தார்.) "உன்னால் இந்த நாடு விடுதலை அடைகிறது" என்று தீர்க்க தரிசனத்தோடு பாரதியார் பாடினார். நாமும் அதைப் பாடி மகிழ்வோம்.

வாழ்க நீ எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டு
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீ வாழ்க! வாழ்க!!

18

நரகவி பாடிடா வரகவி

இந்தக் காலத்திலும் சரி, அந்தக் காலத்திலும் சரி மனிதனைப் புகழ்ந்து பாடாமல், எல்லாம் வல்ல பரம்பொருளையே பாடிநின்ற கவிஞர்கள் வெகுசிலரே. மனிதனையே புகழ்ந்து பாடுவதை 'நரகவனம்' என்று அறிஞர்கள் கூறுவார்கள். நரனைப் பாடாமல் நாரணனைப் பாடவேண்டும் என்ற கொள்கை கொண்டிருந்தாலும், சந்தர்ப்பமும் சூழ்நிலையும், அவர்களை அதை மீறிய, கவிதைகளையும் பாடச் செய்தது என்றுகூறலாம். கவிஞர் வறுமையில் வாடி வதங்குகிறார். ஒரு பூமான் புலவருக்குப் பொன்னைத் தருகிறான். பெற்ற பொன்னுக்கு நன்றி கூறுமுகத்தான், அந்தப் பூமான் மீது "இந்திரனே, சந்திரனே, கொடுப்பதில் கர்ணனே, குமணனே" என்று பாடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகிறது.

இந்த நிர்ப்பந்தத்திற்குப் பெரும் கவிஞர்களும் ஆளாகி இருப்பதைக் காண்கிறோம். அதற்காக, பீடி விற்கின்ற பெருமானுக்கும், சோடா விற்கின்ற சீமானுக்கும் கவி பாடுவதில் அர்த்தமில்லை; இந்தக் காலத்தைப் போல அந்தக் காலத்திலேயும், புகழுகின்றபோது ஒரு வரம்பிலே நின்றுதான் பொருள்கொடுத்த பூமானைப் புகழ்ந்தார்கள். ஆனால் நரகவி பாடாமல் அந்தக் காலத்திலும் , இந்தக் காலத்திலும், விரல்விட்டு எண்ணக்கூடிய கவிஞர்கள் இருந்திருக்கிறார்கள். இது அவர்கள் மனோபலத்தையும், வீரத்தையும், தீரத்தையும், நெஞ்சு உறுதியையும் காட்டுகிறது. ஆழ்வார்களைப் போலவும், நாயன்மார்களைப் போலவும் அவர்கள் கொண்ட பக்தியையும் ஞானத்தையும் காட்டுகின்றன.

தென்பாண்டிநாட்டின் தலைநகரம் மதுரை. அங்கயற்கண்ணி அம்மை ஆட்சிபுரியும் நாற்சதுர, நான் மாடக் கூடல் நகரம். சங்கம் வைத்து, மொழி வளர்த்த நகரம். சிற்பமும், கலையும், தமிழ்மொழியின் பண்

டைய பெருமையும், இன்றைய பெருமையும் எடுத்துக் காட்டுகின்ற பழைய நகரம். ஆலவாய் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் வீற்றிருக்கும் செந்தமிழ் நகரம். இந்த மதுரை மாநகரத்திற்கு மேற்கே, அறுபது கல்லில் மேற்குத் தொடர்ச்சி மலை உள்ளது. இயற்கை அன்னை மேற்குத் தொடர்ச்சி மலையின் சரிவை எழில்கொழிக்கச் செய்கிறாள். இங்குதான் கம்பம் பள்ளத்தாக்கு அமைந்துள்ளது. இந்தப் பகுதியிலேதான் சுரபியும், பெரியாறும் உற்பத்தி ஆகின்றன.

ஏலமும், சோளமும், நெல்லும், புல்லும், பச்சையும், மொச்சையும், தேக்கும், பாக்கும், வாழையும், தாழையும் அன்னை அள்ளித்தரும் இயற்கை வளங்கள்.

இந்தப் பகுதியிலே அனுமந்தநகரம் என்ற சிற்றூர் அமைந்துள்ளது. ஆங்கே பரம்பரை பரம்பரையாகத் தமிழ் வளர்க்கும், பாவலர் குடியிலே, தமிழ்நாட்டின் வடஎல்லையாம் திருமலையிலே, ஆனந்தமயமாகி, அருள்வாரி, உருவாகி, அகிலாண்டகோடியாகி, அனவரத கல்யாண குணகண சொரூபமாகி, அருள்மறையின் முடிவுமாகி, அளவிடற்கரிதான லீலா விநோதமாய், அகார சின்மயமாகி, வாக்கு, மனத்திற் கெட்டாததாய், மரகத சியாமளாகார சுரசேவிதாகாசரூபனாய், திவ்வியபரிமளகந்த மந்தார நவரத்ன திண்புயாசல நாயகனாய், நிற்கின்ற பெருமானுடைய அருளினால் ஸ்ரீநிவாசன், மதுரகவி சுந்தரராஜ ஐயங்காருக்கும் அரங்க நாயகிக்கும் மகவாய்ப் பிறந்தான்.

இந்தக் குடும்பம் இயற்கையிலேயே வைத்தியம், சோதிடம், தமிழ் இந்த மூன்றிலும் அபாரமான பாண்டித்தியம் பெற்றது. இவர்கள் பரம்பரையாய் இந்த மூன்று கலைகளையும் உயிரேபோல போற்றி வந்தார்கள். சுந்தரராஜ அய்யங்காரின் தந்தையும் மிகப்பெரிய கவி. அவர் கவிதைகள் இன்று கிடைக்கவில்லை. சுந்தரராஜ அய்யங்கார் இயற்றிய பல கவிதைகள் போனாலும், சில கிடைத்து அச்சு ஏறி இன்று கிடைக்கின்றன.

“மருவுலவு சோலை கதிர் வாம்பரிவிடாய் தணியவளரு அனுமந்தநகர் வாழ், மந்தியர் வேதியர் சிகாமணி சகல

சாஸ்திர திடமதுரநய வசனப்பிரபு, தருவுலவு கரனெங்கள் அழகர் மாமுகிலீன்ற சற்புத்திர வித்வ சரபஞ்சரதகுண புனித சுந்தரராஜ ஜெய முத்தமிழ்ச் சக்ரவர்த்தி தானே'' என இவர் பெருமையைப்பழநி மாம்பழக் கவிச்சிங்கம் அவர்களின் பாராட்டுப் பாவால் அறிகிறோம். இந்தச்சுந்தரராஜன் ஈன்ற செல்வம்தான் ஸ்ரீநிவாசன்.

எம்பெருமான் அருளால் கவிவாணி ஸ்ரீநிவாசன் திருநாவிலே இன்பத்திருநடம்புரிந்தாள். கவி மழை கொட்டியது. கேட்டோர் திடுக்கிட்டனர். புலவர்களும், பண்டிதர்களும் அதிசயத்தில் மூழ்கினர். பையன் ஸ்ரீநிவாசன் நாழிகைக் கணக்கிலே பதிகங்களைப் பாடினான். குலம் தெய்வம் அஞ்சிலே ஒன்றுபெற்ற அனுமன். வடமொழியும், தென்மொழியும் முற்றும் தேர்ந்தான். அனுபவத்தால் வாக்குப் பழுத்தது. வைத்தியத்திலே இரசமும், இலிங்கமும் கட்ட முடிந்தது. காலையும் மாலையும் பெட்டி வண்டிகள் வீட்டுமுன் நின்றன, வைத்தியத்திற்காக. சோதிடத்திலே சொன்ன பலன்கள் பலித்தன.

ஆள் ஆறடிஉயரம்; அதற்கேற்ற உடற்கட்டு; மாநிறம் மாறுகண். நாவலரும், பாவலரும் கூடிய சபையிலே ஸ்ரீநிவாசன் புலமை ஒப்புக்கொள்ளப்பெற்றது. "கவிதை உயர்ந்தது'' என்று கவிவாணர்கள் போற்றினர்கள். "தலமேவும் தமிழ்த் தலைமைச் சடகோபராமானுசாரியார், மெய்வலமேவும் புதுவை இராமானுஜ நாவலர் சுதர்மானென்றேத்துங், குலமேவும் துரைசாமி மூப்பனர் முதற், பெரிய குழுவினல் தக்க மதிப்புடன் மதுரகவி எனப் பெயர்கொடுக்க ஸ்ரீநிவாசன் பதினறு வயதிலே மதுரகவி ஸ்ரீநிவாசன் எனப் போற்றப் பெற்றான்.

மதுரகவி ஸ்ரீநிவாச அய்யங்கார் குடும்பமே கன்னித் தமிழுக்கும், தண்டமிழ் நாட்டிற்கும் செய்தசேவை அளவிட்டுச் சொல்லமுடியாது. தந்தை ஒரு பெரிய மதுரகவி. தாத்தா ஆசுகவி. பெண்கொடுத்த மாமன் திருவேங்கட தலபுராண மியற்றிய மதுரகவி வீரராகவ விற்பன்னர். அவரின் மைத்துனி கம்பனைக் கரைகண்ட கவி ஔவை போன்ற சின்னம்மாள். தேச விடுதலைப் போராட்டத்திற்குத் தம்பியாம்

கவிச்சிங்கம் கிருஷ்ண சுவாமியைத் தந்த மதுரகவி. ஆன்மீ கத்திற்கோ அருமை மருமகனை, ஸ்ரீ விலட்சணரைத் தந்த வித்தகக் கவி.

ஆழ்வார்கள்போல, அனவரதமும் நாரணனையே பாடிய நாவலர் மதுரகவி. அவர் பாடிய ஆயிரக்கணக்கான கவிதை கள், தமிழன்னைக்கு அணிசெய்வதாக இருக்கின்றன. அனு மனையும், ஆண்டாளையும், அரங்கனையும், அலமேலுமங்கை நாதனையும் பாடிய பாடல்கள் பல பல ஆயிரம். இராமாய ணத்தை எத்தனை வகை யாப்புகள் உண்டோ அத்தனை வகையிலும் பாடியிருப்பது ஆச்சரியத்திலும் ஆச்சரியம். இராமாயணத்தை வெண்பாவிலே பாடியுள்ளது, தமிழுக்கு ஒரு அரிய பணியாகும். இந்த அரிய இலக்கியம் "மதுரகவி இராமாயண வெண்பா" தமிழர் மத்தியிலே உலவவேண்டும். மதுரகவி இயற்றிய பல நூல்களை அச்சிட்டு வெளியிட்ட பெருமை அம்பத்தூர் அறநெறி அரங்கத்திற்குரியதாகும்.

உயர்வும், சிறப்பும் உடையது வேங்கடம். விண்ண வரும், மண்ணவரும் போற்றும் தெய்வம் திருமலை வாழ் வேங்கடநாதன். எத்தனையோ பதிகங்களைப் பாடிய மதுரகவி ஏழுமலைநாதனைப் பற்றி "ஸ்ரீ வேங்கடேசன் சந்திரகலா மாலை" என்ற ஒரு அரிய பதிகத்தைச் செய்துள்ளார். இப் பதிகம் பதினறு பாக்களால் அமையப்பெற்றுள்ளது, திரு மலை நாதனையும், அத்தலத்தையும், பெருமையாகவும், அழ காகவும் வர்ணிக்கின்றது. திருமலைநாதனை நினைத்த மாத் திரத்திலே கவிஞர் தன்னை மறந்து ஒரு ஆவேசத்தில் நிற் கிருர். வரம் வேண்டுகிருர். என்ன வரம்? "நரகவி பாடாமல் நாரணு! உன்னையே பாடும் வரகவியாய் என்னை ஆக்கு வாய். அழியும் செல்வத்திற்காக, அற்ப மானிடனைப்போய் நான் புகழ்ந்து பாடவா, உனது கருணை விழி, என் பக்கம் திரும்பினல், என் வீட்டிலே பொன்மழை கொட்டாதா! கொட்டும். அதற்குச் சான்று கூறுகிருர் கவிஞர்! ஆண்ட வனே, நீ கண்ணனுக வந்தாய். உனது தோழன் குசேலன் வறுமையில் வாடித் தவித்தான். அன்பால் அவலைக் கொண்டுவந்து (நண்பனுகிய) உனக்குத் தந்தான். திரி காலமும் உணர்ந்த நீ! அன்பினல் நண்பன் தந்த அவலை ஆவலோடு உண்ண, அதே சமயம் அவன் வீட்டிலோ

எண்ணரிய செல்வமாம், பொன்னும், மணியும், பொருளும் குவிய அருள்புரிந்த இறைவன் அல்லவா நீ! உன்னை எண்ணி வணங்கினால் என் வறுமை நிற்குமா? வளமை ஏற்படாதோ! இதை விட்டு உனது வாய்தனில் உமிழ்ந்திடும், சகத்தில் சதகோடி மூலையில், ஊசி அளவு இந்த மண்ணை ஆளும் ஒரு மனிதனை, என் வறுமை போக்க இந்த மண்ணுக்கு நீ ராசா, நீ சர்வ பூமான் என மதுரகவி பாடவா? நான் பாடலாமா? அந்த மனிதன் வீட்டு வாசலைக் காக்கும் காவலன் போல வாழலாமா? கூடாது! கூடாது! மழை மருவு நீலமுகிலே! அன்புருவமாகி வளர் தெய்வமே! பவ ரகிதமே! ஆதியே! சோதியுருவே! நான் உன்னையே மதுரகவி பாடி வாழ்வேன்" என்று வீராவேசத்தோடு வேங்கடனைப் பாடுகிறார் நரகவி பாடா வரகவி.

என் புடல மாகவந் திட்டபா சவன்மிசைந்
தெண்ணரிய செல்வ மெல்லாம்
எய்திடக் குசேலனுக் கருள்புரிய மிறைவனென்
றெண்ணகில் லாம லுனது
தன்பெருமை தனையெடுத் தோதாம
லுனதுவாய்
தனிலுமிழ்ந் திடு சகத்தில்
சதகோடி யொருமூலை தனிலூசி யளவுமண்
டனையாளு மொரு மனிதனை
மன்புவன ராசேந்த்ர சார்வபூ மாவென்ன
மதுரகவி பாடி யவர்தம்
வார்சற் படிக்காவ லாகியான் வாழ்வனோ
மழைமருவு நீல முகிலே
அன்புருவ மாகிவளர் தெய்வமே பவரகிதமே
வாதியஞ் சோதி யுருவே
அமலப்ர வாகவள மருவச் சுரேசர்புக
ழரவச் சிலாவா சனே!

19

செல்வக் குப்பை

உலக வாழ்க்கையில் உயர்ந்தது எது? சிலர் தவம் என்பர். சிலர் செல்வம் என்று செப்புவர். மற்றும் பலர் மாடு, மனை, மக்கள், சுற்றம் என்று மதிப்பிடுவர். உலக வாழ்க்கை இயங்க நிச்சயமாகச் செல்வம் வேண்டும். செல்வம் என்றால் வெறும் பொருட் செல்வம் மட்டும் போதுமா? பாலைவனத்திலே போய்ச் சிக்கிக் கொண்டவனுக்குத் தண்ணீர் வேண்டுமா? செடிப் பவுன் வேண்டுமா? அருட் செல்வமும் அமைந்திருக்கமேண்டும். திருக்களெல்லாம் சேர்ந்திருந்தாலே, வாழ்க்கையும் திருவுடையதாக இருக்கும். செல்வம் சேர்க்கவேண்டியதுதான். பொருள் ஈட்ட வேண்டியதுதான். "திரைகடல் ஓடியும் திரவியம் திரட்டவேண்டியதுதான். ஆடியும், ஓடியும், நாடியும், பாடியும் பொருளைக் குவிக்கவேண்டியது தான். அந்தச் செல்வத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும்?"

"உழைத்து உழைத்து ஈட்டினேன். வயிறார உண்ணாது வட்டிக்குத் தந்து வாங்கினேன். ஒவ்வொரு காசையும் எண்ணிச் சேர்த்தேன். நடந்து நடந்து எனது மதிப்பையும், கௌரத்தையும் இழந்து, பொருளை ஈட்டினேன். அதைப் பூட்டித்தான் பார்ப்பேன். பிறருக்கு நான் ஏன் தரவேண்டும்?" என்றெல்லாம் கூறுவது சீலமுடையதாகுமா? கண் மூடினால் அந்தக் கட்டித் தங்கத்தின் கதியென்ன? அப்பொருளை யாரே அனுபவிப்பார்? கொடுத்த தர்மத்தையோ, வாங்கிய அறத்தையோ மறக்காத நாடு இது! அப்படியானால் அப்பொருளை நாம் எப்படி மதிக்கவேண்டும்?

யோகி சுத்தானந்த பாரதியார் எத்தனையோ நூல்களை எழுதியுள்ளார். அவர் எழுதிய பல நூறு, பல் துறை நூல்களும் பைந்தமிழுக்குப் பல வகையிலும் அணியும், பணியும் புரிந்திருக்கின்றன. நூல் முகமாக அவரை அறிந்தோர் பலர். நேரில் அறிந்தோர் சிலர். நூல் முகத்தான் அறிந்த

வர்களுக்கு ஒரே ஆச்சரியம், அவரின் அதிசயப் படைப்புகளைக் கண்டு. நேரில் பழகியவர்களுக்கு அவருடைய சாதனையின் இரகசியங்கள் நன்கு தெரியும். ஆசிரியர் வேலை பார்த்த அவர், இளவயதிலேயே துறவு பூண்டார். நாடெங்கும் யோக ரகசியங்களைத் தேடி அலைந்தார். இரமணாஸ்ரமத்தில் கொஞ்சகாலம் தங்கிய பிறகு, அரவிந்தாசிரமத்திற்குச்சென்று புதுவையிலே தங்கினார். அப்போதுமௌனம் பூண்டு அன்னை, அரவிந்தர் இருவரும் அளித்த பேராதரவில், தமிழன்னைக்கு நூல்களை எழுதி எழுதிக் குவித்தார். அந்த நூல்கள் எல்லாவற்றையும் தமிழ் மக்கள் போற்றினார்கள்.

சுமார் பத்தாண்டு காலம் எங்கு திரும்பினாலும் சுத்தானந்தர் நூல்கள். இன்று ஏனோ அவை தமிழ் மக்களை விட்டுப் பிரிந்துவிட்டன. இது காலத்தின் கோலம் போலும்! சுத்தானந்தர் எழுதிய அத்தனையிலும் சிறந்தாக அவரே கூறுவது "பாரத சக்தியும்" அதனுள் அமைந்த "யோக சித்தியும்." அரவிந்தாசிரமத்தை விட்டு வெளியேறியவுடன் சுத்தானந்தரின் மௌனமும் கலைந்தது. மேற்கு ஆசியா, ஜப்பான் முதலிய நாடுகளில் பிரயாணம் செய்து, அத்யாத்ம ஞானத்தைப் பரப்பி வந்து, வள்ளலார் வாழ்ந்த வடலூரிலே தங்கி யோக சமாஜம் நாட்டினார்.

அதே சமயம் சென்னையிலும் யோகியே யோகசமாஜத்தை ஒரு அன்பரின் வாடகை வீட்டு மாடியில் நாட்டினார். அந்த அன்பர்கள் இரவு பகலாக உழைக்க 'யோக சமாஜம்' ஓங்கிநின்றது. பிறகு யோகியார் ருஷ்யாவுக்கும் ஐரோப்பாவுக்கும் சென்று வந்தார். யோக சமாஜ அன்பர்கள் அதி தீவிரமாக முயன்று கவியோகிக்கு இராஜாஜி மண்டபத்திலே மணிவிழாக் கொண்டாடினார்கள். மணி விழாவின் போது ஒரு மலரும், பொற்கிழியும், அடையாறுக்கு அருகிலே ஒன்றரை ஏக்கர் நிலமும் 'பொது மக்கள் சார்பிலே யோகசமாஜ' அன்பர்கள் வழங்கினார்கள். அந்த இடத்திலே பொற்கிழியைக் கொண்டு தியான மண்டபம் கட்டி யோக சமாஜத்தில் யோகி வாழ்ந்து வருகிறார்.

யோக சமாஜத்தின் மூலம் யோக சாதனங்களையும், ஞான ரகஸ்யங்களையும், அரிய சக்தியையும் அன்பர்

களுக்கு வழங்கிக்கொண்டு, சேவை செய்து வருகிருர், கவியோகி. நம் காலத்தில் வாழும் பரமயோகி ; குழந்தை உள்ளம் கொண்டவர். அவரை நன்கு அறிந்தவர்கள் பயன் பெறுகிருர்கள். ஒரு புதிய யோக வழியை இந்த உலகத்திற்குக் காட்டுகிருர். எளியவாழ்கையும், இனிமை யும் கொண்ட, இவர் காட்டும் பாதை இணையில்லாத பாதை. தன்னிடமுள்ள சக்தியைக் கொடுக்க தக்க நபரை தேடிக்கொண்டிருக்கிருர் பலகாலமாக. இந்த அடிப்படை யில்தான் பாரத சக்தி மகா காவியத்தை அமைத்துள்ளார். இந்தக் காவியம் கன்னித் தமிழுக்கு ஒரு அரிய பொக்கிஷ மாகும்.

இந்தக் காவியம் நான்குமுறை ஆசிரியரால் நகாசு செய்யப்பெற்றது. புலவர்களும், அறிஞர்களும் இதைப் பல வாருகப் போற்றினுர்கள். பதினுயிரம் பாடல்கள் கொண் டது பாரத சக்தி மகா காவியம். சித்தி, கௌரி, சாதன, தானவ, சுத்த சக்தி என முறையே ஐந்துகாண்டங்களைக் கொண்டது. கவிக்குக் கவி ஒரு புதுமையும், காட்சிக்குக் காட்சி, ஒரு மாட்சியும் கொண்ட இக்காவியம், காவிரி முக் கொம்பில் உதயசூரியன் முன் எழுந்தது. இனிய, எளிய, தெளிந்த நடையும், தெய்வ மணமும் கமழும் ஒரு கற்பகச் சோலை. தன் அனுபவத்தோடு ஆசிரியர், சமுதாயத்தின் வரலாற்றை வரைகிருர்.

ஒருகுலமாய் உலகம் வாழவேண்டும். அச்சம், அடிமை, வறுமை, ஒழிந்து எல்லோரும் சுத்த, சுதந்திரர்களாய் வாழ வேண்டும். வேறுபாடுகளும், மாறுபாடுகளும், தாறுமாறு களும் மாயவேண்டும். ஆன்மீகக் கொடுமைகள் ஒழிய வேண்டும்.

"நான் குரு. என்னிடம் வா. சேர்த்துவைத்திருக்கும் மகத்தான சக்தியைக் கொட்டுகிறேன். மூன்று நாளில் மகத்தான சக்தியைக் கொட்டுகிறேன். மேலிருந்து கொட் டும். நீ பிடித்துக்கொள்! ஏழைக்குக் கொஞ்சமாய் கொட் டும். காரில் வரும் கன தனவான்களுக்கு கோடை மழை போல கொட்டும்" என்ற வாய்ப்பந்தல் பேச்சுக்களும், மோசங்களும் ஒழியவேண்டும். ஆண்டவனுடைய மகத்தான

சக்தியைத்தர இடையிலே தரகனு ! அவனவன் செய்த கருமத்தை அவனவனே அனுபவிக்கவேண்டும். ஒருவன் மட்டும் ஈசுவர சக்தியால் நடத்தப்படவில்லை. அவனை அண்டிய, அண்டசராசரங்களும் அவனுல் நடத்தப்படுகின்றன. காரியம் ஆகும்வரை தூக்கிவைத்துக்கொண்டு, பிறகு தூக்கி எறியும் கருவேப்பிலைக் கொள்கைகள் சமுதாயத்தில் எல்லாத் துறையிலும் பூண்டோடு மாளவேண்டும். இதற்கு வழியென்ன?

சமுதாயத்திலே மாற்றம் தேவை. செல்வத்தின் பயன் என்ன? பூட்டி வைப்பதா? செல்வத்தைப் பூட்டினுலும் பரவாயில்லை. காற்றையும், நீரையும், ககனவெளியையும் பூட்டிவைக்கிருர்கள் பாவிகள்; சாலைகளிலே தண்ணீர்ப்பந்தல் வைத்து தாகம்தீர்த்த தமிழ்நாட்டில். நீருக்கும், காற்றுக்கும் தடையா! வேலியா! மூடியா! இப்படிச் செய்யலாமா? மனம் சுரக்காதவர்கள்,பிறரின் சுரபி சுரக்கவில்லை என்று கூறலாமா? மனம் திருந்தவேண்டும்; இனம் திருந்தி சமுதாயம் வாழவேண்டும். சிக்கல்களிலிருந்து சமுதாயம் விடுபட, கவியோகி ஒரு புண்ணிய பூமியைப் படைக்கிருர். அந்தப் புண்ணிய பூமி எப்படி இருக்கிறது. அதில் எத்தகைய மக்கள் வாழ்கிருர்கள் என்பதைப் படம்பிடித்துக் காட்டுகிருர். இன்றைய சமுதாயநிலைக்கும், அதற்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. ஆனுல் அத்த அதிமனிதர் வாழும் சமுதாயம் உலகில் வரவேண்டுமென்று கவிஞர் கனவு காண்கிருர். அந்தப் புதுயுகம் வந்தால் மக்கள் வாழ்வு மேலோங்கி நிற்கும்.

'பாரதசக்தி மகாகாவியத்தில் முதலாவதாகிய சித்தி காண்டத்தில், நான்காவதாக 'புண்ணிய பூமிப் படலத்தை' அமைக்கிருர் கவிஞர். அந்தப் புண்ணியபூமியிலே இயற்கையன்னை இன்பத்திருநடம் புரிகிருள். மலைகளில் எல்லாம் முனிவர்கள் கூட்டம் கூட்டமாக தவம் புரிகிருர்கள். ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. பார்க்குமிடமெங்கும் பசும்புற்றரையும், நீண்ட உயர்ந்த மரங்களும், மானும், மயிலும் ஆடும் சோலைகளும் காட்சி தருகின்றன. இந்த இயற்கை எழிலிலேதான் கல்வி பயிலக் குருகுலங்கள் அமைந்துள்ளன. அலைபாயும் ஆழ்கடலை நோக்கினுல், கைத்தொழில் பொருள்

களைக் கொண்டு வங்கம் சென்றது. தங்கம் வந்தது. கப்பல் களின் ஓட்டத்தைப்பாராய்! எங்கேதிரும்பினுலும் இயற்கை யன்னை எழில்பூத்து நிற்கின்ருள். மாதம் மும்மாரி பெய்து மண், பொன்னை விளைவிக்கிறது. நம்மாழ்வார் கண்ட இயற் கைக் காட்சியைக் கனவு காண்கிருர் நம் கவிஞர்

"கரையெல்லாம் செல்வக் குப்பை" என்று கூறுகிருர் புலவர். அந்தநாட்டு மக்கள் செல்வத்தை குப்பைபோல மதிக்கிருர்களா? அல்லது குப்பையை நாம் தெருவிலே அலட்சியமாக கொட்டியிருக்கிருேமே, அதுபோல கொட்டி யிருக்கிருர்கள் என்பது பொருளா? இப்படி அவர்கள் பொருளைத் துச்சமாக நினைக்கக் காரணம்? அந்த நாட்டிலே அன்னை எல்லா வளங்களையும், நலங்களையும் வாரி வழங் கினுள். கனியும், காயும் மலரும், பூவும், செடியும், கொடி யும்செழித்துக் கொழித்து, தரையெல்லாம் அமுதவெள்ளம். இல்லை என்போர் இல்லை. கவிஞர் செல்வத்தைக்குப்பைபோல மதிக்கிருர். ஏழைக்கும், நொந்தவனுக்கும் வாரி வழங்கு கிருர். தான் காணுத இன்பத்தைச் சொல்பவர் உண்மைக் கவிஞர் இல்லை. தவச் செல்வம், கல்விச் செல்வம், வாணி பச் செல்வம், இயற்கைச் செல்வம்; தொழிற் செல்வம் ஆகிய பல செல்வங்களும் கவியோகி கண்ட புண்ணிய பூமியிலே பொங்கி வழிகின்றன. அங்கே மனிதன் அதி மனிதனுக வாழ்கிருன். அந்த அரிய புண்ணிய பூமியைக் காண, நாமும் சற்று பரந்த விரிந்த, உள்ளத்தோடு முயல் வோமாக.

"வரையெலாம் முனிவர் கூட்டம்
வனமெலாங் குருகுலங்கள்
திரையெலாம் கப்ப லோட்டம்
திசையெலாம் திருவின் காட்சி
கரையெலாம் செல்வக் குப்பை
கவின்மலர் கனிகுலுங்குந்
தரையெலாம் அமுத வாரி
தழைத்துயிர் வளர்க்கு நாடே!"

20

மெய்த் தவம்

தவம் என்பது என்ன ? தவத்தை துறவு என்று கூற லாமா ? துறவு என்ருல், எல்லாப் பந்தங்களேயும், சொந் தங்களேயும் விட்டு விலகிச் செல்வது என்று பொருளா குமா ? அப்படித் துறந்தவர்களின், இலட்சணங்கள் என்ன? எப்படி இருந்தால் 'மெய்த் தவம் என்று பேசலாம் ? இது மிகவும் சிக்கலான பிரச்னேதான். ஆனுல் இந்தச் சிக்க லுக்கும், எந்தச் சிக்கலுக்கும் பதில், உலக நூலில் இருக் கிறது. உலக நூலேத் தந்தவர் உலகம் புகழும் திருவள்ளு வர். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வ நிலே பெறும் வழியைத் துலக்கியவர் பொய்யா மொழிப் புலவர். அவர் இயற்றிய நூலின் பெருமையையும், அருமையை யும் அளவிட்டு சொல்ல முடியாது !

தமிழர் பெற்ற செல்வத்துட் செல்வம் "திருக்குறள்." உலகெலாம் ஓதி உணரும் பொது மறை. தமிழ் மறையை மொழி பெயர்க்காத மொழிகள் உலகில் இல்லே என்றே கூறலாம். ஒப்பில்லாத இலக்கியமணி. "வள்ளுவனே உலகினுக்குத் தந்து வான் புகழ் கொண்டது தமிழ்நாடு." உலக மக்கள் அனேவருக்கும் எக்காலத்திற்கும், மாறுபடாத அரும் பெரும் நீதிகளே எடுத்தோதும் பொதுமறை இல்லற ஞானி பொய்யா மொழிப் புலவன் புகன்றது ! தூய்மை யான இல்லறத்தை, வாசுகி நல்லாளோடு நடத்தி வாழ்க் கையின் ஒவ்வொரு கோணங்களிலும் நின்று, அவை களின் தன்மையைக் கண்ட சிறந்த அனுபவ ஞானி வள் ளுவர்.

தான் காணுத எதையும் அவர் விளக்கவே இல்லே. எத்தனேயோ நூல்களே இந்தக் காலத்திலே பலர் செய் கிருர்கள். ஆனுல் வள்ளுவன் வையத்திற்குத் தந்தது ஒரே நூல், திருக்குறள். ஒன்று தந்தான் ! என்றும் நின்று நிலேக்க. இதன் பால் இல்லாதது ஒன்றும் இல்லே என்று கூறலாம். அத்தனே தெளிவு. அத்தனே விரிவு.

இரண்டடியிலே உலகம் வியக்கும் உன்னதக் கருத்துக்களை எடுத்துச் சொன்னான் தெய்வ வள்ளுவன். குறுகிய அடிகளைக் கொண்ட குறட்பாவிலே, "தாய் மொழிக்கு உயிர் போன்ற நூலை, பூதலம் போற்றுகின்ற நூலை, பொய்யகம் போக்கிப் புனிதமாக்கும் நூலை, ஒரு குலம், ஒரு நெறி, ஒரு பொருளுண்மையை, விரி நிலமெங்கணும் விளங்க வைத்த நூலை, அறிவின் எல்லையை அளந்து அமைந்த நூலை, தெள்ளிய தமிழ் மறையை, நிலமிசை நீடு வாழ வழி காட்டும் நூலை, அறநெறியைக் கூறும் அழகு நூலை" இழை நக்கி நூல் நெருடும் ஏழை வள்ளுவன், உலகம் உள்ளளவும் நின்று நிலைக்கும் நீதி நூலைத் தந்தான்.

மாசற்ற வாழ்க்கை நடத்திய மாதானுபங்கி உலக மகாகவி! அவருடைய கருத்துக்கள் உலக மக்களைக் கவரும் உயர்ந்த கருத்துக்கள்! செந்நாப்போதாரின் சிந்தனைகள் திட்பமும், நுட்பமும் கொண்டவைகள். தமிழன்னை பெற்ற தவப்புதல்வன் வாழ்ந்த காலம் இரண்டாம் நூற்றாண்டு என்று கூறலாம். முதற் பாவலர் மயிலை வாழ் மாமுனியாகத் திகழ்ந்தார். ஊழி பல செல்லினும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்த இல்லற ஞானி செப்பிய செம்மொழிகள், இன்று செப்பியதுபோல, புதுமையுடன் பொலிவுற்று, பழமையின் பண்போடு ஒளி வீசி உலகின் முன் நிற்கின்றது! நவில்பவர் நெஞ்சத்திலே நவில, நவில, நயம் நல்கும், நான் முகனார் நவின்ற நூல்.

திருவள்ளுவர் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறள், ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங்குறட்பாக்களைக் கொண்டது. மனிதவாழ்க்கையிலே அடையத்தக்க எல்லா வளத்தையும், நலத்தையும், பலத்தையும், செம்மையுடன் செப்புகின்ற இந்தக் குறள் மணிகள். 'அறம்,' 'பொருள்' 'இன்பம்' என்ற முப்பாலில், தனக்குவமை இல்லா தனிப் பெரும் நூலை வள்ளுவ முனிவர் வரைந்தார். ஒரு அதிகாரத்திற்குப் பத்துக் குறள் வீதம், புலவர்க்கரசனான வள்ளுவன் குறுகத் தரித்த குறட்பாக்களைப் புனைந்துள்ளார். அறத்துப் பால் முன்னூற்று எண்பது குறள் மணிகள். பொருட்பால் எழுநூறு குறள் மணிகள், காமத்துப் பால் இருநூற்று ஐம்பது குறள் மணிகளைக் கொண்டது.

ஆதிபகவனுக்கு அஞ்சலி செய்து, ஆன்ற பெருமைத் தருகின்ற, அன்பின் வழியது உயிர் நிலையைக் காட்டு கின்ற, அன்போடு, இணைந்து "அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக் குறுக்கத் தறித்த" அமிழ்தினும் இனிய குறளை ஆரம்பிக்கிறார் முப்பால் இன்பம் காட்டும் முனிவர்.

குறளுக்கு அந்தக் காலத்திலே பத்து உரைகள் எழு தப்பெற்றதாக அறியக் கிடக்கிறது. கரையானுக்கும், காலத் திற்கும், கன்னித் தமிழுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு போலும்! எஞ்சிய உரை இரண்டே. மிஞ்சிய உரையில் சிறந்தது பரிமேலழகர் என்று அறிஞர் பகர்வர், இன்று பல கண்ணோட்டங்களிலே, பலவகைகளிலே திருக் குறளுக்கு, விளக்கவுரையும், சுருக்க உரைரும், தருக்க உரையும், பெருக்க உரையும், இன்னும் வந்து கொண்டே இருக்கின்றன.

வள்ளுவனை முழுதாக யாரும் இதுவரை காணவில்லை. நுண்ணியக் கருத்துக்களை, மிக நுணுக்கமாக நூலாசிரியர் நூலில் நுழைத்துள்ளார். இதனால் விளக்கங்கள் விரிந்து கொண்டே செல்லுகின்றன. தமிழனுக்குப் பெருமையே இது.

தவத்தைப் பற்றி இல்லற ஞானி இயம்புவது என்ன? "காவித் துணி கட்டுவது தவமா?" "இருபத்தி ஐந்து வரு டம் இருட்டறையில் மௌனமாக இருந்தேன். பேசவில்லை! மாய சித்துகள் செய்வேன், மனிதரை மயக்குவேன்! கல்லை உடைப்பேன், புல்லைத்தின்பேன்! மறைந்து வாழ்வேன். நீரில் நடப்பேன். நெருப்பில் உலாவுவேன். பூமிலே குழி வெட்டி என்னைப் புதைத்து, எட்டாம் நாள் தோண்டிப் பார்த் தால் திருமேனிக்கு அழிவில்லாமல் எழுந்திருப்பேன். காற்றை உண்பேன். நீரைக் குடிப்பேன். அன்னம் வேண் டேன். மஞ்சம் வேண்டேன். கண்ணாடித் தூளைத் தின் பேன். செம்பைச் செடிப் பவுனுக்குவேன். கரித்துண்டைக் கண்ணைப் பறிக்கும் வயிரமாக்குவேன்!" என்றெல்லாம் கூறுவது சாதனமாகுமா? தவமாகுமா? அப்படியானால் வள்ளுவன் வரையறுத்துக் கூறும் தவம் என்ன? திரு வள்வளுவர் காலத்திலும், அதற்கு முந்தியும், நம் நாட்டிலே

துறவு நிலையை மேற்கொண்டு தனியாகவும், மடங்களிலும் பெரும் மக்கள் தவம் செய்து வந்திருக்கிறார்கள்.

அப்படிபட்ட மக்கள் உலக வாழ்க்கையை விட்டுத் துறந்து சென்றார்கள். மக்களின் சாதாரண வாழ்க்கையிலிருந்து அவர்கள் மாறுபட்டார்கள். அவர்களுடைய வாழ்க்கை தூய்மை நிறைந்ததாகவும், வாய்மை நிறைந்ததாகவும், மக்களின் சாதாரண வாழ்க்கையிலிருந்து உயர்ந்ததாகவும் காணப்பெற்றது. மக்களை விட்டு அவர்கள் பிரிந்தாலும் மக்களுக்குச் சேவை செய்வதையே மாதவமாகக் கொண்டிருந்தார்கள். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலை தலையாய கொள்கையாகக் கொண்டு வாழ்ந்தார்கள்.

நொந்தவர்களுக்கும், கஷ்டத்திற்கும், நஷ்டத்திற்கும் உள்ளானவர்களுக்கும், ஏழைகளுக்கும், ஆறுதலும், அன்பும் காட்டினார்கள், தவம் செய்கின்ற மேலோர். மூக்கைப் பிடித்துக் கொண்டு, கண்ணை மூடிக் குகையிலே அடங்கிக் கிடக்காமல், தாங்கள் கண்ட இன்பத்தை, "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற கொள்கையோடு வாழ்ந்தார்கள் மெய்த் தவம் புரியும் மேலோர்கள்.

துறவு மார்க்கத்தை எல்லோரும் கைப்பிடிப்பது எளிதன்று. அதற்குத் தகுதி வேண்டும். நற்கருமங்கள் செய்ய வேண்டும். ஓட்டையும், பொன்னையும் ஒக்க நினைக்கும் மனம் வேண்டும். இதை மீறிய சிலர் சந்நியாச வாழ்க்கையில் ஈடுபடுவதால்தான் போலித் துறவுகள் புகுந்து தவ வாழ்க்கையைத் தவறு சொல்லுவதாக அமைந்துள்ளது. வந்த கஷ்டத்தைத் தைரியத்தோடு பொறுத்து, உணர்ச்சிகளை அடக்கி, பிற உயிர்களுக்கு (உறு கண்) துன்பம் செய்யாமல் வாழ்வது (அற்றே தவத்திற்கு) உரு, அவ்வளவுதான் தவத்தின் இலக்கணம் என்று கூறுகிறார், இல்லற மெஞ்ஞானி. "பிறர்க்கு உதவுதல்" என்ற கொள்கை இல்லாதவர்கள் தவம் செய்ய வரவேண்டா மென்கிறார் வள்ளுவர். தவம் என்பது எப்போதும் உயர்ந்த எண்ணங்களை எண்ணி எண்ணி மேலான சிந்தனையில் மூழ்கி நிற்பதேயாகும். இதற்கு வழியும், வகையும் வேறாக இருக்கலாம். ஆன்ம சக்திகளும், தவ வலிமையும், ஞானமும், மெய்த்

தவம் புரிகின்றவர்களுக்கு தானே வந்து கூடுகின்றன. வள்ளுவர் சொன்ன வழியிலே, துறவு மார்க்கத்தைக் கொள்ளாதவர்களுக்கு அந்தப் புண்ணியங்கள் வருவதில்லை போலும் !

" உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு "

21

சிந்தாமணியின் இசைமுறை

ஐம்பெருங் காவியங்களில் ஒன்று, ஜீவக சிந்தாமணி. வளையாபதியும், குண்டலகேசியும் காலக்கரையானுக்கு இறையாகியது போக, மிஞ்சி நிற்கும் மூன்றில் ஒன்ருக சிந்தாமணி துலங்குகிறது. சிந்தாமணி இக் காவியங்களில் காலத்தாற் பிற்பட்டதாயினும், பெருமை பேசி முடியா சொல்லழுகும், பொருளழகும், பிற அழகும் கொண்டதாய் கற்பவர் இதயம் களிக்கும் காப்பியமாய் விளங்குகிறது. சிந்தனைக்கமுதமாய்ச் சிந்தாமணி சிறக்கிறது. சமணசமயம் தமிழுக்குச் சூட்டிய காவியம் சிந்தாமணி.

ஜீவகன் கதையைச் (விருத்தப் பாவில் பொருத்தமாய் எழுத்தும், சொல்லும், பொருளும், அணியும், யாப்பும் துலங்க) சொல்லுகிறது. " கள்ளையும், தீயையும் சேர்த்து நல்ல காற்றையும், வான வெளியையும் சேர்த்துத் " தெள்ளு தமிழ்ப் புலவரான திருத்தக்க தேவர் தீஞ்சுவைக் காவியமாம் சிந்தாமணியைச் செய்தார். முதலில் இன்பச் சுவையும், முடிவில் துறவும், மோட்சமும் காவியத்தில் வருகின்றன. இது சமண தத்துவங்களை விளக்குகிறது ; அடிப்படையாக அறங்களைக் கொண்ட இக் காவிய நடை தனிச் சிறப்புடையது. இந்த நடையை எடுத்தாளத புலவர் இல்லை. கம்பன்கூட சிந்தாமணியிலிருந்து " ஒரு அகப்பை முகர்ந்தான் " இக் காவியத்தின் கதை வட

மொழியிலும் இருக்கிறது. இக்காவியம் 3154 செய்யுட்களைக் கொண்டது. இதிலும்கூட இடைச் செருகல்கள் உண்டு.

திருத்தக்க தேவர் 2700 செய்யுட்கள் செய்ததாக நச்சினார்க்கினியர் நவில்கிறார். இந்தக் காலத்தைப் போல தனது வரலாற்றை தனக்கு நேர்ந்த "சோதனை" என்ற நூலாக ஆசிரியர் தரவில்லை. தம்மை மறைத்துத் தமிழ் வளர்த்த பெரியார்களில் ஒருவராகவே திருத்தக்கதேவர் திகழ்கிறார். சமண சமயம் மதுரையை ஆண்ட காலத்தில் தேவர் வாழ்ந்திருக்கிறார். இவர் கி. பி. 900-க்கு முன் இருந்ததாகப் புலவர்களும், அறிஞர்களும் கருதுகின்றனர். இவர் சோழ குலத்தைச் சேர்ந்தவர். இரு மொழிப் புலவர். சமண சாத்திர விற்பன்னர். இளமையில் துறவு பூண்டவர். கடைச்சங்கப் புலவர்களோடு சேர்ந்து தமிழை வளர்த்தவர்.

சமணர்கள் பெரும்பாலும் நாலடியார் போன்ற நீதி நூல்களையே செய்தனர். இன்பச் சுவையை வெறுத்தனர். அகப் பொருளும், காதற் சுவையும் கனிந்த காவியம் செய்யும்படி தேவரைச் சிலர் வேண்டினர். தேவரும் தமது ஞானாசிரியரிடம் சென்று, காதற் சுவை கனிந்த காவியம் பாட உத்தரவு வேண்டினார். அப்போது ஒரு நரி எதிரே ஓடியது. "இந்த நரியை வைத்து நல்ல விருத்த நூல் செய்து காட்டு" எனப் பணித்தார் அவர்.

உடனே தேவர் "நரி விருத்தம்" என்னும் நூலைச் செய்தார். அதைக் கண்டு மகிழ்ந்து "இனி ஜீவகன் கதையைப் பெருங் காப்பியமாகக் காமச் சுவை பொருந்தப் பாடும்" என்று கட்டளையிட்டார் ஆசிரியர். இந்தக் காலத்திலே குருமார்கள் பொறாமை கொண்டு, சீடன் நன்றாகப் பாடினாலும், பேசினாலும், கவிதை, கிவிதை செய்யாதே. இதெல்லாம உன்னால் ஆகாது. இதில் ஏன் போய் மாட்டிக்கொள்கிறாய். நாங்கள், ஏதோ கருமம் இதில் மாட்டிக்கொணடு இருக்கிறோம். நூல் எழுதுவது, கவிதை செய்வது, பேசுவது எல்லோராலும் முடியாது" என்று மட்டம் தட்டி, சீடனின் உத்வேகத்தை ஒடுங்கிப் போகும்படி செய்கிறார்கள். ஆனால் திருத்தக்க தேவருக்

குத் தக்க குரு கிடைத்தார். அவர் சீடனின் உண்மைப் புலமையை ஒப்புக் கொண்டு ஊக்கமும், ஆக்கமும் தந்தார். அப்படி இல்லை என்றால் தமிழுக்கு ஒரு காவியம் குறைந்திருக்கும். "செம்பொன் வரை மேல்" என வரும் செய்யுளைப் பாடி அதையே முதற் செய்யுளாகக் கொண்டு நூலைத் தொடங்கச் சொன்னார். "மூவா முதலா வுலகம்" என்ற கவியைப் பாடினார் தேவர். இதன் நயத்தைக் கண்ட குரு "இதுவே முதற்கவியாக அமைக" என்று பணித்தார்.

ஆசிரியர் ஆசியோடு எட்டு நாளில் இந்நூலை தேவர் முடித்தார். பாண்டியன் சபையிலே, பல புலவர்கள் முன்னிலையிலே இந்நூல் அரங்கேறியது. ஆனால் பொறாமைக்கும், புலவர்களுக்கும் வெகு நெருக்கம் போலும். துறவியான தேவர் காமத் துறையை எப்படிப் பாடினார்? அச்சுவையை அனுபவித்தே பாடியிருக்க வேண்டும் என்று அலறியது புலவர் கூட்டம். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியைப் புலவர் கூட்டத்திற்கு முன் வைத்து "நான் பால பிரம்மச்சாரியானால் இது என்னைச் சுடாமல் இருக்கும்" என்று கூறி தணலான இரும்பைத் தழுவினார். நாவினால் தீண்டினார். நெருப்பு அந்த உத்தமரை ஒன்றும் செய்யவில்லை.

சிந்தாமணி சீவகநம்பியைக் காப்பியத் தலைவனாகக்கொண்டுள்ளது. இது நாமகள் இலம்பகம், முதல் முக்தி இலம்பகம் வரை பதிமூன்று இலம்பகங்களைக் கொண்டது. சீவகனைப்பற்றிய வரலாறு கூறுவதாலும், சிந்தித்த பொருள் எல்லாவற்றையும் தரும் இயல்புடையதாலும் சீவக சிந்தாமணி எனப் பெயர் பெற்றது. மண நூல் என்ற பெயரும் உண்டு. வளமிகுந்த ஏமாங்கத நாட்டைச் சச்சந்த மன்னன் ஆண்டுவந்தான். மாமன் மகள் விசயமா தேவியை மணந்து, காதல் இன்பத்தில் மூழ்கியிருந்தான். நல்லவன் போல் நடித்த கட்டியங்காரன் என்ற அமைச்சனிடம் ஆட்சிப் பொறுப்பைத் தந்து, காதல் இன்பத்தை ஓய்வு ஒழிவின்றி நுகர்ந்தான். ஆண்டு ஒன்று முடிவதற்குள் அமைச்சன் ஆட்சியை முற்றிலும் தன் வசம்கொண்டு அரசனைக் கொன்றான். ஆனால் அதற்கு முன்பே (மயிற் பொறியில்) கருவுற்றுத் திங்கள் நிறைந்த மனைவியை வெளியேற்றி

விட்டான் அரசன். (மயிற்பொறி இடுகாட்டில் இறங்க) அரசி அங்கே ஒரு ஆண் மகவை ஈன்ருள். அக்குழந்தையே சீவகன். அவனைச் சுற்றியே கதை ஓடுகிறது.

சிந்தாமணி அரிய கருத்துக் கருவூலமாக விளங்குகிறது. வாழ்க்கையை ஒட்டிய பல நிகழ்ச்சிகளை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிருர் திருத்தக்கதேவர். அவர் காலத்திலே இசையும், இயலும், கூத்தும் மகோன்னதமான நிலையில் இருந்திருக்க வேண்டும். இசைக் கலையிலே மக்கள் பெரிதும் நாட்டம் கொண்டிருக்க வேண்டும். ஆசிரியருக்கும் இசையிலே பயிற்சியும், இசையை இரசிக்கும் தன்மையும் அமைந்திருக்க வேண்டும். இன்னிசை பாடும் பாடகர்கள் உடற் குற்றமின்றி இசை பாடல் வேண்டும் என்ற கருத்தை காந்தருவதத்தை பாடிய முறையைக் கூறும் முகத்தான் கவிஞர் அறிவுறுத்துகிருர்; வலியுறுத்துகிருர். தலையாட்டம், முகம் சுளித்தல், கையாட்டம், நெற்றியைச் சுளித்தல், கண் சிமிட்டல், இப்படிப் பல அங்க சேஷ்டைகளை இந்தக் கால வித்துவான்களிடமும், பாகவதர்களிடமும், காண்கிருேம். பாடகர் சபையை மறந்து இசையிலே மூழ்கி, தான் மட்டும் இருப்பதாக நினைத்துக் கையையும், தலையையும், உடம்பையும் ஆட்டிக் குலுக்கி மகா கோரம் விளைவிக்கிருர்.

இதை இசை இலக்கணம் அறிந்த திருத்தக்க தேவர் குற்றம் என்று கூறுகிருர். சுமார் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த வீணைப்போட்டியிலே கலந்துகொண்ட காந்தருவத்தை பாடிய பொழுது; புருவங்கள் நெளியவில்லை. கண்கள் சுழலவில்லை. கழுத்து விம்மி வீங்கவில்லை. பற்கள் வெளிப்படவில்லை. ஆங்கு சபையிலே வீற்றிருந்த அரசர்களும், மற்றவர்களும், "இவள் தான் செம்பவழ வாய் திறந்து பாடினளோ, வீணை தான் பாடியதோ?" என்று காண முடியாமல் வருந்தினர்களாம். இப்படி இந்தக் காலத்திலும் சிலர் பாடுவதாக இருக்கலாம். இருந்தாலும் பெரும்பாலான பாடகர்கள் திருத்தக்க தேவர் சொல்லும் இந்த இசை இலக்கணத்தைப் பின்பற்றினல் சபையும், மேடையும் இன்னும் அழகாய் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

கருங்கொர்டிப் புருவம் ஏரு; கயல்
நெடுங் கண்ணும் ஆடா
அருங்கடி மிடறும் விம்மா அணி
மணி எயிறும் தோன்ரு
இருங்கடற் பவளச் செவ்வாய்; திறந்து
இவள் பாடினளோ
நரம்பொடு வீணை நாவின் நவின்றதோ
என்று நைந்தார்.

22

கவியின் மாண்பு

வாழ்க்கையிலே முன்னேற்றம் வேண்டும் என்று எல்லோரும் விரும்புகிருர்கள். விரும்புகின்ற அனைவரும் முன்னேற்றத்தின் உச்சியிலே நிற்பதில்லை. சுடர் விளக் காயினும் தூண்டுகோல் வேண்டும் என்பது போல, நமக்கு எவ்வளவுதான் கெட்டிக்காரத்தனம் இருந்தாலும் ஆற்றலும், அறிவும், வீரமும், தீரமும் பெருகி நின்ருலும்; நம்மிடையே இருக்கின்ற இந்தக் குணங்களைத் தூண்டி "சபாஷ் பாண்டியா" பட்டம் தந்து, முதுகிலே தட்டிக்கொடுக்கக் கூடிய பெரியவர்கள் தேவை. தேவை என்ருல் விளம்பரம் தந்து வாங்கிவிட முடியுமா? சில பெரியவர்களுடைய வாழ்க்கையிலே அந்த அரிய குணங்களைத் தூண்டிவிடக் கூடிய தூய்மையாளர்கள் வந்து சேருகிருர்கள்.

ஒரு சிறுவன் அழகாகப் பாடுகிருன். குரல் எடுப்பா யிருக்கிறது. முன்னுக்கு வர சந்தர்ப்பம் இருக்கிறது. "பாடு! பாடு! உண்மையிலேயே நீ நன்ருகப் பாடுகிருய். முயன்ருல் முன்னுக்கு வரலாம்" என்ற உதட்டு ஆசீர் வாதமாவது செய்யவேண்டும். அதைவிட்டு நீ என்ன பாகவதரா! அல்லது கிட்டப்பாவா? என்று கிண்டல் செய்தால் பாடும் பையன் ஆயுள் பரியந்தம் ஏன் வாயைத் திறக்கிருன்?

புரட்சிக் கவிஞர் யார் என்று கேட்டால் குஞ்சுப் பாப்பா கூறும் "பாரதிதாசன்" என்று. பாரதிதாசன் என்ற பெயரைக் கேட்டவுடனே நாடி நரம்புகளிலே ஒரு வீரம் சொட்டுகிறது. வேகம் அருவியைப் போலக் கொட்டு கிறது. பழமை ஓடுகிறது. புதுமை பாய்கிறது. "கொலை வாளினை எடடா! கொடுமையைக் குமைத்து எறியவே" என்று கூவுகிறோம். "குணமேவிய தமிழா, குதித்து எழடா! அன்னை அடிமை விலங்கை அகற்றி எறியவே. வெட்டில்லை; குத்துமில்லை வேறு வேறிருந்தருத்தும் கட்டில்லை. கீழ் மேல் என்னும் கண்மூடி வழக்கமில்லை" என்று கொட்டடா முரசம் தமிழ்! தமிழ்! தமிழே உயிர்; தமிழே பேச்சு; தமிழே மூச்சு. "மங்கை ஒருத்தி தரும் சுகமும்—நம் மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்" என்று மார்தட்டி நிற்பாய் தமிழ் வீரனே! "சிங்கமென்ற இளங் காளைகளே மிகத் தீவிரங்கொள்ளுவீர் நாட்டினிலே தாய் மொழிக்கே" என்று எக்காளமிடுகிறார் கவிஞர். பாரதி தாசன் என்றவுடனே இப்படி எத்தனையோ வீர நினைவுகள் நம் நெஞ்சத்திலே படலம் படலமாக ஓடுகின்றன.

தமிழன்னை பெற்ற நற்புதல்வன் பாரதிதாசன். "நமதடா இந்த நாடு என்றும் நாமிந் நாட்டின் வேந்தர்; சமமடா நாட்டு மக்கள் என்றே தாக்கடா வெற்றிமுரசை" என்று முழங்கிய கவி. சிறைச்சாலைக்கு அஞ்சாத சிங்கம். சிறையைச் சோலையாகக் கூறும் கவிஞர்.

புதுவை என்றால் நமக்குப் பல புதுமைகள் நினைவுக்கு வருகின்றன. பிரபல மளிகை வியாபாரி கனகசபை முதலியாரை புதுவையிலே அறியாதவர்கள் அரிது. இந்த வியாபாரி பெற்றெடுத்த இரத்தினமே கனக சுப்புரத்தினம். வெறும் இரத்தினமல்ல இரத்தினம் கனகத்தோடு வேறு பொருத்தப்பெற்றுவிட்டது. (189 -ம் ஆண்டு இந்தத் தங்கக் குழந்தை பிறந்தது). வயது வந்த பின்னர் வழக்கம்போல் குழந்தை கனகம் கல்வி கற்கச் சென்றான். கண்ணுங் கருத்துமாகக் கல்வியைக் கடிது கற்றுக்கொண்டான். தமிழை மிக விரும்பிக் கற்றான். பங்காருபத்தர் போன்றோர் சுப்புரத்தினத்தின் செந்தமிழ்ப் பற்றை மேலும் மேலும் வளர்த்தார்கள். பள்ளி நாடகங்களிலே பையன் நடித்தான்.

படிப்பதற்குச் சென்ற பையன் பாட்டுகள் புனைவதிலும், பாடுவதிலும், நாடகத்தில் நடிப்பதிலும் நேரத்தைச் செலவிட்டான். கால்வே கல்லூரியில் சேர்ந்த பையன் முப்பது பையன்களிலும் முதல்வனுகத் தேர்ந்தான். பதினெட்டு வயதிலே பையனுக்குப் புலவர் பட்டம் கிட்டியது. உடனே தமிழ் ஆசிரியராக, பிரெஞ்சு அரசாங்கத்தால் நியமிக்கப்பெற்ருன். முதல் நாள் புலவர் கனகசுப்புரத்தினம் (ஆசிரியராக) பள்ளிக்குச் சென்ருர். மற்ற பையன்கள் கனகத்தை ஆசிரியர் என்று எண்ணுமல், தங்களோடு படிக்க வந்த சகமாணவன் என்று எண்ணினுர்கள். அவ்வளவு சிறு பையனுகக், கனகம் தோற்றமளித்தான். தலைமையாசிரியர் அறிமுகம் செய்த பிறகுதான் வகுப்பில் “வாத்தியார் டோய்!” என அறிந்தார்கள் சிறுவர்கள்.

1908-ம் ஆண்டு தேசத்திலே விடுதலை வேகம் மக்களின் நாடி நரம்புகளிலே ஓடியது. அன்னியனை அகற்ற மக்கள் துடிதுடித்து நின்ருர்கள். “இந்தியா” என்ற வாரப் பத்திரிகையிலே பாரதியார் தேசாவேசப் புயலைக் கிளப்பினுர். பத்திரிகைச் சொந்தக்காரர் கைதானுர். பாரதியாரும் அடக்கு முறைக்கு ஆளாகவேண்டிய தொல்லை வந்தது. ‘இந்தியா’ பத்திரிகை நின்றுவிட்டது. சிறைச்சாலையிலே அடைபட்டுக் கிடக்க விரும்பாத கவிச் சிங்கம் புதுவைக்கு வந்தார். புதுவையிலே பாரதியார் வாழ்ந்து வரும் நாளில் ஒரு நாள், ஒரு நண்பர் வீட்டுக் கல்யாணத்திற்குச் சென்ருர். புலவர் கனக சுப்புரத்தினமும் வந்தார். விருந்துக்குப் பின்னர் கனகத்தை, கான விருந்தளிக்க அன்பர்கள் வேண்டினுர்கள். பாரதியார் அங்கு வந்திருப்பது கனக சுப்புரத்தினத்திற்குத் தெரியாது. தேசிய மணம்கமழும் பாரதியாரின் பாடல்களை வெகு அழகாக சுப்புரத்தினம் பாடினுர். பிறகு “உலகான உனது தாய் மிக உயிர் வாதையடைகிருள், உதவாதினி ஒரு தாமதம் உடனே விழி தமிழா” என்று பாடிய கவிஞரை பாரதியாருக்கு அன்பர்கள் அறிமுகம் செய்து வைத்தார்கள். பாரதிதாசனின் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. அன்று முதல் (பாரதியார் மரணம் வரை இணைபிரியாமல்) அவரோடு இருந்துவந்தார் பாரதிதாசன்.

ஒருநாள் பாரதியாரைச் சுற்றி அன்பர்கள் கூடியிருந்தார்கள். கூடி இருந்தோரை நோக்கி "சுப்புரத்தினம் கவியெழுதக் கூடியவன் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று பாரதியார் கேட்டார். கூடியிருந்தோர் வியக்க, கனகசுப்புரத்தினம் ' எங்கெங்கு காணினும் சக்தியடா" என்ற கவிதை செய்தார். 'பாடு' என்று பகர்ந்தவுடன் பாடல் புனைந்த பாரதிதாசனை அன்பர்களும், நண்பர்களும் மெச்சினர்கள். போற்றினர்கள். அந்த அரிய பாடலைத் தனது கையால் எழுதி, அதன் தலைப்பில் பாரதியாரே ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் என்று எழுதி, சுதேசமித்திரன் பத்திரிகைக்கு அனுப்பினர்.

"கலையே வளர், தொழில் மேவிடு, கவிதை புனை தமிழா, கடலே நிகர்படை சேர்க்குவிட நேர் கருவிகள் சேர். நிலமே உழு. நவதானிய நிறை யூதியம் அடைவாய், நீதி நூல்வினை உயிர் நூல் உரை, நிச நூல் மிக வரைவாய், அலைமா கடல் நிலம் வானிலுன் அணி மாளிகை ரதமே அவை ஏறிடும் விதமே யுகைததாகாரம் நிறுவாய்" என்று இன்று முழங்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைக் காண்கின்றோம். பாரதிதாசன் கருத்திலே வேற்றுமை கொண்டவர்கள் இருக்கலாம். ஆனல் பாரதியின் பண்பினுலே, பாரதிதாசன் ஒரு உண்மைக் கவிஞனுக—ஆக்கமும், ஊக்கமும் தரப்பெற்ற கவிஞனுக வெளிவந்ததை யாரும் மறக்கமுடியாது. மறுக்க முடியாது. அதே வழியைப் பின்பற்றியதினுலே பாரதிதாசனுல் ஆக்கமும், ஊக்கமும் பெற்று வெளிவந்துள்ள கவிஞர்கள் பலர்!

"கவிதையா, கதையா, ஒவியமா நீ கிட்டப் போகாதே அவை எமக்கே சொந்தம் கவிதை எழுத பாமே பிறந்தோம்" என்ற ஆணவத்திலே இன்றுகூட பலர் இருக்கிறார்கள்; கவிஞர்கள், புலவர்கள், ஆசிரியர்கள், பேச்சாளர்கள் என்று பலர். அவர்கள் பாரதியார், பாரதிதாசன் உறவைப் புரிந்து, அறிந்து அன்னை மொழியை வளர்க்க முன்வர வேண்டும்.

பாரதியார் முன்னிலையிலே "சபாஷ்" என்ற பட்டம் பெற்று, பாரதிதாசன் பாடிய பாட்டு என்றென்றும் நிற்கும்

என்பதிலே சந்தேகமில்லை. எத்தனையோ கவிதைகளும் நூல்களும் "குடும்ப விளக்கு" எழுதிய கவிஞர் செய்திருந்தாலும் "எங்கெங்கு காணினும் சக்தியடா" என்ற பாட்டுக்கு இணையாமோ தம்பி! ஏன்! ஏழு கடலும் அவள் வண்ணம். அந்த எண்ணம் தங்குகின்ற வெளியில் கோடி கோடி கோளங்கள். அந்த அன்னையின் சக்திதான் என்ன? ஏழு முகிலினமும் கர்ஜனை செய்வதைக் கண்டதுண்டோ? பெண் சிரித்த ஒலியும், அவளின் மென் சிரிப்பும், காளை காண முயலும் கவிச் சுவையும், அங்கு அன்னையின் திருநடமும், அவன் பெறுகின்ற திறமும், இப்படியாக இயற்கையும், செயற்கையும், இணைந்து இதயத்தைத் தொடும்படி கவிஞர் பாடிய பா, தமிழ் மொழிக்குப் பெருமையே. படிக்கப் படிக்க, பாடியவாய் தேனுறும் பாரதி மெச்சிய பாரதிதாசன் பாடலில் நாமும் மூழ்கித் திளைப்போம்! பொருள் தானே துலங்கும். அத்தனை எளிமை, இனிமை.

'எங்கெங்கு காணினும் சக்தியடா! —தம்பி
எழுகடல் அவள் வண்ணமடா—அங்குத்
தங்கும் வெளியினிற் கோடி யண்டம்—அந்தத்
தாயின் கைப் பந்தென ஓடுமடா—ஒரு
கங்குலில் ஏழு முகிலினமும்—வந்து
கர்ஜனை செய்வது கண்டதுண்டோ!—எனில்
மங்கை நகைத்த ஒலியெனலாம்—அவள்
மந்த நகையங்கு மின்னுதடா!
காளை ஒருவன் கவிச்சுவையைக்—கரை
காண நினைத்த முழு நினைப்பில்—அன்னை
தோளசைத் தங்கு நடம்புரிவாள்—அவன்
தொல்லறி வாளர்திறம் பெறுவான்—ஒரு
வாளைச் சுழற்றும் விசையினிலே—இந்த
வைய முழுவதும் துண்டு செய்வேன்—அம்மை
நேர்படுவாள் உன்றன் தோளினிலே!'

23

சேக்கிழார் காட்டும் செந்நெறி

நெஞ்சத்திலே உறுதி வேண்டும். கலங்கக் கூடாது. "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாணும்படியாக அவருக்கு நல்லுதவி செய்து அவருடைய தீமையை மறந்து விடுவதாகும்" என்று எளிதாகக் கூறி விடலாம். சொல்லுதல் எளிது. ஆனால் செயலில் வரும் போதுதான் உறுதியும், கலங்காத நெஞ்சத்தின் தெளிவும் தெரியும். தனக்கோ, தனக்கு வேண்டியவர்களுக்கோ ஆபத்து ஏற்பட்டால், ஆபத்து என்றால் வெறும் ஆபத்தா? உயிருக்கே உலைவைக்கக் கூடிய சம்பவம் ஏற்படுகிறது என்று வைத்துக்கொள்வோம்; அப்போதுதான் நமது நிதானமும், நெஞ்சத்தின் உறுதியும், கலங்காத் தன்மையும் வெளிப்படும்.

பெருமை பெற்ற சிவனடியார்களின் சரித்திரத்தையுணர்த்தும் நூல் பெரிய புராணம். சிவனடியார், தனியடியார், அறுபத்தி மூவரும், தொகை அடியார் ஒன்பதின் மருமாகிய எழுபத்திருவராவர். இவர் தம் பெருமையைக் கூறுவதே திருத்தொண்டர் புராணம். சுந்தர மூர்த்தி சுவாமிகள் தாம் பாடிய திருத்தொண்டத் தொகையில் அறுபத்தி மூவர் வரலாற்றைத் தொகுத்துக் கூற, நம்பி யாண்டார் நம்பி அத்தொகையைத் தாம் இயற்றிய திருத்தொண்டர் திரு வந்தாதியில் வகுத்துக் கூறியுள்ளார். இவ்விரண்டையும் கொண்டு விரித்துக் கூறியுள்ளார் சேக்கிழார் சுவாமிகள்.

திருமலைச் சருக்க முதல், நமிநந்தியடிகளுயனார் புராணம் வரையில் ஒரு காண்டமும். திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் புராணம் தொடங்கி இறுதிவரை மற்றொரு காண்டமுமாக, இரு பெருங் காண்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. பெரிய புராணம் ஒரு தனித் தமிழ்க் காப்பியம். தில்லை நடராஜப் பெருமான் இதற்குப் பாட்டுடைத் தலைவர். அவரால் எடுத்துக் கொடுக்கப்பெற்ற "உலகெலாம்" என்னும் தொடரைக் கொண்டு இந்நூல் முதலிலும், இடையிலும், இறுதியிலும் அமைகிறது. அன்பின் பெருமையும்,

பக்திச் சுவையும், ஏனைய சுவைகளும், விளங்க இக்காப்பியம் அமைந்துள்ளது. சமய நூலாக இருந்தாலும் இலக்கிய நயமும், காவியச் சுவையும், ஆசிரியரின் அனுபவஞானமும், ஆற்றலும் சிறந்து விளங்குகின்றன. செய்யுட்களெல்லாம் தெய்வ மணம் கமழ, அமையப் பெற்றுள்ளன. பழங்குடி மக்களிடையே வழங்கிய பழக்க வழக்கங்களை அறியவும், இந்த நூல் ஒரு கருவியாக அமைந்துள்ளது. சைவத் திரு முறைகளில் பன்னிரண்டாம் திரு முறையாக இந்த நூல் போற்றப்படுகின்றது.

சேக்கிழார் குடியிற் பிறந்த அருண் மொழி தேவர், சேக்கிழார் என்று சிறப்பாக அழைக்கப்பெற்ருர். தொண்டை மண்டல வேளாள குலத்தைச் சேர்ந்தவர். தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த குன்றத்தூரில் பிறந்தவர் சேக்கிழார். இவர் அநபாய சோழனிடத்தில் முதலமைச்சராகப் பணியாற்றிய போது ‘ உத்தம சோழப் பல்லவர் ’ என்ற சிறப்புப் பெயரும், பெரிய புராணத்தைப் பாடி அரங்கேற்றிய போது தொண்டர் சீர் பரவுவார் ’ என்ற பெயரும் பெற்று விளங்கினுர்.

சேதி நாட்டின் தலை நகர் திருக் கோவிலூர். அது தென் பெண்ணை ஆற்றங்கரையின் தென் கரையில் சிறப்புடன் அமைதுள்ளது. மலாடர் மரபினைச் சேர்ந்த மன்னர் பரம்பரை அரசு செலுத்திவந்தது. அப்பரம்பரை சிவ நெறியிலே சிறந்தது! அரனை அஞ்சலி செய்யும் அடியார்களின் அடிபணிந்து கருத்தறிந்து அவர்களுக்குப் பணி புரிவதிலே உயர்ந்தவர்கள். அந்த மரபிலே ஒரு அரசன் தோன்றினுன். அவர் அறநெறிப்படி ஆட்சி புரிந்து வந்தார். மலைப் போன்ற தோளும், மன உறுதியும் கொண்டு மாற்ருறைப் போரில் வென்ற மாவீரராகத் திகழ்ந்தார். முன்னோர் முறைப்படி நெறி தவருத நேர்மையாளர். சிவ பெருமானின் அடியார்களின் தவக் கோலத்தையே ‘ மெய்ப் பொருள் ’ என்று கருதி வந்ததால் அவரை மக்கள் மெய்ப் பொருள் நாயனுர் என்று அழைத்தார்கள். முக்கண்ணன் கோயில்களிலெல்லாம வழிபாடும், விழவும் செவ்வனே நடக்க வகை செய்தவர். சிவனடியார்களின் திருவடிகளையே தமக்குத் துணையாகக் கொண்டவர்.

இவ்வாறு மெய்ப் பொருள் மன்னன் செங்கோல் வழு வாது ஆட்சி செய்து வந்த காலத்தில் ‘முத்தநாதன்’ என்னும் அரசன் பகை கொண்டு பல முறையும் படை யெடுத்து வந்தான். பலமுறையும் மன்னனிடம் படு தோல்வி அடைந்து ஓடிவிட்டான் கோழை. கோழை முத்த நாதன் குறுக்கு வழியில் வேலை செய்து மன்னனைத் தொலைக் கத் திட்டமிட்டான். மெய்ப் பொருள் மெய்யடியார்களி டம் கொண்டுள்ள மதிப்பை மனதில் கொண்டு, வெண்நீறு சாத்தி சிவனடியாராக வேடம் கொண்டான். மெய்யெ லாம் நீறு பூசினன். தலையிலுள்ள சடைகளை ஒன்ருகக் கட்டினன். உடைவாளை புத்தகக் கவுளி ஒன்றில் வைத்துக் கட்டிக் கொண்டான். மைபொதி விளக்கே போல பொய்த் தவ வேடங் கொண்டு மன்னனைக் கொல்லச் சென்ருன் முத்தநாதன்.

மாதவ வேடங் கொண்ட அக்கொடியவன் அரண்மனையிலே பல கூடங்களைத் தாண்டி மன்னன் உறங்கும் மண்டபம் வந்தான். தத்தன் என்னும் ஒப்பற்ற உண்மை ஊழியன் காவல் காத்து நின்ருன். தனித்தடை நின்ற தத்தனையும் மீறி, பள்ளிக் கட்டிலிலே புரவலன் தூங்க, பக்கத்தே மன் றலங் குழல் மென் சாயல் மாதேவி இருப்பதையும் மதியாது உள்ளே நுழைந்தான் மூர்க்கன். அவனைக் கண்டு அரசி அரசனை எழுப்ப, நாயனுர் எழுந்து வந்திருக்கும் வஞ்சகனை மெய்யடியார் என்று நம்பி வணங்கி வர வேற்ருர். “உங் கள் நாயகனுர் முன்னம் உரைத்த அரிய ஆகம நூல் உமக்குப் போதிக்கக் கொண்டுவந்துள்ளேன்” என்ருன் முத்தநாதன். அரசனே அதைப் பெருமை என்று கூற, அவனே அரசி யும் அருகில் இருக்கக் கூடாது என்று கூறுகிருன். அவன் விருப்பின்படி அரசி அந்தப்புரம் செல்ல, போலித் துறவியை தவிசின் மேலிருத்தி சிரமும் இரு நிலத்திலிருக்கப் போற்றி ‘இனியருள் செய்யும்” என்ருர் நாயனுர்.

வஞ்சக தன்கையை மடிமேல் வைத்துப் புத்தகம் அவிழ்ப்பான் போல, பாசாங்கு செய்து கத்தியை எடுத்து, வணங்கிய புனிதன் கழுத்திலே குத்தினன் தவ வேடம் பூண்டிருந்த புல்லன். போலியின் செய்கைகளைக் கவனித் துக் கொண்டிருந்த தத்தன் மன்னன் கத்தியால் குத்தப்பட்

டதைக் கண்டு, வெகுண்டு, வாளை உருவிக் கொண்டு புல்லனைப் போகக ஓடி வந்தான். இரத்த வெள்ளத்திலே கிடந்த நாயனர் தத்தனைத் தடுத்து "அவர் நமர், தீங்கு செய்யாதே" என்றார் அந்த ஒப்பு, உவமையில்லா ஞானி. இன்னு செய்த முத்தநாதனுக்கு எந்த நேரத்தில் அவன் நாண நன்னயம் செய்கிருர். என்ன மன உறுதி. கலங்கா நெஞ்சம். வஞ்சகன் வாள் செய்த வேலையால் குருதி கொட்டிக் கொண்டிருக்கிறது.

மரண வேதனையால் கீழே விழுந்த வேந்தரை, தாதனும் தத்தன் தாங்கிக் கொண்டு தலையினல் வணங்கி, "அரசே! அடியேன் என்ன செய்யவேண்டும்? கொடியவனைக் கொல்லக் கூடாது என்று கூறிவிட்டீர்களே!" என்று கேட்கிருன்.

"எம்பிரான அடியாராகிய இப்பெரியவர் (முத்தநாதனை நோக்கி) இடைவழியில் எந்தவிதமான ஆபத்தும் இல்லாமல், நீ காவலாகச் சென்று ஐயன் எங்கு செல்ல வேண்டுமோ, அங்கு கொண்டு போய்விட்டு வா" என்று இரத்த வெள்ளத்தல் கிடக்கும் மெய்ப் பொருள் நாயனர் தத்தனுக்கு உத்திரவிட்டார். இந்த நிகழ்ச்சியை ஒரு கணம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எப்படிப்பட்ட ஒரு அரிய நிகழ்ச்சியைச் சேக்கிழார் சித்தரித்திருக்கிருர்.

இந்தக் காட்சியை மனதிலே கொண்டால், சிறு சிறு பூசல்களெல்லாம் நொடிப்பொழுதில் மறையாதா? கொஞ்சமும் நெஞ்சம் கலங்காமல் மரண வேதனையில் இரத்த வெள்ளத்தில் வீழ்ந்திருக்கும் வேந்தன், தத்தனுக்கு இடும் கட்டளையைப் பாருங்கள்.

வேதனை யெய்தி வீழ்ந்த வேந்தரால்
விலக்கப்பட்ட
தாதனும் தத்தன் தானும் தலையினல்
வணங்கித் தாங்கி
'யாது நான் செய்கேன்' என்ன
எம்பிரானடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம் கொண்டு
போய் விடு நீ என்ருர்!

24

பழநி மாம்பழம்

மனமிருந்தால் மார்க்கமுண்டு ! மனம் என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? அது எத்தன்மை உடையது? மனத்தைக் காட்டு என்றால் நெஞ்சத்தைத் தொட்டுக் காட்டுகிறார்கள். எண்ணங்கள் எங்கே எழுகின்றதோ அதுவே மனம். உயர்ந்த எண்ணங்கள் எழுந்தால் விரிந்த மனம், பரந்த இதயம், தூய்மையான இதயம் என்று கூறுகிறோம். குறுகிய எண்ணங்கள் கொண்டால் சின்ன மனம் என்று செப்புகிறோம்.

ஆகவே உலகில் நடக்கும் உயர்வுக்கும், தாழ்வுக்கும் மனமே காரணமாகும். இந்த மனம் திருந்தவேண்டும், இனம் திருந்த. இந்த மனம் உயர்ந்து விரியவேண்டும். இந்த மனம் ஒரு விசித்திரமானது. இந்த மனத்தை வென்று அடக்கி, நமக்குள் கட்டுப்படுத்திக் கொண்டால் உலகிலே பல அரிய பெரிய சாதனைகளைப் பெறலாம். அதன் மூலம் உலக மக்களுக்கு உதவலாம். ஆகவே இந்த மனததை ஆரம்ப முதலே ஒரு பண்பட்ட, பெரிய சூழ்நிலையிலே பக்குவப்படுத்திப் பழக்கிவரவேண்டும்.

அந்த விதமாகப் பக்குவப்படுத்திவராத மனம் சிறப்பாக இராது. எவ்வளதான் அறிவாளியாக இருந்தாலும், ஆற்றல் படைத்தவராக இருந்தாலும், அதனால் பயன் ஒன்றும் இல்லை. வேதத்தைப் படித்துத தலைகீழாக ஒருவன் ஒப்பிக்கிறான். பலன் என்ன? அவனுடைய மன நிலை என்ன? வேதத்தின் உட்பொருளை உணர்ந்து மனத்தைத் திருத்தி திருந்தி வாழ்கிறானா? ஞாயிறு தோறும் உபநிஷத் படித்தால் போதுமா? பிறர் எழுதியதைக் கேலி செய்தால் போதுமா? பட்டை பட்டையாய் விபூதி பூசி, உபநிஷத்தும், குரு அஷ்டோத்திரமும் செய்தால் போதுமா? பத்துப் பதினைந்து செலவழித்து வார வழிபாடுகள் நடத்தினால் போதுமா? நடுச்செங்கலைப் பிடுங்கி எறியும் குணம் கொள்ளாத பரிபக்குவ நிலைகொண்ட மனம் வேண்டும். ஏழைக்கிரங்கும் எண்ணம் வேண்டும். காசு பணததையும், வந்த

பெண்கள் அணிந்துள்ள வயிரத் தோட்டின் நீரோட்டத்தை அளக்கும் எண்ணமும் கூடாது. ஏழையிடம் இருக்கும் சிரத்தையும், தூய்மையும், ஏழு அடுக்கு மாளிகைக்கார னிடம் எதிர்பார்ப்பது வீணாகும். இருக்கலாம் ஒரு சிலர், விரல்விட்டு எண்ணக் கூடியவர்களாக.

விரிந்த மனமும், திறந்த எண்ணமும், பிறருக்கு உத வும் பெரிய கொள்கையும், கொண்ட பெரும் புலவர் மாம் பழக்கவிச் சிங்க நாவலரவர்கள். அன்னமளிக்கு மூராகவும், அண்டியவரை காக்கு மூராகவும், தீது பிணி நீக்கு மூராக வும், விளங்கும் செவ்வேள் திருமுருகன் - திருப்பழனியூர் தந்த செல்வம். இவர் பாண்டிவளநாடு தந்த பாவலர். இளம்பருவத்திலேயே இருகண்களின் பார்வையும் இழந்து வாடியவர்.

புறக்கண் இல்லை. ஆகவே மாந்தர் தம் கொடுமை களையும், துன்பங்களையும் புறக்கண்களால் காணவில்லை. அவருடைய அகக்கண், மனக்கண் கடலைவிடப் பெரியது; வானைவிட விரிந்தது; இவர் விசுவகன்மா வகுப்பிலே வந்தவர். இவருடைய முன்னோர்கள் சித்திர வேலையில் தேர்ந்தவர்கள். இவரோ கவிச் சித்திரத்திலே வல்லவர். மாம்பழம் தமிழறிவும், கற்றோரையும், மாற்றாரையும் போற் றும் பெருங்குணம் படைத்தவர். அவரின் அருங் குணங் களை அளவிட்டுச் சொல்ல முடியாது. அவருடைய புலமை ஒப்பு உவமையற்றது. சேர சோழ பாண்டியர் களுக்குப் பிறகு தமிழைப் போற்றி, தமிழ் பாடும் கவிஞர் களையும், புலவர்களையும், அறிவாளிகளையும் ஆதரித்த பெருமை சேது மன்னர்களின் வழியில் வந்தவரும், தமிழே உயிராகக் கொண்டவருமான பொன்னுச்சாமி தேவரவர் களையே சாரும்.

சேதுபதி மாம்பழத்தின் கவிச்சுவையை உண்டு நாவலரைத் தனது ஆத்தான புலவராய் அமர்த்திப் பெருமை செய்தார். தமிழ் நாட்டிலே எத்தனையோ மன்னர்கள் இருந்தார்கள்; மடிந்தார்கள். ஆனால் சேதுபதியின் செந் தமிழ்த் தொண்டு, இந்த செகம் உள்ளவரை நின்று நிலவும் என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. தமிழ் என்றால் சேது பதியின் மனம் குளிரும். இரும்புப்பெட்டிகள் திறக்கும்.

செந்தமிழைப் பாடிய அந்தப் புலவருக்குக் கனகமும் மணியும் கொட்டப்படும். இடைக்காலத்திலே தவித்து நின்ற புலவர்களுக்கு வறுமையை ஓட்டி வாழ்க்கையிலே (பண்டைய மன்னர்களைப் போல) வளம் செய்து தமிழை வளர்க்க சேதுபதி உதவினர். மீண்டும் சங்கத்தை ஏற்படுத்தினர். சேதுபதி நல்ல மனத்தோடு ஏற்றிய தீபம்தான் இன்று நாடெங்கும் "தமிழ் ஒளி" வீசுகிறது. சிலர் இசைபட என்ஞான்றும் வாழ்கிருர்கள். பலர் வசைபடவே என்ஞான்றும் வாழ்கிருர்கள். ஈட்டிய பொருளின் பயன் என்ன? பூட்டி வைப்பதா? வட்டி மேல் வட்டி (கூட்டு வட்டி) வாங்குவதா? இட்டார் பெரியோர்; இந்த வழியில் வந்த சேதுபதியின் தமிழறியும் தன்மையும், தகுதியறிந்து பரிசளிக்கும் பாங்கும் போற்ற வேண்டியதாகும்.

நாவலர், ஆத்தானப் புலவர் ஆனதும் தன்னை மறந்து விடவில்லை. தமிழைப் பாட, பேச மற்றும் பலர் இருக்கிருர்கள் என்று அறிந்து, அவர்களுக்கும் சமயம் வாய்க்கும் போதெல்லாம் அள்ளி அள்ளித் தந்தார். தேவரைக்க்காண ஒருவர் வந்தார். வந்தவர் சும்மா வரவில்லை. ஒரு கவியும் எழுதிக் கொண்டு வந்தார். அக் கவியைக் காட்டி தேவரவர்களின் தமிழ்ப் பண்பால், அன்பால் ஏதோ பொருள் உதவி பெற்றுப் போகலாம் என்று வந்தார். வந்தவர் அரசரைக்காணு முன்னர் ஆத்தானப் புலவரைக் கண்டு செல்வது நன்றென்று நினைத்துப் பழநிமாம்பழத்திடம் வந்து "புலவர் மணியே! அடியேன் ஏழை. ஏதோ தமிழ் அறிவேன், ஏதோ கவியும் இயற்றுவேன், எனக்கு இப்போது ஒரு முக்கியமான காரியம் நடக்கவேண்டும். அதாவது என் மூத்த பெண்ணின் திருமணம் நடக்கவேண்டும். கையில் காசு இல்லை. அரசரின் தமிழ் அன்பை அறிவேன். அன்பர் ஒருவரும் அரசரை அண்டிக் கவிபாடினல்பொருள்கிடைக்கும் எனருர். பெண்ணின் திருமணத்திற்கே அப்பணம் உதவும். அதற்கே கவிதையோடு இங்கு வந்தேன். தங்களையும் கண்டேன், உதவவேண்டும். தாங்கள் காட்டும் பாதையில் நடக்கச் சித்தமாயிருக்கிறேன்," என்று கூறினர் வந்தவர்.

பெரியமனம் படைத்த பெருங்கவி பழநிமாம்பழம். மகள் மணம். தமிழ் கற்றவர்களுக்குப் பொருள் உதவி, இந்த நினைவே சுற்றிச் சுற்றி வந்தது. "தமிழ் கற்றவர்களுக்கு வாழ்வில்லையானல் இந்தத் தமிழ்நாடு வாழமுடியாது. தங்கள் மகள் திருமணம் நடக்க, தேவரவர்கள் உதவும்படி நான் வேண்டுகிறேன். அஞ்ச வேண்டாம்" என்று உறுதி தந்து அவர் எழுதி வந்த கவிதையைப் படிக்கச் சொல்லிக் கேட்டார். "இது கவிதையில்லை. இதிலே பொருட் குற்றம், சொற்குற்றம், சந்தி பிரியவில்லை, எதுகை இல்லை, மோனை இல்லை, சீரும் தளையும் சரிப்பட்டு வரவில்லை, திருவாய்மொழி படித்து அதையே காப்பி அடிக்கிருய்" என்று கூற வில்லை.

இந்தக்காலம் போல (இப்போது தமிழ் கற்ருேருக்கு) குறிப்பாகக் கவிஞர்களுக்கு, சினிமாத் தொழிலில் ஈடுபட்டால் கொஞ்சம் பணம் வருகிறது. அந்தக் கவிஞர்கள் அட்டை போல அந்தப் பட முதலாளிகளை ஒட்டிக்கொள்ளுகிருர்கள். "மன்னவனும் நீயோ" என்று பாடிய கவிஞரின் மரபு என்பதை மறந்து எடுபிடி வேலைகள் செய்கிருர்கள். தப்பித்தவறி சோற்றுக்குத் தாளம் போடும் கவிஞர்கள் அந்தப் பக்கம் தலைகாட்டினுல் போதும். தொலைந்தது" — இது எடுபடாது நீர் இதற்கு முன்னர் எந்தப் படத்தில் எழுதினீர்கள், ஒரு படமாவது எழுதிவிட்டு எங்களிடம் வாங்க ஐயா, சங்கீத வித்வான் (மேற் பார்வையாளர்) இதை ஒப்பமாட்டார் என்று ஓலமிட்டு அந்தக் கவிஞரை விரட்டியே அடிக்கிருர்கள். என்ன கொடுமை! இவர்கள் மாம்பழக் கவிச் சிங்க நாவலரின் திறந்த விரிந்த மனத்தைக் கண்டு இனியாவது புதுக் கவிஞர்களுக்கு உதவ முன்வரவேண்டும். "கவிதை உயர்ந்தது" என்று சொல்ல முடியாமற் போனுலும் மட்டமானதல்ல எளிதில் பொருள் விளக்குகிறது" என்று கூறி சில திருத்தம் இனிதாகக் கூறி, அவர் உணவருந்த வழி செய்து, மறுநாள் மன்னனைக் காணக் கூட்டிச் சென்ருர் அந்த அரிய மாம்பழம்.

மன்னர் கவிஞரையும், வந்தவரையும் வரவேற்ருர். வந்தவரை மன்னனுக்கு அழகிய முறையிலே அறிமுகம் செய்வித்து, அவர் வந்துள்ள நோக்கத்தையும் மாம்பழம்

கூறினர். அரசரும் அவசியம் அவரை ஆதரிக்கவேண்டு மென்றும் வேண்டினர். அரசர் வேண்ட, வந்த அன்பர் கவிதையைப் பாடினர். நாவலர் அந்த அன்பர் மகள் திருமணச் செய்தியையும் எடுத்துரைத்தார். மறுநாள் சேதுபதி வந்த அன்பரின் மகள் திருமணத்திற்காகும் பணத்தைத் தந்து அனுப்பினர். பணத்தைப் பெற்றுக் கொண்டவருக்கு பேச முடியவில்லை. உணர்ச்சி மேலிட்டால், மாம்பழத்தின் குணநலத்யையும், புலவர்களைப் போற்றும் பெருங் குணத்தையும் போற்றிச் சென்றூர். மன்னன் தன் வேண்டுகோளின்படி செய்த உதவியை, மாம்பழக் கவிச்சிங்கம் நினைத்து நினைத்து மகிழ்ந்தார். மன்னனின் பெருங்குணத்தை எண்ணினர்.

"சேது மன்னன், பொன்னுச்சாமி என்னும் அரசே! உங்கள் பிள்ளைகளைப் போன்றவர்களும், கல்வி வளம் மிக்கவர் களுமான புலவர்களை, அவர்கள் பால் ஏற்பட்ட அன்பினுல் சீராட்டிப் பெருமையுறச் செய்தும், அவர்கள் உண்டு வளம் பெறுவதற்குப் பணத்தை வாரி வாரிக் கொடுத்து, நீங்கள் வளர்க்கிறீர்கள். அக் கவிவாணர்களுக்கு நீங்கள் அன்னை யைப்போல் விளங்குகிறீர்கள்" என்று பாடி வணங்கினர் சேதுபதியை. இன்று பழநி மாம்பழக் கவிச் சிங்கம் போன்ற விரிந்த மனம் கொண்ட கவிஞர்களும், அத்தகைய கவிஞர்களை ஆதரிக்க, சேதுபதி போன்ற (மன்னர்கள் கிடைக்காவிட்டாலும்) மனம் படைத்தவர்களும், அன்னை மொழியாம் தமிழ் மொழியை வளர்க்கத் தேவைப்படுகிருர் கள். இக்கருத்தை மாம்பழம் கீழுள்ள பாவில் காட்டுகிருர்.

சேயே யனையர் செழும்புலவோ ரீன்றெடுத்த
தாயே யனையைநீ பொன்னுமன்னு—தூய
கனங்கொடுத் தன்னேர்மேற் கனியுமன்பா
லுண்ணத்
தனங்கொடுத்து நீவளர்ப்ப தால்!

25

அனுபவதேம்

மனிதன் எப்படி வாழவேண்டும்? மாமனிதனாக மனிதன் வாழவேண்டும். மாமனிதன் யார்? காரில் போகும் கன தனவான் மாமனிதனா! பெருமைகளும், அருமைகளும் பெற்றவன் மாமனிதனா! தன் தவறை உணர்ந்து, மீண்டும் அத்தவறு தன் வாழ்க்கையில் ஏற்படா வண்ணம், பிறருக்கு உதவி, அறவாழ்க்கை வாழும் அரியவரே மாமனிதன். முன்பு அயோக்கிய சிகாமணியாக இருக்கலாம். பொய் வேடம் பூண்டு, மெய்த்தவத்தவர் என்று நடித்திருக்கலாம். காலணா தர்மம் செய்யாத கர்ணப் பிரபுவாக இருந்திருக்கலாம். அடைந்த அறத்தை மறுத்த அநியாயக்காரராக இருந்திருக்கலாம். ஆனால் திருந்திவிட்டால் அவன் மாமனிதனே!

ஒரு பணம் மிகுந்த பெரியவரை இருவர் அணுகினார்கள். அன்பரே! நாங்களும், அந்தத் தவத்தவரும்கூடி நற்பணிகள் பல செய்ய இருக்கிறோம். நற்பணிகள் பல செய்கின்றோம். இன்னும் நன்கு பணியாற்ற இடம் வேண்டும். பொருள் வேண்டும் என்று வேண்டி நின்றார்கள். "அப்படியே ஆகட்டும். இந்த இடத்தை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று இருவரும், மெய்த்தவரும் கொஞ்சமும் எதிர்பாரா வண்ணம் மாடமும், கூட மும்நிறைந்த பெரிய இடத்தை அந்தப் புண்ணியர் தருகிறார். தவத்தவர் இடத்தை அடைகிறார், பணியாற்ற என்று. ஆனால் அந்த இடத்தை அடைந்தவுடன், தவவேடம் பூண்டவர் சுயநலம், பணத்தாசை கொண்டு, அந்த அன்பர்களையும் இடம் தந்த வள்ளலையும் விரட்டுகிறார். ஆனால் தொண்டு மட்டும் தொடர்கிறது என்று கூறுகிறார். மக்கள் மாடம் ஏது, கூடம் ஏது என்று கேட்டால், "நான் ஈட்டிய நற்பொருளால் விலைக்கு வாங்கினேன், என்று கூறுகிறார். இது மாமனிதன் செயலா? இது அறமா? இது இழிசெயல் அல்லவா? ஆகவே மாமனிதன் வேடத்தில் இல்லை. அவன் செய்யும் செய்கையிலேதான் மாமனிதன் காட்சி அளிக்கிறான்.

மாமனிதர்கள் அறத்தை வளர்த்து, மறத்தை ஒழிக்கிறார்கள். அவர்கள் தவறு செய்யாதவர்கள் அல்ல. தவ

றியவர்கள் தான். ஆனால் திருந்தியவர்கள். தாங்கள் வாழ்க்கையிலே தவறிய இடத்தைத் தெரிந்து, அறிந்து உணர்ந்து இந்த அனுபவத்தோடு தங்கள் வாழ்க்கையில் மீண்டும் அத்தவறு ஏற்படாமலும், அதே போல தவறுகள் பிறர் வாழ்க்கையில் ஏற்படாமல் இருக்கவும், விளக்கங்கள் தந்து மக்களைக் காப்பாற்றுகிறார்கள். வாய்மையும் தூய்மையும் மனத்தே கொண்டு, தங்கள் அனுபவத்தை மக்கள் உய்ய, மக்கள் மன்றத்தில் வைக்கிறார்கள் அந்த மாமனிதர்கள்.

அத்தகைய தெய்வப் பெரியார்களிலே தலை சிறந்தவர் அருணகிரிநாதர். வாக்கில் வல்லவர் அருணகிரி. அவர் அருளிய திருப்புகழ் அமுதை உண்ணாதவர்கள் தமிழ் படித்துப் பயன் இல்லை என்று கூறலாம். கடல் மடை திறந்தது போல, எளிய நடையும், கடிய நடையும் கலந்து ஒலிக்கும். சந்தப்பாக்கள் எண்ணிறந்தவற்றைச் சந்த வேற்றுமையோடு பாடிய ஆற்றல்மிகு அருணகிரியாருக்கு நிகர் யாருமில்லை. அருணகிரி அமுதமும் அள்ள அள்ள, கொள்ளக் கொள்ளத் தெவிட்டாதது.

'தேனை வடித்துச் சொரிந்து, கொதிக்கின்ற பாலுடன் ஒக்கக்கலந்ததோ, சீனியில் விட்டுப் பிசைந்ததோ, பல கனிவகைதாமோ, கனிகளுள் நல்லனவாகப் பொறுக்கி எடுத்த சாறோ! பதத்தோடு எடுத்த பாகோ! இவையெல்லாம் சேர்ந்த உருண்டையோ. தித்திப்புப் போதுமா! இப்படித் தித்திக்கும் திருப்புகழாக பதினாறாயிரம் அருணகிரி அருளியதாக அறிஞர் செப்புவர். இங்கும் 'காலக்கறையான்' தன் வேலையைக் காட்ட எஞ்சியது ஓராயிரம். அதிலும் பிழையும், பாட வேற்றுமையும் ஆங்காங்கே தோன்றுகின்றன. நம் முன்பு கண்டது போலவே இருவரும் தனது வாழ்க்கை வரலாற்றை கூறிச் செல்லவில்லை. முறையான வாழ்க்கை வரலாற்றைக் கூறுவாருமில்லை.

நலல குணமும், பெருந்தன்மையும், கூர்ந்தமதியமுடையவர் அருணகிரிநாதர். வடமொழியும், தமிழும் நன்கு கற்றவர் தங்கு தடையின்றி விரைந்து கவி பாடும் வன்மை பெற்றவர். ஆயினும் சிற்றின்பத்தில் மூழ்கித் திளைத்தவர். அதனால் நோயுற்றுப் பலகால் உழன்றவர். மைதீட்டிய

விழியும், மருண்ட பார்வையும், திரண்ட கொங்கையும், முத்துப்பல்லும், விற்புருவமும் கொண்ட மாதர்தம் எழிலில், மனத்தைக் கொடுத்து, அவர்கள் தந்த இன்பத்தில் மூழ்கி, அதன் பயனாக வெட்டையும், குட்டமும் கொண்டு, அழ கெல்லாம் அழிந்து, எந்த உடம்பைப் பொன்நிற உடம்பு என்று போற்றினார்களோ, பூரித்த தோள்களைக்கண்டு வலிய வந்து அணைத்தார்களோ, அதே ஆரணங்குகள் ஏசவும், பேசவும் மனம் நொந்து உடம்பு வெந்து, ஆற்றொணாத் துய ரினால், அழுது, அழுது கண்ணீரால் தான் செய்த பாபங் களைக் கழுவி "எத்தனைப் பெண்களைக் கெடுத்தேன். எத் தனை பேருக்கு இன்னல் இழைத்தேன், கொடுமை செய் தேன்" என்று நெஞ்சம் குமுறி, கொதித்துத் தான் செய்த தவறை உணர்ந்து திருவருணைக் கோபுரத்திலே ஏறி நிலம் நோக்கிப் பாய்ந்தார் உயிரை மாய்க்க.

நெஞ்சக்கல் இளகிற்று. அகந்தை அழிந்தது. ஆணவம் ஒடுங்கியது. நான் என்னும் செருக்கு அற்றது. பற்றும், பாசமும், நேசமும் ஆசையும் ஒழிந்தது. "மோசம் செய்தேன், மோகன விழிகொண்ட மங்கையரை. நாசம் செய்தேன் நம்பியவரை. ஆசைகாட்டி அழித்தேன், அண்டியவரை. காசைப் பெரிதாய் எண்ணி வட்டிமேல் வட்டி வாங்கினேன். எழுத்தையும், பேச்சையும், மாற்றி னேன் பணத்தாசையால்" என்று உள்ளம் அழுதது. அருணகிரி அதற்கு முன் அற்பன். இந்த எண்ணத்திற்குப் பின் மாமனிதன்.

முருகன் அருள் பெற்றுய்ந்தார்; சித்தி பெற்றார். ஆசு கவி பாடும் ஆற்றல் பெற்றார். அவன் அருள் கிட்டியது. பிணி பறந்தது. மனம் நிறைந்தது. குணம் சிறந்தது. கனம் குறைந்தது. ஞானம் பிறந்தது. சிற்றின்பம் செத் தது. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த புண்ணியர், அருணகிரி. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த அருணகிரி தந்த திருப்புகழ் அனுபவவேதம். செவ்வேள் திருவடி போற்றிய செந்தமிழ் முனிவர், செப்பிய செம் மொழிகள் வாழ்க்கையைச் செம்மை செய்வன. செருக்கு அறுப்பன.

செந்நெல்லும், கன்னலும் செழித்தோங்கி வளர்வதும், சலசலவென ஆறுகள் ஓடவும், ஓவென அருவிகள் கொட்டவும், மரகதப் பச்சை வெளிகள் நீக்கமற நிறைந்ததும், தென்னஞ் சோலைகள் கொண்டதும், நான்கு பக்கமும் அலைகடல் பாடவும், ஆடவும் அமைந்த அழகுத் திருநாடு சிங்களம். ஈழத்திலே கதிர்காமத் தலம் முருகக் கடவுள் அருளைப் பெறுதற்குரிய சிறப்புத்தலம் என்று சான்றோர் செப்புவர். கதிர்காமக் கந்தனைப் போற்றுகிறார் அருணகிரியார். அவரின் அனுபவம் கொட்டுகிறது. தொடுத்த வாள்போல கண்களை விழித்து, மார்பிலுள்ள அழகிய முலையை அசைத்து, அந்த அசைவைக் கண்டுவிடுவார்களோ என்று முந்தானையால் மறைத்து, மின்னெனெ, (இமைப்பொழுது) புடவையைத் தளர்த்திக் காட்டி உயர்ந்த ஒழுக்கத்தை, உயிரைக் காட்டிலும் மேலானதைப் பறிக்கும் பாவையர்கள்.

பறித்துக் கொள்ளக் கூடியவர்களுமாகிய கொளு மாதர்கள், இன்பம் பருகி ஆவென்று நகைத்து மேல் விழ, முடித்த வார்குழல் விரித்து, உதடுகள் சிவக்க, வாயில் வெற்றிலை அடக்கி, அறிவை மயக்கும் காமத்தின் வழியே சென்று, படுத்த பாயில் அணைத்து (கட்டித் தழுவி) மாமுலை பற்றி மார்போடு அழுத்தி, வாயிதழ் கடித்து நாணத்தை அழித்த (இப்படிப்பட்டவர்களைக் கண்டால் நாணம் எங்கு நிற்கும்). பாவிகள் வலையாலே நான் கண்டது என்ன! கணநேர இன்பம். அந்த இன்பம் எத்தகையது. சின்ன இன்பம். சிற்றின்பம். அதன் பலன் என்ன? இதோ கேளுங்கள்! ஒன்ரு! இரண்டா! நோய்ப் பிணிகள் பெருகின.

முதலில் அசதி. பிறகு படுக்கை. அதனால் உடல் வெளுத்தது. உதடு வெளுத்தது. கண்கள் சுருங்கின. மிகுந்த காமத் தீயால் கண்ணைச் சுற்றிக் கருவளையம் கட்டியது. நாக்கு வெளுத்தது. உருசி தெரியவில்லை. வாய் நாற்றமெடுத்தது. அழுக்கு, இரத்தம், பீளை, கறள், குரும்பி, சலம், தாது, நகம், மயிர், மண்டி, மூக்குச்சளி, வேர்வை மிகுந்து, பசிப்பிணி வாட்டவும், தாகம் மிகுத்திடவும், உயிர் தாங்கி உழன்றேன்.

இங்கு இரண்டு வர்ணனை தருகிறார் முனிவர். முன்னது சிற்றின்பம். பின்னது அதனால் வந்தகேடு. இந்தக் கேடு மால்மருகன், கந்தன் கருணையால் அகன்றது. அந்த மால் எப்படிப்பட்டவன் என்றும் அருணகிரி அறிவுறுத்துகிறார். அருணகிரியார் ஒரு சமரச வேதாந்தர். சிவ வைணவ பேதமற்ற பெரியவர். உண்மையான வழியைக்காட்டிய உத்தமர். சினத்தால் வந்த தாடகையின் கோபத்தை ஒரு அம்பினாலே தடுத்து, கௌசிக மாமுனிவனின் யாகத்தை நிறைவேற்றி, மேருகிரியை ஒத்தவில்லை முறித்துச் சீதையைக் கல்யாணம் செய்தவர் திருமால், இராமன். அத்தகைய திருமாலுக்கு மருமகன் கந்தன். ஆக்கும் தொழில் அயனுக்கு. அவனை அலறவைத்து, அவனுடைய ஒரு தலையைக் கையினாலே கிள்ளி தம் கையில் தாங்கியவரும், நெற்றிக் கண்ணை விரித்து நெருப்பைக் கக்கிக் காமனை எரித்த சிவபெருமானின் மகனுமாகிய மாமகனே!

சிவனுக்கும் குருநாதனே! உன்னை எத்தனை தரம் கும்பிட்டால் என்ன? குறைவுண்டோ. குருசாமி! வரிசையாகயுள்ள ஆயிரம் பண முடிவுகளிலும் நஞ்சைத் தாங்கி இருக்கும் ஆதிசேடன் நடுக்கமுறவும், கிரவுஞ்சமாமலை பிளவுபடவும், வஞ்சமிக்க அரக்கர்களின் தலைகள் பதைபதைக்கப் போர் செய்யும் மயில் வீரனே. அறம் வளர்த்துப் பெருக்கி அன்னை உமையம்மையார் மகிழ, வள்ளி தெய்வயானையாருடன் சோலைகள் நிறைந்த அருக்கோணமலை என்னும் தலத்தில் உலாவும் பெருமாளே. முருகப பெருமானே. அஞ்சலி. அஞ்சலி. ஆயிரம் கோடி அஞ்சலி செய்கிறேன். அருள்வாய், கருணை புரிவாய் கந்தனே. முருகனே என்று பேசி அஞ்சலி செய்கிறார், அருணகிரிநாதர் தனது அனுபவ வேதமாம் திருப்புகழ் மூலம்.

" தொடுத்த வாளென விழித்து மார்முலை
யசைத்து மேகலை மறைத்து முடிகள்
துடித்து நேர்கலை நெகிழ்த்து மாவியல்

—கொளு மாதர்

சுகித்த ஹாவென நகைத்து மேல்வீழ
  முடித்த வார்குழல் விரித்து மேவிதழ்
  துவர்த்த வாய்சுரு ளடக்கி மால்கொடு
  —வழியேபோய்ப்
படுத்த பாயலி லணைத்து மாமுலை
  பிடித்து மார்பொடு மழுத்தி வாயிதழ்
  கடித்து நாண மழித்த பாவிகள்—வலையாலே
பலித்து நோய்பிணி கிடத்து பாய்மிசை
  வெளுத்து வாய்களு மலத்தி ளுயென
  பசித்து தாகமு மெடுத்தி டாவுயி—ருழல்வேனே
வெடுத்த தாடகை சினத்தை யோர்கணை
  விடுத்து யாகமும் நடத்தி யேயொரு
  மிகுத்த வார்சிலை முறித்த மாயவன்—மருகோனே
விதித்து ஞாலம தளித்த வேதனை
  யதிர்த்து ஓர் முடி கரத்து லாயனல்
  விழித்து காமனை யெரித்த தாதையர்—குருநாதா
அடுத்த ஆயிர விடப் பணு முடி
  நடுக்க மாமலை பிளக்க வேகவே
  டரக்கர் மாமுடி பதைக்க வேபொரு—மயில் வீரா
அறத்தில் வாழுமை சிறக்க வேயறு
  முகத்தி னேடணி குறத்தி யானையொ
  டருக்கொ ணுமலை தருக்கு லாவிய—பெருமாளே!''

16

ஆனந்தரங்கமணி

வெள்ளைக்காரர்கள் தென்னுட்டில் செல்வாக்குப் பெறுவதற்கு முன்னர், பெரும் செல்வாக்குடன் வாழ்ந்தவர்கள்

பிரெஞ்சுக்காரர்கள். ஆனால் கால மாறுபாட்டிலே செல்வாக்குடன் வாழ்ந்த பிரெஞ்சு ஆட்சி, (தென்னாட்டு அரசுகளையும், மக்களையும் ஆட்டிப்படைத்த) கிளைவ் என்ற ஒரு குமாஸ்தாவினால் தூக்கி எறியப்பட்டது. ஆற்காடு, திருச்சி முற்றுகைக்குப் பிறகு பிரெஞ்சுக்காரர்களுடைய ஆதிக்கம் அடியோடு ஒழிந்தது என்று கூறலாம். பிரெஞ்சு அரசை நிலைநாட்டப் பாடுபெற்ற தூப்ளே மனமுடைந்து தன் நாட்டிற்குச் சென்றான். ராபர்ட் கிளைவின் முயற்சியால் ஆங்கில அரசு மேலும் மேலும் கொடி உயர்த்திக் கொண்டே சென்றது. இவ்வாறு பிரெஞ்சு ஆட்சியும், ஆங்கில ஆட்சியும் இந்த மண்ணிலே ஊன்ற முயன்ற போது, போட்டிகளும், பொறாமைகளும் இந்த நாட்டைச் சேர்ந்த மக்கள் பலரையும் பிடித்து ஆட்டின. சுயநலத்தால் நாட்டையும், மக்களையும் மறந்து அன்னியன் விரித்த வலையில் வீழ்ந்து, நாட்டு மக்களை ஒடுக்கவும், அடக்கவும் அவர்களுக்கு உதவியர்கள் பலர் உண்டு. "நாம் இந்த நாட்டில் பிறந்தோம். இது நமது நாடு. இது நமக்கே உடமை. இதற்கு நாமே சொந்தம். ஆனால் காலத்தின் கோலத்தினால் நாம் அன்னியருக்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறோம். காலம் வரும், விடுதலை பெறுவோம்" என்ற எண்ணம் கொண்டு, அன்னியன் பணியில் ஈடுபட்டாலும் நாட்டு மக்களை மறந்தவர்களாக, பதவியே சிறந்ததுஎன்ற பித்தர்களாக வாழாமல் மக்களுக்கு உதவி, பலர் வாழ்ந்தார்கள்.

அத்தகையவர்களில் ஒருவர் ஆனந்தரங்கப் பிள்ளை என்ற அரியவர். புதுவை அலறுகிறது. எட்டுத்திக்கும் ஆங்கில பீரங்கிகள் முழங்குகின்றன. குண்டுகள் பறக்கின்றன. ஊரார் பயத்தாலே பதறுகின்றனர். தப்பியோட வழியில்லை. கோட்டை வாயில்கள் மூடப்பட்டுள்ளன. எங்கும் தீ, கொள்ளை, பசி, பசி, பட்டினி! உணவெல்லாம் பட்டாளத்திற்குப் போய்விட்டன. ஊரைக் காத்தார் ஒரு உத்தமர். அவர் தான் ஆனந்தரங்கம். அந்தக் காலத்து வள்ளல்கள் போல, தானியக் கிடங்கைத் திறந்துவிட்டார். மக்கள் பசியைப் போக்கினார்.

திவான் திருவேங்கடம் பிள்ளை பிரெஞ்சுக்காரரின் நண்பர். அவரை மக்கள் போற்றினர்கள். அவர் சென்னையிலும், புதுவையிலும் வாணிகம் நடத்தினர். அவர் மனைவி மகாலட்சுமி போன்ற லட்சுமி அம்மாள். இந்த இருவரும் பெற்றெடுத்த பிள்ளை தான் ஆனந்தரங்கம். அக்காலத்திற்கேற்றபடி ஆனந்தரங்கம் பல மொழிகளை அறிந்து தேர்ந்தான். தமிழ், தாய் மொழி. அந்த மொழியிடத்தே அளவற்ற அன்பு. தெலுங்கு தெரியும், ஆங்கிலம் அறிவார், பிரெஞ்சு பேசுவார், உருதுவும் கற்ருர். தந்தையைப் போல வாணிபத்திலும் வல்லவர். இவருடைய உறவினரும் வியாபாரம் செய்தனர். இவரின் உறவினரான நைனியப் பிள்ளை அன்னியரால் மதமாற்றக் கொடுமை செய்யப்பட்டார். இவரைக் கோட்டையில் சிறை வைத்தனர். ஆங்கே இவர் இறந்தார். அரங்கத்தின் தந்தை பிரெஞ்சு மன்னன் லூயிக்கே கடிதம் எழுதினர். மதமாற்றி, பிரெஞ்சுக்காரர் செய்யும் கொடுமைகளை விவரித்து. இதனல் மதமாற்றக் கொடுமை குறைந்தது! இந்துக்களிடம் பெரும் செல்வாக்கு பெற்ருர் ஆனந்தரங்கத்தின் தந்தை. அரசாங்கமும் ஆதரவு தந்து தக்க பதவி கொடுத்தது. திருவேங்கடம் பிள்ளை இறந்த பிறகு, ஆனந்தரங்கம் திவான் பதவி பெற்ருர். தூப்ளேயின் வலக்கரமாய்த் திகழ்ந்தார். அரசியல் சாணக்கியம் அவரின் பெருமைகளை உயர்த்தியது. தமிழரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாத்தே வந்தார். பல்லக்கிலே, பவனி வருவார் பிள்ளையவர்கள். இடுப்பிலே வாள், தலையில் சரிகைத் தலைப்பாய், முறுக்கி விட்ட மீசை, அஞ்சாத நிமிர்ந்த நெஞ்சம்.

ஆனந்தரங்கம் "தினசரிக் குறிப்பு" எழுதி வந்தார். அதிலிருந்து ஏராளமான சரித்திரக் குறிப்புகளும், அந்தக் கால வாழ்க்கை வரலாறும் கிடைக்கின்றன. ஆனந்தரங்கம்பிள்ளை வாணிகத்தை வெகு திறமையோடு நடத்தினர். "ஆனந்தப்புரவி" என்ற கப்பலையும் ஓட்டினர். பிள்ளை வெகு திறமையோடு கணக்கையும் (வரவு-செலவு) வைத்திருந்தார். அவர் கணக்குகள் எழுதிய சில பேரேடுகள் இன்றும் காணக்கிடைக்கின்றன. அவர் பெயரால் இன்று புதுவையில் ஒரு தெரு இருக்கிறது. "ரங்கப்

பிள்ளைத் தெரு" அத்தெருவிலே அவர் கட்டிய அழகிய மாளிகை இருக்கிறது. அழகிய பூவேலைகளும் பூந்தோட்டமும், நீரூற்றுகளும், யானை குதிரை கட்டும் லாயங்களும், பல்லக்கு வைக்குமிடமும் இன்றெல்லாம் பார்த்துக் கொண்டே இருக்கலாம். தூப்ளே கையெழுத்திட்ட சாசனங்களும் இன்னும் பலவும் அங்கே உள்ளன. இவரின் தினக் குறிப்பு காலியஸ்மான்ட் பர்ன் என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது. இத்தினசரி இந்தியாவில் இணையற்ற சரித்திரப் புகழ்பெற்று விளங்குகிறது. பதினைந்து பகுதிகள் கொண்ட இக்குறிப்பு, தூப்ளே காலத்தையும், அக்கால கர்நாடகத்தையும், நாகரீகத்தையும், அன்னியர் அடித்த கொட்டத்தையும், படம் பிடித்துக் காட்டுகிறது. ஒரு மனிதனுக்கு செல்வமும், செல்வாக்கும் இருந்தால் மட்டும் போதுமா? ஈகையும் சேர்ந்திருந்தாலே வாழ்க்கையிலே முழுப்பயனும் அமைந்ததாகப் பொருள் கொள்ள முடியும். பிள்ளைக்கு முன் எத்தனையோ அறிஞர்களையும், அரசியல் மேதைகளையும் இந்தத் தமிழகம் கண்டிருக்கிறது. அவர்களில் எத்தனை பெயர்களுடைய பெயர் மக்கள் மன்றத்திலே நிற்கிறது. ஈகையால், நொந்தவர்களுக்கும், வந்தவர்களுக்கும் வாரி வாரி வழங்கினர், பகைவர்களும், மெச்ச ஆனந்தரங்கம்.

கவிஞர்களும், புலவர்களும் பிள்ளையைச் சூழ்ந்தே நிற்பர். புலவர்களுக்கு அவர் பணம் தந்தார் என்பதைவிட கொட்டினர் என்று கூறுவதே பொருந்தும். ஆனந்தரங்கம் வயலில் அறுவடை நடந்தது. அதை அவர் பார்த்துக் கொண்டிருக்கும்போது புலவர் ஓடிவந்து பரிசு கேட்டார். அப்போது அவர் சிந்திய தானிய மணிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார். வந்த புலவர் மறுபடியும் பறந்தார்! "ஏனையா பறக்கிறீர்கள்" என்றார். புலவரோ "இந்தா பிடி சாபம்!" என்று கோபத்திலே, "கொக்கு பறக்கும், குருவி பறக்கும், குயில் பறக்கும், நக்கிப் பொறுக்கிகள் (இதை ரங்கப் பிள்ளையைச் சுட்டிச் சொன்னது) பறப்பர்" என்று பதறினர். பிள்ளை புலவரை வீட்டிற்குக் கூட்டிச்சென்று இலை பரப்பி பணத்தை அதிலே வைத்தார். பசியோடு வந்த புலவர் விழித்தார். "புலவரே! பசியைத் தீர்ப்

பது நெல்மணி! சிந்திய மணியைப் பொறுக்கியது கேவலம் அன்று" என்று கூறி உணவிட்டு, உண்ணச் செய்து, மேலும் பொருளும், ஆடையும் தந்து அப்புலவரை அனுப்பினர். அருணசலக் கவிராயரின் இராமாயணக் கீர்த்தனை முழுதுவம் கேட்டு மெச்சினர், ஆனந்தம் பல புலவர் மணிகள் போற்ற வாழ்ந்தவர். தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளும் அவருக்குப் பாமாலை சூட்டின. சதாசிவ தேசிகரின் ஆனந்தரங்கக் கோவை, தியாக ராசப் புலவர், தெலுங்கில் கஸ்தூரி ரங்கய்யர் இயற்றிய "ஆனந்தரங்க சந்தமு" சீனிவாச கவியின் ஆனந்தரங்க விஜயம்; மதுர கவிராயர், சவ்வாதுப் புலவர் இப்படி பல புலவர்களும், அவர்கள் இயற்றிய நூலும் பிள்ளையின் பெருமைகளையும், அருமைகளையும் எடுத்தோதுகின்றன.

சவ்வாதுப் புலவர் இசுலாம் சமயத்தைச் சார்ந்தவர். பாண்டிய நாட்டில் இளையான்குடிக் கருகிலே பிறந்த புலவர். இளமையிலேயே கவிபாடும் திறமை பெற்றவர். இராமநாதபுரம் இரகுநாத சேதுபதியின் அவைக்களப் புலவராகப் பணியாற்றியவர். சேதுபதியின் மீது பல பாடல்களை இயற்றியவர். பல இஸ்லாமிய மத சம்பந்தமான நூல்களை இயற்றிய அல்லாவின் திருத்தொண்டர். ஆனால் அனைத்திலும் உயர்வாய்த் தமிழைப் போற்றிய பெரியவர். இவர் ஆனந்தரங்கம் பிள்ளையைக் கண்டு, அவர் ஆற்றும் நற்பணிகளையும், அவர் புலவர்களுக்கு வற்றாது சுரக்கும் சுரபியாகவும் துலங்குவதைக் கண்டு மனம் நிறைந்து போற்றுகிறார், வாழ்த்துகிறார். தாமரை மலர்கள் ஆதவன் எழுந்தாலொழிய அலரமாட்டா! சகோரப் பறவைகள் நிலவின் வருகையைக் கண்டால்தான், மகிழ்ச்சி கொள்ளும். அந்த மகிழ்ச்சி பொங்குகின்றபோது அவை கூவும். மயிலை ஆடு என்றால் ஆடா. வானத்திலே கருமேகங்களைக் கண்டால் தானே தோகை விரித்தாடும். தமிழையே பாடுகின்ற புலவர்களுடைய கண்கள் மகிழ்ச்சி அடையுமாம். அது எப்படி! எப்போது! கண்கள் ஏன் களிப்படையவேண்டும். ஆனந்தரங்க வள்ளல் தமிழ் பாடும் புலவர் மணிகளுக்கு பொன்னையும், மணியையும் அள்ளி அள்ளிக் கொடுக்கிறன். ஆகவே அந்தக் கையைக் கண்டால் புலவர்களு

டைய கண்களிலே ஒளியும், உற்சாக வெள்ளமும் ஓடி வருகின்றனவாம். அத்தகைய வள்ளல் இன்றும் தேவை அன்னை மொழியை வளர்க்க! எத்தகைய வள்ளல்! இதோ சவ்வாதுப் புலவர் காட்டுகிருர்! சிந்திய மணியாம் செந்நெல் மணியைப் பொறுக்கி எடுதத கண்மணியை,

பானுகி ரணம்பார்க்கும் பங்கே ருகம்நிலவு
தானும்வரப் பார்க்குஞ் சகோரங்கள்—
வானமரு
மையைப்பார்க் கும்மயில்கண் மாவிசயா
னந்தரங்கன்
கையைப்பார்க் கும்புலவர் கண்.

17

பல்லவத்தின் செல்வம்

தில்லையிலே எல்லையில்லாத ஒரே ஆட்டம். பரமன் ஆனந்த நடனம் ஆடுகிருன். சிவக்கோலத்திலும், தவக்கோலத்திலும் கண்ட பரமனை ஆட்டத்திலே காண்கின்ருேம், சிதம்பரத்திலே. உலகம் அசைவில்தான் இருக்கிறது; ஆட்டமும், பாட்டமும், ஓட்டமும் இல்லையானல் உலகம் ஒடுங்கிவிடும் என்பதை உணர்த்துகிறது, தில்லைப் பதியிலே நடக்கும் நடனம். தில்லையைப் பூலோக கைலாசம் என்று சிவநேசச் செல்வர்கள் போற்றி வணங்குவார்கள். இதற்கு நேர் மாருகப் பொன்னி நதிக்கரையிலே எந்தக் கவலையும் இன்றி, தன்னை மறந்து உலகை மறந்து, பரமாத்ம துயில்கொண்டிருக்கிருர் ஒரு பெருமான். அவர் தான் அரங்கன்.

அரங்கன் மகிமையை அறிந்தவர் யார்? தெரிந்தவர் யார்? எதற்கு அரங்கன் இந்த ஆழ்ந்த நித்திரையில் (தென்னரங்கத்திலே, பொன்னரங்கத்திலே, ஆதிசேசன் மேல்) மூழ்கி இருக்கிருர்? அரங்கத்தின் அமைப்பு

என்ன? அரங்கம் ஒரு தீவுபோல அமைந்துள்ளது. மூன்று பக்கமும் காவிரி நதி அரங்கனுக்கு மாலையிட்டுச் (இரண்டாகப் பிரிந்துசெல்கின்றது) செல்லுகின்றது. இதை வைணவர்கள் வைகுண்டம் என்று வணங்குவார்கள். பொன்னி நதி பாயும் பொன்னரங்கம். பொன்னி நதிக்கரையிலே, மலரும், செடியும், கொடியும், மாவும், பலாவும், வாழையும், கமுகும், இன்னோரன்ன இயற்கைச் செல்வங்களும் செழித்துக் கொழித்து நிற்கின்றன. பார்க்குமிடங்களில் எல்லாம் நெற் பயிர்கள் அசைந்தாடும் பசுமைக் காட்சிகள். நோக்குமிடமெல்லாம் நீண்டு உயர்ந்த தென்னந் தோப்புகள். இந்த இயற்கை அழகு போதாது என்று அரங்கன் மேலும் மனமும் மையலுற மந்தகாசமும், வனமாலை அணிமார்பமும், சுதிகொண்டமறை தேடுகின்ற பதமும், கருணை சொரியும் இரு நயனமும், திருமேனி அழகும கொண்டு தென்னரங்க நகர்தனிலே துயில்கொண்டுள்ளார்.

இந்த அரங்கத்தையும், அரங்கநாதரையும் ஒரு தெய்வப் பெரியார் தரிசித்தார்? அவர் யார்? வைணவ சமய உலகிற்குத்தந்த உத்தம மறை முடித் தேசிகனுர். வேதாந்ததேசிகன் என்றும், நிகமாந்த மகாதேசிகன் என்றும், பல வாறுக அழைக்கப்படும் பெருமையை உடையவர். இன்றைக்குச் சுமார் 676 ஆண்டுகளுக்குமுன்ன (கி. பி. 1268–ம் ஆண்டு) திருவோண நக்ஷத்திரத்திலே பல்லவநாட்டின் தலைநகரமாய் விளங்கிய, காஞ்சிமா நகரிலே திருத்தண்கா என்னும் சன்னதிக்கருகிலே தூப்புல் என்று வழங்கும் இடத்திலே கௌசிக மாமுனிவர் குலத்திலே அனந்த ஆரியன் என்ற மகானுக்கும், தோதாரம்பா என்ற உத்தமிக்கும் பிறந்த இரத்தினச் செல்வமே தேசிகன். திருவோண நட்சத்திரத்திலே பிறந்ததால் "வேங்கடநாதன்" என்று நாமகரணம் சூட்டப்பெற்றுன்.

தக்க காலத்திலே பையனுக்கு (சொந்தக்காரர்) அப்புள்ளாரிடம் கல்வி கற்கச் செய்தார்கள். தென்மொழியும், வடமொழியும், நற் கலைகளும் விரைவிலே தேசிகன் கற்றுக்கொண்டார். இருபது வயதிற்குள்ளே பலவகைக் கலைகள் முழுவதையும், பரிபூரணமாகக் கேட்டும் கற்றும், தெளிந்தும் கொண்டார் தேசிகன். தெரிந்தது

மட்டுமல்ல, தெரிந்தது மட்டுமல்ல. பலருக்கும் எடுத்துச் சொல்லும் ஆற்றலும், ஏற்றமும் பெற்ருர். அதனுல் "தேசிகன்" என்னும் திருநாமம் வழங்கலாயிற்று. அப்புள்ளார் மந்திரங்களையும் உபதேசித்து, அதனுல் சகல சித்திகளும் பெறும்படி ஆசி கூறி அருளினுர், திருவயிந்திரபுரத்தில் பலகாலம் தங்கி, தான் வந்த பணியை எண்ணி, காஞ்சிக்குத் திரும்பினுர். "இல்லறமல்லது நல்லறமன்று" என்றபடி திருமங்கை என்னும் பெண்ணை மணந்து இல்லற வாழ்க்கையை நடத்தினுர். ஸ்ரீ பாஷ்யம் போன்ற நூல்களைப் பலமுறை பிரவசனம் செய்தார். பல நூல்களை வடமொழியிலும், தென்மொழியிலும் இயற்றினுர். ஆறு நூற்ருண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தேசிகனுடைய முறையான வாழ்க்கை வரலாறும் சரியாகக் கிடைக்கவில்லை. வடநாடு முழுவதும் பிரயாணம் செய்து எல்லாத் திருப்பதிகளுக்கும் மங்களாசாசனம் செய்து காஞ்சிக்குத் திருப்பினுர் தேசிகன்.

ஞானம், வைராக்கியம், அனுஷ்டானம் இவைகளிலே சிறந்து விளங்கிய தேசிகனின் பெருமை நாடெங்கும் பரவியது. காஞ்சியிலே தங்கி சம்பிரதாயப் பிரவசனம் செய்துவந்தார். பிரபத்தி மார்க்கத்தின் பெருமையை எடுத்துரைத்து,விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் சிறப்புகளை எல்லோரும் வியக்கும் வண்ணம் பேசியும், சொல்லியும், எழுதியும் வந்தார். செய்ய தமிழ்மாலைகள் பலவும் தெளிய ஓதி, தெளியாத மறைகளைத் தெரியும்படி செய்தார். இராமானுஜர் தன் நீண்ட வாழ்நாள் முழுவதும் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தைப் பரப்பவே அர்ப்பணம் செய்தார். அவரை ஒட்டியே ஒரு நூற்ருண்டுகாலம் தேசிகன் அந்தச் சித்தாந்தத்தைப் பரவச் செய்தார். தன்னுடைய இயற்கை அறிவினுலும், ஞாபக சக்தியாலும், புத்தி கூர்மையினுலும், பரந்த விரிந்த மனப் பண்பினுலும், வாதப் பிரதிவாதங்களிலே தேர்ந்த திறமையினுலும், மேற்படி சித்தாந்தம் ஓங்கி வளர, உயர்ந்து வளர உதவினுர். வாதப் போருக்கேற்ற மிடுக்கும், அடுக்குமொழியும், அஞ்சாமையும், நிமிர்ந்த நெஞ்சமும், நகைச்சுவையும், நடையும் அமைந்தன. அவரது வாதத் திறமையை வடமொழியில் சததூஷணீ

யிலும், தமிழில் பரமதபங்கத்திலும் காணவேண்டும், பல துறைகளிலும் காவியத் துறையிலே காளிதாசன் போல யாதவாப்யுதம், ஹம்சந்தேசம் இயற்றியுள்ளார். இது தவிர ரகஸ்யத்ர ஸாரமும், சில்லரை ரகஸ்யங்களும், மணிப்பிரவாள நடையில் அமைத்து, தத்துவங்களை விளக்கி, திருமந்திரம், த்வயம், சரம சுலோகம் என்ற மூன்று இரகசியங்களையும் பொருளையும், தெளியக் காட்டி, பக்தியென்னும் உபாயத்தைக் காட்டிலும், அனுஷ்டிப்பதற்குப் பன்மடங்கு எளிதாயும், பயன் தருவதில் சிறந்ததுமான பிரபத்தியின் பெருமையே இந்நூல்கள் பேசுகின்றன. எம்பெருமானுடைய கருணையைக் கூறும் தயாசதகம், மூன்றுமணி கால அளவிலே (அரங்கத்திலே) பாடிய பாதுகா சஹஸ்ரம், சங்கல்ப சூரியோதயம் போன்ற நூல்கள் தேசிகனின் பெருமையைப் பேசுகின்றன.

தேசிகனின் பக்தர்கள் வாழக்கையில் பெரும் நிலையில், வளமும், நலமும் பெற்று வாழ்கிறார்கள். தேசிகனுடைய வாழ்க்கையிலே நிகழ்ந்த நிகழ்ச்சிகள் ஒவ்வொருவரும் கூர்ந்து நோக்கவேண்டிய செயல்களாகும். தெய்வ பலமும், மனோபலமும் இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதைத் தேசிகனுடைய வாழ்க்கை எடுத்துக் காட்டுகிறது, மந்திரவாதியை அடக்கியதும், பாம்புகளை மறைத்ததும் கிணறு கட்டியதும், பதினெட்டு பிற மதத்தினர்களை வாதில் வென்றதும் அரிய செயல்களாகும். இவர் பெற்ற பட்டங்களோ, கவிதார் கிக சிம்மம், சர்வதந்தர ஸ்வதந்தர் இப்படிப் பல பல. அரங்கத்திலே அத்வைதிகளுடன் வாதப் போர் நடந்தது. எட்டுநாள், போர்நடந்து, முடிவில் சுவாமிகள், தூப்புல் தேசிகன் ஜெயக்கொடி நாட்டி வெற்றிச் சங்கநாதம் ஊதினார்.

அந்த அரங்கனைக் கண்டதும் ஒரே ஆனந்தம் பல்லவம் தந்த செல்வமாம் மறைமுடித் தேசிகனுக்கு. வடமொழியில் ஸ்ரீமத் ரஹஸ்யத்ர ஸாரம் என்ற நூல் இயற்றினாரல்லவா! அதை ஒவ்வொரு அதிகாரத்தின் பொருளும் பதிய, “அதிகார சங்கிரகம்” என்ற நூலாக 56 பாடல்கள் அடங்கியதாக மிக அழகாகச் செய்துள்ளார். இது தேசிகப் பிரபந்தத்திலே அடங்கியுள்ளது. அரங்கனைக் கண்ட

தும் ஒரே ஆனந்தம்; காஞ்சிக் கவிஞருடைய உள்ளம் குதிக்கிறது. உவகை பொங்கி ஓடுகிறது. அது கவியாகக் கொட்டுகிறது. அரங்கனைக் கண்டு ஆரவில்லை என்கிருர். போதவில்லை. எவ்வளவு அனுபவித்தாலும் தெவிட்டவில்லை. ஏன்? காரணம் என்ன? கருணையே வடிவாய்க் கொண்ட அரங்கன் அல்லவா அங்கு கோயில் கொண்டுள்ளான். தாமரை மலரிலே வசிக்கின்ற பிரம்மதேவன் அயோத்தியா புரியை அரசாண்ட மன்னன், இக்ஷ்வாகு என்பவருக்கு அன்போடு, இந்தக் கோயிலைக் கொடுத்தார். வெற்றிமேல் வெற்றி கொண்டவனும் வாழ்க்கையிலே தோல்வி என்பதையே கண்டறியாதவனும், நிகரற்ற வீரனுகிய ஸ்ரீராம பிரான் வணங்கிய கோயில். இராம இராவண யுத்தத்தில் இராமபிரான் பக்கத்திலே சத்தியமும், நேர்மையும் இருப்பதைக் கண்டு இராமனுக்குத் துணையாகச் சேர்ந்து வெற்றி வாங்கித் தந்த வீடணன் வணங்கிய கோயில். பெற முடியாத, அடைய முடியாத பலன்களெல்லாம் அரங்கனைத் தொழுத அன்றே சேர்க்கும் கோயில. சிறந்து நிற்கும் வேதத்தின் முதல் எழுத்துச் சேர்ந்த கோயில். (வடிவத்தால் பிரணவாகாரமான விமானம் அமைந்த பெரிய கோயில்). அரங்கனைத் தொழுதால், அவனுடைய சன்னதிக்கு வந்தால் தீர்க்க முடியாது என்று சொல்லப்படும் மிகக் கொடிய பாபங்களும், சூரியன் முன்னர் பனிபோல விநாடியில் நீங்கும். ஸ்ரீரங்க க்ஷேததிரம் மிகவும் பெருமை வாயந்தது. மகாதேசிகனுக்கு முன்பும், பின்பும் எத்தனையோ மகான்கள் அந்தப் பள்ளிகொண்ட பரமனைப் பாடி ஆடித் தொழுதார்கள். தாங்கள் கண்ட அனுபவத்தையே வடித்தெடுத்து நமக்குக் கொடுக்கிருர்கள். தேசிகனுடைய தெள்ளு தமிழ்ப்பாவிலே அரங்கத்தின் அனுபவ மகிமை அப்படியே கொட்டுகிறது. பாடப்படத் தித்திக்கிறது. பேசப்பேச ஆனந்தம். ஒருமுறைப் பாட்டைப் படித்தால் போதும். குழந்தைக்கும் புரியும் எளிமை. இனிமை. அதே சமயத்தில் அந்தக் காட்சி நம் கண்முன் ஓடி வருகிறது. திருவரங்கம் எனத் திகழும் கோயிலைப் பல்லவநாடு தந்த செல்வமாம் மகாதேசிகர் மூலம் காண்போமாக.

ஆராத வருளமுதம் பொதிந்தகோயில் அம்புயத்தோ
 னயத்தி மன்னற் களித்த கோயில்
தோராத தனிவீரன் தொழுத கோயில்
 துணையான வீடணற்குத் துணையாங் கோயில்
சேராத பயனெல்லாஞ் சேர்க்குங் கோயில்
 செழுமறையின் முதலெழுத்துச் சேர்ந்தகோயில்
தீராத வினையனைத்துந் தீர்க்குங் கோயில்
 திருவரங்கம் எனத்திகழுங் கோயில்தானே !

28

வாக்குறுதி

வாழ்க்கையிலே சில நோக்கங்களை (மனிதன்) மனத்திலே கொள்ளவேண்டும். இந்த விதமாக வாழ்க்கையை நடத்தவேண்டும். இந்தவிதமான செயல்களை மேற்கொள்ள வேண்டும். மனிதன் உயர்ந்த வாழ்க்கையை அடைவதை இலட்சியமாகக் கொள்ளவேண்டும். உயர்ந்த வாழ்க்கை என்றால், உயரமான மாடமாளிகையில் வாழ்வதா? உயர்ந்தது என்பது எது? சிறந்தது என்பது எது? நல்ல செயல்களெல்லாம் உயர்ந்தவைகள். நல்லது அல்லாத தீய செயல்களெல்லாம் தாழ்ந்த செயல்கள். ஒழுக்கத்தையும், வாய்மையையும், தூய்மையையும், அறத்தையும், அன்பையும் வாழ்க்கையிலே கைக்கொள்வது நல்ல செயல்கள். இப்படித்தான் வாழவேண்டும். கஷ்டமும், நஷ்டமும் வந்தாலும் சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற வேண்டும். வாக்குத் தவறுமல் வாய்மையோடு வாழ்ந்தால் அதைக்காட்டிலும் உயர்ந்த செயல், உயர்ந்த வாழ்க்கை, சிறந்த வாழ்க்கை ஏதும் இல்லையென்று திண்ணமாகக் கூறலாம்.

“பணத்தைப்பற்றிக் கவலைப்படாதே! பணம் எவ்வளவு வேண்டுமானுலும் தருகிறேன்” என்று ஏழை நெஞ்சங்களுக்கு ஆசை வார்த்தை கூறிவிட்டு அருகில் நெருங்கியதும், “எப்போது சொன்னேன்” என்று கூறுவதும், பார்க்

கவே மறுப்பதும், தட்டிக்கழிப்பதும் சொன்ன வார்த்தையைக் காப்பாற்ருதவர்கள் செயல்தானே!.இப்படிப்பட்ட செயல்கள் நாட்டிலே ஏராளம், ஏராளம். ஆனுல் சொன்ன வார்த்தையைக் காக்க அரிச்சந்திரன் போன்ற அரியவர்கள் இருக்கத்தான் செய்கிருர்கள். கௌசிக முனிவனிடம் "உனக்கு நாடு தருவதாக நான் சொல்லவில்லை" என்று கூறியிருந்தால் போதும். முடி இழந்திருக்க மாட்டான். மனைவியை இழந்திருக்கமாட்டான். மகனை இழந்திருக்க மாட்டான். சுடலையும் காத்திருக்கமாட்டான். வாக்கைக் காப்பாற்ற மண்டலத்தை ஆளவேண்டிய மன்னன், மயானத்தில் காவல்வேலை பார்த்தான். வாக்கைக் காப்பாற்றிய வனுக அரிச்சந்திரன விளங்கியதால்தான் வாய்மை விளங்குகிறது. பொய்மை ஒழிகிறது, அழிகிறது முடிவில். அரிச்சந்திரன் போன்ற அறப்பெரியார்கள் இன்றும் இருக்கிருர்கள். அவர்களுக்காகவே மழை பெய்கிறது. நற் செயல்கள் நடைபெறுகின்றன.

தமிழ்நாட்டிலே சேற்றூர் ஜமீன் மிகவும் பழமை வாய்ந்தது. அதை ஆண்டுவந்த ஜமீன்தார்கள் பரம்பரையாக ஈகை,கருணை, வீரம், இவைகளில் சிறந்தவர்களாக விளங்கினுர்கள். அந்த வழியில் வந்தவர் சிவப்பிரகாச துரை என்பவர். அன்பும், பண்பும் நிறைந்தவர். வீரத்திலே சிறந்தவர். தமிழ் பாடும் கவிவாணர்களையும், புலவர்களையும் ஆதரிப்பதிலே இணையற்றவர். இவருக்கு இலக்கிய, இலக்கணங்களிலும் நல்ல பயிற்சி இருந்தது. புலவர் பெருமக்களை வரவழைத்து இலக்கிய சர்ச்சை செய்வதில் அதிக விருப்பம் உள்ளவர். புலவர்களுக்குப் பொருளும், பொன்னும், மணியும் வரையாது வழங்குவார். சிவப்பிரகாசர் காலத்திலே செந்தமிழ்நாடு சிறு கலகங்களும், குழப்பமும் நிறைந்ததாக இருந்தது. குறுநில மன்னர்கள் தங்களுக்குள் ஒற்றுமையின்றி வேற்றுமையை வளர்த்து வந்தார்கள். எந்தநிமிஷத்தில், எந்தப் பகுதியில் என்ன நேரும் என்பதை எவரும் திட்டவட்டமாகக் கூறமுடியாத அவல நிலையில் நாடு இருந்தது.

பிறர் தொல்லையை நீக்கவும், தடுக்கவும் எல்லையிலே படைகளைக் குறுநில மன்னர்கள் நிறுத்திவைத்திருந்தார்

கள். வேறு சில வீரர்களும் சேனுதிபதி என்னும் பெயருடன் தனியாகச் சிறு படை வைத்திருந்தார்கள். வேண்டும்போது விருப்பமான ஜமீன்தார்களுக்கு உதவுவார்கள். அதன் மூலம் கிடக்கும் பொருளைக்கொண்டு வாழ்ந்து வந்தார். கள். அத்தகையவர்களில் சொக்கம்பட்டி சேனுதிபதி பொன்னம்பலம் பிள்ளை அவர்களும் ஒருவர். வீரர் மட்டுமல்ல. இலக்கிய விருந்தையும் உண்ணும் தீரர். தீரர் மட்டுமல்ல கவி இயற்றுவதிலும் சூரர். சிவப்பிரகாசரின் நெருங்கிய நண்பர். ஒரு நாள் சேனுதிபதியோடு பேசும்போது நம்மிருவர் படையின் போர்க்குணத்தையும் ஓங்கச் செய்யவேண்டுமென்றுர் துரை. இதைக் கேட்ட பொன்னம்பலம் இதைச் செய்ய வல்லவர் தில்லையம்பலக்கவிராயர்தான். அவரைக் கொண்டு இராமாயணம், கந்தபுராணம், பாரதம், முதலிய நூல்களில் காணப்படும் போர்ப் பகுதிகளையும், வீரச் சரித்திரங்களையும் நம் படைக்கு எடுத்துரைக்கச் செய்வோம்; அதனுல் நம் படை முன்னிலும் பன்மடங்கு எழுச்சியும், விழிச்சியும் கொள்ளும் என்று ஜமீன்தாருக்கு பிள்ளையவர்கள் சொன்னுர்கள்.

அதன்படி சேனுபதிக்குத் துரை முழு அதிகாரம் தந்தார். சித்தன்பட்டி என்ற சிற்றூரிலிருந்து கவிராயர் வரவழைக்கப்பெற்றுர். கவிராயர் சம்மதம் தெரிவித்தார். ஆனுல் ஜமீன்தார் ஒரு நிபந்தனை விடுத்தார்! "தங்களின் நிபந்தனை என்ன மன்னவா!" என்று புலவர் கேட்டார்? "பெருமை மிக்க தமிழ்மொழியை வளர்த்த பெரும் புலவர் மணியே! கம்பன் காட்டிய வீரத்தையும், வில்லி விளக்கிய தீரத்தையும் எடுத்துரைத்து எம்படை வீரர்கள், வீர ராமனையும், வீர விஜயனையும் போல துள்ளி எழுவார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை. இன்று நம் நாடு உள்ள கதியைப் பாருங்கள். மக்கள் நிம்மதியாக வாழ முடியவில்லை. எங்கும் குழப்பம். மாற்றுன் தொல்லை எல்லையிலே. பல பல துன்பங்கள். சுயநல எத்தர்களின் வெறியாட்டம், எல்லாச் சந்தையிலும், கள்ளச்சந்தை புகுந்துவிட்டது. ஆகவே நாட்டின் நலம் கருதி,மக்கள் சுகம் கருதித் தாங்கள் ஆற்றும் இந்த வீரப்பணியை, தெய்வப் பணியை வேறு எவருக்கும் செய்வதில்லை என வாக்குத் தத்தம் செய்து தாருங்கள்"

என்று கேட்டார். மன்னரின் வார்த்தைகள் மனத்தை உருக்க யோசித்த கவிஞர், 'சரி' என்றார். மேடை அமைத்து இரண்டுமாத காலம் இந்த நாட்டின் வீர மணிகளின் சரித்திரத்தையும், தன்னலமற்ற சேவையையும், தியாகத்தையும், நாட்டுப் பற்றையும் கவிஞர் மிக அழகாக வீரர்களுக்கு விளக்கினார். போர் வீரர்கள் கவிராயரைப் புகழ்ந்தார்கள். "மக்களைக் காக்க, தியாகம் செய்யத் தயார்" என்று சூளுரைத்தார்கள். கதை முடிந்தபிறகு சிவப்பிரகாசர் கவிராயருக்குத் தக்கபடி பொருள் தந்து அனுப்பினார்.

கவிராயருடைய கதையின் பெருமையைப் பலரும் கேட்டனர். சிவகிரி ஜமீன்தார் கவிராயரை வரவழைத்தார். சேற்றூர் சேனைக்குச் செய்த செந்தமிழ்ப் பிரசங்கத்தை என்படைக்கும் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். கவிராயர் கணநேரம் சிந்தித்தார். சேற்றூர் ஜமீன்தாருக்குக் கொடுத்த வாக்குறுதி ஞாபகத்திற்கு வந்தது. 'நாமகளும், பூமகளும் பொருந்த வாழும் சிவகிரி மன்னர் அவர்களே! தாங்கள் இட்ட பணியை, என்னால் செய்ய முடியாது. சரியோ, தவறோ வேறு எங்கும் அதுபோன்ற சொற்பொழிவு செய்வதில்லையென, சேற்றூர் ஜமீன்தாருக்கு வாக்குறுதி தந்துவிட்டேன். அதை நான் மீறமுடியாது. மன்னிக்கவும்" என்றார். ஜமீன்தார் விடுவதாக இல்லை "என்னையா புலவரே கதைசொல்கிறீர். வாக்காவது! உறுதியாவது! மண்ணாங்கட்டியாவது! பாரதமும், இராமாயணமும் நாட்டின் பொதுச் சொத்து. சந்தர்ப்பவசத்தால் நீர் வாக்குறுதி வழங்கியிருக்கலாம் பொது நூலை மற்றவருக்கு உபயோகித்தல் கூடாது என வாக்குறுதி காட்டிப் பேசுதல் பொருந்தாது. முற்றும் கற்ற புலவர் நீர். யோசித்து முடிவு கூறும்" என்றார்.

"மன்னா! ஆலோசிக்க என்ன இருக்கிறது. வாக்குறுதி வாக்குறுதிதான். நான் மாறமுடியாது! மீறமுடியாது" என்றார். "பொன் தருகிறேன். பொருள் தருகிறேன், பல தலைமுறை வாழப் பணம் தருகிறேன். வீண் பிடிவாதத்தை விட்டுவிடுங்கள் புலவரே" என்றார் சிவகிரியார். கவிராயரோ அழியும் பொன்னுக்கும், பொருளுக்கும் ஆசைப்படவில்லை. வாய்மைக்கும், தூய்மைக்கும், நேர்மைக்கும், நீதிக்கும் நிலைக்

களாய் நிற்கும் வாக்குறுதிக்கே நின்றார். சிவகிரியை விட்டு வெளியேறினர். கொஞ்சநாட்கள் கழித்து, சேற்றூர் ஜமீன் தார் சிவப்பிரகாசர் இதைக் கேள்வியுற்ருர். புலவர் திலகம் வாக்குமாரு, தில்லை அம்பலத்தை வரவழைத்தார். நிலமும், பொருளும், பொன்னும், மணியும் தந்தார். புலவரோ அடக்க மாக இவையெல்லாம் நாணயம் தந்த பரிசு என்ருர். கவி ராயர் உணவு உண்ணும்போது ஜமீன்தார் பொன்னும் மணியும் நிறைந்த பையைப் பரிசாகக்கொண்டுவந்து வாக்கு மாருதவர் அருகில் வைத்தார். அதைக்கண்ட கவிராயர் ஒரு கையிலே உண்ண உணவும், மற்ருெரு கையிலே மணியும், பொன்னும் எடுத்துக்கொண்டு, வருகையிலே அன்பான வார்த்தை பேசி ஆறுதல் மொழி கூறி, பெருகிய புகழ்மிக்க, திருமிக்க பெருமகனுகிய, எங்கள் செந்தமிழ் போற்றும் சிவப்பிரகாச துரை மகனுர்க்கு அமைந்த குணமாகும், என்ற பொருள் அமைந்த வெண்பாவை வாக்குறுதியில் நம்பிக்கை கொண்ட கவிஞர் பாடினுர். சொன்ன சொல் தவருத புலவர் கவிதையை, இந்தப் புத்தாண்டில் மனதில் கொண்டு வாக்குத் தவருமல் வாழ்க்கையை நடத்துவோ மாக!

ஒருகையில் அன்னம் ஒருகையில் சொன்னம்
வருகையில் சம்மான வார்த்தை--பெருகுபுகழ்ச்
சீமானு மெங்கள் சிவப்பிரகா சத்திருவக்
கோமனுக் குள்ள குணம்

29

முகம்மது நபி பிறந்தார்

செந்தமிழ்ச் சோலை எல்லையற்ற விரி பொழில். அதன் எழில் எழுத எழுத ஏடு கொள்ளா! அந்தப் பொழி லில் எல்லாச் சமயத்தாரும் உல்லாசமாக, உற்சாகமாக உலாவுகின்றனர். தமிழ் பேசுவோர் எல்லோரையும் தன் மக்களாகத் தமிழன்னை பாவிக்கிருள். தண்டமிழ்ச் சோலை யிலே கிடைக்கும் செந்தமிழ்க்கனியை, எந்தவிதமான வேறு

பாடும் இன்றி எல்லோரும் உண்ணலாம். இலக்கியப்பசி ஆறலாம். தமிழ்க்கனி தங்கு தடையின்றி, எல்லோருக்கும் கிடைத்து வந்ததால், அந்தக்கனி கொடுக்கும் பொழிலைப் போற்றி, நமது மூதாதையர்கள் கண்ணின இமைபோல காத்து வந்தார்கள். வளர்த்து வந்தார்கள். அன்னை மொழி, அருந்தமிழ்; என்றபோது எல்லோரும் ஒன்றுகூடி, ஒற்றுமையோடு உயிரினும் இனிய தமிழை வளர்த்தார்கள்.

பரமசிவன் அடியார் பெரிய புராணம் பாடவும், திருமால் அடியார் தித்திக்கும் திருவாய்மொழி இசைக்கவும், சமணர் ஜீவக சிந்தாமணி செப்பவும், பௌத்தர் மணிமேகலை பாடி மகிழவும், கிறித்தவர் தேம்பாவணி கேட்கவும், மகமதியர் மனதை உருக்கும் சீராப்புராணம் சிந்திக்கவும் தமிழன்னை எல்லாச் சமயத்தாருக்கும் மேலே கண்டவண்ணம் வகை செய்தாள். வழி செய்தாள். எல்லாவற்றிற்கும் மேலாக எல்லோரும் விரும்பிப் போற்றி வணங்க ஒரு பொது நூலாய்—வாடா மலராய்த் திகழும் திருக்குறளைத் தந்தாள். இப்படி வரிசைகள் பலபெற்ற உயர் தனிச் செம்மொழியாம் தமிழ் மொழியின் பெருமை பேசி முடியுமோ! மேலே சொன்ன நூல்கள், தமிழ் வளத்தையும், நலத்தையும் பெருக்கி நிற்கின்றன என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

உமறு செய்த அமரகாவியம் அன்னை மொழிக்கு அழகு செய்தது. பெருமை செய்தது. தென் பாண்டி நன்னாட்டிலே, திருநெல்வேலி மாவட்டத்தை, தெற்குச் சீமை என்று பெருமையாக மக்கள் அழைப்பர். அந்தத் தெற்குச் சீமையிலே எட்டயபுரம் பெருமை வாய்ந்த ஒரு பாளையம். அந்த பாளையத்தை ஆண்டுவந்த மன்னர்கள் வீட்டு மொழியாகத் தெலுங்கு பேசினாலும், நாட்டு மொழியான தமிழை வளர்க்கவும், வாழ்த்தவும் மறக்கவேயில்லை. எட்டையபுரம் பல வகையிலும் பெருமைவாய்ந்த பாளையம் என்று சொல்ல வேண்டியதில்லை. அங்கு தான் நமது கவியரசர் பாரதியார் தோன்றி விடுதலை முரசு கொட்டினார்.

17-ம் நூற்றாண்டின் பின் பகுதியிலே எட்டயப்பன் சமஸ்தானத்தில் முத்துப் புலவர் என்னும் முதிய தலைவர்

மைப் புலவராய்த் திகழ்ந்தார். அத்தர், புனுகு, சவ்வாது, சந்தனம் போன்ற வாசனைப் பொருட்களை விற்கும் பெரிய வர்த்தகராக சேகு முதலியார் என்ற ஒரு முகமதிய வணிகர் எட்டையபுரத்திலே வாழ்ந்து வந்தார், கவிபாடும் புலவருக்கும், வியாபாரிக்கும் நேசம் பிறந்தது. இருவரும் அரிய நண்பர்களாயினர். பாசமும், நேசமும் வளர்ந்து இருவரும் மிக நெருங்கி வாழ்ந்தார்கள். முத்துப் புலவரின் கவிதைகளிலே மூழ்கிய அத்தர் வியாபாரியின் சிந்தனை வேகமாக வேலை செய்தது, அத்தர் வியாபாரி தந்த வாசனை அன்றோடு சரி. ஆனால் புலவர் தந்த தமிழின் வாசனையோ! வியாபாரியின் மனத்திலே நின்றது மட்டுமல்ல. மனதிற்கு அப்பாலும் மணம் வீசியது. சிந்தனையும் சுழன்றது. புலவர் தரும் வாசனையை நிரந்தரமாகத் தனது மகன் உமறுவுக்குந்தர வேண்டினார். முத்துப் புலவர் பரந்த மனம் கொண்டவர். நண்பரின் ஆசையை நன்கு புரிந்துகொண்டார். உமறு சிறு பையன். அடக்கத்தோடு ஆசிரியரிடம் வந்தான். அன்போடும், சிரத்தையோடும் தமிழ் மொழியை முறையோடு முத்துப் புலவர் கற்றுக்கொடுத்தார்.

குருவுக்கேற்ற சிஷ்யன். சிஷ்யனுக்கேற்றக் குரு. இப்படி அமைவது வெகு துர்லாபம். நல்ல குரு கிடைத்தால் நல்ல சீடன் கிடைக்கமாட்டான். அவனிடம் என்ன இருக்கிறது. எல்லாம் வெத்துவேட்டு என்பான். அந்த அரிய குரு அந்த அசட்டு சிஷ்யனுக்காக உயிரையே விடுவார். தான் பெற்ற பிள்ளையைப்போல பேணி வளர்ப்பார். நல்ல சிஷ்யர்களுக்கு சில போலி குருமார்களுள் கிடைக்கிறார்கள். குருவுக்காக உயிரையே விடுவான். சகல தியாகங்களும் செய்வான். குருவுக்காக கல்லடிக்கும், சொல்லடிக்கும் நடுவில் நின்று தவிப்பான், வீண் அபாண்டங்களையும், அபவாதங்களையும் அகற்றுவான். பொன்னையும், பொருளையும், நிலத்தையும், இடத்தையும், மடத்தையும், பெற்றுவருவான். பலன், அவன் மேல் வீண் அபாண்டம் சொல்லி, (பொய் சொல்லி) விரட்டுவார்கள். ஆனால் முத்துவும், உமறுவும் முத்துக்களே. கல்வி முழுவதும் கற்றுத் தேர்ந்தான் உமறு.

இந்த சமயத்தில் வடக்கே இருந்து மந்திர, தந்திரம் தெரிந்த மாயாவி, தமிழ் நாட்டிலே பல புலவர்களை வென்று விட்டு எட்டயபுரம் வந்தான். "அரசரிடம் புலவர்கள் இருந்தால் வாதுக்கு அனுப்பலாம்" என்ருன். அரசரும் இசைந்து நாள் குறித்து புலவருக்குச் சொல்லி அனுப்பினர். குறித்த நாளன்று புலவர் நோயால் பாயும் படுக்கையுமாகக் கிடந்தார். "வந்த புலவனோடு வாதிட வகையில்லையே" என்று வருந்திக் கிடந்தார். செய்தி கேட்டு வந்தான், உமறு. "ஐயா ஆசிகூறுங்கள். வடநாட்டுப் புலவன் வந்த சுவடு தெரியாமல் போகச் செய்கிறேன்" என்று புலிபோல் பாய்ந்தான். உமறு வென்ருன். குருதி கொதிக்கக் கொட்டம் ஒடுங்கி வந்தவன் நிற்க, அரசன் 'உமறு' என்று தழுவினர். "மானம் காத்த மாணவனே உமறு! அமரு! அருகிலே" என்று ஆசிரியர் தழுவினர். அவரே உமறுவை ஆத்தானப் புலவராக்கினர். கீழக்கரையிலே சீதக்காதி என்ற பெரும் வள்ளல் இருந்தார். அவரது செல்வம் புலவர்களுக்கும், இரவலர்களுக்கும் பயன் பெற்றது. அராபியில் இருக்கும் மதமதிய சமயக் கருத்துகளையும், நபிகள் நாயகத்தின் பெருமையையும் இனிய தமிழில் இசைக்க சீதக்காதி எண்ணம் கொண்டார். எட்டயபுரம் வந்த வள்ளல் தனது எண்ணம் நிறைவேற்ற வல்ல புலவர், ஏற்ற புலவர் உமறு என்று கண்டார். மன்னன் அனுமதி பெற்று இசுலாமிய இலக்கியம் செய்ய உமறுவை வேண்டிக்கொண்டார். பரங்கிப்பேட்டைக்குச் சென்று சீருச் சரித்திரத்தைத் தீட்ட, உமறு அயராது உழைத்தார். செந்தமிழ் மொழியிலே செஞ்சொற் கவிதையிலே, சீரு அமைந்து வரும் நாளில், ஆதரவு தந்த வள்ளல் சீதக்காதி இறந்தார். புலவர் மனம் ஒடிந்தது. ஆனல் இறைவன் அருளினல் அபுல் காசீம் என்பவர் உமறுவுக்கு எல்லா வசதிகளையும் தந்து புராணம் முடிக்கச் செய்தார். கம்பருக்கு சடையப்பர் போல உமறுவுக்கு அபுல் அமைந்தார். உமறு அவரை மறவாமல் சீருவில் சேர்த்துள்ளார்.

சீரு என்ற சொல்லுக்கு அரபு மொழியிலே பெரியவர்களின் புகழ் என்பது பொருள். இப்புராணம் மூன்று காண்டங்களால் முகம்மது நபியின் வாழ்க்கை வரலாற்றை

யும், அச்சமய ஆசாரங்களையும், கொள்கைகளையும் சுமார் ஐயாயிரம் கவிதைகளிலே கூறுகிறது.

அரபு நாட்டில் பிறந்த முனிவரின் கதையைத் தமிழ்நாட்டில் உமறு பேசினர். தமிழ்மொழிப் பற்றும், நாட்டு அன்பும் மிகுதியாகக் கொண்டவர் உமறு. அவர் காட்டும் நாடு, நகரம் எல்லாம் தமிழ் நாட்டை ஒத்தே இருக்கின்றன. சீரு ஒரு கவிதைக் களஞ்சியம். சொல், பொருள், ஒலி அணி இந்த நயங்கள் ஒருங்கே அமைந்த இலக்கியச்சுரங்கம் சீரு.

நபிகள் நாயகம் பிறந்துவிட்டார். நானிலத்திற்கு நல்ல காலம் வந்துவிட்டது. இருண்ட சமுதாயத்திற்கு முகம்மது முனிவர் ஒரு மணி விளக்கு. எங்கு பார்த்தாலும் ஒரே மணல். பாலைவனம். சூரியனின் செங்கதிர்கள் தலையின் உச்சிமேல் விழுகின்றன. வெய்யிலின் கொடுமை சொல்ல முடியா. கீழே மணல் சுடுகிறது. மணலை நெருப்பிலே கொட்டியதுபோல இருக்கிறது. இத்தகைய பாலைவனத்தில் அகப்பட்டுக்கொண்டு மக்கள் தவிக்கின்றனர். நிழல் தேடுகின்றனர். குளிர் தென்றலுக்கும், நிழலுக்கும் மக்கள் ஏங்கும் நேரத்திலே, ஆலமரம்போல் நிழல்தர அண்ணல் நபி, ஆதரவு காட்ட வந்தார். நோய்க் கொடுமையினின்று மனிதன் மீளவே முடியாதா? தொழு நோய்போன்ற கொடிய நோய்களால் மக்கள் வாடுகின்றனர். மருந்தில்லை. மார்க்கமில்லை என்றபோது மகம்மது பிறந்தார். மானிட சமூகம் நலிவும், மெலிவும் நீங்கி ஓங்கி உயர வேண்டுமென வழிகாட்ட வள்ளல் வந்தார்.

பசும் பயிர்கள் வானத்தை நோக்கி மேகங்களைப் பார்த்துக்கொண்டிருக்கின்றன. எதற்கு! மழைக்கு. மழை இன்றேல் பயிர் இல்லை. பயிர் இல்லையானல் பஞ்சம், பசி, பட்டினி! வானம் பொய்த்தால் வாழ்வு பொய்க்கும். பெய்யும் மழையும் காலத்திலே அளவாகப் பெய்ய வேண்டும். மாதம் மும்மாரி பெய்யவேண்டும். தீங்கின்றித் திங்கள் மும்மாரி பெய்யவேண்டும். தீன் போன்ற பயிர்களுக்கு செழு மழை வந்தது போல, நபிகள் நாயகம் வந்தார். அகத்தின் அழகு முகத்திலே என்பார்கள். நெற்றியைப் பார்த்துத்தான் ஆளை அளவிடுகிருர்கள். பரந்து

விரிந்த நுதல், பண்பையும், அறிவையும், ஆற்றலையும் தெளிவையும் விளக்கும். அப்பிறை நுதலில் செட்டாகப் பொட்டு இட்டால் அழகுக்கு அழகு செய்தது போல விளங்கும். இது திலகத்தின் பெருமை போலும். திலகம் எங்கே? ஏன் திலகம் இடவில்லை என்று தான் கேட்பார்கள்; திலகம் இடும் பழக்கம், சிறப்பாக இந்து சமயத்திற்கு இருந்தாலும், கவிஞர் அந்த அழகை நன்கு அனுபவித்திருக்கிறார். கவிஞருடைய கண் அல்லவா? எது எங்கிருந்தால் என்ன? உண்மையான உயர்வையும், அழகையும் எடுத்துக் கையாள வேண்டியது தானே? மக்காநகரிலே குறைசியர் குலம் உயர்ந்தது. அக்குலக் கொழுந்தாய், அக் குலத்தின் திலகமாய் திரு நபி பிறந்தார். ஒரே பாவிலே மகம்மது முனிவர் பிறந்த பெருமையை மிக விரிவாகக் கவிஞர் பேசுகிறார். இந்தக் கவிதையிலே கவிஞருடைய திறமையும், சிறப்பும் விளங்குகின்றன. உமறு தந்த சிருவிலே மகம்மது முனிவர் பிறந்த பெருமையைக் கீழ்க்கண்ட 'பா' மூலம் காண்போமாக!

பானுவின் கதிரா விடருங் காலம்
படர்தரு தருநிழல் எனலாம்
ஈனமும் கொலையும் விளைத்திடும் பவநோய்
இடர்தவிர்த் திடும்அரு மருந்தாய்
தீனெனும் பயிர்க்கோர் செழுமழை எனலாய்
குறைசியர் திலகமே எனலாய்
மானிலந் தனக்கோர் மணிவிளக்கெனலாய
முகம்மது நபிபிறந் தனரே!

30

பெய்யெனப் பெய்யும் மழை

மழையின் மகிமையை, மழை இல்லாத காலத்தில் தான் உணரமுடியும். வானம் பொய்த்தால் வாழ்வு பொய்த்துவிடும். பெய்யவேண்டிய மழை அந்தந்தக் காலத்தில்

பெய்யவில்லையானால் என்ன செய்ய முடியும்? வீரம் பேசும் மனிதன் அங்கு தலை குனிந்து நிற்கிறான். அவனுடைய வீரமும், தீரமும் அங்கு ஒன்றும் செய்ய முடியாது. மழையைக் கொண்டு வரும் மார்க்கத்தை அவன் வாளும், வேலும் காட்டாது. மனிதனுடைய திமிரும், அட்டகாசமான பேச்சும், சிரிப்பும், அலட்சியநோக்கும் வானம் பொய்த்தால் என்ன செய்ய முடியும்?

வளர்ந்துவரும் விஞ்ஞானம் வழி காட்டவில்லை. செயற்கை மழை பெய்விக்க முடியும் என்று கூறுகிறார்கள். சோதனைகள் நடத்துகிறார்கள். வேதனையோடு வெற்றி பெற முடியவில்லையே என்கிறார்கள். எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது பெறுவோம் மழையை என்கிறார்கள். பெறட்டும் மழையை. அரிய விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து ! வணக்கம் ! ஆனால் இன்றுவரை, வானம் பொய்த்தால் அதற்கு வகை செய்ய மனிதனால் முடியவில்லை. பருவமழை தவறினால் பசி, பட்டினி, பஞ்சம். பயிர்கள் வானத்தை நோக்கி மேகமே மழை பெய்வாய் என்று தவம் செய்கின்றன. கால் நடைச் செல்வங்கள் (ஆடு, மாடுகள் பால் வளம் தரும் வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்) குடிக்கத் தண்ணீர் இன்றித் தவிக்கின்றன. எங்கும் ஒரே வறட்சி. இத்தகைய நிலைமை நம் நாட்டில் அடிக்கடி தோன்றி மக்கள் துன்பப்பட்டிருக்கிறார்கள். அந்தத் துன்பமான நேரத்திலே கூட, தண்ணீரே இல்லாத நேரத்திலே கூட, அந்த வறட்சியிலேகூட நம் தமிழ், இனிய தமிழ், இன்பப் புரட்சி செய்துள்ளது.

அந்த நேரத்திலேகூட, நமது கவிவாணர்கள், அன்னை மொழியை வளர்த்திருக்கிறார்கள், அன்னை மொழியைப்பற்றிப் பேசி, மக்கள் துன்பம் போக்கியிருக்கிறார்கள். விஞ்ஞானத்தை அகற்றி, மெஞ்ஞானம் பேசாது தமிழ் ஞானம் பேசியிருக்கிறார்கள்.

சென்ற நூற்றாண்டில் நம் நாடு அன்னியருக்கு அடிமைப்பட்டுக் கிடந்தது. பெருநில மன்னர்களெல்லாம் குறுநில மன்னர்களாகக் குறுகினாலும், கும்பமுனி நெஞ்சம் குளிரத் தழைத்த தமிழை மறக்கவில்லை, போற்றினார்கள்

பல நூறு புலவர்கள். அவர்கள் தந்த ஆதரவால் தமிழை வளர்க்க உற்சாகத்தோடு முன் நின்றூர்கள். அவர்களில் தலை சிறந்தவர் நமது கவி குஞ்சர பாரதியார்.

தென் பாண்டி நாடு தந்த தனிப் பெரும் கவி. சிவகங்கைச் சீமையைச் சேர்ந்த பெருங் கரையிலே பிறந்தவர். இவருடைய தந்தையாரின் பெயர் சுப்பிரமணிய பாரதி என்பதாகும். சீலமும், ஒழுக்கமும், செந்நெறியும் சிறந்த வேத வித்துக்களின் பரம்பரையில் வந்த பரம பாகவதர். வடமொழி, தென்மொழி இரண்டிலும் சிறந்த புலமை பெற்றவர்கள். சுப்பிரமணிய பாரதி வெகுகாலம் குழந்தையில்லாமல், வேதனையோடு வாழ்ந்துவந்தார். தன் அன்பு மனவியோடு தனது ஊருக்கருகிலுள்ள கொடுமளூரில் கோவில் கொண்ட குமர குருபரன் சன்னதிக்குச் சென்று, அடிக்கடி கும்பிட்டு வந்தார். குழந்தையில்லாக் குறைபோக வேண்டும், மக்கள் செல்வம் வேண்டும்'' என்று கண்ணீர் மல்க, நெஞ்சம் நெகிழக் குமரனைக் கும்பிட்டார். கந்தன் கருணை புரிந்தார். முருகன் அருளால் அந்த அன்புத்தம்பதிகள் பெற்ற குழந்தைதான் நமது கவி குஞ்சரம்.

குழந்தை துடிப்பாய் துறு துறு வென்று இருந்தது. பருவம் வந்தவுடன் குழந்தை பள்ளிக்குச் சென்றது. பாடம் தானே வந்தது. மிகச் சிறு வயதிலேயே குழந்தை வடமொழி, தமிழ் இரண்டிலும் முதலில் நின்றான். குல வித்தை கல்லாமலே வந்தது போலும்! கவி பாடும் வன்மையும் சிறுவன் பெற்றான். சங்கீதத்திலும் பயிற்சி பெற ஆரம்பித்தான் பையன். மதுரகவி பாரதி என்ற பெரும் புலவர் அக்காலத்தில் பத சாகித்தியம் செய்வதிலே சிறந்தவர். பையனுக்கு அவரிடம் தொடர்பு கிடைத்தது. அவர் பையனைச் சொந்தப் பிள்ளை போலவும், உற்ற நண்பன் போலவும் நினைத்துப் பழகினர். அதனல் பன்னிரண்டாம் வயதிலேயே பையன் பதங்கள், கீர்த்தனங்கள் பாடும் அற்புத சக்தியைப் பெற்றான்.

இவ்வாறு தனக்குக் கிடைத்த அருள்வாக்கை, அதிசய வாக்கைக் குல தெய்வமாம் குமரன் மீதும், ஆலவாய் அப்பன் மதுராபுரி மீனக்ஷிசுந்தரேசுவரர் மீதும், இதர தெய்வங்கள் மீதும், (தோத்திரப்பாக்களுக்கும், கீர்த்தனங்களும்,

பிரபந்தகளும், சிந்துக்களும், அந்தாதிகளும்) பாடுவதிலே தான் கவி குஞ்சரம் பயன் படுத்தினர். நரகவியே பாடவில்லை. இப்படி நரகவி பாடாத, கவிஞர்கள் வெகு சிலரே. அற்ப மானிடனை அழியும் பொன்னுக்காகவும் பொருளுக்காகவும், போக, போக்கியத்திற்காகவும் பாடும் கொள்கை-யை நமது கவி குஞ்சரம் கொண்டாரில்லை. நரகவி பாடாத நமது கவி குஞ்சரம் ஆழ்ந்த தெய்வபக்தியிலே மூழ்கித் தனது கவித் திறத்தையும், கல்வித் திறத்தையும் ஆண்டவனைப் பாடும் அரும் பணியிலேதான் செலவிட்டார்.

பதினெட்டாவது வயதிலே கடுமையான சுரநோய் கண்டு வருந்தினர். உள்ளுணர்ச்சியினல் உள்ளூர் தரும சாஸ்தா மீது ஒரு பிரபந்தத்தை இரண்டு நாளிலே பாடினர். அக்கோயிலில் அந்நூலை அரங்கேற்றினர். அவர் நோய் தீர்ந்தது. அங்கயற்கண்ணி மீது "அடைக்கல மாலையும்", "கயற்கண்ணி மாலையும்", திருமலை நாதன் மீது "திருவேங் கட மாலையும்''. திருமாலிருஞ் சோலைமலை அழகர் மீது, "குறவஞ்சியும்" இதுபோன்ற பல நூல்களும், தனிபாடல்க ளும், கீர்த்தனங்களும், பதங்களும் பாடிப் பாடிப் பரமனை வழிபட்டுப் பைந்தமிழுக்கு அயராத தொண்டாற்றிய சீலர், கவி குஞ்சர பாரதியர். தமிழ் இசை இயக்கம் தோன்றுவதற்கு முன்னரே, தமிழ்க் கீர்த்தனங்கள் பல இயற்றி தமிழிசைக் குதவினர்.

இவருடைய கவிகளையும், சாகித்தியங்களையும் கேட் டோர் அவற்றின் சொற் சுவை, பொருட் சுவை, பக்திக் கனிவு இவைகளை வியந்து கொண்டாடவே, இவர் புகழ் எங் கும் பரவிற்று. சிவகங்கை மன்னர் கௌரி வல்லபர் இவ ரின் பிரபந்தங்களைச் சபையிலே பாடக் கேட்டு மகிழ்ந்து பல புலவர் மணிகளும் கூடியிருக்க "கவி குஞ்சரம்" என்ற பட்டம் தந்து பாராட்டித் தன் ஆத்தானப் புலவராகச் சேர்த் துக் கொண்டார் "வேங்கைக் கும்மி' பாடியதற்கு வெகுமதி யாக "கொட்டக் கச்சி யேந்தல்" என்னும் ஒரு கிராமத்தைத் தானமாக சிவகங்கை மன்னர் வழங்கினர். இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதி அவர்களும் முத்தமிழ் பாடும் கவிஞரைப் பாராட்டி, சமஸ்தான வித்வானுக ஏற்ருர். இவ்வாறு தென்பாண்டி நாட்டிலே மதுரை, இராமநாதபுரம்

இரண்டு மாவட்டங்களும் போற்றும் மணியாகத் திகழ்ந்தார் கவிஞர். சேதுபதியின் சகோதரரும், செந்தமிழ்மொழியிலே சிறந்த வித்துவானும்,வள்ளலுமாகிய பொன்னுச்சாமித்தேவ ரவர்கள் வேண்ட, கச்சியப்பர் கந்தபுராணத்தை இனிய, தெளிந்த தமிழில் கீர்த்தனங்களாகவும், விருத்தங்களாகவும் "ஸ்காந்தபுராணக்கீர்த்தனே" என்ற அரிய நூலை (ஐம்பத்தைந்து வயதிலே. ஐந்துவருடகாலம் செலவிட்டுப் பெருங்கரையில் இருந்து கொண்டு) செய்து முடித்தார். முருகன் பக்தியிலே முற்றும் மூழ்கினர். இவர் காலத்திலேயே இவா கீர்த்தனங் கள் பெரிதும் பாராட்டப்பெற்றது. எங்கும் பாடப் பெற்றன. கவி குஞ்சர பாரதியின் கீர்த்தனங்களை இன்றும் பலர் பாடக் கேட்கிறோம். எண்பத்தி நாலு வயதுவரை கந்தன் கருணையால் கன்னித் தமிழ் வளர்த்து வாழ்ந்தார் கவி குஞ் சர பாரதியார். வேலவன் அருள் இவருக்குக் கிட்டியதால் வாக்குப் பலித்தது. பரந்த மனம் கொண்டு பழுதில்லாத வாழ்க்கை வாழ்ந்தார் பாரதியார்.

பயிர்கள் வாட பாரதியார் மனம் சகியார். உயிர்களுக்கு உற்ற துன்பம் துடைக்க உதவினர். இவருடைய வாக்கு அருள் வாக்கு! ஒரு சமயம் ஊரில் மழையில்லை. பயிர் பச் சைகள் வாடின. மாடுகளும், ஆடுகளும் குடிக்கத் தண்ணீர் இன்றித் தவித்தன. கொட்டக் கச்சியேந்தல் குடிமக்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாத கொடுமையால் தவித்தனர். வயலிலே நெற்பயிர்கள் குலை தள்ளியும், தள்ளாமலும், பால் பிடித்தும், பிடிக்காமலும் பூ, பூக்காமலும் நின்றன. இந்த நேரத்திலே ஒரு தண்ணீர் பாய்ச்சினல் போதும் பயிர் விளைந்து விடும். ஆனல் ஏரியிலும் தண்ணீர் இல்லை. வயலில் வெட்டிய கிணற்றிலும் தண்ணீர் இல்லை. பயிர் எப்படி விளையும். வானம் வழிகாட்டவேண்டும். மழை பெய்ய வேண்டும். கவிஞர் கந்தனை வேண்டுகிறார். "கந்தனே! உன் பெருமை பாடினேன். இந்தக்கிராமத்தை மன்னர் தந்தார். இந்த ஊரிலுள்ள மக்கள் வாழவேண்டும்; இந்த ஊர் மக்கள் விவசாயிகள் வானத்தைப், பார்த்து மக்கள் வாழ்கிறார்கள். வானம் பொய்த்தால் மக்கள்வாழ்வு பொய்க் கும்.

ஆகவே உழவர்கள் வாழ்வு உயர, வடிவேலனே வகை செய்வாய். வயலில் உள்ள கதிர்கள் வாடாமல் மழை பொழிய வேண்டும். செந்நெல் விளையவேண்டும். எங்கள் மனம் நிறைய வேண்டும். உழைக்கத் தொழிலும், உண்ண உணவும், கிடைத்து விட்டால் மக்கள் மனம் நிறைந்திருக்கும். நிறைந்த மனதிலே முருகா! எனக்கு வேலை என்ன? பரிபூரணமாக எனது சிந்தையும், செயலும் உனக்கே அர்ப்பணம். அந்த அரிய வேளையிலே சண்முகா! சங்கீர்த்தனங்கள் பாடி, தினமும் பஜனை பாடி மகிழ்வேன். மக்கள் சேமமாக வாழவேண்டும். சௌபாக்கியங்கள் பெருக வேண்டும். நீங்காத செல்வம் நாளும் கிடைக்கவேண்டும். திருக்களெல்லாம் வாழ்வில் அமையவேண்டும். எப்போதும் "பெய்யெனப் பெய்யும் மழை" பெய்தால் மக்கள் இன்ப வாழ்க்கை வாழ முடியும், என்று கந்தனை நோக்கி பிரார்த்தனை செய்து கவி குஞ்சர பாரதியார் நிறைந்த மனத்தோடு நாடெல்லாம் வாழவேண்டும் என்ற நல்ல கொள்கையோடு உருகி உருகிப் பாடினார். "பெய்" என்றார் மழை பெய்தது. "பொய்" என்பர் புல்லர். "மெய்" என்பர் சீலர். உடனே, மழை பெய்தது. தேவையான மழை பெய்தது. மெஞ்ஞானி, தமிழ் ஞானி, கவி குஞ்சர பரதியார் "பெய்" யெனச் 'சொன்னார்! மழை பெய்தது. விஞ்ஞானி அல்ல அவர்! அவர் ஒரு தமிழ் ஞானி !

"கந்தநீ தந்தகொட்டக் கச்சியேந்தற்
கனையமறிச் சான்வயலின் கதிர்களுக்கு
வந்துமழை பொழிந்துசெந்நெல் விளைந்துநன்றாய்
மனைநிறைந்து பரிபூர்ணமாக வென்றன்
சிந்தைமகிழ்ந் துனதுசங்கீர்த் தனங்கள் பாடித்
தினந்தினமும் பஜனைசெய்து சேமமாகச்
சந்ததிகள் மேன்மேலுங் குறைவில்லாமற்
சகலவள முந்தழைக்கத் தயைசெய்வாயே!

31

வளையாத செங்கோல்

"தவறே செய்யக்கூடாது," என்பது மனித வாழ்க்கையில் வரையறை செய்ய முடியாத செயல். மனிதன் தவறுவது சகஜம். செய்த தவறைப் பிறகு உணர்ந்து வாழ்கிறான். இதைத்தான் வாழ்க்கையிலே கண்கூடாகக் காண்கிறோம். சிலர் வாழ்க்கையில் தவறு செய்வதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். சொல்லியும் திருந்துவதில்லை. தானாகவும் திருந்துவதில்லை. தாற்காலிக வெற்றி முழக்கத்திலே தங்களின் பொய்ச் செயல்களை பிறர் மெய்ச் செயல் என்று நம்பும்படி செய்து வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் அறத்தின் முன்னால் என்றாவது ஒருநாள் நின்று அவர்கள் பதில் கூறியே ஆகவேண்டும்.

தவறு செய்கிறவன் திருந்தினால் உத்தமச் செயல், உயர் செயல் என்று கூறுகிறோம். இதற்கு மேலும் ஒரு நிலை இருக்கிறது. அந்நிலை எல்லோரும் எட்டும்படியாக இல்லை. மானம் இழந்தபின் கற்பரசி உயிர் வாழமாட்டாள். மயிர் நீப்பின் வாழாது கவரிமான். அது போல தன் வாழ்க்கையில் தவறு நேர்ந்துவிட்டால், மானைப்போல ஒழுக்கநெறி நிற்கும் உத்தமர்கள் அந்தக்கணமே தங்களை மாய்த்துக் கொள்ளுவார்கள், மடித்துக்கொள்ளுவார்கள், மறைத்துக் கொள்ளுவார்கள். இத்தகையவர்கள்தான் இந்த நாட்டிலே நீதியையும், நேர்மையையும் நிலைநாட்டிச் சென்ற உத்தமர்கள்.

சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் இளங்கோவடிகள். சேர மன்னன் மரபைச் சேர்ந்தவர். இளமையிலே துறவு பூண்டவர். சேரமன்னன் நெடுஞ்சேரலாதன் பெற்றெடுத்த பிள்ளை. செங்குட்டுவனுக்கிளையோன். மதுரை கூலவாணிகச் சாத்தனார் காலத்தில் வாழ்ந்தவர். சாத்தனார் கடைச்சங்கப்புலவர். ஆகவே சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன்னர் இளங்கோவடிகள் வாழ்ந்தவர். சிலப்பதிகாரம் முதல் நூல் வகையைச் சேர்ந்தது. இதன் பெருமை பேசி முடியா. சொல்லிலே சொல்ல முடியா. "நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்

என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு'' என்று பாரதியார் பாமாலை பாடுகிறார்.

செந்தமிழ்மொழிசெம்மையுறவும்,சிறப்புறவும்சேரன்தம்பி சிலம்பை இசைத்தான். கண்ணகியின் சிலம்பினால் விளைந்த கதை, ஐம்பெருங் காவியங்களில் ஒன்றாகும். இந்நூலுக்கு இரண்டு பழைய உரைகள் இருக்கின்றன. தன் பெயரே சொல்லாத செம்மலாகத் திகழ்ந்த பெரியார் இயற்றிய அரும் பதவுரை ஒன்று. மற்றொன்று அடியார்க்கு நல்லார் அருளியது. இயல், இசை, நாடகம் முத்தமிழும் விளங்க இசைக்கப் பெற்ற இனிய காவியம். இளங்கோவடிகள் இயற்றிய சிலம்பை நாடகக் காப்பியம் என்று நவில்வாரும் உண்டு. புகார்க் காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக் காண்டம் என்று மூன்றாக வகுக்கப்பட்டுள்ளது. வெணபா, அகவற்பா,கலிப்பா என்ற பாக்களைக் கொண்ட பைந்தமிழ்க் காவியம். ஆற்று வரி, ஊசல் வரி, கந்துக வரி முதலிய பாக்கள் முனிவர் அருளிய காவியத்திலே இசை முழங்கும். தமிழரது பண்டைய ஆடல், பாடல், குரவைக்கூத்து எல்லாம் சிலம்புச் செல்வத்திலே அடக்கம்.

புகார் நகரத்திலே பெருங்குடி வணிகன் மாசாத்துவான் பெற்ற மாணிக்கம் கோவலன். அதே நகரிலே கொடையினை உடைய மாநாயகன் பெற்ற மகள் கண்ணகி. சோழநாட்டின் திருவிளங்கும் நகரம் பூம்புகார். அந்த நகரம் மகிழ,கண்ணகியும், கோவலனும் திருமணம் செய்துகொண்டனர். கயற்மலர்க் கண்ணகியும், காதற்கொழுநனும் மயன் விதித்தன்ன மணிக்கால் கட்டில் மேல் வீற்றிருந்தனர். மலர்களின் மணம் கண்டு, தேனுண்டு, தென்றலோடு மாடம் புகுந்தது வண்டு. கூடத்திலே தென்றல் வீச, குறையாத காதலோடு நிரைநிலை மாடம் சென்றனர். ஆராத காதலால் அவள் அழகு முகத்தைக் கண்டு, தன்னை மறந்து கோவலன் பாராட்டுரைகள் பல பகர்ந்தான்.

''மாசறு பொன்னே! வலம்புரி முத்தே! காசறு விரையே! கரும்பே! தேனே! அறம்பெறல் பாவாய்! ஆருயிர் மருந்தே! பெருங்குடி வணிகன் பெரு மட மகளே! மலையிடைப் பிறவா மாமணியே! அலையிடைப் பிறவா அணியே!

யாழிடைப் பிறவா இசையே! தாழிருங் கூந்தல் தையால் நின்னை என்ன சொல்லி அழைப்பேன். எப்படி அழைப் பேன்!''இவ்வாறு பாராட்டிக்கொண்டு கோவலனும் கண்ணகி யும் இல்வாழ்க்கை இனிது வாழ்ந்து வந்தார்கள்.

நடனக் கலையிலே சிறந்தவள் மாதவி. அக்கலைக்கே பிறந்தவள். ஆடலும், இசையும், குழலும், யாழும் இசைய மன்னன் சபையிலே மாதவி ஆடினாள். ஆட்டத்தின் சிறப் பைப் பாராட்டிப் பச்சை மாலை பரிசாகத் தந்தான் மன்னன். மாதவியின் ஆட்டத்திலே மனத்தைப் பறிகொடுத்த கோவலன் அவள் பால் நாட்டங் கொண்டு விதியின் சதியால் அவள் மனை புகுந்தான். கொண்ட மனைவியாம் குலமகள் கண்ணகியை மறந்தான். வேசியோடு வாசம் செய்தான். நாசம்வந்தது. மோசம் போனாள் கண்ணகி. கோவலன் நேசம் கொண்டான் நெடுங்கண் மாதவி என்னும் மங்கை பால்.

''எண்ணும், எழுத்தும், இயல், ஐந்தும், பண் நான்கும், பண் நின்ற கூத்து பதினொன்றும்'' விளங்கப் பூம்புகார் மகிழ ஆடுவதிலும், பாடுவதிலும் வல்ல மாதவியைவிட்டு அகலாமல் நிழல் போல பிரியாது வாழ்ந்து வந்தான் கோவலன்.

புகார் நகர மக்கள் இந்திர விழாக் கொண்டாடினர். மாதவியும், கோவலனும் ஊடல் தீர்த்துக் கூடி மகிழ்ந்தார் கள். கடலாடச் சென்றார்கள்; கோவலனும், மாதவியும் யாழிசையுடன் கானல்வரி பாடுகின்றனர். ஆனால் மனம் வேறுபடுகின்றனர். கோவலன் மாதவியை விட்டு கண்ணகி யிடம் சென்றான். கற்பரசி கணவனை வரவேற்றாள். ''குற்ற மற்ற பெண்ணே. நான் கொடியவன். உனக்குத் துன்பம் தந்தேன். உன்னை விட்டகன்றேன். நீயோ இன்முகத்தோடு வரவேற்கிறாய். வேசி பால் சென்ற வீணன் என்பதையும் மறந்தாய். கையிலே பொருள் இல்லை. குலம் தரும் வான் பொருள் குன்றம் தொலைந்தவனாக வத்துள்ளேன். என் செய்வேன்'' என்று ஏங்கினான்.

''அன்பரே! நீங்கள் வந்ததே போதும். பொருள் பெரிதா! அது இன்று வரும். நாளைப் போகும். அதைப் பற்

றிக் கவலைப்பட வேண்டாம். நீங்கள் பொன்னுக்கும் பொருளுக்கும் மேலானவர்" என்று கூறி "நலம் கேள்! முறுவல் நகைமுகம் காட்டி சிலம்பு உள" எடுத்துக்கொள்ளுங்கள். அதை மூலதனமாகக் கொண்டு மறுபடியும் நம் குலத் தொழில் வியாபாரத்தை ஆரம்பியுங்கள்" என்று நங்கை நல்லாள் நவில, "மலர்ந்த சீர் மாடமதுரையகத்துச் செல்வோம்" என்று இரவோடு இரவாகப் புறப்பட்டு விட்டான் கோவலன் கண்ணகியோடு. வீட்டையும், நாட்டையும் உற்ற சுற்றத்தையும் விட்டுப் (சோழநாட்டை விட்டு) பாண்டிய நாட்டை நோக்கிப் பயணமானுன்.

கவுந்தி அடிகள் துணை வரப் பல பல ஊர்களையும், இயற்கை வளங்களையும் பார்த்துக்கொண்டு துக்கம் மறந்து நான்மாடல், கூடல் நகரம் அடைந்தனர். மாதிரி வீட்டில் தங்குகிறுர்கள். மாதிரியும்,மற்றவர்களும் "கோல்வளை மாதே கொள்க" எனக் கொடுக்க, அறுசுவை உண்டி சமைக்க, அதை உண்டு, கோவலன் சிலம்பை எடுத்துக்கொண்டு மதுரை நகரத்திற்குள் சென்றுன். பொற்கொல்லன் எதிர்ப்பட்டான். "காவலன் தேவிக்கு ஆவதோர் காற்கு அணி நீ விலை இடுவதற்கு ஆதியோ! " என்று கேட்டான் கோவலன் பொற்கொல்லன் சித்திரச் சிலம்பை வாங்கி அதன் சிறப்பையும், மதிப்பையும் நன்குணர்ந்தான். அவன் மூளை வெகு வேகமாக வேலை செய்தது. "தான் களவாடியுள்ள இராணியின் சிலம்பை, ஊருக்குப் புதியவனுன இவன் களவாடியதாக மன்னனிடம் கூறி, இச்சிலம்பைக் காட்டித் தான் தப்பித்துக்கொள்ள வேண்டும்" என்று முடிவு செய்து கோவலனைப் பக்கத்தில் அமரக் கூறி மன்னனிடம் சென்றுன்.

"மன்னர் மன்னவா, மகாராணியின் சிலம்பினைக் கவர்ந்த மாயக் கள்வனைப் பிடித்துள்ளேன்" என்றுன். கோப்பெருந் தேவியின் கோபம் தீர்ப்பதில் கோமகன் ஈடுபட்டிருந்த நேரம். "அப்படியா! அவனைக் கொன்று அச் சிலம்பைக் கொணர்க" என்று மன்னன் உத்திரவிட்டான். அரசன் ஆணைப்படி கல்லாக் களிமகன் கையால் வெட்டுண்டு வீழ்ந்தான் கோவலன். கோவலனின் குறுதி மதுரை மண்ணிலே கொப்பளித்து ஓடியது. பாண்டியன் நெடுஞ்

செழியன் நீதி குறைந்தது. மன்னனின் வளையாத செங்கோல் வளைந்தது.

செய்தி கேட்டாள் கற்பரசி கண்ணகி. தன் கணவன் கள்வன் என்று கூறப்பெற்று, மதுரையம்பதியிலே மாண்ட செய்தி கேட்டுத் துடித்தாள். வடித்தாள் கண்ணீர். குமுறி எழுந்தாள் சோழநாட்டுச் செல்வி. "காய் கதிர்ச் செல்வனே. கள்வனு! என் கணவன்" என்று கேட்டாள். "கள்வன் அல்ல உன் கணவன்" என்ற செய்தி வந்தது. வெட்டுண்டு கிடந்த கணவனைக் கண்டாள். அழுதாள். தொழுதாள். புலம்பினுள். அநீதி அளித்த அரசனைக் காண ஊழித் தீ போல புறப்பட்டாள். கையிலே ஒற்றைச் சிலம்பை ஏந்தி "வாயிலோயே! வாயிலோயே, கணவனை இழந்தாள்.கடையகத்தாள்" என்று அறிவிப்பாய் என்ருள். அரசன் அநுமதிக்கக் கொலுமண்டபத்திற்குள்ளே கோவலன் மனைவி புகுந்தாள். "நீ யாரம்மா?" என்று கேட்டான் மன்னன்.

"தேரா! மன்னு! கேள். எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்புள்ளுறு புன் கண் தீர்த்த சிபிச்சக்கரவர்த்திஆண்ட சோழமண்டலத்திலே, ஒரு மகனை அரசுக்குரிய செழுங் கோமகனை, (ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சைச்சுட) தேரோட்டி முறை புரிந்த பெரியோன் வாழ்ந்த சோழ தேசத்திலே, புகார் நகரிலே ஏசாச் சிறப்பின், இசை விளங்கு பெருங்குடி வணிகன் மாசாத்துவான் மகன், கோவலன், மனைவி கண்ணகி நான், சூழ்கழல் மன்னு! என் காற்சிலம்பை விற்க வந்த என் கணவனைக் கள்வன், என்று கூறி விசாரணை நடத்தாமல் நீதிக்குப் புறம்பாய் உன்னுல் கொல்லப்பட்டான். நீதிகேட்டு வந்துள்ளேன். உனது செங்கோல் சீரானது அல்ல. நினது செங்கோல் செம்மையற்றது. எனது கணவன் கள்வன் அல்ல, அதை நிரூபிக்கவே இங்கு வந்துள்ளேன்" என்று கண்ணகி எடுத்துரைத்தாள்.

"கள்வனைக் கொல்வது தவறல்ல" என்று பாண்டியன் பகன்ருன். கோபம் கொண்டாள் பத்தினி. பொங்கி எழுந்த கோபத்திலே, "மன்னு! என் காற்சிலம்புகள் மாணிக்கக் கற்களைக் கொண்டவை" என்ருள். "எமது சிலம்பு முத்துத்

துடைத்து'' என்ருன் மன்னன். ''இதோ பார் மன்னு!'' என்று கண்ணகி காற்சிலம்பை தரையில் அடித்து உடைத்தாள். சபையே ஆச்சரியத்தில் மூழ்கியது. ''மாணிக்கம்! மாணிக்கம்!'' என்று சபையோர் கூவ, மன்னன் வாயருகே ஒரு மாணிக்கப் பரல் தெரித்து விழுந்தது.

அவ்வளவுதான். மன்னன் தலைகுனிந்தான். ''தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன். பொன்செய் கொல்லன் பேச்சைக் கேட்டு ஆராயாது தீர்ப்புத் தந்த நானு மன்னன். நான்தான் கள்வன். மக்களைக் காக்கவேண்டிய மன்னன்; மக்களையே மடித்தான் என்ற அவச்சொல் எனக்கல்லவா, உண்டாகும். பாண்டியர்கள் நீதி வழுவாதவர்கள். என் நீதி, நீதியல்ல; அநீதி. மற்ற மன்னர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள். நான் இனி உயிரோடு வாழலாமா'' என்று மயங்கி வீழ்ந்தான் பாண்டியன் நெடுஞ்செழியன்.

அவன் தேவியும் கணவன் பாதம் தொழுது மடிந்தாள். உடலிலே புழுதி. விரிக்கப்பட்ட கருங்கூந்தல், களையிழந்த முகம், கடுங் கோபம் கொண்ட செந்தீ உமிழும் கண்கள். கையிலே ஒற்றைச் சிலம்பு. இந்தவிதமாகத் தோற்றமளித்தாள் பத்தினித் தெய்வம். சோழமண்டலத்திலிருந்து வந்த அந்தப் பெண், அன்புக் கணவனிடமிருந்து பிரிக்கப் பெற்ருள்! அவள் கணவன் சிலம்பு திருடியவன் என்று ஏசப்பட்டு, பேசப்பட்டு, பாண்டியன், தந்த ஆராயாத தீர்ப்பால் படுகொலை செய்யப்பெற்ருன். ''பாண்டியன் செங்கோல் பழுதுள்ளது. அதிலே நீதி இல்லை, நேர்மை இல்லை. நேரான செங்கோல் அல்ல. வளைந்த செங்கோல்'' என்று கூறி வாதிட்டுத் தன் கணவன் கள்வன் இல்லை என்று நிரூபித்தாள், அந்தப் பத்தினித் தெய்வம்.

தன் கணவன் கள்வன் இல்லை என்ற சொல்லைக்கேட்ட மாத்திரத்திலேயே பாண்டியன் நெடுஞ்செழியன் உயிரை விட்டான். ''கோவலன் கள்வன்'' என்று கூறி கொலை செய்யச் சொன்னபோது பாண்டியன் செங்கோல் வளைந்த செங்கோல். தான் செய்த தவரைக் கேட்டவுடன், செய்தது தவறுதான் என்று உணர்ந்தது மாத்திரமல்ல, உயிரையே விட்டான் அந்த உத்தம, உயர் மன்னன். உலக சரித்திரம்

காணாத புதுமை. இச்செய்கையால் பாண்டியன் செங்கோல் வளையாத செங்கோலாயிற்று. பாண்டியன் நீதியும், நேர்மையும் உலக மெல்லாம் பரவவேண்டும் மனித சமுதாயம் வாழ.

"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்-
வையக்கோன்
கண்டளவே தோற்றானக் காரிகை தன்
சொற் செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்"!

32

இளமையோடு இருக்க வழி

"என்ன ஐயா! எப்போது பார்த்தாலும், சிரித்த முகத் தோடு காட்சி அளிக்கிறீர். உங்களுக்குக் கவலையே கிடை யாதோ! ஆமாம் உங்கள் வயது என்ன? என்ன! அறுபதா! அப்ப மணிவிழா! நடத்தவேண்டியதுதான்! பணமுடிப்புத் தரவேண்டியதுதான்! என்னையா! ஏதாவது கிண்டல் பண் ணுகின்றீரா! அறுபதா! இருபதா!" என்று இளமையுடன் காட்சி தரும் முதியவரைக் கேள்வி கேட்பது வழக்கமாக இருக்கிறது. இளமையுடன் முதியவர் வாழ்வதற்குக் கார ணம் என்ன?

இந்தக் கேள்விக்குப் பதில் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே புறநானூற்றிலே ஒரு புலவர் தந்துவிட்டார். அவர் பெயர் பிசிராந்தையார். பாண்டிய நாட்டிலுள்ள பிசிர், தந்த பாவலர். இளமையிலேயே கற்கவேண்டியவை களைக் கசடறக் கற்று, அமைதியும், தெளிவும், அறிவும் பெற்ற பெரும் புலவர். தக்க பருவத்திலே இல்லறமல்லது நல்லறமன்று என்பதற்கிணங்க மாசற்ற மங்கை ஒருத் தியைத் திருமணம் செய்துகொண்டார். அந்தப் பெண் அறி

விலும் ஆற்றலிலும் சிறந்தவள். மனைமாட்சிக்கு ஏற்றவள். அருங்குணவதி. காதலும், கருத்தும் ஒருமித்து இருவரும் இன்ப இல்லறம் நடத்தி வந்தனர்.

ஆந்தையாரின் ஆழ்ந்த அறிவையும், மதியின் நுட்பத்தையும் வியக்காதவர்கள் இல்லை. அவர் காலத்திலே பாண்டிய நாட்டை அறிவுடைய நம்பி என்ற அரசன் ஆண்டு வந்தான். பாண்டிய மன்னர்களில் மிக்க அறிவுடையவனாகவும், மக்கள் அவனையே நம்பி தம்முயிராக மதித்துப் போற்றி வந்ததாலும் அவனை எல்லோரும் அறிவுடைய நம்பி என்று அழைத்தார்கள் போலும். நம்பி தன் மக்களை நம்பி, நலமே பல செய்துவந்தான். மக்கள் துன்பத்தைத் தனது துன்பமாகக் கருதி மக்களுக்கு மாறாத பல நன்மைகள் செய்தான்.

அதிகாரிகளை மட்டும் நம்பாமல், தானே நேரிலே சென்று குடிமக்களின் குறைகளைக் கேட்டு குறைகள் போக வழியும் வகையும் செய்தான். நீதியும் நேர்மையும் அவன் ஆட்சியிலே தலைதூக்கி நின்றன. புலவர்களையும், கவிஞர்களையும், கலைஞர்களையும் ஆதரித்தான். அவன் காலத்தில் முக்கலையும் முதல் இடம் பெற்று வளர்ந்தன.

பிசிராந்தையாரும் பாண்டியனுடைய அன்புக்குப் பாத்திரமானார். புலவர் பெருமகனார் பாண்டியனை அடிக்கடி அணுகி அளவளாவுதல் உண்டு. அப்போதெல்லாம் வெற்றுரை பேசாமல், வீண் பொழுது போக்காமல் மக்களுக்கு நலம் பயக்கும் நல்லுரைகளையே நவின்று வருவார் மக்கள் கவி. நூறு காணி நிலத்திலே நெல் விளைந்துள்ளது. அதிலே விளையும் நெல்லை ஒழுங்காக அறுத்து, கதிரடித்து, தூற்றிக் களஞ்சியத்தில் வைத்தால், அந்த நெல்லை மக்கள் பல நாட்கள் சாப்பிடலாம். அந்த நிலம் யானைக்கே உணவுக்காக விடப்பட்ட மான்யம் என்றாலும், அதிலே வரும் நெல்லை யானைக்குப் பல நாள் தரலாம்.

இந்த நிலம் யானைக்கு விட்டதுதானே என்று அந்த நிலத்திலே (விளைந்தும், விளையாமலும்) பயிரை அறுக்கப் பத்து நாள் இருக்கும் போது யானையை விட்டால் என்ன கதியாகும். ஒரே நாளில் பலமடங்கு நெல் தரும் பயிரை

அழித்து, மிதித்து ஒன்றுக்கும் ஆகாமல் யானை செய்து விடும். யானை வாயில் புகும் நெல்லைவிட அதன் கால்களால் மிதிபட்டுச் கெடும் நெல்லே அதிகமாக இருக்கும். அதேபோல ஆட்சி பீடத்திலே அமர்ந்துள்ளவர்கள் மக்களை வரியால் மாட்டி, வாட்டி வதைக்காமல் நெறியால் ஆண்டால், மக்கள் இயல்பினை அறிந்து தக்க முறையில் வரி வாங்கினால், மக்கள் அன்போடு ஆட்சிக்கு வரி செலுத்தினால், அந்த ஆட்சி அதிக நாள் நீடிக்கும்.

கோடிக் கணக்கான பொருள் தானே வந்து குவியும். மக்களைக் கொடுமைப் படுத்தி அதிகாரத்தால் வாங்கும் வரியால் ஆட்சியிலே அவல நிலைதான் ஏற்படும். வேழத்தின் கதையை வேந்தனுக் குரைத்து வரி வாங்கும் முறையை மக்கள் மத்தியிலிருந்து வந்த கவிஞர் மன்னனுக்கு எடுத்துரைத்து விளக்குவார்.

அறிவிலும், ஆற்றலிலும் விளங்கிய ஆந்தையார் புகழ் அயல் நாட்டிலும் பரவியது. கோப்பெருஞ்சோழன் என்ற கோமகன் உறையூரை ஆண்டு வந்த சோழ மன்னன். பிசிராரின் பெருமைகளைக் கேட்டான் பெருவேந்தன். அவர்பால் அன்பு செலுத்தினான். சோழன் பண்புகளைக் கேட்ட செந்தமிழ்க் கவிவாணர் அவன்பால் அன்பு கொண்டார். இருவரும் ஒருவரை ஒருவர் சந்திக்கவில்லை. புறக் கண்களால் காணவில்லை. ஆனால் அகக்கண்ணாலே கண்டனர். அடிக்கடி எண்ணத்தால் சந்தித்தனர். சோழன் பெருமைகளை எண்ணி எண்ணிக் கவிதையிலே பாடி மகிழ்வார் கவிஞர்.

கோப்பெருஞ் சோழனுக்கும் அவன் பெற்ற பிள்ளைகளுக்கும் மன மாறுபாடு உண்டாயிற்று. வேறுபாட்டினால் வேந்தன் வேதனைக்குள்ளாயினான். அறநெறியைப் பின்பற்றும் அரசன் தன்னாட்டைத் துறந்து வடக்கிருந்து உயிரை விட முடிவு செய்தான். ஊருக்குப் புறம்பே தனியிடத்தில் தங்கியிருந்தான். அவனை விட்டுப் பிரிய இசையாத பலரும் அவனைச் சூழ்ந்திருந்தனர். தன்னைவிட்டு அசையாதிருக்கும் அன்பர்களைக் கண்டு தனது உற்ற நண்பர் பாண்டிய நாட்டுக் கவிஞர் பிசிராந்தையாருக்கும், தனக்கு அருகில்

இடம் அமைக்கும்படி சோழ மன்னன் கேட்டுக்கொண்டான். இதைக் கேட்டு இளநகை புரிந்தனர் மன்னனோடு இருந்த பலர். "செழியன் நாடு எங்கே! பாராளும் காலத்தில் பார்க்க வராத பாண்டிய நாட்டுப் பாவலர், பார் துறந்து பட்டினி கிடந்து உயிர் துறக்கப்போகும் சோழனையா காண ஓடி வரப் போகிறார். சோழன் ஏதோ அன்பால் கூறுகிறார்" என்று நினைத்தனர். அதையுணர்ந்த சோழன் பிசிராரின் பெருமையைப் பேசி "இன்னே வருவார்" என்றான். இவர்கள் இவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கும்போது ஒரு இளைஞர் ஆர்வத்தோடு வெகு வேகமாக வந்தார்.

அவரைப் பார்த்தவுடன் பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர் என்பதை அங்குள்ளோர் தெரிந்துகொண்டனர். அவர்தான் பிசிராந்தையார் என்பதை மன்னன் தெரிந்துகொண்டான். பிசிராந்தையார் வயது மிக்க கிழவராக இருப்பார் என்று எண்ணினர். ஆனால் அவரது இளமையான தோற்றத்தைக் கண்டு அனைவரும் ஆச்சரியத்தில் மூழ்கினர். நரையும், திரையும், மூப்பும் கொண்டவராகப் பிசிராந்தையாரை எண்ணியவர்கள் ஏமாற்றமடைந்தனர். பிசிராந்தையார் வந்ததில் மன்னன் மட்டற்ற மகிழ்ச்சிகொண்டான். இருவரும் புறக்கண்களால் கண்டு மகிழ்ந்தனர். பிசிராந்தையாரின் இளமையைக் கண்டு அதிசயமுற்ற நண்பர்கள் இதில் ஏதோ இரகசியம் இருக்கவேண்டும் என்று ஆந்தையாரை அணுகி அவர் இளமையோடு இருக்கும் இரகசியத்தைக் கேட்டனர்.

"எனக்கு மாட்சிமை பெற்ற மனைவி கிடைத்துள்ளாள். பெற்ற மக்கள் அறிவிலே நிரம்பி நிற்கின்றனர். என்னுடைய ஏவலாட்கள் நான் எண்ணியவைகளைச் செய்ய வல்லவர்கள். நான் வாழும் பாண்டியநாட்டிலே அரசன் அல்லவை செயயான். நீதியோடும், நேர்மையோடும் அரசன் நாட்டை ஆள்கிறான். எல்லோரையும், காத்து, உதவும் குணமுடையவன். எங்களையாளும் கோமானின் நற்குணங்கள் சொல்லிலே சொல்ல முடியா. நற்குணங்களால் அமைந்து, பணியவேண்டிய பெரியவர்களிடம் பணிவாக நடந்து, ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினை உடைய உத்தமர்கள் பலர், நான் வாழ்கின்ற ஊரிலே வாழ்கிறார்கள்.

அறவழியில் நிற்கும் அந்த உத்தமர்கள் செய்யும் நற்றவத்தால் மக்கள் மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள். இத்தகைய இனிய சூழ்நிலையில் வாழ்வதால் இளமையோடும், நரை, திரை யில்லாமலும் இருக்கிறேன்'' என்று இயம்பினார் பாண்டியநாட்டுப் பாவலர். கீழுள்ள (புறநானூற்றுப்) பாடல் மூலம், ஆந்தையார் காட்டிய இளமை இரகசியத்தைக் காண்போம்.

''யாண்டுபல வாக நரையில வாகுதல்,
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியோடுமக்களும் நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும் அதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே''

33

கான யோகி

''ஆதிகாலத்திலே, சாதி, சமய வேறுபாடு இல்லை'' என்று ஆன்றோர் கூறுவர். இந்தச் சாதிக் கொடுமை எப்படி இடைக்காலத்தில் புகுந்ததோ தெரியவில்லை. ஆதி மகாத்மாக்கள் முதல் இன்றைய மகாத்மாவரை இந்தக் கொடுமையைப் போக்க முயன்றிருக்கிறார்கள். இந்தப் பாகுபாடு ஏதாவது ஒரு வழியிலே புதிய உருவம் எடுத்து சமுதாயத்திற்குத் துன்பம் தருகிறது. இக்கொடுமை ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு விதமாய்த் தலை தூக்கித் துன்பம் தருகிறது.

கால்நூற்றாண்டுகளுக்கு மேலாக காந்தி மகாத்மா இக்கொடுமையை அகற்ற அரும்பாடுபட்டார். தனது நிர்மாணத் திட்டத்திலே அரிசனங்கள் முன்னேற்றம், தீண்

டாமை ஒழிப்பு, அரிசனங்களுக்கு ஆலயத்திறப்பு விழா போன்ற அரிய திட்டங்களைச் சேர்த்தார். காந்தி மகாத்மா வுக்கு முன்னரும் பல பெரியவர்கள் அந்த வேற்றுமையை விரட்டப் போராடி இருக்கிறார்கள்.

இந்து சமூகத்திலே, பல அரிய தெய்வப் பெரியார்கள் தோன்றியிருக்கிறார்கள். அப்பெரியவர்களை இன்றும், மக்கள் எந்த வேற்றுமையும் இன்றித் தெய்வமாகக் கொண்டாடிப் போற்றி வணங்குகிறார்கள். நந்தனாரை வணங்காத பக்தன் இல்லை. அதேபோல பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒரு வரான திருப்பாணாழ்வாரை வணங்காத வைணவன் கிடை யாது.

அரவணையில் அறிதுயில் கொள்ளும், அமலனாகிய ஆண்டவனை அகத்திலே, ஆழ்த்திக்கொண்டு, அன்பு கனிந்து, நெஞ்சம் நெகிழப் பாடிய பரம பாகவதர்கள் ஆழ் வார்கள் என்று அழைக்கப்படுவார்கள்.

ஊரெனப்படுவது உறையூர் என்று உரைக்கப்படும். சோழர்களின் தலைநகராய் விளங்கியது உறையூர். பாணன் ஒருவன் கழனியிலே ஒரு குழந்தையைக் கண்டு எடுத்தான். சுற்று முற்றும் பார்த்தான். குழந்தைக்கு உரியவர் என்று எவருமில்லை. குழந்தையை எடுத்துக்கொண்டு இல்லம் ஏகினான். மனைவியிடம் தந்தான். அப்பெண்ணே குழந் தையை மார்போடு அணைத்துப் "பிள்ளைக் கனி தீர்க்க வந்த அமுதே" என்று பாராட்டினாள். சீராட்டினாள். குழந்தையை யும் வளர்த்தாள். பாணர் மரபிற்கேற்ற, யாழ்ப் பாடலில் வல்லவனாய், இனிய யாழிசை பாடும் திறமை பெற்றான்.

எல்லோரும் இவனைப் பாணர் என்று பெயர் கூறி அழைத்தனர். நாரத முனிவர்போல, இளமையிலேயே ஞான வைராக்கியம் பெற்றார். வீணையும், நாதமும் கூட விமல னையே பாடி வந்தார். திருக்காவிரியின், தென் கரையில் யாழுங்கையுமாக நின்று கொண்டுபள்ளிகொண்ட பரமனைக் குறித்துப் பல பாடல்களைக் (கேட்பவர் செவியும் மனமும் குளிரப்) பாடிக்கொண்டிருந்தார்.

திருவரங்கநாதனை ஆராதிக்கும் உலோக சாரங்க முனிவர் பொன்னி நதியிலே நீராடி, திருமண் அணிந்து

பெருமாள் திருமஞ்சனத்திற்குப் பொற்குடத்தில் நீரை எடுத்துக் கொண்டு அப்பக்கமாக வந்தார். தாழ்ந்த குலத்தில் வந்த திருப்பாணன் நிற்பதைக் கண்டார். அவனைத் தாண்டி எப்படிச் செல்வது? தீண்டாகுமே திருமஞ்சன நீர், என்று கருதிப்பாணனை அருவருப்போடு நோக்கி "அகலச் செல்" "அப்பால் செல்" என்று பன்முறை கூவினார். இறைவனைப் பற்றி இசை பாடிக்கொண்டிருந்த பாணன் இவ்வுலகையே மறந்து நின்று கொண்டிருந்தார்.

முனிவர் உரைத்த சொல் கானயோகியினுடைய காதில் விழவில்லை. முனிவரும், மற்றவரும் இதைக்கண்டு, "இழிபிறப்பில் வந்த இப்பாணனுக்கு இவ்வளவு திமிரா?" என்று கோபம் கொண்டு திருபபாணன் மீது மலைப்பிஞ்சுகளை வீசினர்? ஒரு கல் பாணன் நெற்றியிலே பட, குருதி கொட்டியது. தெளிவுற்ற திருப்பாணன் அருகிலே முனிவரும் இருப்பதை கண்டு, தன் தவறை உணர்ந்து நெற்றியிலே இரத்தம் ஒழுக, அந்த இடத்தை விட்டு உடனே அகன்றார்.

முனிவரும் பொற்குடத்தை எடுத்துக்கொண்டு கோயிலுக்குச்சென்றார். அங்கே அரங்கநாதன் நெற்றியிலிருந்து செந்நீர் வழிந்து கொண்டிருந்தது. முனிவரும் அர்ச்சகர்களும் அதைக்கண்டு அஞ்சி நடுங்கி அரசனுக்குச்செய்தி அறிவித்தனர். அரசனும் அமைச்சர் சூழ அரங்கன் ஆலயம் வந்தார்.

அரங்கன் நெற்றியிலிருந்து குருதி கொட்டும் காரணம் அறிய முடியாத அரசனும், திருவரங்கப்பெருமான் திருவடியிலே பாரத்தைப்போட்டு, கவலையோடு திரும்பினான். அன்று இரவு எம்பெருமான் உலோக சாரங்க முனிவர் கனவிலே தோன்றினார். முனிவரே, பாணன் நமக்கு அன்பன். இசையால் எம்மை மகிழ்விப்போன். கல்லால் அடிப்பது தகுதியாமோ! அவரை நுமது தோளில் ஏற்றிக்கொண்டு சன்னதிக்குக் கொண்டு வாருங்கள்" என்று அரங்கன் பணித்தார்.

மணிவண்ணன் உரைத்த ஆணையைச் சிரமேற் கொண்டு, தன் கனவில் வந்த செய்தியைக் காலையில் அன்பர் பலருக்கும் எடுத்துக்கூறி, முனிவர் அன்பர் புடைசூழ,

திருமுகத்துறை நோக்கிச்சென்றார். துறையின், கரையிலே நின்றுகொண்டு கானயோகி அரங்கத்தை நோக்கி யாழோடு இறைஇசை பண்ணிக் கொண்டிருந்தார். தாளும் தடக்கையும் கூப்பிப் பணிந்து, "கானபாண மாமுனியே! தேவரீரைத் தம்மிடத்துக்கு எழுந்தருளச் செய்யுமாறு நம் பெருமாள் அடியேனுக்கு ஆணையிட்டார்"என்றுகூற, "புலை மகனாகிய சிறியேன் அரங்கத்தை மிதித்திடல் அழகோ" என்று பாணன்பகர, "முனிவர் தேவரீர்மிடத்தில் வேண்டாம், தேவரீர் சிறையே தோளில் எழுந்தருள வேண்டு"மென்று பிரார்த்தித்தார்.

"தூய மெய்த்தவ முனிவராகிய தங்கள் தோளில் இக் கடையன் ஏறுவதா. "தவறு' தவறு", என்று பாணன் கூறினார். "கானயோகி! இது அரங்கனுடைய திருவருள். இதற்கு இசைவதைத் தவிர வேறு வழியில்லை" என்று வேண்டினார். அரங்கனையே அகத்தில் கொண்டு, தன்னை மறந்து நின்ற திருபாணாழ்வாரை, உலோக சாரங்கர் தனது திருத்தோளில் தூக்கிக்கொண்டு, அழகிய மணவாளன் திருமண்டபத்திற்கு அருகே இறக்கி விட்டார். அப்பொழுது பெருமான் தனது மங்கள வடிவை இவருக்குக் காட்டியருள, முனியேறும் பெருமாள், அணியரங்கனது எழில்மிகுந்த திவ்விய மங்கள வடிவைக் (திருவடிகளிலிருந்து திரு முடியள வும்) கண்களிகூரக் கண்டு, பேருவகை அடைந்தார். தான் அனுபவித்த இன்பத்தை ஏனையோரும் அனுபவிக்க 'அமல னாதி பிரான்' என்னும் பத்துப் பாட்டுடைய பிரபந்தத்தை அருளிச் செய்தார்.

இறைவனுக்குச் சாதிபேதம் இல்லை. எக்குலத்திலும் மெய்யடியார்கள் தோன்றுவார்கள். ஒவ்வொரு, உட்பிரிவிலும் இத்தகைய தெய்வப் பெரியார்கள் தோன்றியிருக்கிறார்கள். நாலாயிர திவ்விய பிரபந்தத்திலே திருப்பாணாழ்வார் பாடிய பாடல்கள் மிகக் குறைந்த பாட்டுக்கள். பத்தே பாட்டுக்கள். அதிலே பரமனைக் கலக்கும் பரம ரகசியத்தைப் பக்குவமாய் பாணர் தெரிவிக்கிறார். திருப்பாணாழ்வார் எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கூறலாம்.

திருவரங்கம், திருவேங்கடம், பரமபதம் ஆகிய தலங்களைத் திருத்தொண்டர், திருப்பாணாழ்வார் பாடினர்.

திருமாலின் திருமேனியழகில் ஈடுபட்ட பாணர் ஒவ்வொரு அங்கமாக அழகை அனுபவிக்கிறார்.

அரங்கத்தம்மான் கமலபாதம் வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றதே!'' என்று முதலில் திருவடியைப் பற்றி நின்று, பின் ஏனைய உறுப்புகளின் அழகிலே ஈடுபடுகிறார். "பெருமாளுடைய பொன்னுடை, திருஉந்தி, உதரபந்தனம், மார்பு, திருமிடறு, திருவாய், திருக்கண், திருமேனி'' என்று ஒவ்வொன்றாக அனுபவிக்கிறார்.

"நீலமேனி! ஐயோ! நிறைகொண்டது, என் நெஞ்சினையே'' என்று நெஞ்சுருகக் கூவுகிறார்.

"கொண்டல் வண்ணன் கோவலன், வெண்ணை உண்ட பெருவாயன், என் உள்ளம் கவர்ந்தவன், அண்டர்கோன் அணி அரங்கன் எனக்கு அமுதம் போன்றவன், இத்தகைய தேவாதிதேவனை, இந்த ஊனக் கண்களினாலே கண்டேன். உண்டேன் பேரின்பம். இனிவெறு பொருள்கள் உயர்ந்ததாக இருக்கின்றனவா? அரங்கனுக்குப் பிறகு வேறு ஒரு பொருளும் உண்டா! இருக்கமுடியுமா?'' என்று பாணர் பேசுகிறார்.

அரங்கன் நித்தியப் பொருளாயிற்றே. அந்தப்பிறவாத பேசரும் பெரும் பொருளைக்கண்டபின், வேறு ஒரு பொருளைக் காணலாமா? காணவே கூடாது. என்று கானயோகி. தூய திருத்தொண்டராகிய திருப்பாணாழ்வார், திருவரங்கப் பெருமானை மெய்மறந்து சேவித்துக் கொண்டிருக்கும்போது, திருமாலின் திருவடிகளிலே இரண்டறக் கலந்தார். அந்த இறுதிப் பாட்டை நாமும் காண்போம்.

"கொண்டல் வண்ணனைக் கோவல னாய்வெண்ணெய்
உண்ட வாயனென் னுள்ளங் கவர்ந்தானை
அண்டர் கோனணி யரங்கனென் னமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன் றினைக் காணாவே!''

34

காதல் காவியம்

கல்வியிலே பெரியவர் கம்பர். அவர் பாடியருளிய இராமாயணம் ஈடு இணையற்றதாய் விளங்குகிறது. குலோத்துங்க சோழன் உயிரினும் மேலாகக் கவிஞரைப்போற்றினான். கம்பர் பெற்றெடுத்த மாணிக்கம் அப்பிகாபதி. மிகச் சிறு வயதிலேயே அம்பிகாபதி அப்பாவைப் போல கவிபாடுவதிலே தேர்ந்து நின்றான்.

அம்பிகாபதி நல்ல அழகன். கல்வியிலே கரைகண்டவன். பார்த்தவர் பரவசம் கொள்ளும் இன் முகத்தன், ஊரெல்லாம் அம்பிகாபதியைப் போற்றியது. அம்பிகாபதியின் பேச்சும், பாட்டும், தமிழும் எல்லோரையும் பரவசம் கொள்ளச் செய்தன. அம்பிகாபதியின் பெருமை சோழமண்டலம் முழுவதும் பரவியது.

குலோத்துங்கன் பெற்றெடுத்த குலக் கொழுந்து அமராவதி என்ற அழகுத் திரு நங்கை. குலோத்துங்கன் அறிவிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்கினான். அவன் பெற்றெடுத்த அழகுத்திரு அவனையும் மிஞ்சினாள். ஊராளும் மன்னன் மகளாகப் பிறந்த கன்னி, கவிதை இன்பத்திலும், கன்னித்தமிழ் மொழியின் பெருமையிலும் பெரிதும் நாட்டம் கொண்டாள். அவள் தாயும் வருகின்ற போதே பெரும் புலவன் ஒருவனைச் சீதனமாகக் கொண்டுவந்தாள். அம்பிகாபதியின் ஆற்றலையும், அறிவையும், அழகையும் அரசன் மகள் கேட்டு இரசித்தாள். அவனைக் காண நாட்டம் கொண்டாள். அவன் இயற்றிய கவிதைகளை விரும்பிப் படித்தாள்.

ஒரு நாள் தோழியரோடு அமராவதி நகரத்திற்கு அருகிலுள்ள மலர் வனம் சென்றாள். தோழியரோடு ஓடினாள், ஆடினாள், பாடினாள். வண்ண மலர்களின் ஊடே கண்ணைப் பறிக்கும் வர்ணச் சேலை கட்டிய வனிதையர்கள் மானைப் போல ஓடினார்கள். மயிலெனச் சாயல் கொண்ட மங்கையர்கள் மரகதப் பச்சை வெளிகளிலே ஓடி மறைந்தார்கள்.

குயிலெனப் குரலைக் கொண்ட வீங்கிள முலை மாதர்கள் கோலா கலமாகக் குதித்து ஆடினார்கள். தாழ்ந்து, அடர்ந்து, கூந்தலையுடைய தையலர்கள் தாவிப் பாடினார் கள். குலோத்துங்கன் பெற்ற குலக்கொடி, அமராவதி அன்னம்போல நடந்து வந்தாள். ஆருயிர்த் தோழிகளைக் காணோம். ஆருயிர்த் தோழிகள் அரசன் மகள் அமரா வதியை விட்டு அகன்றனர். தோழிகளைத் தேடிக்கொண்டு ஆடிவந்தாள் அமராவதி.

அசைந்து வந்த ஆரணங்கு, முன்னால் வந்த உருவத் தோடு மோதினாள். மோதிய இரு உருவங்களும் விலகின. ஆனால் மோதிய கண்கள் விலகவே இல்லை, கண்ணோடு கண்கள் நோக்கின, ஒன்றையொன்று உண்ணவும் நிலை பெறாது, அம்பிகாபதியும் நோக்கினான், அமராவதியும் நோக்கினாள். இருவரும் உணர்வினால் ஒருவராயினர். "அன்பே" என்றாள், "அமுதே" என்றான். இன்பம்! இன்பம், இன்பத்தின் உச்சிக்கே இருவரும் சென்றனர். பிறகு என்ன! அம்பிகாபதி என்று அறிந்த அமராவதி ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினாள். அரசன் மகள் அமரா வதி என்று அறிந்தான் அம்பிகாபதி.

மக்கள் மத்தியிலிருந்து வந்த இளங்கவியை, கம்பர் மகனை, மன்னன் மகள் மனதார நேசித்தாள். கொற்றவன் குலக்கொழுந்தை, பாமாலை பாடும் கம்பன் மகன் காதலித் தான். நாட்கள் பல சென்றன, அம்பிகாபதியும், அமரா வதியும் அடிக்கடி சுனையருகிலும், மலர் வனத்திலும், ஆற்றங்கரையிலும், தோப்பிலும், சந்தித்தனர். வானமுதம் வேண்டாம் நமது காதல் இன்பம் போதும் என்றனர்.

அமராவதியின் அழகை இரசித்த இளங்கவி பலபல கவிதைகளை இயற்றினான். காதலன் இசைத்த கவிதை இன்பத்திலே காதலி மூழ்கினாள். மைவடிவக் குழலியே! மதியே! மானே! செய்வடிவைச் சிற்றிடையைத் திரு நகையை, வேய்த்தோளை செதுக்கிய சிற்பி யாரோ! கமலத்தாள் கைவண்ணமும். மைவண்ணமும் கொண்டு கட்டழகி இவளைப் படைக்கப் பட்டபாடு எவ்வளவோ!" என்று பாடினான். அவர்களுடைய காதல் வளர்ந்தது.

உண்மைக் காதலுக்குத்தான் எங்கும் பொறுமையும் போட்டியும் ஏற்படுமே! அதன்படி அம்பிகாபதி காதல் விஷயம் அரசனுக்கு எட்டியது. அமராவதியின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தினார்கள் அரசன் ஆத்திரம் கொண்டான். "மன்னன் மகள் எங்கே! கவிபாடும் அற்ப அம்பிகாபதி எங்கே," என்று. உடன் இருந்தோர் "கம்பன் மகனாயிற்றே," என்று அரசனிடம் சமாதானம் சொன்னார்கள். "ஆராயாமல் எதையும் முடிவு செய்யக் கூடாது," என்று அமைச்சர்கள் அரசனுக்கு அறிவுறுத்தினார்கள். அமைச்சர்கள் ஆலோசனையின்படி அம்பிகாபதி, கம்பர் முதலிய, குறிப்பிட்ட சிலரை அழைத்து மன்னன் விருந்து வைத்தான். முன்னேற்பாட்டின்படி, அரசன் மகள் அமராவதி அன்னம் படைக்க, வட்டில் சுமந்து ஒய்யாரமாக, நளினமாக நடந்து வந்தாள். அவளைக் கண்ட அம்பிகாபதி ஆனந்தத்தில் மூழ்கி, தன் காதலியின் வடிவழகை வர்ணிக்கத் தொடங்கி விட்டான்.

"இட்டடி நோவ, எடுத்த அடி கொப்பளிக்க, வட்டில் சுமந்து மருங்கு அசைய வரும் எனது மனத்திற்கினியவளே" — என்று பாடினான். அருகில் இருந்த கம்பர் "தன் மகனுக்குத் தீங்கு வரும்" என்று, தெருவில் கிழங்கு விற்பவளுக்குப் பொருந்தப், பின்பகுதியை மாற்றிப் பாடினார்.

(ஆனாலும் அரசன் அம்பிகாபதி, அமராவதியை) அவர்களைக் கையும் களவுமாகப் பிடித்தான். கடும் கோபம் கொண்டான். "கவிதை பாடிப் பிழைக்கும் கவி, காவலனின் மகளைக் காதலித்தது குற்றம்" என்று கூறினான். கொலைத் தண்டனையும் விதித்தான். தன் ஒரே மகனுக்காக கம்பர் காவலனின் காலைப் பிடித்துக் கொண்டு கதறினார். அமராவதியோ அம்மாவிடம் அலறினாள். சோழன் மனம் இரங்கினான். "சிற்றின்பம் கலவாமலே பேரின்பப் பாடலாக நூறு கவிதை பாடினால் அம்பிகாபதியை மன்னிப்பதாக அசரன் கூறினான். அரசனுக்கிருந்த ஒப்பற்ற தமிழ்ப் பற்றே இதற்குக் காரணமாகும். அக மகிழ்ந்த அரசன் மகள், அம்பிகாபதியைச் சிறையிலே கண்டு, செய்தி கூறி மகிழ்ந்தாள். சபையிலே அம்பிகாபதி பாடும் போது, தான் மலர் எண்ணிக் கொண்

டிருப்பதாகவும், நூறு மலர் எண்ணி முடிந்தவுடன், அன்புக் காதலனை மாடத்திலிருந்து மட்டற்ற மகிழ்ச்சியோடு காணப் போவதாகவும் கூறினுள்.

சபை கூடிற்று மறுநாள். சோழன் உத்திரவிட அம்பி காபதி பேரின்பப் பாடல்களைப் பாட ஆரம்பித்தான். முதலில் காப்புச் செய்யுளைப் பாடி தன் இஷ்ட தெய்வத்தை வணங்கி னுன். இங்கே விதி சதி செய்தது. தமிழிலே புலமையும் பெற்ற அமராவதி, அதிக ஆனந்தத்தால் மதியை இழந்தாள். விதியின் சதியாலே காப்புச் செய்யுளைக் கணக்கிட்டு, எண்ண வைத்திருந்த நூறு மலர்களிருந்து ஒரு மலரை வெறும் கூடையிலே "ஒன்று" என்று மகிழ்ச்சியிலே தூக்கிப் போட்டாள். அவையிலே கணக்கு 99. அமரா வதியின் கணக்கு 100. அதுவரை மறைவாக இருந்த அமரா வதி ஆனந்தத்திலும், ஆத்திரதிலும், அவசரத்திலும், உந்தப்பட்டு, ஓடிவந்த அம்பிகாபதியை மாடத்திலிருந்து எட்டிப் பார்த்தாள். வந்தது மோசம். எட்டிப் பார்த்த வளைக் கண்ட அம்பிகாபதி "நூறு கவிதைகள் பாடி முடிந் தது" என்று கருதி சிற்றின்பம் கலந்த பாடலைப் பாடினுன்.

பெரிய கொங்கைகள் குலுங்கி அசைய, முத்து மாலை யானது கொங்கையின் மீது நெருங்கி அசைந்தாடவும், காதுகளிலே அணிந்துள்ள அழகிய குழைகள் அசையவும், பவழம் போன்ற சிவந்த இதழ்களை உடைய வாயில் தேனு றும் சொற்கள் பேச, அன்னம்போல அழகும், சிங்கார நடையும், அமைந்த பொன்னிறமான பொலிவு மிக்க உடலா கிய அழகுத்தேர் இருக்க, முழு மதியம் போன்ற முகமும் அழகாக அலங்கரிக்கப்பட்ட தலைப்பகுதியும் வெளியே தோன்ற, அம்பிகாபதி ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினுன். ஆனுல் ஐயோ! கொடுமை! கொடுமை! அரசன் தன் முடிவுப் படி, கொலைத் தண்டனையை வழங்கி சபையை விட்டு **வெளியேறினுன்.**

கொலைக்களத்திலே அம்பிகாபதி கொல்லப்பட்டான். அதே சமயம் அவனின் ஆருயிர்க் காதலியும் அவனைத் தொடர்ந்தாள்.

உரோமிய — ஜுலியத்-லைலா-மஜ்னு-அனார்கலி-சலீம்-அம்பிகாபதி—அமராவதி இவர்களின் காதல் கதைகள் இலக்கிய உலகில் உலவுகின்றன.

அமராவதியைக் கண்ட அம்பிகாபதி, அவையிலே, அவளைப் புகழ்ந்து பாடிய கடைசிப் பாடலைக் காண்போம்.

"சற்றே பருத்த தனமே குலுங்கத் தரளவடம்
துற்றே அசையக் குழை ஊசலாட துவர் கொள்
செவ்வாய்
நற்றேன் ஒழுக நடனசிங்கார நடையழகின்
பொற்றேர் இருக்கத் தலையலங்காரம் புறப்
பட்டதே!

35

இராயப்பேட்டை முனிவர்

முதலில் ஆத்திகம்தான் பிறந்தது என்றும், அதில் பிளபட்டவர்கள் நாத்திகர்கள், என்று கூறிக்கொண்டு பிரிந்தார்கள் என்றும் கூறுகிறார்கள்'

இந்த இரண்டு வாதங்களும் சமுதாயத்திலே இருந்து கொண்டுதான் இருக்கின்றன. அவைகள் ஒன்றை ஒன்று குறைகூறிக் கொள்ளுகின்றன. ஆனால் அறநெறி நிற்கும் பெரியார்கள் அனைவரையும் வாழவைக்க வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்திக்கிறார்கள். 'தூற்றியவர்களையும் காப்பாய் போற்றி, என்று துதி பாடுகிறார்கள்.

விருத்தாசலமும், அன்னம்மாளும் இன்ப இல்லறம் நடத்தினார்கள். இவர்கள் பெற்ற செல்வம் கலியாணசுந்தரம். செங்கற்பட்டு ஜில்லாவிலே துள்ளம் என்ற கிராமத்திலே 1813-ம் ஆண்டு கன்னித் தமிழ் வளர்க்க கலியாணசுந்தரம் பிறந்தான். சுந்தரத்தின் தந்தை ஒரு வியாபாரி,

அதே சமயம் தமிழே உயிராய் வாழ்ந்தவர். குழந்தைகளை அழைத்துக் கொண்டு விருத்தாசலம், துள்ளத்தை விட்டு சென்னைக்கு வந்தார். இராயப்பேட்டையிலே குடியேறினர்.

குழந்தைகள் எல்லோரிலும் கல்யாணசுந்தரம் அதிக அறிவுள்ளவனுகத் திகழ்ந்தான். பத்துப் படிப்பு முடிப்பதற்கு முன்னர் சுந்தரத்திற்கு யாழ்ப்பாணம் கதிரைவேல் பிள்ளை அவர்களுடனும், பேராசிரியர் கிருஷ்ணமாச்சாரியார் அவர்களுடனும் தொடர்பு ஏற்பட்டது. தந்தையும் காலமானர். குடும்பச் சுமை குவிந்தது.

ஆனல் தன் அறிவைப் பெருக்கிக் கொள்ள அவர் தவறவே இல்லை. யாழ்ப்பாண பிள்ளை, தொடர்பால் இலக்கண, இலக்கியங்களும், ஆன்மீக அறிவும் பெற்ருர். வட மொழியில் வல்ல பாம்பன் சுவாமிகளிடம் பழகி வடமொழியும் அறிந்தார். ஆங்கிலேயர்கள் நடத்திய இலக்கியக் கவிதைகளையும், உரைநடைச் சித்திரங்களையும், அறிந்து கொண்டார். ஆனலும் அவர் அன்பு உள்ளம் சதா தமிழ்! தமிழ்! என்றே பாடிக் கொண்டிருந்தது.

கமலாம்பிகை என்னும் நல்லாளை நம்பி இல்வாழ்க்கை நடத்தினர். சில ஆண்டுகளுக்குள் அந்த அம்மையார் இவ்வுலக வாழ்க்கையை விட்டு மறைந்தார். மறு மணத்தை மறுத்து, மாந்தர்தம் தொண்டிலே ஈடுபட்டார். குடும்பத்தின் செலவுக்காகப் பல இடங்களிலும் வேலைபார்த்து,வேலை பிடிக்காமல் வேலையை விட்டார். கடைசியாக அலுவல் பார்க்கும்போது விபின் சந்திரபால், அரவிந்தர் இவர்களின் அரசியல் ஆவேசமும், வேகமும் இவரை ஆட்கொண்டது.

சுதந்திர இயக்கத்திலே பெரிதும் பற்றுக்கொண்டு, அந்த இயக்க சம்மந்தமான செய்திகளை எல்லோருக்கும் பரப்பி வந்தார். அரவிந்தரின் "வந்தே மாதரம்" படித்துச் செய்தி பரப்பினர். அவர் வேலை பார்த்த ஆங்கில அலுவலகம், அரசியலை அனுமதியாததால் வேலையை விட்டு வெளியே வந்து, அச்சகம் நடத்தினர். அதுவும் சரிப்பட்டு வரவில்லை. வெஸ்லி சங்கம் நடத்திய பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்து பணியாற்றினர். அங்கு புகழ் பெற்று வெஸ்லி

சங்கக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினர். அரசியல் வேகம் இவரை அங்கும் விடவில்லை. திலகர் மூட்டிய சுதந்திரத்தீ நாடெங்கும் பரவியது. அக்கனலைப் பெருக்கக் கல்யாணசுந்தரம் கங்கணம் கட்டிக்கொண்டு 'தேசபக்தன்' என்ற பத்திரிக்கையில் ஆசிரியராகப் பணி புரிந்தார்.

"சுதந்திரம் எனது பிறப்புரிமை" என்ருர் திலகர். அதைச் செயலில் காட்ட, நாட்டு மக்களை அழைத்தார் கல்யாணசுந்தரம். அன்னி பெசண்ட், நீதிபதி சதாசிவய்யர் காமத், குமாரசாமி செட்டியார் போன்ருேர் ஒன்று சேர தேசத்திலே 'தேசபக்தன்' உரிமைப் போராட்டத்தை வலியுறுத்தியது. வெள்ளையனை வெளியேற்ற வேலை செய்தது தமிழ்! தமிழ்! எங்கும் தமிழ்! திரு. வி. கவின் தமிழ் திக்கெட்டும் முழங்கியது. ஜெய பேரிகை கொட்டியது. 'தேசபக்தன்' வெறும் அரசியல் பத்தனுக இல்லாமல், இலக்கியம், கதை, காவியம், சமயம், தேசப் பற்று, மொழிப் பற்று ஆகிய எல்லாப் பற்றுகளையும், பெருக்கிய பத்தனுக விளங்கியது.

திரு. வி. கவின் தெளிந்த செந்தமிழ் நடை எல்லோரையும் கவர்ந்தது. நமது மொழிக்கு இவ்வளவு வலுவுண்டா என்று மக்கள் வியந்தனர். அதுவரை ஆங்கிலமே அரசியலில் ஓங்கி நின்றது. 'தேசபக்தனை' விட்டு விலகிய பிறகு திரு.வி.க. தொழிலாளர் இயக்கத்திலே தொண்டு செய்தார். பிறகு சாது அச்சுக்கூடம் நாட்டினர். அங்கிருந்து 'நவசக்தி, பிறந்தது. 'நவசக்தி' நாட்டிற்கு நல்கிய நலன்கள் நவில இயலா. 'நவசக்தி' நீண்ட நாள் நடந்து நின்றது.

திருவிக பேச்சிலே பெரு நாவலர். எழுத்திலே இணையற்றவர். உறுதியான உள்ளம் படைத்தவர். தன்னலமின்றி கடைசிவரை வாழ்ந்தவர். "இராயப் பேட்டை முனிவர்" என்றே மக்கள் அப்பெரியாரை அழைத்தார்கள். கும்ப முனியைப் பற்றி கேள்விப் பட்டிருக்கிருேம். இந்த முனியை நேரிலே கண்டோம்,

முனிவருக்கெல்லாம் முனிவராய் வாழ்ந்து, தமிழும்,நாடும் கலங்க இந்தப் புனிதன் மறைந்தார். அன்று அரசியல் வாதி அழுதான், முதலாளி அழுதான், தொழிலாளி அழு தான், சமயவாதி அழுதான், சமயப்பற்று அற்றவன் அழு தான். சீர்திருத்தவாதி அழுதான், சிந்தனைக்காரன் அழு தான். கவிஞன் அழுதான். பெண்ணும் அழுதாள். யார் அழவில்லை என்று கூற! இப்படி எல்லோர் இதயத்தையும் கவர்ந்த ஒரு மாபெரிய திரு.வி.க.வைத் தமிழகம் காண்பது அரிது. ஆயிரம் மணி மண்டபம் கட்டினாலும் ஒரு திரு. வி. க. வைக் காண்பது அரிது.

ஐம்பதுக்கு மேற்பட்ட உரை நடை, கவிதை, ஆராய்ச்சி நூல்களைத் தமிழ்மக்களுக்குச் சொத்தாக விட்டுச் சென்றுள் ளார். அவரது கவிதை நூல்களான உரிமை வேட்கையும், பொதுமை வேட்டலும், பொருளும், அருளும், புதுமையும், பழமையும், அன்பும், பண்பும் பொங்க அவர் பாடிய பாக் கள், பாடப் பாட, பாடிய வாய் தேனூறும். கவிதையே மட்டும் இயற்றியிருந்தால் பெருங்காவியங்களைச் செய் திருக்க முடியும். உரை நடை மட்டுமே எழுதியிருந்தால் பல நூறு நயமிக்க நூல்களைத் தந்திருக்க முடியும்.

தொழிலாளர் தலைவராய் மட்டும் இருந்திருந்தால், ஒரு மார்க்கிஸாகத் திகழ்ந்திருக்க முடியும். அரசியலே கொண் டிருந்தால் பாரத நாட்டின் முடி சூடா மன்னனாகத் திகழ்ந் திருக்க முடியும். சமயத்திலே இருந்திருந்தால் சுந்தரராகத் திகழ்த்திருக்க முடியும். ஆனால் எல்லாப் பணிகளையும் காலத்திற்கு ஏற்ப, ஏற்று, தள்ளவேண்டிய நேரத்திலே தள்ளி, கொள்ளவேண்டிய நேரத்திலே கொண்டு, கலியா ணசுந்தரமாகத் திகழ்ந்தார். இதை அவர் இயற்றிய "அருள் வேட்டல்" மூலம் அறியலாம்.

"எல்லா உலகங்களும் துன்பமின்றி, இன்பமாய் வாழ வேண்டும். எல்லா இடங்களிலும் நீக்கமற பரிபூரணமாய் நிறைந்திருக்கும்பொருளே ஒப்பற்ற பரம்பொருளாகும்.முதல் விதை எப்போது உண்டாகியது! அப்போதுதான் செடியும் உண்டாகியது. செடி முதலில் உண்டாக்கியதா? விதை முதலிலா? இது வாதம் தான். ஆனால் எது முதலில் உண்டானால் என்ன! அது உன்னுடைய அளவற்ற கருணை

யினல் உண்டாகியது. விதை முளைக்கும் போது, முளை கிளம்பும். அது வானை நோக்கிச் செல்லும். அந்த முளைக்கும் மூல, காரணமான, முளையாகியும், மகத்துக்கெல்லாம் மகத்தாயும், உலகத்தோடு பொருந்தியுள்ள பொருள் பெரும் தெய்வமே!

எல்லா இடத்திலும் என்ன இருக்க முடியும்! தூணிலும், துரும்பிலும் தூயவனே நீயல்லவா குடி கொண்டிருக்கிருய்! அணுவுக் கெல்லாம் அணுவாய் விளங்கும் விமலா! உன்னை இழந்தால், உனது கருணை இல்லையானல், உலகில் என்ன நடக்கும்! இயக்கம் நடக்குமா! கதியும், மதியும் உண்டோ! தாய் போன்ற மாசற்ற கருணை கொண்ட தெய்வமே! இறைவனே! உன்னை மறவாமல் வாழ ஏழைக்கு அருள் புரிவாய் அப்பனே! உன்னை மறந்து எவ்வாறு ஏழையேன் உய்வது'' என்று திரு. வி. க. கல்லும் உருக இறைவனைப் பாடுகிருர்.

எவ்வுலகுந் தளராமல் இனிதுவாழ
எங்கெங்கும் நீங்காமல் இருக்கு மென்றே
எவ்விதைக்கும் வித்தாகி எழும்பி நோக்கும்
எம் முனைக்கும் முளையாகி இயைந்ததேவே
எவ்விடத்தும் உனையின்றி என்னவுண்டே
எவ்வணுவும் உனையிழந்தால் இயங்குங்கொல்லோ!
எவ்வுயிர்க்கும் தாயான இறையேவுன்னை
எவ்வாறு மறந்துய்வேன் ஏழையேனே!

36

அருட் பெருஞ் சோதி

இராமையா பிள்ளையும், சின்னம்மையாரும் இன்ப இல்லறம் நடத்திவந்தார்கள். சுமார் 140 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தெய்வக் குழந்தை, அந்த அன்புத் தம்பதிகளுக்குப் பிறந்தது. அந்த அரிய தெய்வக் குழந்தைக்கு

இராமலிங்சம் என்ற திருப்பெயரைச் சூட்டினர். குழந்தை பிறந்த சில நாட்களில் தந்தை இராமையா பிள்ளை காலமானுர். இராமலிங்கத்தின் அண்ணன் சபாபதிபிள்ளை குடும்பத்தை அழைத்துக் கொண்டு சென்னையிலே குடியேறினுர். அவர் தமிழ் நூல்கள் பலகற்றுப் புராணச் சொற்பொழிவுகள் ஆற்றி, குடும்பத்தைக் காத்துவந்தார். அவருக்குத் திருமணமும் நடந்தது.

இராமலிங்கத்தைக் கல்வி கற்க பள்ளிக்கு அண்ணன் அனுப்பினுர். பையன் படிப்பிலே அக்கரை காட்டாமல் சதா சிந்தனையில் மூழ்கியிருந்தான். திடீரென்று சிந்தனை யினின்றும் விடுபட்டு முருகன்மீது அருட்கவிகள் பொழிய ஆரம்பித்து விடுவான். இதைக் கண்ட ஆசிரியர் "இவன் ஓதாது உணரும் ஞானி" என்று கூறி பாடம் சொல்லுவதை நிறுத்தி விட்டார். கல்வி கற்காமல் தம்பி சுற்றுவதைக் கண்ட அண்ணன் வருந்தினுர். இராமலிங்கம் சரிப்பட்டு வராமல் போகவே, "சோறு போடாதே" என்று மனைவியிடம் கூறினுர். ஆனுல் அந்த அன்பு அண்ணி, பின்பக்கமாக இராமலிங்கத்தை வரச்சொல்லி உணவு தருவார். தந்தையின் திதி வந்தது. எல்லோரும் உணவருந்தினர். வழக்கம்போல் இராமலிங்கம் பின் பக்கமாக வர, ஆறிய உணவைப் பரிமாறிய அண்ணி அழுதாள். "அண்ணன் சொற்படி படித்தால் இந்த நிலை இல்லை யல்லவா" என்றும் எடுத்துச் சொன்னுள். அண்ணியின் அன்புக்குக் கட்டுப்பட்டு, அவ்வாறு நடக்க இராமலிங்கம் இசைந்தார்.

படிப்பதற்குத் தனியறை கொடுக்கப் பெற்றது. வழிபாட்டுக்குரிய பொருளைத் தேடி, திருத்தணிகை முருகனை வழிப்பட்டு வந்தார். முருகன் அருள் கிட்டியது. ஓதாமலே கலைகள் அத்தனையும் அறிந்தார். முருகனை எண்ணிப் பாடுவார். அண்ணி கதவின் அருகில் நின்று கேட்பார்.

ஒரு இடத்தில் அண்ணன் பெரியபுராணச் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டிருந்தார். திடீரென்று நோயின் காரணமாக அண்ணன் போகவில்லை. "நீ சென்று சில பாடல்களைப் பாடிவா" என்று இராமலிங்கத்தை அண்ணி அனுப்பினுள். வள்ளல் வழிபாடுகளை முடித்து சொற்

பொழிவு ஆற்றினர். இரவு 12 மணிவரை புராணம் நீண்டது. பலரும் இராமலிங்கமே சொற்பொழிவு ஆற்றவேண்டுமென்று வேண்டினர். தம்பி ஆற்றும் சொற்பொழிவுத் திறனைக் கேட்டு, அண்ணன் ஆனந்தமடைந்தார். காஞ்சி மகாவித்வான் சபாபதி முதலியார் வேண்ட 'மனுமுறை கண்ட வாசகம்' என்னும் உரைநடை நூலை இயற்றினர். தொண்டை மண்டல சதகம், சிவநேச வெண்பா, நெஞ்சறிவுறுத்தல், மகாதேவ மாலை, இங்கிதமாலை போன்றவைகளையும் இயற்றினர். தொழுவூர் வேலாயுத முதலியார் மாணவரானார். இவரே அருட்பா வெளிவர உதவிய அன்பர்.

அருட்பெருமான் செய்த அதிசயங்கள் பலபல. யோக மார்க்கத்தில் அவருக்குப் பற்றுண்டு. திருவொற்றியூரில் ஒருநாள் இரவு கடவுளை வணங்கினர். வெளியே போகும் சமயம் பெரும் மழை பிடித்துக் கொண்டது. நெடுநேரமாகியும் நிற்கவில்லை. அன்பர் பசியால் வருந்தினர். அம்பிகையைத் தொழுதார். அறுசுவை உண்டி வந்தது. வள்ளலார் இரசவாதக் கலையிலும் தேர்ந்தவர். இரும்பைத் தங்கமாக்கினர். மணலைத் தங்கமாக்கினர். மனத்தை தங்கமாக்க வேண்டினர். கருங்குழியில், வேங்கட ரெட்டியார் வீட்டில் தங்கி, இரவில் பாக்களை எழுதிக் கொண்டிருந்தார். விளக்கில் எண்ணெய் தீர்ந்துவிட்டது. பக்கத்தில் இருந்த செம்பு நீரை விளக்கில் ஊற்றினர். விளக்கு அணையாமல் இரவு முழுவதும் எரிந்தது. பேயை விரட்டினர். நோயைப் போக்கினர். உயிர்ப்பலி தருவதை நிறுத்தினர். அற்புதங்கள் பல காட்டி அருட்பெருஞ்சோதியைத் தனிப் பெருங் கருணையை விளக்கினர்!

தமக்கை பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இது சுற்றத்தார் வற்புறுத்தியதால் நடந்தது. ஆனால் இல்வாழ்க்கையிலே இவர் ஈடுபடவிடாமல் இறைவன் செய்து விட்டான். மெலிந்த உடலும், நிமிர்ந்த பார்வையும் வெள்ளை ஆடைகளும், அணிந்த அருட் பெருமானை வணங்காதவர் யார்?

வடலூரில் சத்திய ஞான சபை நாட்டினர். தருமசாலையும் அமைத்தார். நாற்பது ஏகர் நிலத்தில் அச்சபை அமைந்

துள்ளது. எட்டிதழ்த் தாமரை வடிவில் எழுந்துள்ளது இந்த ஜோதி மந்திரம். கொல்லா நெறியையும், அருட்பணியையும் பரப்பவே ஞானசபை உண்டாக்கினர். இன்று அந்த ஞானசபைக் கட்டிடத்தைச் சீர் பார்த்து, அருட்பாவை கல்லில் வடித்தெடுத்து, அவற்றிலே இணைத்துப் பழுதுபார்த்துப் பக்குவமாக வைத்துள்ளார் ஒரு புண்ணியர். வள்ளலார் சொன்னவை பலித்துக் கொண்டு வருகின்றன. பொட்டல், காடுபோல காட்சி அளித்த வடலூரரை, வள்ளல் கடலூராகும் என்ருர். வடலூருக்கு அருகில்தான் நெய்வேலி வெகுவேகமாக வளர்ந்து வருகிறது. சன்மார்க்க சங்கம் உலகெலாம் பரவி, சமாதானத்தோடு உலகம் அற நெறியில் வாழும் என்ருர். அந்த சமாதான யுகம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.

"உயிர்களிடம் அருளும், அன்பும் காட்டவேண்டும். இறைவனை அன்பு வழியே அடையமுடியும். கடவுளின் பெயரால் உயிர்க் கொலை புரிதல் குற்றமாகும். உலகிலுள்ள மதங்களின் சாரம் சன்மார்க்கம். அந்த சமரச சன்மார்க்கமே உண்மை நெறி. அருட்பெருஞ் சோதி, தனிப்பெருங் கருணையே அதன் முழக்கம். அருட்பெருஞ் சோதித் தெய்வம், எனை யாண்டுகொண்ட தெய்வம், அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம், அத்தெய்வத்தை வணங்கி வாழ்வதே மனித வாழ்க்கையின் பயனுகும்.

பார்த்தாலும், நினைத்தாலும், படித்தாலும், படிக்கப் பக்க நின்று கேட்டாலும், பரிந்துள்ளுணர்ந்து ஈர்த்தாலும், பிடித்தாலும் தித்திக்கும் கரும்பு, தெய்வம். கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பு. மாற்றறியாத செழும் பசும் பொன். ஒருமையுடன் அவன் திருமலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும். வட்டிமேல் வட்டி கொள் மார்க்கத்தில் நின்று பயன் என்ன? சன்மார்க்க சங்கம் சார்ந்தும் பெட்டிமேல் பெட்டி வைத்துப் பூட்டி தண்ணீர் கூட கொடுக்காமல் எட்டிபோல் எத்தர்கள் வாழ்கிருர்கள். வாடிய பயிரைக் கண்டு வாடாத வாழ்க்கை, ஒரு வாடிய வாழ்க்கையாகும்.

புண்படா உடம்பும், புரைபடா மனமும் பொய்படா வொழுக்கமும், பொருந்தி வாழ வேண்டும். படமுடியாது

இனித் துயரம் பட்டதெல்லாம் போதும். அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்த மனிதரைத் தான் இங்கு காண முடிகிறது. சாதியிலே, மதங்களிலே, சமய நெறிகளிலே, சாத்திரச் சந்தடிகளிலே, கோத்திரச் சண்டையிலே அபிமானித்து அலைகின்றவர்கள் தான் இப்போது அதிகமாக இருக்கிறாகள். கருணையிலா ஆட்சி, கருகி ஒழியவேண்டும். அருணயந்த, சன்மார்க்கர் ஆளவேண்டும்.

உன்னை நினைந்து, நினைந்து, உணர்ந்து, உணர்ந்து, நெகிழ்ந்து, நெகிழ்ந்து, அன்பே நிறைந்து, நிறைந்து, ஊற்றெழுங் கண்ணீர் அதனுல் உடம்பு நனைந்து, அருளமுதே! உன்னைத் தொழவேண்டும். அப்போது எனக்கு அருள் கிட்டும். கோடையிலே இளைப்பாறுவதற்குச் சாலையிலே கிடைத்த குளிர்ந்த ஆலமரம், வேப்பமரம் போல அது விளங்கும். அந்த மரங்களின் நிழல் தரும் குளுமையைக் காட்டிலும் நீ தரும் அருட் குளுமை அளவிட்டுச் சொல்ல முடியா.

கனியும், ஓடையிலே ஊறுகின்ற குளிர்ந்த தீஞ்சுவைத் தண்ணீரும், நீரிலே மலர்ந்த மலர்கள் தரும் மணமும், அந்த மலர் மணம் கலந்த தென்றலும், மெல்லிய பூங்காற்றும், அதன் சுகமும் அனுபவித்தால்தான் தெரியும். பொதுவில் ஆடுகின்ற அரசன் அருட்கருணையையும், அவன் அருளையும், பெருமையையும், அவன் தரும் இறை இன்பத்தையும் எத்தனை வகையிலே சொன்னுலும், அனுபவித்ததற்குச் சமானமாகுமா?'' அருட்சுடர் வள்ளலார் தான் அனுபவித்த இன்பத்தைப் பாடியுள்ளதைப் பார்ப்போம்.

கோடையிலே யிளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே
ஓடையிலே யூறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே
உகந்த தண்ணீ ரிடை மலர்ந்த சுகந்தமண மலரே
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே
மென்காற்றில் விளைசுகமே சுகத்திலுறும் பயனே
ஆடையிலே யெனைமணந்த மணவாளா பொதுவில்
ஆடுகின்ற அரசேயென் அலங்கலணிந் தருளே!

37

கவி சுந்தரம்

தமிழ்மொழி தொன்மொழி. உயர் தனிச் செம்மொழிகள் என்று செப்பப்படுகின்ற மொழிகள், அத்தனையிலும் காலத்தாலும், இலக்கிய வளத்தாலும், தமிழ் மொழி உயர்ந்து நிற்கின்றது. இந்தக் கருத்தை ஆராய்ச்சி நிபுணர்கள் தக்க ஆதாரங்களோடு கூறி வலியுறுத்துகிறார்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வடக்கே வடமொழியும், தெற்கே தமிழ் மொழியும் இந்தப் பாரத தேசத்தைப் பொறுத்த வரையில் வழங்கி வந்தன என்று கருதலாம்.

இதே போல பல மொழிகள் மேனாட்டிலும் மேன்மையுற்று விளங்கின. ஆனால் கால வேகத்திலே இந்த மொழிகளை ஒட்டிப் பல மொழிகள் எழுந்தன. எழுந்த மொழிகள் ஊக்கமும், உரமும் பெற்று உயர்ந்து ஓங்கி எல்லா நயங்களும் பெற்று வளர்ந்தன. ஆனால் எந்த மொழியை ஒட்டி எழுந்தனவோ, அந்த மூலத்தையே அழித்து, ஒழித்து மூலமே தெரியாத வகையில் நின்றன. மொழியின் கதையை மொழிவரலாறு மூலம் தெரிந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

பேராசியர் சுந்தரம்பிள்ளை கேரளாவிலே பிறந்தவர். இவர்கள் முன்னோர்கள் மதுரைக்கருகிலுள்ள ஒரு சிற்றூரில் இருந்து மலையாள நாட்டிலே குடியேறியவர்கள். சுந்தரத்தின் தந்தை பெருமாள் பிள்ளை. தமிழ் மொழியில் பேரன்பு கொண்டு வாழ்ந்து வந்தவர். மகனுக்குத் தேவாரம், திருவாசகம், திருக்குறள் போன்ற அரிய தமிழ இலக்கியங்களைச் சிறுவயதிலேயே கற்றுக் கொடுத்தார். இளமையிலே சுந்தரம்பிள்ளை தமிழ் மொழியிடத்திலே தணியாத அன்பு கொண்டார். ஆர்வத்தோடு தமிழ் மொழியைக் கற்று வந்தார். இளமையிலே அறிவுள்ள, கூர்மையுள்ள மாணவனாய்த் திகழ்ந்த சுந்தரம், திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் 1876-ம் ஆண்டு பி. ஏ. பரீட்சை தேறினார். "எழுத்தறி வித்தவன் இறைவனாகும்" என்ற கருத்துப்

படி, மற்ற உத்தியோகங்களைத் தள்ளிவிட்டு, இருபத்தி ஒன்றாவது வயதில் ஆசிரியராகப் பணியேற்றார் சுந்தரம்.

சரித்திரம், தத்துவம் இரண்டும் போதித்தார். திருவாங்கூர் அல்லது மலையாள நாட்டின் வரலாற்றை ஆராய்ந்தார். கல் வெட்டுகளைச் சோதித்தார். தான் கண்ட உண்மைகளைக் கட்டுரைகளாக வெளியிட்டார். 'சிலாசாசன நிலையம்' ஒன்று ஏற்படுத்தினார். கோடக நல்லூர் சுந்தர சுவாமிகளைக் குருவாகக் கொண்டு, வேதாந்த விசாரணை செய்தார். தத்துவ ஆராய்ச்சி, மொழியாராய்ச்சி, வரலாற்றாராய்ச்சி, இந்த மூன்றிலும் சிறந்து விளங்கினார் சுந்தரம். நல்ல தமிழ்ப் புலமையும், கவிபாடும் ஆற்றலும் கொண்டு விளங்கினார் கவி சுந்தரம். திருஞானசம்பந்தர் வாழ்ந்த காலத்தை முதன் முதலாக ஆராய்ந்து வெளியிட்டார்.

டாக்டர் ஹார்வி தத்துவ சாஸ்திர ஆசிரியர். பதவியிலிருந்து அவர் விலகிய பின்பு, அவர் மாணாக்கராகிய கவி சுந்தரம் அப்பதவியில் அமர்ந்தார். 1880-ம் ஆண்டில் எம்.ஏ. பட்டமும் பெற்றார். திருநெல்வேலியிலே கவி சுந்தரம் வேலைபார்த்த உயர்நிலைப் பள்ளிதான் இன்று வளர்ந்துள்ள இந்துக் கல்லூரியாக விளங்குகிறது. நல்லவர்கள் தொட்டதெல்லாம் பொன்னாகும் என்பதற்கு இது சான்று போலும். சுந்தரத்தின் எண்ணமும், மனமும் கடலைப் போல விரிந்து இருந்தது போலும். சில புண்ணியவான்கள் தொட்ட மறுநாளே, எத்தனையோ சங்கங்களும், சபைகளும் மூடுவிழா நடத்தியிருக்கின்றன.

1894-ம் ஆண்டு பழைய மன்னர்களின் கால ஆராய்ச்சி குறித்த கட்டுரைகள் வெளிவந்தன. 1895-ம் ஆண்டு ஞானசம்பந்தர் கால ஆராய்ச்சி நூல் வடிவில் வந்தது. இலண்டன் சரித்திர ஆராய்ச்சிக் கழகம் ஒரு பட்டம் தந்து சுந்தரத்தை கௌரவித்தது. 1896-ம் ஆண்டு சென்னை அரசாங்கம் 'ராவ்பகதூர்' என்னும் பட்டத்தைத் தந்தது.

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழாக தமிழ் மொழி விளங்கியது. நாடக இலக்கண நூல்கள், காலக் கறையா

னுக்கு இறையாகி விட்டன. பிற்காலத்திலே நாடகங்கள் தமிழில் அரிதாகி விட்டன. அக்குறையைப் போக்க வேண்டுமென்று சுந்தரம் பிள்ளை முடிவு செய்தார். ஆங்கிலத்திலே அபார ஞானம் பெற்ற சுந்தரம் பிள்ளைக்கு, கவி ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் கண்முன் நின்றன. தமிழ் அன்னைக்கு நல்ல நாடகம் சூட்ட முயன்றூர். அந்த நாடகம் தான் "மனோன்மணியம்". இந்த நாடகம் தோன்றிய நாள் முதல், இன்றுவரை எல்லோருடைய பாராட்டையும், மதிப்பையும் பெற்றிருக்கிறது.

கருத்துக்களை எல்லோரும் எளிதிலே புரிந்து கொள்ளும், செய்யுள் வடிவிலே கவிஞர் அமைத்திருக்கிறூர். பெரும் பகுதியான ஆசிரியப்பா உரை நடைபோலவே அமைந்துள்ளது. லிட்டன் பிரபு செய்யுளில் தந்த "இரகசிய வழி" என்ற கதையை முதல் நூலாகக் கொண்டு, கவி சுந்தரம் "மனோன்மணியத்தை" இயற்றினூர். ஆனூல் கவிஞர் தனது முழுத் திறமையும் காட்டி முதல் நூல் போலச் செய்துள்ளார்.

திருமுருகாற்றுப்படை, நெடுநெல் வாடை, மதுரைக் காஞ்சி ஆகிய மூன்றையும் அருமையான ஆங்கிலத்தில் சுவைபட மொழி பெயர்த்து "எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழணங்காகச்" செய்துள்ளார். இந்த அரிய கவிஞர் நாற்பத்திரண்டு ஆண்டுகள்தான் வாழ்ந்தார். அவர் செய்த மனோன்மணியத்தை தமிழ் மக்கள் மறக்க முடியாது.

அவருக்கு இருந்த தமிழ் பற்று அசைக்க முடியாதது. இறைவன் உலகைப் படைக்கிறூன்; காக்கிறூன்; அழிக்கிறூன். ஆனூல் நிலை மாறுவதில்லை. அவன் அனந்தன்: காலாந்தகன். எவற்றுக்கும் எட்டாதவன். அதுபோல தமிழ் மொழி பல மொழிகளைத் தோற்றுவித்தாலும் (வடமொழிபோல உலக வழக்கு அழிந்து, ஒழிந்து) சிதையாமல், சீரிளமைத் திறத்தோடு விளங்குகின்றது. துலங்குகின்றது. இந்த நிலையைப் பார்த்தவுடன் கவிஞர் வியந்து, செயல் மறந்து, அன்னை மொழியை வாழ்த்துகிறூர்; வணங்குகிறூர். தமிழ் மொழியின் மீது கொண்ட பற்றினூல்

மற்றைய மொழிகளைக் குறைத்துச் சொன்னரா? இல்லை; இல்லை! எப்படி இல்லை, கன்னடமும், களிதெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் என்று கூறுகிறார். இந்த மொழிகள் தென்மொழியாம் தமிழ்மொழியின் இனமொழி களாக வந்தவைகள் ஆகவே பாராட்டு. வடமொழியைக் குறைத்துதான் கூறினர் என்று கூறலாம். அதுவும் தவறு. உள்ள நிலையை உள்ளபடியே கூறினர். கூட்ட வில்லை, குறைக்கவில்லை. வடமொழியில் வெறுப்பு இருந்தி ருந்தால் அவரின் அரிய நூலுக்கு "மனேன்மணியம்" என்ற பெயரைச் சூட்டியிருக்கமாட்டார். ஆனல், கவி சுந் தரத்தின் தாய்மொழிப் பற்று அசைக்க முடியாதது. கவிஞர் சுந்தரம் காட்டிய பாதையில் நின்று தமிழ்மொழியை வளர்ப்போமாக!

பல் உயிரும் பல உலகும்
　　படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம் பொருள்முன்
　　இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களி தெலுங்கும்
　　கவின் மலையாளமும் துளுவும்
உன் உதரத்(து) உதித் தெழுந்தே
　　ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம் போல் உலக வழக்(கு)
　　அழிந்தொழிந்து சிதையா உன்
சீர் இளமைத் திறம் வியந்து
　　செயல் மறந்து வாழ்த்துதுமே!

38

மொழியின் வலிமை

மொழிக்கு ஒரு வலிமை இருக்கிறது. நமது தாய் மொழியை, அன்னியன் ஒருவன் பேசினல் ஆனந்தமடை கிறேம்; ஆவேசம் கொள்ளுகிறேம். இது போலவே அன்

னியன் மொழியை நாம் பேசினால், அந்த அன்னியன் நமக்கு கௌரவமும் மதிப்பும் கொடுத்துப் போற்றுகிறான்; இந்த இரகசியத்தைத் தெரிந்த சிலர் வேண்டுமென்றே வருந்திப் பல மொழிகளைக் கற்றுக் கொள்ளுகிறார்கள். அந்தந்த மக்களோடு அவர்கள் மொழியிலே பேசி மகிழ்ந்து காரியங்களையும் முடித்துக் கொள்ளுகிறார்கள். பொதுவாக வியாபாரிகள் பல மொழிகளைத் தெரிந்து கொள்ள சந்தர்ப்பமும், சூழ்நிலையும் உதவுகிறது.

மொழியின் வலிமை இன்று மட்டும் தோன்றியதில்லை. அந்தக் காலத்திலும் மொழி வலிமை, மேலோங்கி நின்றது. ஐம்பெருங் காவியங்களில் ஒன்று மணிமேகலை. இது பௌத்த காவியமாகும். இது சிலப்பதிக்காரத்தோடும் தொடர்புடையதாகும்.

இதை இயற்றியவர் மதுரை கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராவர். கூலவியாபாரம் செய்து கொண்டு தமிழ் வளர்த்த காரணத்தால் அவர் செய்த தொழிலும், அவர் பெயரோடு சேர்ந்தது போலும். பத்தினித் தெய்வத்தின் வரலாற்றைச் செங்குட்டுவனுக்குச் செப்பி, கண்ணகிக்குக் கோயில் கட்டச் செய்தவர். செங்குட்டுவன் தம்பியைச் சிலம்பு இசைக்கச் செய்த பெருமையும் இவரையே சேரும். சீத்தலைச் சாத்தனார், தண்டமிழ்ச் சாத்தான், நன்னூற் புலவன் என்று பலவாராக இந்தப் பாவலர் அழைக்கப்படுகிறார். சங்கத்தில் அரங்கேற்ற வரும் நூல்களில் காணும் பிழைகளைக் கண்டு வருந்தி, தலையில் குட்டிக்கொண்டு, தலை புண்ணாகி சீயோடிருந்ததால் 'சீத்தலைச் சாத்தனார்' என்று செப்பப் பட்டார் போலும். திருக்குறளில் மிகவும் ஈடுபட்டுக் குறள் நயத்தைத் தனது நூலிலும் எடுத்துக் கையாண்டுள்ளார். புகார், வஞ்சி, காஞ்சி, என்னும் நகரங்களை விரித்துக் கூறி அக்கால நாகரீகம், பண்பாடு, கலை இவைகளை விவரிக்கிறார். பண்டைய புலவர் பெருமக்கள் மணிமேகலைக் எடுத்துக் காட்டிப் பயன் படுத்தியிருக்கின்றனர்.

பல மதங்கள், பல தெய்வங்கள், கோட்பாடுகள் இவைகளைக் கவிஞர் சிறந்த முறையில் விவரித்துச் சொல் நுட்பம்,

பொருள் நுட்பம் குறையாமலே தருகிறார். சிலப்பதிகாரத்தின் தலைவன் கோவலன், பெற்றெடுத்த பெண்பிள்ளை மணி மேகலை. மாதவி என்னும் நாடகப் பெண்ணுக்கும், கோவலனுக்கும் தோன்றிய பெண் மணிமேகலை. மதுரையிலே கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட மாதவி பௌத்த முனிவர் அறவணடிகளை அடைந்து பௌத்த சங்கத்திலே சேருகிறாள். தாயைக் காணச் சென்ற மேகலை, தாய் வேண்ட, மலர் கொய்ய தோழியுடன் வனம் செல்லுகிறாள். உதயகுமரன் மேகலையை விரும்பி வருகிறான். அவனுக் கஞ்சி, அங்குள்ள பளிக்கறையில் ஒளிந்து, அவன் போன பின்பு வெளியே தோழியோடு மேகலை வந்தாள்.

குலதெய்வத்தால் மணி பல்லவத் தீவிற்குக்கொண்டு செல்லப்படுகிறாள்.

அத்தீவிலுள்ள புத்த பீடிகை மூலம் தன்னுடைய பழம் பிறப்பை உணர்கிறாள். அத்தெய்வம் தந்த மூன்று மந்திரங் களால் முற்பிறப்பிலே கணவனாய் இருந்த இராகுலன், உதயகுமாரனாய் வந்துள்ளதையும் அறிகிறாள். அப்பீடி கையின் காவல் தெய்வம் தீவதிலகை உதவ, கோமுகி அடைந்து, அமுதசுரபி என்னும், அள்ள அள்ளக் குறை யாத அக்ஷயபாத்திரத்தைப் பெறுகிறாள்.

காவிரிப் பூம்பட்டினம் சென்று அறவணடிகளை வந்த டைந்தாள். ஆபுத்திரன் வரலாற்றையும், அவனுக்கு அமுதசுரபி தந்ததையும், பசித்த உயிர்களுக்கு உணவளித் தலே அறத்தில் எல்லாம் உயர்ந்த அறம் என்பதையும், அவன் அடியார்க்கு அமுது படைத்த பாங்கையும் அடிகள் விளக்கினார். "அறத்தைக் காட்டிலும் வேறென்ன தர்மம் இருந்துவிட முடியும்? உழைப்பும், பிழைப்பும் எதற்கு? வேறுபாடுகள் எதற்கு? எல்லாம் ஒரு சாண் வயிற்றுக்கு. அன்னமயம், பிராணமயம். கவிஞர் சீத்தனார் மக்கள் கவி. மக்கள் மனப்போங்கும், பாங்கும் தெரிந்தவர். அறவணடிகள் மூலம் அன்னதான தர்மத்தை அறிவுறுத்து கிறார். இன்றும் திருவிழாக்களிலே, கோயில்களிலே அன்னதானம் நடந்துகொண்டே இருக்கிறது. மெய்யடி யார் அறவணடிகள் கூறக்கேட்டு, மணிமேகலை (உணவளித்

தற் பொருட்டு) அமுதசுரபியைக் கையில் ஏந்திக்கொண்டு முதன் முதலாக கற்பிலே சிறந்த ஆதிரை என்ற பெண்ணிடம் பிச்சை பெறச் சென்ருள்.

காயசண்டிகை ஆதிரையின் கதையைக் கூறினுள். ஆதிரையின் கணவன் பெயர் சாதுவன். கணிகை ஒருத்தியின் வசம் சென்று கைப்பொருள் இழந்தான். பொருள் சேர்க்க வங்கம் போகும் வாணிகர் தம்முடன் சென்ருன் கடுங்காற்றிலே கலம் கடலிலே கவிழ, ஒடிமரம் பற்றி யூர் திரை உதைப்ப, உடையில்லாது சஞ்சரிப்பவர்களாகிய நாகர் மலைப்பக்கம் அடைந்தான். நாவாய் நடுக்கடலிலே கவிழ்ந்ததால் நழுவிய மரத்தைப் பற்றிய சிலர் நீந்திப் பிழைத்து காவிரிப் பூம்பட்டினம் வந்து சேர்ந்தனர். "கப்பல் கவிழ்ந்தது ; பிழைத்தது நாங்களே ! மற்றவர்களோடு சாதுவனும் மடிந்தான்" என்று ஆதிரையிடம் தப்பி வந்த வியாபாரிகள் விளம்பிச் சென்றனர். அதைக்கேட்ட கற்பிலே சிறந்ற ஆதிரை அழுதாள்; துடித்தாள். இறக்கவும் துணிந்தாள். இடுகாட்டிலே குழிவெட்டித் தீ மூட்டினுள். "என் கணவன் அடைந்த இடத்தை நானும் அடைவேன்" என்று தீயிற் குதித்தாள். சோதனை! குதித்தவளைக் கொடுங் கனல் சுடவில்லை. உடுத்த கூறையும், மொள்ளரியுரு ஆடிய சாந்தமும், அசைந்த கூந்தலிற் சூடிய மாலையுந் தொன்னிறம் வாடாது, விரைமலர்த் தாமரை ஒரு தனியிருந்த திருவின் செய்யோள் போன்றிருந்தாள். "தீயுங் கொல்லாத் தீவினையாட்டியா நான்!" என்று கதறினுள் ஆதிரை. "அம்மா, உன் கணவன் இறக்கவில்லை, விரைவில் வருவான்" என்று அந்தரத்தே அசரீரி அறைய, பொய்கைப் புக்காடிப் போதுவாள் போன்று மனை புகுந்து கணவன் வரவை எதிர் நோக்கியிருந்தாள் ஆதிரை என்னும் கற்பரசி.

நாகர் மலையை அடைந்த சாதுவன், ஒரு மர நிழலை அடைந்து, அலுப்பிலே அயர்ந்து தூங்கினுன். அம்மலையில் வாழும் மக்கள் நரமாமிசம் உண்ணும் பழக்கமுள்ளவர்கள். அவனை எழுப்பினர். நாகர்களுடைய மொழியை நன்கு அறிந்திருந்த சாதுவன் அவர்களோடு, அந்த மொழி

யிலே சரளமாகப் பேசினுன். "அன்னியன் ஒருவன் தங்கள் மொழி பேசுவதைக் கேட்ட நாகர்கள் அவனைக் கொன்று உண்ணவேண்டும்" என்ற கொடிய கொலைத் தொழிலை மறந்து, அவனைத் துன்புறுத்துவதையும் விட்டு, "எங்கள் குருவிடம் நீ வரவேண்டு"மென்று அழைத்துச் சென்றுர்கள். மொழியின் வலிமையக் கண்ட சாதுவன் தைரியமடைந் தான்; கள்ளடு குழிசியுங், கழிமுடை நாற்றமும், சுற்றிலும் எலும்புகளும், கிடந்த இருக்கையிலே ஆண்கரடி பெண்கரடி யோடு இசைந்தது போல, ஒரு பெண்ணேடு குரு வீற்றிருந் தான். குருவோடு நாகர் மொழியிலே தனக்கு நேர்ந்த வைகளைச் சாதுவன் எடுத்துரைத்தான். அதைக் கேட்ட குரு மனமிரங்கிப் பசியால் வந்த அவனுக்கு, " இளையளோர் நங்கையைக் கொடுத்து, வெங்கள்ளும் ஊனும் வேண்டுமட் டும் தருக" என்றுன்.

அதைக் கேட்ட சாதுவன், அயர்ந்து, "மயக்கும் கள் ளும், மாமிசமும், மாதரும் எனக்கு வேண்டாம். அது நல்ல தில்லை" என்றுன். " மது, மங்கை, மாமிசம் இந்த மூன் றையும் தவிர இன்பம் தருவது வேறு உளதோ" என்றுன் குரு கோபத்தோடு. அவன் கேட்ட கேள்விகளுக் கெல் லாம் சாதுவன், அவன் மொழியிலேயே தக்கபடி பதில் சொல்லி, உண்மையான அறத்தை எடுத்துக் கூறி, அந்த மக்களை உண்மையான செந்நெறிக்குத் திருப்பினுன். குரு மகன் மகிழ்ந்து, அவன் செப்பிய அறப்படி இனி நடப்ப தாகக் கூறி, பொன்னும், பொருளும் வேண்டியமட்டும் தந்து கப்பலிலே சாதுவனை அனுப்பினுன். ஆதிரையிடம் அன்புக் கணவன் வந்து சேர்ந்தான். அகமகிழ அன்புக் கணவனை வரவேற்று, இன்ப இல்லறம் நடத்தி வருகிறுள். அந்த ஆதிரை நல்லாளிடம் முதன் முதலில் அமிதசுரபியிலே பிச்சை எடுக்க, ஈங்கிவன் செய்தி கேளென விஞ்சையர் பூங்கொடி விளம்பி மேகலையை அனுப்புகிறுள்.

கவிஞர் சாத்தனுர் மொழியின் வலிமையை நன் குணர்ந்து, கதையிலே அமைத்திருக்கிறுர். நாகர்கள் கூட்டம் எழுப்பியவுடன், அவர்கள் மொழியிலே சாதுவன் பேசாமல் இருந்திருந்தால், அங்கு அவன் கொல்லப்பட் டிருப்பான். அல்லது துன்புறுத்தப்பட்டிருப்பான். தங்கள்

மொழி பேசும் அன்னியனைக் கண்ட நாகர்கள் குருவிடம் அழைத்துச் செல்லுகிறார்கள். அங்கு தனது வரலாற்றைக் கூறிய, சாதுவன் தப்பித்துக் கொண்டது மல்ல: மொழியின் வலிமையால் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் உண்மையான அறத்தையும், பயமின்றி நாகர்களுக்கு நவில்கின்றான். தான் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்ற சுயநலத்தை மட்டும் சாதுவன் கொள்ளவில்லை. அவர்கள் தள்ள வேண்டிய தருமத்தையும், கொள்ள வேண்டிய நெறியையும், கொஞ்சமும் கூசாமல் எடுத்துக் கூறினான். இதற்கெல்லாம் அடிப்படை மொழியின் வலிமை. அன்னிய தேசங்களுக்குச் சென்றாலே மொழியின் வலிமையை நாம் காணமுடியும்.

"மற்றவர் பாடை மயக்கறு மாரபிற்
கற்றன னாதலிற் கடுந்தொழிலின் மாக்கள்
சுற்று நீங்கித் தொழுதுரை யாடி
ஆங்கவ ருரைப்போ ரருந்திறல் கேளாய்

ஈங்கெங் குருமக னிருந்தோ வைன்பாற்
போந்தரு ளீயென வவருடன் போகிக்
கள்ளடு குழிசியுங் கழிமுடை நாற்றமும்
வெள்ளென் புணங்களும் விரவிய விருக்கையில்

எண்குதன் பிணவோ டிருந்தது போலப்
பெண்டுட னிருந்த பெற்றி நோக்கிப்
பாடையிற் பிணித்தவன் பான்மையனாகிக்
கோடுயர் மாநிழற் குளிர்ந்த பின்னவன்

ஈங்குநீ வந்த காரண மென் னென
ஆங்கவற் கலைகட லுற்றதை யுரைத்தலும்
அருந்துதலின்றி யலைகட லுழந்தோன்
வருந்தின னளியன் வம்மின் மாக்காள்

நம்பிக் கிளேயயோர் நங்கையைக் கொடுத்து
வெங்களு மூனும் வேண்டுவ கொடுமென
அவ்வுரை கேட்ட சர்துவ னயர்ந்து
வெவ்வுரை கேட்டேன், வேண்டே னென்றலும்''

39

விந்தை மனிதர் வேதநாயகம்!

சென்ற நூற்ருண்டில் வாழ்ந்த கவிஞர் வேதநாயகம் பிள்ளை. புதுக்கோட்டைக்குப் பக்கத்திலே குளத்தூரில் சவரிமுத்துப்பிள்ளை, ஆரோக்கிய அம்மை பெற்றெடுத்த செல்வமாகும். தெலுங்குஇசை வேதநாயகம் பிள்ளை காலத்தில் எங்கும் பரவி நின்றது. இசை அரங்குகளிலே களிதெலுங்கும், மற்ற மொழிகளுமே இடம்பெற்று நின்றன. இசைத்தமிழ் இடம் பெறவில்லை. தமிழ் இசை கேட்க முடியவில்லையே என்று வேதநாயகத்தின் உண்மையான தமிழ் உள்ளம் தவித்தது. இசைப்பாட்டு பாடும் வித்துவான்களின் நட்பைப் பெற்ருர். அவர்கவிடம் பாடுபட்டு இசையைக் கற்ருர். அரங்கங்களிலே, தான் இயற்றிய தமிழ்ப் பாடல்களைப் பாடும்படி செய்து வந்தார். தமிழிலும் பாடலாம் என்ற நிலையை உண்டாக்கினுர்.

'தமிழ் இசை இயக்கம்' ஆரம்பிப்பதற்கு வெகு காலத்திற்கு முன்பே 'தமிழ் இசை இயக்கத்'திற்கு வித்திட்டவர் வேதநாயகர், கீதநாயகர். எதிர்ப்பு இல்லாமல் எதுதான் வளரும். தெலுங்குக் கீர்த்தனமே கேட்டு வந்தவர்கள் முதலிலே பல ஆட்சேபனைகள் எழுப்பினர். வேதநாயகர் தனது பணியைத் துணிவோடு செய்து வெற்றி கண்டார். அவர் இயற்றிய பல நூறு கீர்த்தனங்கள் இன்று தமிழ் இசை அரங்கிலே (அப்பெரியவரின்) தமிழ் மனத்தைப் பரப்பிக்கொண்டு இருக்கின்றன.

மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை சென்ற நூற்றுண்டிலே செந்தமிழ்த் தொண்டு செய்த சீரியர், பிள்ளையவர்களோடு வேதநாயகர் தொடர்பு கொண்டார். கவிபாடும் திறமை பெற்ற வேதநாயகம் ஓய்வு கிடைக்கும் போதெல்லாம், பாடல்கள் இயற்றி அவைகளைப் பிள்ளையவர்களிடம் காட்டித் திருத்திக் கொள்ளுவார்.

வேதநாயகம் கத்தோலிக்க கிறிஸ்தவர். சிலுவையில் அறைபட்டு உயிர் துறந்த ஏசுநாதரின் மெய்யடி தொழும் சீலர். ஆனுல் சமரச நோக்கம் கொண்டவர். மற்ற மதத்தினரை மறந்தும், இழித்துப் பேசமாட்டார். அவர் இயற்றிய சர்வ சமய சமசரக் கீர்த்தனை, காணிப்பாட்டு, பெரிய பாளையத்து அம்மன் பதிகம் போன்றவைகளே அவரின் சமரசத்திற்குச் சான்றுகளாகும்.

பெண்கள் கல்வி, பெண்ணின் பெருமை முதலியன வற்றையும் 'வெண்மதி மாலையில்' பெரிதும் எடுத்துரைத்துள்ளார். வழக்கு மன்ற விதிகளை தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்னும் நூலாக 1862ல் வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தின் நாவலிலும் ஒரு புதிய அத்தியாயத்தை உண்டு பண்ணினுர். 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்னும் நகைச்சுவை நாவலை வெளியிட்டார். இந்நூல் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சுகுணசுந்தரி என்னும் சுவைமிக்க கதையையும் எழுதியுள்ளார்.

திருவருள் மாலை, தேவமா அந்தாதி, நீதி நூல்களையும் இயற்றியுள்ளார். அவர் இயற்றிய தனிப் பாடல்கள் அழகும், நகைச் சுவையும் பொருந்தியதாக அமைந்துள்ளன. மக்களிடையே காணப்படுகின்ற விநோதங்களைக் கவிஞர் கண்டு சிரித்து,விட்டு நாமும் சிரிக்கச்செந்தமிழ் நயம் குறையாமல் எடுத்துக் காட்டுகிருர், தனது கவிதைகள் மூலம்.

வழக்கு மன்றத்திலே வரும் விநோத வழக்குகளையும், பொய் வழக்குகளுக்கும், மெய் வழக்குகளுக்கும் வக்கீல்கள் தொண்டையைக் கிழித்துக் கொண்டு சண்டை செய்வ

தும், அண்டையிலிருந்து கொண்டு, மண்டை உடைபட வழக்கறிஞர்கள் வாதிடுவதும், வழக்கர் பெரும் சமுத்திர முழக்கத்தில் மூழ்கியிருப்பதும் விந்தையே. வழக்கு மன்றமே நம் கண்முன் வந்து நிற்கும்படி வேதநாயகர் பாடுவார். வழக்கு மன்ற மேடை முறைகள் ஒன்றுவிடாமல் பாட்டாக வரும். வேதநாயகர் நல்ல நீதி நாயகராகப் பதிமூன்று ஆண்டுகள், நீதிபதியாக மாயூரத்தில் வேலை பார்த்தார். அதனுல் மாயூரம் வேதநாயகர் என்றும் அழைக்கப் பெற்ருர்.

தாது வருடப் பஞ்சத்திலே கஞ்சித் தொட்டி வைத்து ஏழைகள் துன்பம் தீர்த்தார். தனக்கென்று காலணு வைத்துக் கொள்ளாமல் மக்களுக்கே வாரிவாரி வழங்கினுர். திருவாடுதுறை ஆதினத்தோடு தொடர்பு கொண்டு தமிழும், அன்புமாய்த் திகழ்ந்தார்.

மக்களுக்குத் தொண்டு செய்வதையே உயர்ந்ததாக என்ணினுர். 'இந்த உத்தியோகமென்ன பெரிதா! நெஞ்சே இதுபோனுல் நாம் பிழைப்பரிதா' என்று அடிமை உத்தியோகத்தைத் துச்சமாய் எண்ணி வாழ்ந்தார். வேதநாயகர் கவிஞர், நீதிபதி, தொண்டர், அறிஞர், சமரசர் இந்த ஐந்துமாகத் திகழ்ந்தார். எல்லா வழியிலும் நாட்டிற்குழைத்த நல்ல கவிஞர், 1889-ம் ஆண்டு இவ்வுலகை உதறிச் சென்ருர்.

அவர் இயற்றிய நீதிநூல் மனிதனின் யாக்கை நிலையாமையைக் கூறுகிறது. மனித உடல் ஒன்றுக்கும் உதவாதது. மாடு, ஆடு இறந்தால் அவற்றின் தசை, மயிர், தோல், கொம்பு பயன்படும். மண்ணுல் செய்யப் பெற்ற கலம் உடைந்தால் ஓடாக உதவும். மரம். கல் இவை வீழ்ந்தாலும் பயன்படும். வீடு இடிந்தாலும், அழிந்தாலும் அதன் பொருள்கள் பயன்படும். மாயக்கூடாகிய இந்த மனிதக் கலன் எதற்குப் பயன்படும். உடல் உயிரைத் தாங்கி நிற்கிறது. உயிர் உடலை நீங்கும் காலம் எவராலும் இயம்ப முடியாது. ஆனுல் உலகிலுள்ள பல பொருள்களுக்கும் காலவரையறை உண்டு. மரமறுக்கக் காலம் உண்டு;

கணக்குண்டு. ஆனுல் கொடிய கூற்றுவன் வாழ்நாட்களாகிய புல்லறுக்க வரும் காலம் எவரால் இயம்ப முடியும்? ஆகையால் வாழ்க்கையிலே பிறருக்கு உதவுவதே உயர்ந்தது. வேதநாயகர் வாழ்க்கையை நன்கு அறிந்தவர். அவர் தரும் நீதி அனுபவ நீதியாகும்.

நெல்லறுக்க வோர்காலம் மலர்கொய்ய
வோர்காலம் நெடிய பாரக்
நல்லறுக்க வோர்காலம் மரமறுக்க
வோர்காலம் கணித முண்டு
வல்லரக்க னேயனைய நமன்நினைத்த
போதெல்லாம் வாழ்நா ளென்னும்
புல்லறுக்க வருவதெனில் நெஞ்சமே
மற்றினியாம் புகல்வ தென்னே!